வெண்ணிலா கைகளிலே!

மைதிலி சம்பத்

நூல் விவர அட்டவணை

நூலின் பெயர்	: வெண்ணிலா கைகளிலே!
ஆசிரியர்	: மைதிலி சம்பத்
உரிமை	: ஆசிரியருக்கு
மொழி	: தமிழ்
முதல் பதிப்பு	: நவம்பர், 2014
தாள்	: 11.6 kg. வெள்ளைத் தாள்
நூலின் அளவு	: 1 x 8 கிரவுன்
அச்சு எழுத்து	: 11 புள்ளி
மொத்தப் பக்கங்கள்	: 380
பைண்டிங்	: சாதா அட்டை
நூல் வெளியிடுவோர்	: முத்து நிலையம் B-4, முதல் மாடி, அஸ்வத் பிளாட்ஸ், பு.எண்: 59, முத்து தெரு, இராயப்பேட்டை, சென்னை-14.

விலை: ரூ.170.00

கணினி அச்சு	: வேலன் லேசர் - 9444101753
அச்சிட்டோர்	: கே.வி.எஸ். ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை-14.

இவரைப் பற்றி

பெயர்	: திருமதி மைதிலி சம்பத்
தெரிந்த மொழிகள்	: தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, ஹிந்தி.
தொழில்	: சங்கீத ஆசிரியை
விருதுகள்	: லேடீஸ் ஸ்பெஷல் மற்றும் 'நிறை' பத்திரிகைகள் சேர்ந்து வழங்கிய இசைத் துறைக்கான ஸ்பெஷல் லேடி விருது, கோவை வஸந்த வாசல் கவி மன்றத்தின் 'பல்கலை வித்தகர்' என்ற பட்டம் பெற்றுள்ளேன்.
தகுதிகள்	: திரு. விசு அவர்கள் நடத்திய 'அரட்டை அரங்கம்' (இரண்டு முறை), 'கல்யாண மாலை' நிகழ்ச்சியில் ஒரு முறை வந்துள்ளேன். பக்தி டி.வி.யில் ஒரு மணி நேரம் ஆண்டாளின் 'வாரணமாயிரம்' பற்றித் தெலுங்கில் இசைச் சொற்பொழிவு நிகழ்த்தி உள்ளேன். Rotary Club of Secundrabadஇல் சங்கீதம் பற்றி 1 மணி நேரம் ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றி உள்ளேன்.
படைப்புகள்	: சிறுகதைகள், கட்டுரைகள்: லேடீஸ் ஸ்பெஷல் புத்தகத்தில் சிறு சிறு கதைகள், கட்டுரைகள், குமுதம் சிநேகிதியில் கட்டுரைகள், கவிதைகள் மற்றும் 'நிறை' மாத இதழில் பல சிறுகதைகள், நிறையக் கட்டுரைகள், ஆகியவை வெளிவந்துள்ளன.

புத்தகங்கள்: 'நெஞ்சின் அலைகள்', 'ஐயாரப்பன் வீடு', 'பெண் எனும் தேவதை' என்ற பெயர்களில் என் புதினங்களும், 'செல்லப்பிள்ளையார்', 'ஊர்க்குருவி' என்ற பெயர்களில் சிறுகதைத் தொகுப்புகளும் வெளிவந்துள்ளன. 'எண்ணப் பூக்கள்' என்ற தலைப்பில் 54 கட்டுரைகள் கொண்ட கட்டுரைத் தொகுப்பு ஒன்றும் வெளி வந்துள்ளது.

நாடகம்: ஹைதராபாத் மாநகர் தமிழ்ச் சங்கத்தினர் நடத்திய மகளிர் விழாவில் 'யாமறிந்த மொழிகளிலே' என்ற தமிழ் நாடகத்தை எழுதி, இயக்கி, நடித்திருக்கிறேன்.

பரிசுகள் : 'நம் உரத்த சிந்தனை' மாத இதழில் நான் எழுதிய ஐந்து சிறுகதைகள் பரிசு பெற்று வெளிவந்துள்ளன. 'இலக்கியச் சோலை' நூல் போட்டியில் என்னுடைய 'செல்லப் பிள்ளையார்' சிறுகதைத் தொகுப்பும், தேனி இலக்கியக் கழகம் நடத்திய போட்டியில் எனது 'ஊர்க்குருவி' எனும் சிறுகதைத் தொகுப்பும் பரிசுகள் பெற்றுள்ளன.

உரத்த சிந்தனை வாசகர் எழுத்தாளர் சங்க நூல் போட்டியில் என் நாவலான 'நெஞ்சின் அலைக'ளும், கவிதை உறவு, கவிஓவியா இதழ்கள் நடத்திய நூல் போட்டிகளில் 'ஐயாரப்பன் வீடு' என்ற என் நாவலும் முதல் பரிசுகளைப் பெற்றுள்ளன. (2013)

சென்னை படைப்பாளர் சங்கம் நடத்திய சிறுகதைப் போட்டியில் என் சிறுகதை 'சேரிவாழ் சீதைகள்' இரண்டாவது பரிசு 2014இல் பெற்றுள்ளது.

சென்னை சிவா ENT மருத்துவமனை நடத்திய நாவல் போட்டியில் என் இரண்டாவது நாவலான 'ஐயாரப்பன் வீடு' இரண்டாவது பரிசு பெற்றுள்ளது. (2014)

நண்பர்கள் குடும்ப நற்பணி மன்ற 17-ஆம் ஆண்டு விழாவில் எனது கட்டுரைத் தொகுப்பான 'எண்ணப் பூக்கள்' முதல் பரிசு பெற்றுள்ளது. (2014)

சைவ சித்தாந்தக் கழகம், சிகந்திராபாத் நடத்திய ஆன்மிகப் பேச்சுப் போட்டியில் முதல் பரிசு (2012).

பாவையர் மலர் பத்திரிகை நடத்திய சிறுகதைப் போட்டியில் என் சிறுகதை 'களைப்பா, கற்பனையா'வுக்குப் பரிசு. (2014).

உரத்த சிந்தனை வாசக எழுத்தாளர் சங்கம் நடத்திய ஆடிட்டர் என்.ஆர்.கே.நாவல் போட்டியில் என் நாவலான 'பெண் எனும் தேவதைக்கு' முதல் பரிசு (2014).

பேராசிரியர் யோகசுந்தரனார் அறக்கட்டளை, வேலூர் நடத்திய நாவல் போட்டியில் என் நாவலான 'பெண் எனும் தேவதைக்கு' மூன்றாம் பரிசு (2014).

விருதுகள் : நிறை இலக்கிய வட்டம் மற்றும் லேடீஸ் ஸ்பெஷல் மாத இதழ் சேர்ந்து சங்கீதத்திற்காக அளித்த 'ஸ்பெஷல் லேடி அவார்ட்'

கோவை வஸந்தவாசல் கவி மன்றம் அளித்த 'பல்கலை வித்தகர்' என்ற விருதும்,

ஹைதராபாத் நிறை இலக்கிய வட்டத்தின் அமரர் ராஜலஷ்மி கிருஷ்ணமூர்த்தி நூற்றாண்டு இசைப் பணிக் கேடயமும் பெற்றுள்ளேன்.

ஆசிரியரின் பிற நூல்கள்

1.	நெஞ்சின் அலைகள்	110.00
2.	ஐயாரப்பன் வீடு	160.00
3.	பெண் எனும் தேவதை	200.00
4.	மல்லிகைப் பூ வீடு	200.00

வெண்ணிலா கைகளிலே!

1

"ஏழுமலையானே! வேங்கட ரமணா! எல்லோரையும் ஆரோக்கியமாக, ஆனந்தமாக வையப்பா!" என்று வாய்விட்டுச் சொல்லிக் கீழே விழுந்து நமஸ்காரம் செய்தாள் தனலட்சுமி. எழுந்தவள் கற்பூர ஆரத்தி காட்டுமுன் ஹாலில் கணவரோ, மகளோ இருக்கிறார்களா என்று பார்த்தாள். அங்கே இருந்தால் ஆரத்திக்குக் கூப்பிடுவாள். இல்லையானால் தன் வேலையைப் பார்ப்பாள். அவளுடைய குணம் அப்படி அமைதியிலும் அமைதி. புருஷன், பெண், பிள்ளையிடம் எதுவும் கேட்க மாட்டாள்.

இவள் கற்பூரத்தைக் கொளுத்தும் வேளை, சரியாக அவள் மகள் துர்கா வந்து விட்டாள். கணவர் நாராயண சாமிக்கும் அவளுக்கும் கற்பூரத்தைக் காண்பித்தாள்.

''என்னம்மா! நேத்தியோட பரிட்சை முடிந்துடிச்சே, இன்னிக்கு ரெஸ்ட் எடுக்கக் கூடாதாம்மா, வெளியே கிளம்பிட்டே!'' என்றார் நாராயணசாமி.

''இன்னிக்கு நாங்க சிநேகிதிகள் எல்லாரும் சேர்ந்து மீனாட்சி அம்மன் கோவிலுக்குப் போறோம்பா. அப் படியே லஞ்ச் வெளியே எங்கேயாவது சாப்பிட்டுட்டு வந்துடலாம்னு நினைச்சிகிட்டிருக்கோம்.''

''நல்ல காரியம்தான். அடுத்த வருஷம் யார் யார் எங்கே இருப்பீங்களோ, யாருக்குத் தெரியும்?''

''ஆமாம்பா. இரண்டு பேருக்குக் கல்யாணம் நிச்சய மாகியிருக்கப்பா. இரண்டு பேருமே ஸ்டேட்ஸ் போறாங்க!'' என்றாள் துர்கா.

''நீ பச்சைக் கொடி காண்பிக்க மாட்டேங்கறியேம்மா! நீ மட்டும் சம்மதம் சொல்லு, உனக்கும் கல்யாணம் பண்ணி நாடு கடத்திடலாம்!'' என்றார் நாராயணசாமி.

''என்னப்பா, நீங்க! எம்.எஸ்சி. ரிசல்ட் வந்ததும் நான் பிஹெச்.டி. பண்ற எண்ணத்திலே இருக்கேம்ப்பா. இப்பவே என்ன கல்யாணம்?''

''இந்த துர்காஷ்டமிக்கு உனக்கு 23 வயசு நிரம்பிடுச்சும்மா. அதை நினைவு வெச்சுக்கோ!'' என்றாள் தனலட்சுமி.

''இப்போல்லாம் யாரும் 23 வயசுக்குக் கல்யாணம் பண்றதில்லைம்மா. அவங்கவங்க கால்ல நிக்கற

சக்தியை உண்டாக்கிட்டுட்டு, அப்புறம்தான் கல்யாணம் எல்லாம்,'' என்றாள் துர்கா.

அப்போது கீழே வந்த துர்காவின் அண்ணா நடராஜ், ''அம்மா, காப்பி எங்கேம்மா?'' என்று கத்தினான்.

''இப்போதுதானே வரே! அதுக்குள்ளே அம்மாவை எதுக்கு மிரட்டறே?'' என்றாள் துர்கா.

''நீ வாயை மூடு. நான் அம்மாவைக் கேக்கறேன். நீ ஏன் நடுவில வரே?''

அவசரமாக உள்ளே போய்க் காப்பி கொண்டு வந்தாள் தனலட்சுமி. அதை எடுத்துக் கொண்டு, செல்போனை யும் கையில் எடுத்துக் கொண்டு திரும்பவும் மாடிக்குப் போய்விட்டான்.

''ஏம்மா, இவன் சுதாரிச்சிக்கப் போறானா இல்லையா? நாலு தரம் பேப்பர் பேப்பரா எழுதி ஒரு டிகிரி வாங்கி இரண்டு வருஷம் ஆச்சு. ஒரு வேலையும் உருப்படியாப் பார்க்காமல் எதுக்குத்தான் இப்படி இருக்கானோ, தெரியல்லே. எனக்கு இவனோட பேச ஆரம்பிச்சாலே படபடப்பாயிடுது. அம்மா கேட்க மாட்டாள். துர்கா! நீயாவது அவனைக் கேளேன்,'' என்றார் நாராயணசாமி.

''அவனுக்கே என்ன செய்யணும்னு புரியல்லேன்னு தோணுதுப்பா. அவன் என்ன சின்னக் குழந்தையா, நாம புத்தி சொல்ல? ஆனாலும் நான் கேட்டுப் பார்க்கறேன். நீங்க டென்ஷன் ஆகாதீங்கப்பா!'' என்றாள் துர்கா.

''இதோ பாரு தனம்! அவனுக்கு ஒரு கல்யாணம் பண்ணினாத்தான் சரியா வருவான்னு நேத்திக்குக் கூட

சொன்னேனே! கேளேன் உன் பிள்ளையை,'' என்றார் நாராயணசாமி. ''நான் எங்க சித்தி பொண்ணு சரோஜாவோட பொண்ணை மனசிலே வெச்சுத்தான் சொன்னேன். ஆனா, ரொம்ப வசதி ஒண்ணும் கிடையாது. என்ன சொல்றே? பொண்ணு பி.ஏ. பார்க்க நல்லாயிருப்பா. அவ்வளவுதான்...'' என்றார் நாராயண சாமி.

''வசதி என்னங்க வசதி? அதெல்லாத்தையும் விட நல்ல குணவதியாக இருக்கறது தான் முக்கியம். இவனுக்கு அது போதாது. வரவ இவனை அனுசரிச்சுப் போகணும். நம்மகிட்டே இருந்து அவனைப் பிரிக்கக் கூடாது. வேறே பணம் காசு அதிர்ஷ்டம் இருந்தா தானே வரப்போவுது!'' என்றாள் தீவிரமாக.

''இங்கே பாருங்கப்பா. பணம் காசு தர வேண்டாம் பொண்ணு வீட்டுக்காரங்கன்னு சொல்ற பிள்ளையைப் பெத்தவங்க!'' என்று துர்கா சொல்ல.

''அதில்லேம்மா. இவ இப்படிச்சொன்னா, நாளைக்கு உனக்கு வரவங்களும் அப்படியே சொல்லுவாங்கன்னு உங்கம்மாவுக்கு எண்ணம். சரியா, தனம்?'' என்றார் நாராயணசாமி.

''என்னைக் கேலி பண்ணறதை விட்டுட்டு, வீட்டுக்கு ஒரு மருமகளைக் கொண்டு வர வழியைப் பாருங்க!'' என்றாள் தனம்.

பத்தே நிமிடங்களில் சமையல்காரி சொர்ணா, டிபனைக் கொண்டு வந்து டேபிளின் மேல் வைத்து, தட்டுகளை வைக்கும் முன் குபீர் என்று சென்ட்

வாசனை அந்த அறையில் எல்லாருடைய மூக்கையும் துளைத்தது. நடராஜன் உள்ளே நுழைந்தான்.

''சாப்பிடற வேளைல இதென்ன குடலைக் குமட்டற மாதிரி ஒரு சென்ட் நாத்தம்?'' என்று கேட்டாள் துர்கா.

''ஏய், நிறுத்து உன் அதிகப்பிரசங்கத்தை! இது எத்தனை காஸ்ட்லி சென்ட் தெரியுமா? குடலைக் குமட்டறதாமே!'' என்று தங்கையைக் கடுப்படித்தான். ''அம்மா, என்னம்மா டிபன்?'' என்று தனத்தைக் கேட்டுக் கொண்டு தட்டின் முன் உட்கார்ந்தான். தனம் பொங்கலை வைக்க, ''என்னம்மா, இதையெல்லாம் ஒரு டிபன்னு பண்றியேம்மா. மனுஷன் சாப்பிடுவானா இதை?'' என்று எரிந்து விழுந்தான்.

''அதுக்குத்தான் அம்மாவும் அப்பாவும் உனக்குப் பொண்ணு பார்த்து வெச்சுருக்காங்க. அண்ணி வந்து உனக்கு நல்லா புது தினுசு பலகாரமா தினம் செஞ்சு போடுவாங்க. அம்மாவுக்கும் ரெஸ்ட்!'' என்றாள் துர்கா.

''ஏய் துர்கா! நீ பேசறது கொஞ்சம் கூட சரியில்லை!'' என்று இவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, நாராயணசாமி, ''நான் பத்து நிமிஷம் கழித்து வந்து சாப்பிடுறேன்,'' என்று எழுந்து போய்விட்டார்.

''பாரேன், அப்பா பசியோட எழுந்து போயிட்டாங்க!'' என்றாள் தனம் இவளிடம்.

''பேசாமே இரும்மா. அண்ணனும் எழுந்துடப் போவுது. நான் அண்ணன்கிட்டே பேசணும்னுட்டுத்தான் அப்பா எழுந்து போயிருக்காரு,'' என்றாள் துர்கா.

வெளியே வந்து அண்ணனிடம், ''இதோ பாரண்ணே! நீ கல்யாணம் பண்ணிக்கோ. அடுத்தது ஜவுளிக் கடையையோ, இல்லே ஸ்கூலையோ பார்த்துக்க ஆரம்பிக்கணும், அண்ணா. அப்பா, பாவம் ரொம்பவே சிரமப்படறாரு. உடம்பும் முடியல்லே. வயசும் ஆயிட்டு வரதில்லே!'' என்று துர்கா சொல்லி முடிக்கவேயில்லை. 'வள்' ளென்று அவள் மேல் விழுந் தான் நடராஜ்.

''ஏன், நீ போய் ஒண்ணைப் பாத்துக்கறதுதானே! நீ எனக்குத் தங்கையா, இல்லே பாட்டியா? நீ என்ன எனக்குப் புத்தி சொல்றது?''

''இதைப் பாரு! யாராவது சொல்லணும்... நான் சொல்றேன். அம்மா பேச மாட்டாங்க. அப்பா பேசினா படபடப்பு வந்துடுது. நீயாவும் தெரிஞ்சுக்கல்லே. அப்புறம் இதுக்கு என்னதான் வழி? சொல்லு,'' என்றாள் துர்கா.

''இப்போ நான் என்ன தெரிஞ்சுக்கணும், சொல்லு, தாயே!'' என்றான் கேலியாக நடராஜ்.

''இதோ பார்! எல்லோரும் பாஸ் பண்ண வயசைவிட இரண்டு வருஷம் கூடவே எடுத்துக்கிட்டுத்தான் கிராஜுவேஷனை முடிச்சிருக்கே. அப்பா ஏதாவது சொன்னாரா? ஆச்சு. அதை முடிச்சு இரண்டு வருஷம் ஆயிடுச்சு. உன்னைப் பெரிய படிப்புப் படிக்க வைக்க ணும்னு அப்பா எவ்வளவு ஆசைப்பட்டார்! உனக்கே தெரியாதா?'' என்றாள் துர்கா.

தூரத்தில் ஹாலில் ஈஸிசேரிலிருந்து நாராயண சாமியும், சமையலறையிலிருந்து தனமும் கேட்டுக்

கொண்டிருந்தார்கள். துர்கா சொல்ல வேண்டியதைத் தான் சொல்கிறாள். ஆனால் எங்கே பெரிய சண்டை யாகி விடுமோ என்று அவர்களுக்கு உள்ளூரப் பயம் தான்.

''அவரு என்னைப் பெரிய படிப்பு படிக்க வைக்க ஆசைப்பட்டா மட்டும் போதுமா? எனக்கு ஆசை இருக்க வேண்டாமா? நீ தான் கடையையோ, ஸ்கூலையோ இல்லே இரண்டையுமோ பாத்துக் கோயேன். யார் வேணாங்கறா?'' என்றான் நடராஜ்.

''இதோ பாருண்ணே. எனக்கு எம்.எஸ்சி. முடிச்சு பிஹெச்டி பண்ணணும்னு ஆசையா இருக்கு. ஆனா, தொடர்ந்து அப்பா இப்படிக் கஷ்டப்படறதைப் பார்த்துக் கிட்டிருக்கவும் என்னால் முடியாது. நீ அதையெல்லாம் ஏத்துக்கிட்டு அவருக்கு ஒய்வு கொடுக்கறதுதான் நியாயம்.''

''துர்கா, போதும் நீ பேசினது. எனக்கு இன்னும் கொஞ்ச நாள் சுதந்திரமா இருக்கணும். அப்பாவுக்கு முடியுது, செய்யறாரு. இல்லையா, பெரிய மனுஷி, நீ செய். என்னை வேலைக்குப் போ, கல்யாணம் பண்ணிக்கோன்னு இப்போதைக்கு நீங்க யாரும் சொல்ல வேண்டாம். அந்தப் பாடாவதி ஜவுளிக்கடை யிலேயும், அந்த இடிஞ்சிக்கிட்டு இருக்கிற ஸ்கூலி லேயும் போய் என்னால் வேலை செய்ய முடியாது. நான் புதுசா பண்றதுக்கு என்னன்னு, பெரிய பாட்டி,நீ அடுத்தது கேட்பே. என்னை என் போக்கிலேயே விடுங்க. எனக்குத் தெரியும். எதை, எப்படி, எப்போ பண்ணணும்னு. இனிமே இதைப் பத்தி எங்கிட்டே

பேசாதே!'' என்றவன் விருட்டென்று எழுந்து போய் விட்டான். நல்ல வேளையாகப் பேச்சுவாக்கில் தட்டைக் காலி பண்ணியிருந்தான். இல்லையானால் தனம் அதற்கு வேறு வருத்தப்படுவாள்.

ஜவுளிக்கடையையும், ஸ்கூலையும் அவன் பழித்துப் பேசியது அப்பாவை ரொம்பவே காயப்படுத்தியிருக்கும் என்று துர்காவுக்குத் தெரியும். அப்பாவின் அருகே சென்று கீழே உட்கார்ந்தவள், மெதுவாக அவர் முதுகைத் தடவி விட்டாள். அவர் கையை எடுத்துத் தன் கைகளில் வைத்துக் கொண்டாள்.

பத்த நிமிஷங்கள் கழித்து, ''வாங்கப்பா, சாப்பிடலாம்,'' என்று கூப்பிட்டாள்.

''பாரும்மா. இரண்டு தலைமுறையா நமக்குச் சோறு போடற இடங்களைப் பத்தி இப்படித் தப்பா பேசிட் டான்!'' என்று வருத்தப்பட்ட நாராயணசாமி டைனிங் டேபிளுக்குப் போனார்.

தனம் அவரிடம், ''எல்லாம் சரியாயிடுங்க. காலம் இப்படியேவா இருந்துடப்போவுது?'' என்றபடி தட்டில் பொங்கலையும், சட்னி, கொத்ஸையும் வைத்தாள்.

''எனக்கும் தாங்கம்மா, ஃபிரண்ட்ஸெல்லாம் வந்திருப்பாங்க!'' என்று தானும் சாப்பிட ஆரம்பித் தாள். சாப்பிட்டு முடித்து, ஸ்கூட்டியை எடுத்துக் கொண்டு மீனாட்சி அம்மன் கோவிலுக்கு அவள் போய்ச் சேரும்போது, அவள் சிநேகிதிகள் வீணா, மணிமேகலை, மீனாட்சி, சீமா, லதா எல்லோரும் வந்து விட்டிருந்தனர்.

''வந்தாச்சுடி, நம்ம தலைவலி!'' என்றனர் எல்லோரும் சத்தமாக.

''ஏன்டி, இப்படி தலைவலி என்று சத்தம் போடறீங்க? நீங்க எல்லாம் எப்போ வந்தீங்க?'' என்று துர்கா கேட்க, ''நாங்க எல்லாம் வந்து அரை மணிக்கு மேலே ஆச்சு!'' என்றாள் சீமா. ''அர்ச்சனைத் தட்டுகூட வாங்கி வெச்சாச்சு, உனக்கும் சேர்த்து!'' என்றாள் லதா.

''சரி, வாங்கடி! முதல்ல தரிசனத்தை முடிப்போம்,'' என்று துர்கா நடக்க, அனைவரும் அவளுடனேயே நடந்தனர். அர்ச்சனை முடிந்து சொக்கநாதரையும் தரிசித்துவிட்டு முக்குறுணிப் பிள்ளையாரையும் மனம் ஒன்றி வேண்டிக் கொண்டனர். எல்லோருமாகப் பொற்றாமரைக் குளத்தின் படியில் உட்கார்ந்தார்கள்.

''என்னடி, பரிட்சை முடிச்சாச்சு. இப்போ மேற் கொண்டு யாருக்கு என்ன பிளான்?'' என்று கேட்டாள் மணிமேகலை.

''அடியேய்! இவளுக்கு இன்னும் பத்து நாள்ல அவள் அத்தானோடு நிச்சயதார்த்தம். அதை நாம கேக்கணு மாம். அதுக்காகத்தான்டி இவ இந்தப் பேச்சை ஆரம்பிக்கறா,'' என்றாள் மீனாட்சி.

''ஆமாம்மா, அவ தேனில பொறந்து வளர்ந்தவ. நம்மளையெல்லாம் மாதிரி கூச்சம் இல்லாமே இருப் பான்னா எதிர்பார்க்கிறீங்க? பாவம்! பொண்ணு வெக்கப்படுது, பாரு! ஏய். உனக்குத்தான் நம்ம செட்டி லேயே முதல்ல கல்யாணம். அதனாலே இன்னிக்கு ட்ரீட் உன்னுது,'' என்றாள் சீமா.

''சரி சரி! உன் கல்யாணம் எந்த மட்டில் இருக்கு? நீ சொல்லு,'' என்றாள் துர்கா, சீமாவைப் பார்த்து.

''என் மாமா பிள்ளை ஆகஸ்ட்ல 22 நாள் லீவுல வராரு. அவர் வந்த ஒரு வாரத்தில் கல்யாணம். அதற்குள்ள என்னையும் பாஸ்போர்ட்டெல்லாம் தயார் பண்ணி வைக்கச் சொல்லியிருக்காரு.''

மணிமேகலை யாரும் கேட்காமலேயே, ''நான் பிளட் டுக்கு அப்ளை பண்ணியாச்சு. அதை பாஸ் பண் ணிட்டுத்தான் கல்யாணம். எங்க அப்பாவும் அம்மாவும் அதுக்கு ஒத்துக்கிட்டாங்க,'' என்றாள்.

''ஆஹா, என்ன உயர்ந்த லட்சியம்!'' என்றாள் லதா.

''ஆமா, என் லட்சியம் உயர்ந்ததுதான். அதுல சந்தேகம் என்ன?'' என்றாள் மணிமேகலை கர்வத்தோடு.

''துர்கா! நீ உன் பிளானைச் சொல்லலியே... டும்டும்மா. இல்லே பிஹெச்டி யா?''

''என் ஆசை என்னவோ பிஹெச்டி தான். எங்க வீடு தாக்குப் பிடிக்குமான்னு தெரியல்லே,'' என்றாள் துர்கா.

''என்ன துர்கா, நீங்கள்லாம் ஓரளவு வசதியாவனங்க தானே? அப்படியிருக்கச்சே என்ன பிரச்சனை?'' என்று கேட்டாள் மணிமேகலை.

''இல்லே, மணி! பணம் மட்டும் எல்லாம் செய் துடாது. இல்லையா? அப்பாவுக்கு உடம்பு முடியல்லே. அம்மாவைப் பத்தித்தான் உங்கள் எல்லாருக்கும் தெரியுமே!'' என்றாள் துர்கா.

''ஏன், உங்க அண்ணன் என்ன ஆனாரு?''

''அவன்தான் பிரச்னையே. அவன் வேலைக்குப் போக மாட்டானாம். படிப்பிலேயும் பெரிய ஆசை இல்லை. ஏதோ பேருக்கு பி.காம்.''

''சரி அவரு கடை, ஸ்கூல் எல்லாத்தையம் பார்த்துக்க வேண்டியதுதானே? பொம்பிளைப் பிள்ளை நீ அதெல்லாம் பார்த்துக்க முடியுமா?''

''ஏய், பார்த்துக்கணும்னு வந்துட்டா ஆண் என்ன, பெண் என்ன? ஆனா, நான் படிப்பை விடணும். அப்பா அம்மாவுக்கு அவனுக்கு ஒரு கல்யாணம் பண்ணினா நல்ல ஆயிடுவான், பொறுப்பு வந்துடும்னு எண்ணம்.''

லதாவும் வீணாவும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். சீமாவும், சொல்லிவைத்தாற் போல் அவர்கள் முகத்தைப் பார்க்க, அங்கு சற்று நேரம் மௌனம் நிலவியது.

''என்ன லதா, நீங்கள்லாம் எங்கிட்டே ஏதோ சொல்ல நினைக்கறீங்கன்னு தோணுது. என்ன வீணா, எதா னாலும் தயங்காமே சொல்லுங்கடி. என்ன விஷயம்?'' என்றாள் துர்கா.

தொடர்ந்து அவர்கள் மௌனம் காக்க, திரும்பவும் துர்கா. ''என்னடி தயக்கம் எங்கிட்டே? சொல்லுங்க, ப்ளீஸ், ஸஸ்பென்ஸ் தாங்க முடியல்லே!'' என்றாள் சிரித்தபடியே.

''இது நீ சிரிக்கிற மாதிரி விஷயம் இல்லே, துர்கா. நாங்க சொல்லப் போற விஷயம் உனக்கு அதிர்ச்சியா இருக்கலாம்.''

''என்ன, என் அண்ணனை ஏதாவது பார்ல பார்த் தீங்களா? அதிலே அதிர்ச்சி அடையறதுக்கு ஒண்ணுமில்லே. அரசல் புரசலா தெரிஞ்ச விஷயம் தான் இது.''

''இல்லே, துர்கா! இது அது இல்லே.''

''ஏதானாலும் சொல்லுங்க. தெரிஞ்சிகிட்டா நல்லது தானே.''

''இல்லே, உங்க அண்ணனை ஒரு பொண்ணுகூட நாங்க இரண்டு, மூன்று தரம் பார்த்தோம்.''

''என்னடி ஒரு பொண்ணு? ஒடச்சேதான் சொல்லேன். யாருன்னு நமக்குத் தெரியாதா?''

''யாரு அது, சீமா?'' என்று பரபரப்புடன் கேட்டாள் துர்கா.

''நம்ம காலேஜ் தான். இந்த வருஷம் பி.எஸ்சி. கடைசி வருஷம் எழுதியிருக்காளே, ஆஷா. அவதான்.''

''ஆஷான்னா, அந்த...''

''அதே திமிர் பிடிச்ச ஆஷாதான்.''

''அடக்கடவுளே! எங்க அண்ணன் யாராவது நல்ல பொண்ணா விரும்பினா எங்கப்பா, அம்மா கூட அழகா கல்யாணம் பண்ணி வெச்சிடுவாங்க. போயும் போயும் இந்த அகங்காரி தான் கிடைச்சாளா, அவனுக்கு?''

''ஆமா, அவளோட கர்வமும் திமிரும் காலேஜ் பூரா ரொம்பவே பிரசித்தமாச்சே. அதுதான் கவலைப் பட வேண்டிய விஷயம்!'' என்றாள் மணிமேகலை.

''சரி, துர்கா. இப்போ ஒண்ணும் குடிமுழுகிப் போயிடல்லே. ஆஷாவும் உங்க அண்ணனுக்குத் தகுந்த அழகு தான். கொஞ்சம் வசதியான பொண்ணு. அவளுக்கு ஒரு அண்ணன் அண்ணி தான். அப்பா அம்மா இல்லாட்டாலும் இவ மேலே அவ அண்ணன் வெச்சுருக்கிற அன்பே போதும், அவரும் ஒரு நல்ல வேலைல தான் இருக்காரு. நல்லா செய்வாரு. எங்க தெரு தானே. அதான் எனக்கு எல்லா விவரமும் தெரியும்,'' என்றாள் வீணா.

''நீ சொல்ற இந்த வசதி இதெல்லாம் நிஜமாக இருக்கலாம். ஆனா, எங்க அம்மாவோட நினைப்பே வேறே. அவங்களுக்கு வேண்டியது பணம் இல்லே, குணம். அழகு இல்லே, அடக்கம். இவனே குணக்குன்று, எங்க அம்மா அப்பாவுக்கு நாள் கழிச்சுப் பிறந்த பிள்ளை. அதனால் தான் அவன் மேலே உயிர். கண்டிக்காமே வளர்த்த கோளாறு இப்படி இருக்கான். அதனாலே, வரவ தான் அவனைத் திருத்தி, நல்ல வழிப்படுத்தி, குடும்பத்தைப் பார்த்துக்கணும்னு நினைக்கிறாங்க, சரி சரி. வாங்க. இது எங்க வீட்டுப் பிரச்சனை. உங்க எல்லோருடைய மூடையும் கெடுக்கக்கூடாது!'' என்று சொல்லித் துர்கா எழுந்தாள்.

''சரி, சாப்பிட எங்கேடி போகலாம்?'' என்று கேட்டாள் மீனாட்சி.

''ஏதாவது நல்ல டீசன்ட் ஹோட்டல். நம்ம தமிழ் நாட்டுக்கே போகலாம்டி,'' என்றாள் சீமா.

''எனக்குச் சாப்பாடுன்னாலே பிடிக்கல்லே!'' என்றாள் மணிமேகலை.

''ஏன்டி, உங்க அத்தானை இன்னும் கண்ணாலேயே பார்க்கல்லே, அதற்குள்ளே என்னடி சாப்பாடு பிடிக்காமே?'' என்று வீணா கேட்கவும், எல்லோரும் கொல்லென்று சிரித்தனர்.

''பாவம்டி! அந்த வருத்தத்திலேதான் சாப்பாடு பிடிக்காமே இருக்கும்!'' என்றாள் துர்கா.

''ஐயதுர்கா, நான் வேறே ஏதோ யோசிச்சி இதைச் சொன்னேன்,'' என்றாள் வீணா.

''சீ, போங்கடி! நீங்களும் உங்க ஜோக்கும்!'' என்று மணிமேகலை பொய்க் கோபத்துடன் சொல்ல, ஒரு நடமாடும் மலர்க்கொத்தாக அந்தக் கூட்டம் அப்படியே வெளியே வந்தது.

அதற்குள் துர்கா, '' ஒரு நிமிஷம்!'' என்றாள். 'என்ன துர்கா?' என்ற தோழிகளிடம், ''நீங்க பார்த்தது என் அண்ணன் நடராஜ் தானா? அவன் கூடப் பார்த்தது ஆஷா தானா? நிச்சயமாகத் தெரியுமா?'' என்று கேட்டாள்.

''என்னடி, உங்க அண்ணன் எங்களுக்குத் தெரியாமே என்ன? ஆஷாவையும் தான் இத்தனை நாளா காலேஜ்ல பார்க்கிறோமே! தவிர, இந்த மதுரையில் அந்த பாய்சன் சென்ட் வாசனையும், நானோ காருமாய் அந்த அலட்டு அலட்டறது உங்க அண்ணனைத் தவிர வேறு யாராய் இருக்கும்? சாரி இப்படிச் சொன்னதுக்கு!'' என்றாள் சீமா.

''சொல்லியாச்சு. அப்புறம் சாரி என்ன!'' என்று லதா சொல்ல, ''ஆமா, எங்கே வெச்சு அவங்களைப் பார்த்தீங்க?'' என்று கேட்டாள் துர்கா.

''எங்கே பார்க்கல்லைன்னு கேளு. ஒரு நாள் பழமுதிர்சோலை, ஒரு நாள் வைகை டாம், ஒரு நாள் திருப்பரம் குன்றம் மலை மேலே, ஒரு நாள் பாண்டியன் ஹோட்டல்ல. போதுமா?'' என்று எல்லோரும் மாறி மாறிச் சொல்ல, ''போதும்பா, போதும்!'' என்றாள் துர்கா. விட்டால் அழுதுவிடுவாள் போலிருந்தது.

''சரி, வாங்கடி! இன்னொரு முறை அம்மனைத் தரிசனம் பண்ணிட்டுக் கிளம்பலாம்'' என்றாள் மணிமேகலை.

''நான் மீனாட்சி சொல்றேன். மகளே! உன் திருமணம் விரைவில் நல்லபடியாக நடக்கும். அதற்காக ஒரே நாளில் நீ இரண்டு முறை என்னைத் தொந்தரவு செய்ய வேண்டிய அவசியமில்லை!'' என்று கையை ஆசிர்வாதம் செய்யும் போஸில் வைத்து மீனாட்சி சொல்ல, ''ஆமாம், பொண்ணுங்களா, இப்போ திரும்ப வரிசையிலே நிக்க நம்மால ஆகாது. ரொம்ப லேட் டாயிடும்!'' என்றாள் லதா.

''ஆமா, அதுக்கப்புறம் ஹோட்டலுக்குப் போனா காலிப் பாத்திரங்களையெல்லாம் தேச்சுக் கழுவிட்டு வர வேண்டியதுதான்,'' என்று சொல்ல, எல்லோருமாகக் கிளம்பினர்.

ஹோட்டல் சேர்ந்து மட்டுமென்ன, கொஞ்சம் கலாட்டாவா? ஒரு மாதிரி அதகளப்படுத்திவிட்டு, சர்வருக்குத் தாராளமாக டிப்ஸ் கொடுத்துவிட்டு, மேனேஜரிடம் சாப்பாடு ஃபர்ஸ்ட் கிளாஸ் என்று சொல்லிவிட்டுக் கிளம்பினார்கள். இந்த முறை எல்லோருக்கும் கண்கள் நனைந்து விட்டன.

''அடிக்கடி போன்லேயாவது பேசுங்கடி,'' என்று ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டு கனத்த மனங்களுடன் பிரிந்தனர்.

2

''டோனி வீடியோ டென்'' வாசலில் தன் ஆக்டிவாவைக் கொண்டு நிறுத்திய ஆஷா மணியைப் பார்த்தாள். பத்து நிமிடங்களாவது ஆகும் நடராஜ் வருவதற்கு என்று தோன்றியது. ''ஹாய், டோனி!'' என்றாள். ''ஏய். நீ சீக்கிரம் வந்துட்டியா? இல்லே நட்டி லேட்டா?'' என்று கேட்டான் டோனி ராஜாராமன். நல்ல பெயராக வைத்து விட்டு, வீட்டில் என்னவோ பெயரில் கூப்பிட்டு அதுவே நிலைத்து ராஜாராமன் டோனி யாகவும் நடராஜ் நட்டியாகவும் ஆகிவிட்டார்கள். டோனி நட்டிக்கு கிளாஸ் மேட். ஜிக்ரிதோஸ்த். அதனால் ஆஷாவுக்கும் சிநேகிதன். இப்போது இவர்கள் காதலுக்கு உதவியாளன். ஒரு சிநேகிதன் காதலிக்க ஆரம்பித்தால் தான் எல்லோருக்கும் ஒரு தேஜஸ் வந்துவிடுமே! அங்கே சந்தித்துத்தான் இருவரும் எங்கேயானாலும் போவார்கள். டோனி நன்றாக ரகசியம் காப்பான். நட்டிக்கு இன்னும் இரண்டு நண்பர்களும் உண்டு. தீபக்,

சதீஷ் ஆகியவர்கள். சமயத்தில் எல்லோருமாக ஏதாவது சாக்குச்சொல்லித் தண்ணியடிப்பார்கள்.

''புதுசா ஏதாவது சி.டி வந்திருக்கா, டோனி?'' என்று கேட்டுக்கொண்டே தடுப்பிற்கு உள்ளே போனாள் ஆஷா.

''இல்லேம்மா. உனக்கு என்ன வேணும் சொல்லு. நான் வாங்கி வைக்கிறேன்,'' என்றான் டோனி.

''குறிப்பா ஒண்ணுமில்லே,'' என்றவள், அங்கிருந்த அந்த வாரத்து 'வீக்' பத்திரிகையைக் கையில் எடுத்துக் கொண்டு நாற்காலியில் அமர்ந்தாள். வெளியில் யாரோ வந்து கூப்பிடவும் டோனி அவர்களைக் கவனிக்கப் போனான்.

அடுத்த பத்து நிமிடங்களில் மஞ்சள் நானோ கார் வந்து நின்று விட்டது. உள்ளே வந்த நடராஜ். ''ஆஷா, ஐ யாம் ஹியர்!'' என்று சொல்லிக் கொண்டே உள்ளறைக்குள் போனான். தானும் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தவன், ''ஹாய், டார்லிங்! இன்னிக்கு நாம எங்கே போகலாம்?'' என்று கேட்டான். உடனே நினைவுக்கு வந்தவனாகத் தன் தலையில் தட்டிக் கொண்டவன், ''நாம் தான் நேத்திக்கே பிளான் பண்ணிட்டமே, இன்னிக்கு வைகை டாம்னு, இல்லையா?''

''இல்லை நட்டி! இன்னிக்கு வைகை டாம் பிரோகிராம் ஒர்க்கவுட் ஆகாது!'' என்றாள் ஆஷா.

''ஏன்டா? என்ன ஆச்சு?'' என்று அவன் ரொம்ப வருத்தமாய்க் கேட்க. ''இன்னிக்கு என் அண்ணா

ஆபீசிலே யாரோ நாலு வெளிநாட்டு அதிகாரிங்க வராங்களாம். அதனாலே நான் வீட்டுக்கு வந்துடணு மாம். அண்ணி உத்தரவு!'' என்றாள் ஆஷா.

''ஏம்பா, சமையல்காரி சமைக்கப்போறா. மத்த வேலையெல்லாம் வேலைக்காரங்க பார்க்கப் போறாங்க. நீ எதுக்கு?''

''ஐயோ! உனக்கு என் அண்ணனைப் பத்தித் தெரியாது. வீட்டுக்கு யாராவது வராங்கன்னா, எல்லோரும் வீட்லே இருந்தே ஆகணும்னு நினைப்பார். நல்ல வேளையா அவங்க லஞ்சிற்குத்தான் வராங்க. அதனால்தான்...'' என்றாள். ''அண்ணிகிட்டே ஏதோ ஒரு பொய்யைச் சொல்லிவிட்டு வெளியே வந்திருக்கேன் நான். இன்னும் ஒரு மணி நேரத்திலே நான் வீட்ல இருக்கணும்.''

''இல்லேன்னா?''

''எங்க அண்ணன் தங்கிட்டே சொல்லிட்டு பர்மிஷனோடு பண்ணினா, எத்தனைக்கெத்தனை ஒத்துழைப்பாரோ, அத்தனைக் கத்தனை சொல்லாமே செஞ்சா பிடிக்காது. வெளுத்துடுவார்.''

''அதுக்காக, யாராவது வீட்ல சொல்லிட்டுக் கூட காதலிப்பாங்களா?''

''அது முடியாதுதான். ஆனா, சீக்கிரமே உங்க வீட்டி லேயும் சொல்லு. நான் எங்க வீட்டிலேயும் சொல்றேன். கல்யாணம் பண்ணிக்கற வழியைப் பார்க்கலாம்,'' என்றாள் ஆஷா.

"சரி வா. இங்கே கிட்டக்கப் போய் ஐஸ்க்ரீம் மட்டும் சாப்பிட்டுட்டுப் போகலாம்," என்று காரைக் கிளப்பினான். நானோவிலேயே இடம் கம்மி. கிட்டே உட்காரணும். அதிலும் இவர்களோ விட்டால் மடியிலேயே உட்காருகிற கேஸ். இவன், 'அன்பே வா, என் முன்பே வா!' என்று சீட்டியடிக்க, அவள் கூடப்பாட இருவரும் ஐஸ்க்ரீம் பார்லருக்குப் போனார்கள். "இரண்டு சாக்லெட் கோன்" என்று ஆடர் செய்தான் நடராஜ்.

"வேண்டாம் நட்டி! அடிக்கடி ஐஸ்கிரீம் சாப்பிட்டு வெயிட் போட்டுடப்போறனேன்னு பயமா இருக்கு."

"பின்னே, கூப்பிட்டதும் வந்தே?"

"உன்னோட கொஞ்ச நாழி பேசிக்கிட்டு இருக்கறதுக்காக வந்தேன். நீ சாப்பிடு. நான் பாப்கார்ன் சாப்பிடறேன்," என்றாள். "வீட்ல வேறே விருந்துச் சாப்பாடு அமர்க்களப்படும். நான் சாப்பிடலைன்னா அண்ணி திட்டுவாங்க!" என்றாள்.

"சரி. நான் ஒண்ணரை, நீ அரை. சரியா?" என்றான் நடராஜ். கொஞ்ச நாழி அர்த்தமில்லாத, இனிப்பான ஏதேதோ பேச்சுக்கள்.

திடீரென்று நினைத்துக் கொண்டவனாக நடராஜ் கேட்டான். "ஏய் ஆஷுக்குட்டி! இன்னிக்கு பிளான் பண்ணின வைகை டாம் ட்ரிப் நாளைக்கு. என்ன சொல்றே?"

"சரி. ஆனா வீட்ல என்ன சொல்றதுன்னுதான் தெரியல்ல. காலேஜ் தான் பரிட்சை எல்லாம் ஆயிடுத்தே. இன்னும் என்ன ஊர்சுற்றல்னு கேப்பாங்க, அண்ணி."

''பிரண்ட்ஸ் எல்லோருமா வைகை டாம் போறோம்னு சொல்லேன்.''

''அது நல்ல ஐடியாப்பா. என் பிரண்ட்ஸெல்லாம் கம்பெல் பண்றாங்கன்னு சொல்லிடலாம். ஆஹா, உனக்குக்கூட மூளை வேலை செய்யுது.''

''ஏய். என்ன கொழுப்பா? என் மூளை எப்போதுமே வேலை செய்யும். ஆனா, உன்னைக் காதலிக்க நினைச்ச போதுதான் சுத்தமா மழுங்கிப் போச்சு.''

அவன் துடையை நறுக்கென்று கிள்ளினாள் ஆஷா ''சரி வா! இப்ப நாம கிளம்பலாம்,'' என்றாள்.

''ரொம்ப அவசரமா, என்னை விட்டுப் போக!'' என்று அவள் கையைப் பிடித்துக் கொண்டான் நடராஜ்.

''விடுப்பா. எனக்கு மட்டும் போக ஆசையா? ப்ளீஸ்! எழுந்திரு!'' என்று கெஞ்ச, இருவரும் அந்த இடத்தை விட்டுக் கிளம்பினார்கள்.

3

இரண்டு நாட்கள் சென்ற பின், ஒரு சாயந்திர வேளையில் நடராஜ் வந்ததும், ''வாயேன். நாம ஒரு ஆட்டம் செஸ் விளையாடலாம்,'' என்று கூப்பிட்டாள் துர்கா.

''எனக்கு போரடிக்கும். நீ தான் ஜெயிப்பே!'' என்றான் நடராஜ்.

''இல்லே. நான் உனக்கு விட்டுக் கொடுத்துச் சமர்த்தாக விளையாடறேன்.''

''ஐயே. நீ விட்டுக் கொடுத்து நான் ஜெயிக்கணுமாக்கும்!''

''சரி வா, மாடிக்குப் போகலாம். நாம பால்கனியில உட்கார்ந்து கொஞ்சம். பேசலாம்.''

''அப்படின்னா. நீ டீ போட்டு எடுத்துக்கிட்டு வரணும்,'' என்றான் நடராஜ்.

''சரி சரி. நீ போ. நான் டீ போட்டு எடுத்துவரேன்,'' என்று அவனை அனுப்பி விட்டு டீ போட விரைந்தாள்.

மாடி பால்கனியில் டீ கப்புடன் இருவரும் உட்கார்ந்தனர்.

''அவுட் வித் இட், என் அருமைத் தங்கையே! நீ ஏதோ சொல்ல நினைக்கிறே. அதுக்கு செஸ்ஸும், கேரமும் எதுக்கு? சொல்ல நினைக்கறதை...'' என்றான் நடராஜ்.

சற்று இடைவெளி கொடுத்த துர்கா, ''அப்பா ஒரு வரன் சொன்னாங்களே. அதைப் பத்தி நீ எதுவும் சொல்ல லியே!'' என்று கேட்டாள்.

''நான்தான் அன்னிக்கே சொன்னேனே! எனக்கு இப்போ கல்யாணம் வேண்டாம். முதல்ல உன் கல்யாணம். அப்புறம் தான் எனக்கு. தவிர, எனக்கு இன்னும் கொஞ்ச நாள் ஃப்ரீயா இருக்கணும். இதைச் சொல்லத்தான் இத்தனை பீடிகையா? நாம கீழே போகலாம். ஒரு நல்ல ஃபுட்பால் மேட்ச் இருக்கு டிவில.'' என்றான்.

''உட்காரு, அண்ணே! நான் உங்கிட்டே கொஞ்சம் பேசணும்,'' என்றாள் துர்கா.

அவளை வியப்புடன் பார்த்த நடராஜ் மறுபடியும் உட்கார்ந்தான்.

''அண்ணே, நான் உன்னை ஒண்ணு கேட்பேன், கோவிச்சுக்காம பதில் சொல்லுவியா?''

''கேளு.''

''நீ யாரையாவது லவ் பண்றியா?''

பேசாமலிருந்தான் நடராஜ்.

''ஏன் பேசாமே இருக்கே, அண்ணா? லவ் பண்ணி கிட்டிருக்கறதுனாலேதானே ஆஷாவோட எல்லா இடத்துக்கும் போய் வந்து கிட்டிருக்கியா?''

''ஓ! நீ விஷயம் தெரிஞ்சி தான் கேக்கறியா? ஆமாம். நீ நினைக்கறது உண்மைதான். நானும் அவளும் ஒருத்தர் மேல் ஒருத்தர் உயிரையே வெச்சிருக்கோம். சீக்கிரமே அவங்க வீட்லேருந்து வந்து பேசுவாங்க,'' என்ற நடராஜ், ''ஏன், உனக்கு நான் கல்யாணம் பண்ணிக்கறதுல ஏதாவது ஆட்சேபனையா?'' என்று கேட்டான்.

''நீ கல்யாணம் பண்ணிக்கறதுல எனக்கு என்ன ஆட்சேபனை? அவசியம் சீக்கிரமா பண்ணிக்கோ. ஆனா...'' என்று இழுத்தாள்.

''என்ன, சொல்லு?''

''அந்தப் பெண்ணை உனக்கு எத்தனை நாளாத் தெரியும்?''

''ஆறு மாசமா பழகறோம்!'' என்றான். நடராஜ் சுருக்கமாக. ''உனக்கு...''

''நான் எம். எஸ்சி. முடிச்சுட்டேன். அவ எங்க காலேஜிலதானே மூணு வருஷமா படிக்கறா. எனக்கு அவளை மூணு வருஷமாகவே தெரியும்,'' என்றாள் துர்கா.

''அதனாலே நீ அவளைப் பத்தி ஏதோ எங்கிட்டே சொல்ல நினைக்கிறே. இல்லையா?''

''நீ கேக்கலைனாலும் நான் சொல்ற எண்ணத்தில தான் இருக்கேன். நான் சொல்ற அபிப்ராயத்துக்காக நீ என்னைக் கோவிச்சுக்காதே! அந்தப் பெண்ணோட குணம் காலேஜில் எல்லார் மத்தியிலும் ரொம்பவே பிரசித்தம்.''

''குணம்னா?''

''குணம்னா, அவளோட கோபம், ஆத்திரம், சண்டை போடற குணம் எல்லாமே தான். மகா அகம்பாவி, திமிர் படிச்சவள்னு ப்யூன்ல ஆரம்பிச்சு, ப்ரின்சிபால் வரைக்கும் எல்லார்கிட்டேயும் பேர் வாங்கியிருக்கா. நம்ப வீட்டுக்கு அவள் சரிப்படுவாளா? எல்லோரையும் விடு. உன்னோடயாவது நல்லபடியா நடந்துக்கணும். இல்லையா? அதுதான் என் கவலை. கொஞ்சம் நீ யோசிச்சுக்கோ.''

''ஏய், டீன் ஏஜ்ல வீட்டுக்குச் செல்லப் பெண்கள் இப்படியெல்லாம் இருக்கிறது சகஜம் தானே! நாளைக்கே குடும்பத்துக்கு வந்துட்டா எல்லாம் சரியாயிடும். இது ஒரு பெரிய விஷயமா?''

''அப்படி யில்லேண்ணே! ஏதாவது ஒருத்தர் கிட்டேன்னா பரவாயில்லை. காலேஜ் மொத்தமும்

எல்லார்கிட்டேயும், எல்லா டிபார்ட்மெண்ட்லேயுமே அவளுக்குச் சண்டைக்காரின்னு தான் பேரு. போனதரம் அவள் காலேஜ் யூனியன் செக்ரடரி ஆகணும்னு நின்னுட்டு ஜெயிக்கல்லே. ஜெயிச்சவளை என்ன பாடு படுத்தியிருக்கா தெரியுமா? அதுதான் விஷயம் தெரிஞ்ச திலிருந்து ரொம்ப கவலையாக இருக்கு. கொஞ்சம் யோசனை பண்ணு, அண்ணே! ப்ளீஸ்!''

''அதெல்லாம் ஒரு யோசனையும் பண்ண வேண்டிய தேவையில்லை. நான் ஆறு மாசமா பழகறேனே! எனக்கொண்ணும் அப்படியெல்லாம் தெரியல்லே. நீ மொதல்ல இந்த எண்ணத்தை மனசிலிருந்து எடுத்துடு. இல்லைனா, அவ வரும்போதே இந்த எண்ணத்திலேயே இருந்தியானா, வீடு அனா வசியமா இரண்டு படும். அப்பாவையும், அம்மாவையும் வேறே இந்த மாதிரி சொல்லி மாத்திடாதே. என்னால் அவளைத் தவிர வேறு யாரையும் கல்யாணம் பண்ணிக்க முடியாது!'' என்று காட்டமாகச் சொல்லி முடித்த நடராஜ் மடமடவென்று கீறே இறங்கிச் சென்று விட்டான்.

இதற்கு மேல் பேசினால் இவனுக்குப் பிடிவாதம் தான் அதிகமாகும் என்று தோன்றியது துர்காவுக்கு. அவளும் கீழே இறங்கித் தன் வேலைகளைப் பார்க்க ஆரம்பித்தாள்.

4

''சரிப்பா துரை, அப்போ சாயங்காலம் பார்க்கலாம்,'' என்று போனை வைத்த நாராயணசாமி, உள்ளே பார்த்து,

''சாயந்திரம் துரை பங்கஜத்தோட வரானாம்,'' என்றார். அவருடைய சின்ன வயதுச் சிநேகிதர் ரங்கதுரை. முழுவதும் ஒன்றாகப் படித்தவர்கள். அவரும் சரி, அவர் மனைவி பங்கஜமும் சரி இவர்கள் மீது உயிரையே வைத்திருந்தார்கள். அவருடைய பிள்ளை ஆதித்யா அகமதாபத்தில் ஐ.ஐ.எம்.மில் எம்.பி.ஏ படித்தவன். ஆளும் மிக அழகாக இருப்பான். அவன் எம்.பி.ஏ. விற்கு முன் கம்ப்யூட்டர் எஞ்ஜினியரிங் முடித்திருந்தான். அவன் வந்ததும் ஒரு சாஃப்ட்வேர் கம்பெனி ஆரம்பிக்கும் எண்ணத்தில் இருந்தான். அப்பாவும் மத்திய அரசாங்கத்தில் பெரிய ஆபீஸராகப் பணி புரிந்து ஓய்வு பெற்றவர். அதைத் தவிர, சொத்தும் எக்கச்சக்கமாக இருந்தது. பிள்ளைக்கு கம்பெனியை ஆரம்பித்துக் கொடுப்பதில் தடை என்ன?

அவர்கள் நாராயணசாமி தம்பதியினரின் ஒரே பெண் துர்காவைப் பிள்ளைக்குக் கல்யாணம் பண்ணி வைத்துவிட வேண்டும் என்கிற எண்ணத்தில் இருந்தார்கள். நாராயண சாமிக்கு அதில் சந்தோஷமே. மறுக்க அதில் என்ன இருக்கிறது? துர்காவிற்கும், ஆதித்யாவிற்கும் இதெல்லாம் ஓரளவு தெரியும். ஆனால் இருவரும் இதைப் பற்றி எண்ணம் எதுவும் வளர்த்துக் கொள்ளவில்லை. காலம் கனிந்து வரும்போது தானே வரட்டும் என்ற எண்ணம்.

நாராயணசாமி தன் பிள்ளை பற்றிய கவலைகளைச் சிநேகிதரிடம் பகிர்ந்து கொண்டிருந்தார். ''எல்லாம் சரியாயிடும்பா. நீ வீணா கவலைப்படாதே!'' என்று அவர் ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தார்.

அடுத்து பங்கஜம்தான் பேச்சை ஆரம்பித்தாள். ''என்ன தனம், வீட்டிற்கு முதலில் மருமகனா, இல்லை மருமகளா? யாரை முதலில் கொண்டு வரப்போறே?'' என்று கேட்டாள்.

''நம்ம நினைப்பில் என்ன இருக்கு, பங்கஜம்? கடவுள் இழுக்கறபடி நம்ம வாழ்க்கை நடக்குது!'' என்று இழுத்தாள் தனம்.

''எதுக்கு தனம் இத்தனை அலுப்பு?'' என்று பங்கஜம் கேட்க.

''என்ன சொல்றது பங்கஜம். சொன்னதைக் கேட்க மாட்டேங்கறான் நடராஜ். மேலே படிக்கவும் மாட்டானாம். சரி, கடைக்குப் போ, இல்லே ஸ்கூலையாவது பார்த்துக் கோன்னா அதையும் கேட்க மாட்டேங்க்றான்.''

''பேசாமே ஒரு கால்கட்டைப் போட்டுடு. எல்லாப் பிரச்னையும் தானே தீர்ந்துடும்.''

''அதைச் சொன்னா, அதையும் கேட்க மாட்டேங் கறான். அதுதான் இப்போ பிரச்னை.''

''ஏதாவது பொண்ணை மனசிலே வெச்சிருக்கியா, தனம்?''

''ஆமாம், பங்கஜம். இவரோட ஊர் சிவகங்கை இருக்கில்லையா? அங்கே சரோஜான்னு இவருக்கு தங்கச்சி முறை ஆகணும். அவங்க பொண்ணு கல்யாணத்துக்கு இருக்கா. கிராஜுவேட். நல்லா மூக்கும் முழியுமா நல்ல கலராவும் இருப்பா. சரோஜாவும் ரொம்ப நல்ல மாதிரி. பொண்ணையும் நல்ல மாதிரி வளர்த்

திருக்கா. அந்தப் பொண்ணைத்தான் நான் மனசிலே வெச்சிருக்கேன். ஆனா இந்த குணக் குன்று ஒத்துக் கணுமே! என்னவோ பகவான் தான் கண்ணைத் திறக் கணும். ரொம்ப வசதின்னு சொல்ல முடியாது. ரொம்ப ஏழையும் இல்லை!'' என்று அவள் சொல்லி முடிக்கும் முன் பங்கஜம், ''நீ கவலைப் படாதே! வசதி யெல்லாம் என்ன பெரிய விஷயம்? நம்ம வீட்டுக்கு வந்துட்டா நம்ம வசதிதான் அவள் வசதி. எல்லாம் உன் நல்ல மனசுக்கு நல்லாவே நடக்கும்!'' என்றாள்.

''நாமும் யோசிக்கணும்மா. துர்கா - ஆதித்யா கல்யாணத்தையும் முடிக்கணும். காலா காலத்தில் நாமும் பேரக் குழந்தைகளைப் பார்க்கணும். துர்காகிட்டே இது விஷயமா எப்பவாவது கேட்டிருக்கீங்களா?'' என்று கேட்டார் ரங்கதுரை.

''இல்லையண்ணா. என்னிக்கும் குறிப்பா கேட்ட தில்லை. ஆனா, பொதுவிலேயே தனக்கு இப்போ கல்யாணம் வேண்டாம். டாக்டர் பட்டம் வாங்கணும்னு ஆசையா இருக்கு, அப்படீங்கறா. ஆனா, அவளுக்கு உள்ளூர ஸ்கூலும், கடையும் என்ன ஆகும்... அப்பாவால முடியலையேங்கற கவலை இருக்கு.''

''சரி, அதுக்காக அவளை எத்தனை நாள் கல்யாணம் பண்ணாமே வெச்சிருக்க முடியும்?'' என்றாள் பங்கஜம்.

''அதான். எல்லாக் குழப்பத்தையும் அந்த மீனாட்சி தான் தீர்த்து வைக்கணும்!'' என்றாள் தனலட்சுமி.

ரங்கதுரை, நாராயணசாமியிடம், ''நாணா, எனக்கு உங்கிட்டே ஒண்ணு சொல்லணும்,'' என்று சொல்லிக்

கொண்டிருக்கும் போது, துர்கா. எங்கேயோ வெளியே போயிருந்தவள் வந்து நுழைந்தாள். இவர்களைப் பார்த்ததும், ''நமஸ்தே அங்கிள், நமஸ்தே ஆன்ட்டி!'' என்றாள்.

''வாம்மா, பரிட்சையெல்லாம் நல்லா பண்ணி யிருக்கியா?'' என்று கேட்டார் ரங்கதுரை.

''நல்லா பண்ணியிருக்கேன் அங்கிள். அப்புறம் உங்க இரண்டு பேர் ஹெல்த்தும் எப்படியிருக்கு?''

''நல்லா இருக்கோம்மா. ஆனா பாரு. உங்க அங்கிள் உடம்பு எப்படி இளைச்சிருக்குன்னு, சாப்பிடறதே யில்லை,'' என்றாள் பங்கஜம்.

''ஏம்மா, எந்த பொம்மனாட்டியாவது தன் புருஷன் நல்லா சாப்பிட்டுக் குண்டா இருக்கான்னு ஒத்துப்பாளா, சொல்லு?'' என்றார் ரங்கதுரை. ''எல்லாம் நீ எங்க வீட்டுக்கு வந்து கவனிச்சு சாப்பாடு போட்டா சரியா யிடும்!'' என்றார். துர்கா முகம் சிவந்து போனாள்.

''அது மட்டுமில்லை, நாணா! ஆதி ஊர்லேருந்து வந்திருக்கான். ஒரு நாள் இவங்க இரண்டு பேரும் பேசிக்கட்டும்பா. அவங்கவங்க நினைப்பைப் பரிமாறிக் கறதுதான் இப்போ எல்லாம் சகஜமாயிடுத்தே.''

''ஆமா, உன்னைப் பங்கஜத்தைக் கல்யாணம் பண்ணிக்கறியான்னு கேட்டாங்களா?'' என்று கேட்டார் நாராயணசாமி.

''ஆமா. இப்போ அதுதான் பிரச்னை!'' என்று பங்கஜா நொடிக்க, ''இல்லை நாணா. என்னைக் கேக்காமலேயே

நிச்சயம் பண்ணிட்டாங்க, தெரியுமா?'' என்றார் ரங்கதுரை.

''ஏன் அங்கிள், கேட்டிருந்தா மட்டும் எங்க அழகு, அருமை ஆன்ட்டியை வேண்டாம்னு சொல்லியிருப் பீங்களோ?'' என்று கேட்டாள் துர்கா.

இடிஇடியென்று சிரித்தார் ரங்கதுரை. ''சரி, நீ சொல்லு, துர்கா. எப்போ ஆதித்யாவோட பேசறே? நாளைக்கு வரச் சொல்லட்டுமா?'' என்று கேட்டார்.

''நான் போய் எல்லோருக்கும் காபி கொண்டு வரேன்,'' என்று துர்கா உள்ளே போய்விட்டாள்.

''இந்தக் காலத்துப் பசங்க வெக்கப்படறதைக் கூட எவ்வளவு நாசூக்கா பண்றது. பாரேன், தனம்,'' என்றாள் பங்கஜம்.

''நிஜம்தான். இந்தக் காலத்துக் குழந்தைகளுக்கு நம்மளை விட முதிர்ச்சி அதிகம். அதுவும் பெண் குழந்தைங்க ரொம்பவே சமர்த்து!'' என்றாள் தனம்.

துர்கா காப்பி கொண்டு வந்து கொடுத்தாள். சாப்பிட்டு விட்டு எல்லோரும் கிளம்பும் போது, ''நான் நாளைக் காலை ஆதித்யாவை அனுப்பறேன். துர்காவும் அவனுமா திருப்பரங்குன்றம் போயிட்டு வரட்டும்,'' என்றார் ரங்கதுரை. துர்கா ஒன்றுமே சொல்லாமல் தந்தையைப் பார்த்தாள். ''அனுப்புடா... சீச்சி! அனுப்புங்க, சம்பந்தி!'' என்றார் நாணா. ஹோவென்ற சிரிப்புடன் நாராயணசாமியிடம் மற்றவர்கள் விடைபெற்றனர்.

* * *

என்னவோ இலக்கில்லாமல் டவுன்ஹால் ரோடில் சுற்றிக் கொண்டிருந்தான், ஆதித்யா. அப்பா நேற்று வந்து சொன்னதிலிருந்து துர்காவின் நினைவாகவே இருந்தது அவனுக்கு. போன முறை வந்த போது கூட அவளைப் பார்த்தான் அவன். அப்பா அம்மாவைக் கொண்டு போய் அவர்கள் வீட்டில் விட்ட அவன், அங்கிள் தன்னோடு பேச எழுந்து வரவும் மரியாதை நிமித்தம் நலம் விசாரித்தான். அதற்குள் துர்கா போய்ச் சூடாகக் காப்பி கொண்டு வந்து தந்தாள். துர்கா நல்ல அழகு என்று ஒரே வார்த்தையில் சொல்லிவிடலாம்.

பளிச்சென்ற கலர். அடர்த்தியான தலைமுடி. எடுப்பான நாசி, நல்ல உயரம், ஒல்லியுமில்லாமல் அதே சமயம் குண்டுமில்லாமல் சரியான வாளிப்பில் இருந்தாள். ரொம்பவே அழகான கருவண்டுக் கண்கள். ரொம்ப நாள் கழித்துப் பார்க்கிறானா, பார்த்த நிமிடத்தில் சொக்கிப் போனான் ஆதித்யா.

இவனும் அன்று கோவிலுக்குப் போய்விட்டு அங்கு வந்திருந்ததால், ஜரிகை வேஷ்டி, வெள்ளை ஷர்ட், விபூதி, குங்குமம் என்று இருந்தான். அவனுடைய உயரம், பருமனுக்கு வேஷ்டி, ஷர்ட் ரொம்பவே அம்சமாக இருந்தது. தலைக் கிராப்பைச் சின்ன வயதிலிருந்தே வலது புறம் வகிடெடுத்துச் சீவுவான். அவனுக்கு அது ஒரு தனித்துவம் தந்தது எனலாம். ரிம்லெஸ் கிளாஸ் வேறு ஒரு கனவான் தோற்றத்தை அவனுக்குக் கொடுத்தது.

அவள் காப்பி கொண்டு வந்து கொடுத்தபோது, ''எப்படி இருக்கே, துர்கா?'' என்றான். எத்தனையோ பேசும் துர்காதான். ஸ்கூல், கடை இரண்டிலும்

மற்றவர்களை ஆண் பெண் பேதமின்றி அதட்டும் துர்கா தான். ஆனால் என்னவோ இவனிடம், ''நல்லாயிருக் கேன்!'' என்று சொல்வதற்குள் கால்கள் சில்லிட்டுப் போயின. காது மடல்கள் சூடாகிப் போயின. ஒரு வித மான அவஸ்தை. உள்ளே போய் அந்த அவஸ்தையை முடித்துக் கொள்ளவும் மனமின்றி, அதே நிலைமையை நீட்டிக்கவும் தர்ம சங்கடமாக உணர்ந்த பிறகு, நல்ல வேளையாகத் தனம் அவளை உள்ளிருந்து கூப்பிட்டு விட்டாள். வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண் டிருந்த அவனும் பிரமிப்பிலிருந்து விடுபட்டு, ''நான் கிளம்பறேன்,'' என்று சொல்லி விட்டுப் போய்விட்டான்.

சின்ன வயதிலிருந்து பார்த்துக் கொள்பவர்கள்தான். ஆனால் இப்போது இரண்டு வீட்டிலும் பெற்றோர்கள் இவர்கள் கல்யாணத்தைப் பற்றி அதிகம் பேசுவதால் வந்த தடுமாற்றம் இது. சந்தோஷமான தடுமாற்றம்.

சின்ன வயதிலிருந்தே மதுரையில் வளர்ந்தவர்தான் ரங்கதுரை. அவருடையது நல்ல பணக்காரக் குடும்பம். ஆனாலும் நன்கு படித்து, நல்ல வேலைக்குப் போனார். அவர்கள் வம்சத்திலேயே எல்லோருக்கும் தலைமுறை தலைமுறையாக ஒரே பிள்ளை தான். இவர் உத்தியோக நிமித்தம் நிறைய ஊர்களுக்குப் போகவேண்டியிருந்தது. கூடவே பங்கஜாவும் போவாள். சென்னைக்குக் குடித்தனத்தை மாற்றிவிட்டனர். நாராயணசாமி, தனம் தம்பதியினர் சாதாரணமாக அடிக்கடி எங்கேயும் போகிற ரகம் இல்லை. ஆனால், ரங்கதுரை சென்னையிலிருந்தார் என்ற பெயரே ஒழிய, மதுரையில்தான் அவர்கள்

மனசெல்லாம் இருந்தது. அழகர் ஆற்றில் இறங்கு கிறாரா, வந்து விடுவார்கள். வண்டியூர் மாரியம்மன் தெப்பமா, ஆஜர். சஷ்டி விரதம் இன்னும் திருப்பரங் குன்றத்தில் தான். இந்த மாதிரி எத்தனையோ விழாக்கள் தவிர, உறவுக்காரர்கள் வீட்டுக் கல்யாணம் ஒன்றையும் விட்டுக் கொடுக்க மாட்டார்கள். அவர்களுக்கு மதுரையில் இருந்த ஏழெட்டு வீடுகளில் சோமசுந்தரம் காலனியில் ஒரு வீட்டைப் பூட்டியே வைத்திருந்தனர். மதுரை வந்தால் அங்கு தான் தங்குவார்கள். கண்டிப்பாக ஒரு முறையோ, இரண்டு முறையோ நாராயணசாமி வீட்டிற்கு ஒரு விசிட் உண்டு. ஆதித்யா என்னவோ பிட்ஸ் பிலானியில் எஞ்சினியரிங் படிக்கப் போய் விட்டான்... அதன் பிறகு அஹமதாபாதில் ஐ.ஐ.எம்-மில் எம்.பி.ஏ. படித்து விட்டு இப்போது தான் வந்திருக்கிறான். அம்மா, அப்பாவுடன் எப்பவாவது மதுரை வந்தாலும் எப்போதோ ஒரு முறை நாராயணசாமி வீட்டிற்குத் தலையைக் காட்டிவிட்டுப் போவான். அதில் ஏதோ ஓரிருமுறை தான் துர்காவைச் சந்தித்திருக்கிறான். இவர்கள் வந்த எந்தத் தடவையும் நடராஜ் வீட்டில் இருந்ததில்லை. ஆதித்யா படித்திருக்கிறான் என்பதாலேயே இவனைப் பார்த்தாலே அவனுக்கு அலர்ஜி.

இவனுக்குத் துர்காவின் அழகை விடவும், ஒவ்வொரு வருடமும் காலேஜில் அவள் முதல் இடம் வாங்குவதும், ரொம்பவே கண்ணியமாக டிரெஸ் செய்து கொள்வதும் ரொம்பவே பிடிக்கும்.

துர்காவிற்கு இவன் அழகை விட அவனின் கம்பீரம் பிடிக்கும். அவன் தன்னிடம் கண்ணியமாகப்

பழகுவதும், தன் தந்தையிடம் அன்பாக இருப்பதும், படிப்பைத் தவிர வேறெதிலும் கவனம் செலுத்தாமல் இருப்பதும் ரொம்பப் பிடிக்கும். கூடவே நம் அண்ணன் இப்படி இல்லையே என்ற வருத்தமும் உண்டு.

5

மறுநாள் காலை சீக்கிரமே வந்து விட்டான் ஆதித்யா. துர்காவும் குளித்து ரெடியாக இருந்தாள். வந்த ஆதித்யாவைப் பார்த்து இவள் அசந்து போனாள் என்றால், துர்காவைப் பார்த்த அவனுக்கு அந்த நிமிடமே அவளைத் தன்னுடையவளாக்கிக் கொள்ளும் பித்து தலைக்கேறியது. ஆம். அவள் ரொம்பவே அழகாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தாள். அதாவது, அதிகமாகத் தன்னை அலங்கரித்துக் கொள்ளாமல் எளிமையாக இருந்ததே ரொம்ப அழகா இருந்தது அவளுக்கு. தலைக்குக் குளித்து, தளர்வாகப் பின்னி மல்லிகைச் சரத்தை அளவாக வைத்திருந்தாள். கொஞ்சமான பௌடர் பூச்சு, அழகான, கொஞ்சமான மைத்தீற்றல். நெற்றியில் சின்னத் திலகம். ஒரு மெல்லிய லக்ஷ்மி டாலருடன் கூடிய செயின். இரண்டிரண்டு மெல்லிய வளையல்கள். எம்ப்ராய்டரி செய்த மெல்லிய லெமன் மஞ்சள் புடவை, அதே கலரில் பிளவுஸ். அழகான ஒரு தேவதை இறங்கிப் பூமிக்கு வந்தது போலிருந்தாள். பார்த்ததும் ஆதித்யாவிற்கு மனது துள்ளாமல் என்ன செய்யும்?

இவளுக்கு இத்தனை கம்பீரமான ஒரு ஆண் மகனா தனக்குக் கணவனாக வரப்போகிறான் என்று மலைப்பு. அன்றும் அவன் ஒரு சின்ன ஜரிகைக்கரை வேஷ்டி தான் கட்டியிருந்தான். மேலே ஜிப்பா க்ரீம் கலரில். ஒரு சின்ன மைனர் செயின் ஜிப்பாவிற்கு வெளியே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது. நாராயணசாமி அவனைப் பார்த்ததும், ''வாப்பா, வா! டிபன் சாப்பிடு!'' என்று உபசரித்தார். ''இல்லை அங்கிள், நான் சாப்பிட்டு விட்டு வந்துவிட்டேன்,'' என்றான்.

''என்னப்பா நீ! இங்கே வரும்போது...'' என்றபடி வந்த தனலட்சுமி, ''இந்தா, காப்பி சாப்பிடு.'' மறுக்காமல் வாங்கிக் கொண்டவன், துர்காவிடம், ''என்ன துர்கா, போகலாமா?'' என்று கேட்டான்.

''வெயிலுக்கு முன்னே போயிட்டு வந்துடுங்கம்மா!'' என்றார் நாராயணசாமி. ''வந்து இங்கே தான் சாப்பிட்டு விட்டுப் போகணும்,'' என்றார் ஆதியிடம்.

''இல்லை அங்கிள். இன்னிக்கு இல்லை. இன்னொரு நாள் சாப்பிட்டுக்கலாமே!'' என்று சொன்னவன், ''வரேன், ஆன்ட்டி, வரேன் அங்கிள்!'' என்று சொல்லிவிட்டு வாசலைப் பார்க்க நடந்தான். ''போயிட்டு வரேம்மா!'' என்றாள் துர்கா. ''போயிட்டு வா ராஜாத்தி!'' என்று சொல்லி அவள் கன்னத்தை நெட்டி முறித்தாள். இருவரும் புறப்பட்டுப் போவதையும் வாசலில் நின்று சற்று நேரம் பார்த்து விட்டுத்தான் உள்ளே சென்றனர்.

''ஜோடிப் பொருத்தம் நல்லா இருக்குல்லே?'' என்று தனம் கேட்க, கூடத்துக் கண்ணாடியில் தங்கள்

இருவரையும் காண்பித்து, ''ஆமாம், ஜோடிப் பொருத்தம் ரொம்ப பிரமாதம்தான்!'' என்றார் பெரிய சிரிப்போடு நாராயணசாமி. ''போதும், ஆனா வயசுக்கு...'' என்று வெட்கப்பட்டுக் கொண்டு உள்ளே போய்விட்டாள் தனம். எத்தனை வயசானால் என்ன, பெண்டாட்டியின் வெட்கம் புருஷனுக்குக் கொண்டாட்டம்தானே!

மாடியிலிருந்து தடதடவென்று இறங்கி வந்தான் நடராஜ். ''ஏம்பா, மணி என்ன ஆச்சு, என்னைக் கொஞ்சம் எழுப்பியிருக்கக்கூடாது? இந்த துர்கா எங்கே போனாள்?'' என்று கேட்டான் நடராஜ்.

''துர்கா ஆதித்யாவோட கோவிலுக்குப் போயிருக்கா. நீ என்னென்னவோ புதுசா உன்னை ஏன் எழுப்பல் லேன்னு கேக்கறே? எழுப்பினால் தான் திட்டுவியே!'' என்றார் நாராயணசாமி.

''சரி, அம்மா, எனக்கு டிபனைப் போடுங்க. நான் வெளியே போகப் போறேன்,'' என்றான். வாயைத் திறக்காமல் அவனுக்கு டிபனை வைத்தாள் தனம். சாப்பிட்டு விட்டு அடுத்த கால் மணி நேரத்தில் கிளம்பி அப்பாவிடம் தனக்குத் தேவையான பணத்தையும் வாங்கிக் கொண்டு புறப்பட்டு விட்டான் நடராஜ்.

* * *

நரசிம்மம் அன்று மாலை வேங்கடராஜு வீட்டிற்கு வரும் போது இருட்ட ஆரம்பித்து விட்டது. ''என்ன நரசிம்மம், நாலு மணியிலேர்ந்து உன்னை எதிர்பார்த்து கிட்டிருக்கேன். சாவகாசமா வரியே?'' என்று சிநேகிதனைப் பார்த்து வேங்கடராஜு கேட்டார்.

''அதுவா? புறப்படறச்சே ஏதோ பேச்சு வாக்கிலே என் சகதர்மிணிகிட்டே நாம இன்னிக்கு சந்திச்சு ஒரு முடிவுக்கு வந்துடுவோம்னு சொன்னேன். அவளுக்குத் திரும்ப நம்ம யோசனை பிடிக்கல்லே. தர்க்கம். அதுதான் கொஞ்ச நாழி ஆயிடுச்சு!'' என்றார் நரசிம்மம்.

''பாட்டுப் பாடிச் சமாதானப் படுத்தினாயாக்கும்!'' என்று சிநேகிதனைப் பார்த்துச் சிரித்தார் ராஜு.

''என்ன செய்ய? இரண்டு பேரா, ஒருத்தர் முகத்தை ஒருத்தர் நாள்பூரா பார்த்துகிட்டு உட்கார்ந்திருக்கோம். அதிலே ஒருத்தர் முகத்தைத் தூக்கி வெச்சிகிட்டிருந்தா சரிப்படாதே! அதுதான் பிரச்சனை!'' என்றார் நரசிம்மம்.

''சரி, கடைசியில முடிவு என்ன?''

''முடிவென்னவா? இதோ பாருய்யா, ராஜு. கொஞ்சல், கெஞ்சல் எல்லாம் சமாதானத்துக்காக மட்டும்தான். மற்றப்படி, என் அபிப்ராயத்திலேருந்து நான் மாறுவது கொஞ்சம் கஷ்டம்தான்!'' என்றார் நரசிம்மம்.

''கொஞ்சம் என்ன, ரொம்பவே கஷ்டம்தான்!'' என்று வேங்கடராஜு சொல்லிக் கொண்டிருக்கும்போது, உள்ளேயிருந்து வந்த அவர் மனைவி, ''இதோ பாருங்க! நீங்க இரண்டு பேருமே கொஞ்சம் உங்க அபிப்ராயத்தை இன்னொருதரம் தீர யோசிக்கக் கூடாதா?'' என்றாள்.

''பாருப்பா. இன்னொரு தாய்க்குலம்,'' என்றார் நரசிம்மம்.

''ஆமாம். இவளுக்கு வேண்டியதெல்லாம் வாங்கிப் போட்டுடறோம். அதுதான் இவங்களுக்கு நம்ம கஷ்டம்

புரிய வாய்ப்பேயில்லை. இதோ பாரு! நாங்க பலதையும் யோசித்துத்தான் இந்த முடிவை எடுத்திருக்கிறோம். இரண்டு ஆம்பிள்ளைங்க. நேரடியா இத்தனை வருஷமா சம்பந்தப்பட்டவங்க, நாங்க சொன்ன சரியாத்தான் இருக்கும்னு விட்டுட்டுப் போயிக்கிட்டே இருக்கணும். சரிப்பா. இன்னிக்கே போய்ப் பேசிடலாமா?'' என்றார் வேங்கட ராஜு.

''ஆமாம்பா. கிளம்பு. பின்னே எதுக்கு வந்திருக்கேங்கறே? வா, மனசு மாறிடறதுக்குள்ளே போய் சுவாமியைச் சந்தித்து விட்டு வந்துடலாம்,'' என்று நரசிம்மம் சொல்லிவிட்டு, அங்கிருந்த சோபாவில் உட்கார்ந்தார். வேங்கடராஜு, ''நான் போய் வேறே ஷர்ட் மாத்திகிட்டு வந்துடறேன்,'' என்று உள்ளே போனார்.

இரண்டு நிமிஷம் கூட ஆகவில்லை. நரசிம்மத்தின் செல் போன் அடித்தது. எடுத்துக் கேட்டால். அவர் மனைவிதான் கூப்பிட்டிருந்தாள். ''என்ன, சொல்லு!'' என்றார் நரசிம்மம்.

''எங்க அண்ணன் குடும்பத்தோடு வந்திருக்காங்க. உங்களைப் பார்க்கணுமாம். திரும்ப சாயந்திரமே போகணுமாம். அதனால்தான் உங்களுக்குப் போன் பண்ணினேன். உடனே வீட்டுக்கு வாங்க,'' என்றாள்.

''இது என்னடா, புதுச் சங்கடம்?'' என்று நினைத்த நரசிம்மம். ''சரிம்மா, நான் போய்த்தான் ஆகணும். என் மச்சினன் வந்திருக்காராம். அவர் வந்திருக்கார்னு தெரிஞ்சி நான் உடனே வீட்டுக்குப் போகல்லேன்னா நல்லாயிருக்காது!'' என்றார். ''வேங்கடராஜுகிட்டே

சொல்லிடும்மா. நான் கிளம்பறேன்,'' என்று சொல்லி விட்டுப் புறப்பட்டார் நரசிம்மம்.

நரசிம்மமும், வேங்கடராஜுவும் நாராயணசாமி அப்பா காலத்திலிருந்தே அவர்களுக்குக் குடும்ப நண்பர்கள் தான். இவர்கள் காலத்தில் அது வலுப் பெற்றதற்குக் காரணம் இல்லாமலில்லை. நாராயணசாமியின் அப்பா காலத்திற்குப் பிறகு பள்ளி, ஜவுளிக்கடை இரண்டையும் நாராயணசாமி பார்த்துக் கொள்ள வேண்டி வந்தது. அவர் தன் தந்தை காலத்திலேயே கொஞ்சம் இரண்டு இடத்தின் நெளிவு சுளிவுகளையும் கற்றிருந்திருக்க வேண்டும். இவர் அப்போது தான் படிப்பை முடித் திருந்தார். ஒரே பிள்ளை என்பதால் செல்லம் வேறு. ஜவுளிக்கடையை ஒரு மாதிரி நடத்த முடிந்த அவரால், பள்ளிக் கூடத்தை நடத்த முடியவில்லை. மாதம் பிறந்தால் அங்கு எத்தனை பிரச்சனை? எத்தனை பணத்தேவை? ஜவுளிக் கடை வருமானத்தில் வீடு பிழைத்தது. ஆனால் இவரால் சமாளிக்க முடியாமல் போனபோது வேறு வழியில்லாமல் ஸ்கூலை விற்பதற் கான வார்த்தைகளைப் பரப்பி விட்டார்.

வெளியிலிருந்து யாரும் வந்து விலை பேசும் முன் இவரிடம் வந்து வேங்கடராஜுவும், நரசிம்மமும், ''நாங்கள் எல்லாம் குடும்ப நண்பர்கள் என்று எதற்கு இருக்கோம்? ஒரு வார்த்தை எங்ககிட்டேன்னா நீ கேட்டிருக்கணும்?'' என்று நாராயணசாமியைக் கோபித்துக் கொண்டனர். ''நாங்கள் ஆளுக்கு ஒரு ஷேர் கொடுத்து பள்ளியில் பாகஸ்தர்களாக ஆகிறோம். நீதான் முக்கிய பாகஸ்தன். எங்கள் வேலைகளுக்கு நடுவில்

எங்களுக்குப் பள்ளியில் வந்து வேலை செய்ய முடியாது. யோசி!'' என்றனர். நாராயணசாமிக்குப் பரம சந்தோஷம். சொன்னபடி பள்ளியை நடத்த ஆரம்பித்தனர்.

வேங்கடராஜுவும், நரசிம்மமும் தெலுங்கு பேசும் நாயக்கர்கள். ராஜபாளையத்தில் இருவருக்கும் பஞ்சு மில்லும் இன்னும் வேறு சொத்துக்களும் இருந்தன. பணத்தைக் கொடுத்தது கல்விச் சேவைக்கும், நண்பனுக்குமாகத் தங்களால் முடிந்த பண ஒத்தாசை செய்யும் எண்ணத்தில்தான். மற்றப்படி வேறு எந்தக் குறிக்கீடும் கிடையாது. நாராயணசாமியும் அவர்களுக்காக வருமானத்தில் ஒரு பகுதியை பேங்க்கில் போட்டு விடுவார்.

ஆனால் இந்த வருஷம், ஏன், கடந்த மூன்று நான்கு வருஷங்களாகவே பள்ளியிலிருந்து இவர்களுக்கு மிச்சம் என்று எதுவும் வருவதில்லை. இப்போது கொஞ்ச நாளாக இவர்கள் மூவரும் கைப்பணம் போட்டுப் பள்ளிக்கூடத்தை நடத்த வேண்டிய நிலை. இவர்களுக்கு இனியும் அதை நடத்துவதில் அர்த்தமில்லை என்று தோன்றிவிட்டது. விளம்பரம் கொடுத்தால் யாராவது பணவசதி படைத்தவர்கள் வாங்கி நல்ல படியாக நடத்த முடிந்தால் நடத்திவிட்டுப் போகட்டுமே. நாம் ஏன் சிரமப்பட வேண்டும் என்று எண்ணினார்கள். அது நாராயணசாமியின் அப்பா ஆரம்பித்த பள்ளி. அவருக்கு அதன் மேல் ஒரு காதலே, வெறியே உண்டு. அதனால் அவர் அதை விற்கச் சுலபமாகச் சம்மதிக்க மாட்டார். பேசித்தான் சம்மதிக்க வைக்க வேண்டும் என்பதால்தான் இருவருமாகக் கிளம்பினார்கள். பத்துப்

பிள்ளைகளுக்குக் கல்விக் கண் திறக்கும்போது கொஞ்சம் நஷ்டப்பட்டால் தான் என்ன என்பது அவர்கள் வாதம். சொத்து மூன்று தலைமுறைக்கு இருக்கும் போது, கொஞ்சம் இது போன்ற காரியங்களுக்குச் செலவு செய்தால் தான் நல்லது என்பது அவர்கள் எண்ணம். சரி, இன்றைய பொழுதுக்குக் கணவன்மார் அங்கே போவது நின்று போனதில் அவர்களுக்கு சந்தோஷம்தான்.

6

திருப்பரங்குன்றத்திற்குப் போன துர்காவும், ஆதித்யாவும் அந்தக் கார் பயணத்தை ரொம்பவும் அனுபவித்தார்கள். முன்னாடி டிரைவிங் சீட் பக்கத்தில் உட்கார்ந்திருந்தாளே தவிர, நிறைய இடம் விட்டுத்தான் உட்கார்ந்தாள் துர்கா. இவர்கள் மதுரைக்கு அடிக்கடி வருவதால் இங்கேயே ஒரு காரும் வைத்திருந்தனர். இவர்கள் மதுரையில் இருந்தால் டிரைவர் உடனே வந்து விடுவார். இங்கே அவர்கள் ஒரு வீட்டையும் காலியாக வைத்து அதைச் சரியாகப் பார்த்துக் கொள்ள ஒரு ஆளையும் போட்டிருந்தார்கள். எனவே ஆதித்யாவும் இவளைப் பார்க்க காரை எடுத்துக் கொண்டுதான் வந்திருந்தான். வண்டியில் ஏற இவளுக்குத் கதவைத் திறந்து விட்டவன், தான் சுற்றி வந்து டிரைவர் சீட்டில் அமர்ந்தான். இதெல்லாம் சின்ன விஷயங்கள் தான், ஆனால் ஒரு பெண்ணின் மதிப்பில், ஆண் உயர

ரொம்பவே உதவும் விஷயங்கள் இல்லையா? காரில் தான் ஏறிக் கொண்டு, அவள் தானே கதவைத் திறந்து கொண்டு ஏறச் சொல்லி விட்டு விட்டால், அதை நாகரிகம் தெரிந்த எந்தப் பெண்தான் ஒத்துக் கொள்வாள்?

திருப்பரங்குன்றம் போகும் வழியில் முன்னிருந்த அளவு பசுமை இல்லாவிட்டாலும் இப்போதும் அந்த இடம் பசுமையான இடம் தான். போகும் வழியில், ''துர்கா, சொல்லு! எம்.எஸ்.சி. எழுதியாச்சு. உன்னைப் பற்றித் தெரியும். நீ எப்படியும் ஃபர்ஸ்ட் கிளாசில் பாஸ் பண்ணிடுவே. மேற்கொண்டு என்ன திட்டம் வெச்சுருக்கே?'' என்று கேட்டான் ஆதித்யா.

''எனக்கு டாக்டரேட் பண்ண ஆசை. ஆனால் அப்பாவுக்கு உடம்பு முடியவே இல்லை. பி.பி. ரொம்ப அதிகமாயிடுத்து. அம்மாவுக்கு அந்த அளவெல்லாம் ஒன்றும் தெரியாது. பாவம்! அண்ணனைப் பத்தித்தான் உங்களுக்கே தெரியுமே! அவன் கொஞ்சம் பொறுப்பாக இருந்தால், இத்தனை பிரச்னை யாருக்கும் இல்லை!'' என்றாள் துர்கா. அதன் பிறகு சற்று நேரம் மௌனமாகவே இருந்தாள். ''சொல்லு துர்கா, ஏன் மௌனமாயிட்டே?'' என்று ஆதி தூண்ட, ''இல்லே, நீங்க தப்பா நினைக்கல்லேன்னா ஒரு கோரிக்கை இருக்கு,'' என்றாள்.

''சொல்லும்மா.''

''நான் எப்போ திருப்பரங்குன்றம் போகும் போதும், வழியிலே கந்த ஷஷ்டி கவசமும், இன்னும் கொஞ்சம் திருப்புகழும் மனசிலேயே சொல்லிப்பேன். கோவிலுக்குள் நுழைந்தால் ஒரே பேச்சு சப்தமாக இருக்கும். அதான்...'' என்றாள்.

''அவ்வளவுதானே, சொல்லேன். முடிஞ்சா இரண்டு திருப்புகழை வாய்விட்டே பாடேன். எனக்குக் கேட்க ரொம்ப பிடிக்கும்.''

இவள் முதலில், 'நாதபிந்து கலாதி நமோ நமோ,' பிறகு துள்ளுமத வேட்கை' இரண்டு திருப்புகழ்களையும் வாய்விட்டு மென்மையாகப் பாடினாள். ஆதித்யா மெய்மறந்து போனான். அவன் பாராட்டும் முன், 'கந்த ஷஷ்டி கவசத்தை' அதன் மெட்டிலேயே பாடினாள். ''இன்னும் ஒரு திருப்புகழ் பாடேன்,'' என்றான். 'ஏறுமயில் ஏறி விளையாடும் முகம் ஒன்றே' என்று தொடங்கி அவள் அதைப் பாடி முடிக்கவும், கோயில் வாசல் வரவும் சரியாக இருந்தது. இரண்டு அர்ச்சனைத் தட்டுக்கள் வாங்கிக் கொண்டனர். மேலே போய் வரிசையில் நின்று தட்டுக்களைக் கொடுத்து அர்ச்சனை செய்து பிரசாதம் வாங்கிக் கொண்டனர். வெளியே வந்ததும் ஆதித்யா கேட்டான் ''மேலே சுனைக்குப் போகலாமா?'' என்று. ''போகலாமே, இன்னிக்கு வெயில் கூட அதிகமில்லை,'' என்றாள் துர்கா. இருவரும் மள மளவென்று ஏறியவர்கள், சுனைக்குப் போய்ப் பொரி வாங்கி மீன்களுக்குப் போட்டனர். அதன் பிறகு, நிழலான ஒரு இடம் தேடிப் போய் உட்கார்ந்தனர். தட்டில் இருந்த ஒரு வாழைப்பழத்தை உரித்துப் பாதியைத் துர்காவிடம் நீட்டினான் ஆதித்யா.

''இன்னொண்ணு கூட இருக்கே. நீங்க சாப்பிடுங்க!'' என்றாள் துர்கா.

''இல்லே. நான் தரும் இந்தப் பாதியைத்தான் வங்கிக்கணும்!'' என்றான் ஆதி சிரித்துக் கொண்டே. வெட்கத்தோடு வாங்கிக் கொண்டாள் துர்கா.

''இப்போ நான் பேசலாம் இல்லையா? முதல்ல நீ ரொம்ப நல்லா பாடறே. நீ எப்போ பாட்டு கத்துக் கிட்டே?'' என்று கேட்டான் ஆதி.

''இல்லையே. நான் பாட்டு முறையா கத்துக்கவே யில்லை. ஏதோ கேட்டுக் கேட்டுப் பாடறேன். அவ்வளவு தான். உங்களுக்குப் பிடிச்சுதா?''

''ஓ. ரொம்ப பிடிச்சது. பாட்டையும், பாடினவளையும்!'' என்றான் குறும்பாகச் சிரித்துக் கொண்டே.

''என்ன நீங்க?'' என்று முகம் சிவந்து, உதடு துடிக்கத் தலை குனிந்தாள் துர்கா.

''ஆமா. இப்ப என்ன, நீ என்னைப் புதுசா வாங்க, போங்கன்னு கூப்பிடறே? நாமெல்லாம் சின்னவயசி லேருந்து ஒண்ணா விளையாடினவங்கதானே!'' என்றவன், ''இந்தத் தழும்பைப் பார்த்தியா? நினைவுக்கு வருதா?'' என்று கேட்டான். தன் வேஷ்டியை விலக்கித் தன் முழங்கால்களுக்குக் கீழே காண்பித்து.

வெட்கத்துடன் தலை குனிந்து கொண்டாள் துர்கா. ''நினைவில்லாமல் என்ன? பாவம், உங்களுக்கு அந்தத் தழும்பு வர நான்தானே காரணம்?'' என்றாள். இரண்டு பேர் நினைவுகளுமே அந்தச் சம்பவத்தை நோக்கிப் போய்விட்டன.

அப்போதெல்லாம் அடிக்கடி விளையாட என்று ரங்கதுரையும், பங்கஜாவும் ஆதியைத் துர்காவின் வீட்டில் விட்டு விட்டுப் போவார்கள். அந்த மாதிரி ஒரு நாள் விளையாடும் போது, இவனும் துர்காவும் நடராஜும் சேர்ந்து ரன்னிங் ரேஸ் விளையாடினார்கள்.

பக்கத்திலிருந்த இன்னும் இவர்களுடைய சிநேகிதர்கள் சிலரும் சேர்ந்து கொண்டார்கள். எல்லோருமாக ஓடி ஓடித் தோற்றுக் கடைசியில் மிஞ்சியது துர்காவும், ஆதியும் தான். கடைசியில், இவர்கள் கிழித்து வைத்திருந்த வின்னிங் லைன் அருகே வரும் போது, இவனைக் கையால் பிடித்து முழுபலத்தோடு தள்ளிவிட்டு விட்டு துர்கா முதலில் கோட்டைத் தொட்டுவிட்டாள். இதை எதிர்பார்க்காத ஆதித்யா கீழே விழுந்ததில் அங்கிருந்த ஒரு ஓட்டுச் சில் அவன் காலை நன்றாகக் கிழித்து விட்டது. ரத்தம் ரொம்பவே கொட்டவும், துர்காவும் அழுதுகொண்டே, ''சாரிடா ஆதி, ரொம்ப சாரிடா!'' என்று திரும்பத் திரும்பச் சொன்னாள். ''போடி, இனிமே உங்கூட நான் பேசவே மாட்டேன். அழகுணி!'' என்றான் ஆதி. அதற்குள் உள்ளே ஓடிப்போன நடராஜ், அம்மா, அப்பாவைக் கூட்டி வந்துவிட்டான். அவர்களைப் பார்த்ததும் இவனுடைய அழுகை இன்னும் அதிகமானது. ''துர்கா, நீ தான் தள்ளிவிட்டியாமே!'' என்று அவளை நாலு சாத்துச் சாத்தினாள் தனலட்சுமி.

நாராயணசாமி, ''எதுக்கு குழந்தையைப் போய் இப்படி அடிக்கறே? அவ மட்டும் என்ன வேணும்னா பண்ணியிருக்கப் போறா?'' என்றார்.

''வேணும்னு தான் தள்ளினா!'' என்றான் நடராஜ். முதலில் அவன் காயத்தை டெட்டால் போட்டுக் கழுவிவிட்டு அப்போதைக்குக் கொஞ்சம் ஆயிண்ட் மென்ட் தடவிவிட்டாள் தனம். அதன் பிறகு தெருக் கோடியிலிருந்த ஒரு டாக்டரிடம் காண்பித்துத் தையல் போட்டுக் கூட்டி வந்தார்கள்.

''வேணும்னா தள்ளிவிட்டே, துர்கா?'' என்று கேட்டார் நாராயணசாமி.

''ஆமாம்பா! ரன்னிங் ரேஸ்ல நான்தான் ஜெயிக்கணும்னுதாம்பா அப்படிப் பண்ணிட்டேன். இனிமே அப்படிப் பண்ண மாட்டேன். ஸாரிப்பா!'' என்று அழுதுகொண்டே சொன்னாள் துர்கா.

''எனக்கா வலி? ஆதித்யாவுக்கு சாரி சொல்லு!'' என்றார் நாராயணசாமி.

''ஸாரிடா ஆதி! ரொம்ப வலிக்கறதா? மன்னிச்சுக்கோடா!'' என்றாள். அவன் பேசாமல் இருக்கவே, ''என்னோட இனிமே பேசமாட்டியா?'' என்று கேட்டாள்.

''இல்லை, இல்லை! அப்போ கோபத்தில் ஏதோ சொன்னேன். உன்னை எனக்கு ரொம்ப பிடிக்கும். உன்னோடு பேசுவேன்,'' என்றான் ஆதி.

இவையெல்லாம் இவர்களுக்கு இப்போது ஞாபகம் வர, ஆதிக்கு ஒரே சிரிப்பு. இவளுக்கானால் ஒரே வெட்கமாக இருந்தது. ''சீ! நிஜமாகவே நான் எவ்வளவு அடாவடியாக இருந்திருக்கேன்! வெரி பேட்!'' என்றாள்.

''எப்போதோ நடந்ததற்கு இப்போ என்ன வெரி பேட்? இனிமே எல்லாமே வெரி குட்டாக இருந்தால் சரி!'' என்றான் ஆதி.

''எனக்கும்தான் உங்களால அடிபட்டுது,'' என்றாள்.

''என்னது, உனக்கும் அடிபட்டுதா? அப்போ தழும்பு இருக்கணுமே. எங்கே, காண்பி!'' என்றான் ஆதி சீரியசாக.

''ஐயே! ஆசை, தோசை, காண்பிக்கறாங்க.''

''சரி. கொஞ்ச நாள் பொறுத்துக்கிட்டா நானே பாத்துக்கறேன்,'' என்றான் ஆதி.

''சீ! போங்க!'' என்றாள் துர்கா.

''ஆனா, அந்தக் காயம் பட்ட அன்னிக்கு உனக்குப் பெரிய கண்டம் தான். என்னவோ நல்லபடியா வெளியே வந்தே, சரியாப் போச்சு!'' என்று ஆதி சொல்லவும், அந்தத் துணிக் கூடையில் தான் மூச்சு அடைக்கக் கிடந்தது இப்போதும் நினைவுக்கு வர. தலையைச் சிலுப்பிக் கொண்டாள். அன்று அவர்கள் விளையாடியது கண்ணாமூச்சி. நடராஜ் தான் அடுத்தது மாட்டிக் கொள்ள வேண்டும் என்று ஏற்கெனவே மாட்டிக் கொண்டு விட்ட ஆதி துர்காவை அந்த பெரிய அழுக்குத் துணிக் கூடை காலியாக இருக்கவே அதில் இறக்கி விட்டு விட்டான். வாசலில் நடராஜ், ''ஏய், ஆதித்யா! பக்கத்து வீட்டுக் கமலேஷ் உன்னைக் கூப்பிடுறான்டா!'' எனச் சொல்லவும் துர்காவைப் பற்றி மறந்தே போய் கமலேஷுடன் பேசப் போய்விட்டான். கொஞ்ச நேரம் கழித்து நினைவுக்கு வந்து மாடிக்கு ஓடித் துணிக்கூடையைத் திறந்தால் மயக்க நிலையில் துர்கா. பிறகு குரல் கொடுத்து எல்லோரும் வந்து அவளை வெளியே இழுத்துப் போட்டு, முகத்தில் தண்ணீர் தெளித்து அவள் சாதாரணமாக ஆகக் கொஞ்ச நேரம் பிடித்தது. ஆதியை ரங்கதுரை நன்றாக நாலு சாத்து சாத்தித்தான் ஓய்ந்தார். மற்றவர்கள் அவரைக் கோபித்துக் கொண்டார்கள்.

''பொம்பிளைப்பிள்ளை, இவளும் சம்மதப்பட்டுத் தானே கூடைக்குள்ளே நுழைஞ்சிருக்கா!'' என்றார் நாராயணசாமி. துர்கா ஸ்லீவ்லெஸ் கவுன் போட்டுக் கொண்டிருந்ததால் வெளியே இழுக்கும் போது பிரம்புக்கூடை விளிம்பில் துருத்திக் கொண்டிருந்த ஒரு ஆணி அவள் தோள்பட்டையைப் பதம் பார்த்து விட்டது. அன்று துர்காவுக்கு டாக்டர் நாலு தையல் போட்டார்.

எப்போதோ நடந்த அந்த நிகழ்ச்சியை நினைத்து இருவருக்கும் ஒரே சிரிப்பு. ''தினம் அதைப் பார்க்கும் போது என்னை நினைச்சுப்பியா, துர்கா?'' என்று கேட்டான் ஆதி.

''நான் ஏன் உங்களை நினைச்சுக்கணும்?''

''அது சரி, நானும் என் முழங்கால் தழும்பைப் பார்த்தால் உன்னை நினைச்சுக்கவே மாட்டேன்!'' என்றான் ஆதி.

''சரி. நான் நம்பறேன்.''

''சரி துர்கா. ஸீரியசாவே கேக்கறேன். என்னைக் கல்யாணம் பண்ணிக்க உனக்குச் சம்மதம்தானே? உனக்கு என்னைப் பிடிக்குமா? 100% உண்மையைச் சொல்லணும்.''

''இந்தக் கேள்விக்கு உங்களுக்கே பதில் தெரியாதா?'' என்றாள் துர்கா.

''நானாக ஊகித்துக் கொள்வது வேறே. நீ உன் வாயால் சொல்லி அதை நான் கேட்டு மகிழ்வது வேறே. இல்லையா? ப்ளீஸ், துர்கா, சொல்லேன்,'' என்று ஆதி கெஞ்சினான்.

7

''எத்தனையோ வருஷங்களாக அப்பா, அம்மா சொல்லிகிட்டிருந்ததுதானே, ஆதி! எனக்குக் கல்யாணம்னா அது உங்களோட தான். கணவன்னா நீங்க தான். இது என்வரை உங்களைக்கூடக் கேட்காமே நான் மனசிலே நம்பறது!'' என்றாள் துர்கா. தொடர்ந்து, ''சரி, நான் இந்தக் கேள்வியை உங்ககிட்டே கேட்டுத் தெரிஞ்சிக்க வேண்டாமா?'' என்று அவனைக் கேட்டாள்.

''இது ஒரு கேள்வின்னு கேக்கறியே, கண்ணம்மா! என் மனசில என்னிக்கும் எந்த நிமிஷமும் நீ தான் இருக்கே. உன்னைத் தவிர யாரையும் நான் என் மனைவியா நினைச்சுக் கூடப் பார்க்க முடியாது. ஆஞ்சநேயர் மாதிரி நெஞ்சைக் கிழித்துக் காண்பிக்க முடியும்னா நான் அதை இப்போதே செஞ்சுடுவேன்!'' என்றான் உணர்ச்சியோடு.

கண்கள் செருகிப்போன துர்கா. ''தேங்க்யூ கண்ணா! நீங்க சொன்ன மாதிரி விடை தெரிந்த கேள்வியானாலும், சில கேள்விகளுக்குச் சம்பந்தப்பட்டவர்கள் வாயாலே கேட்டால் தான் நமக்குத் திருப்தி வரும். ஐ அம் வெரி ஹேப்பி!'' என்று துர்கா சொல்ல, ''நாம் இதை இப்பவே கொண்டாடிடலாமா?'' என்று கேட்டான் ஆதித்யா.

இப்போது துர்கா சின்னப் பெண்ணாக உணர்ந்தாள். அதுதானே காதலின் மகிமை!

பாக்கெட்டில் கையை விட்ட ஆதித்யா ஒரு அழகான வேலைப்பாடு மிகுந்த வளையல் பெட்டியை எடுத்தான். வியப்போடு துர்கா பார்த்துக் கொண்டிருக்க, அதிலிருந்து மிக மிக அழகான வேலைப்பாடு மிகுந்த கலிங்கா பிரிக்கரி கங்கணம் ஒன்றை எடுத்தான். துர்கா கையை நீட்டி வாங்கிக் கொண்டாள்.

''ரொம்பவே அழகாக இருக்குப்பா. எங்கே வாங்கினீங்க?'' என்று கேட்டாள்.

''இது நான் அஹமதாபாதிலிருந்து பிராஜெக்ட் டூருக்காக ஒரிசா போனபோது வாங்கி வந்தேன். என்னிக்கு உன் சம்மதத்தை உன் வாயால தெரிஞ்சிக்கறேனோ, அன்னிக்குப் போட்டுவிடலாம்னு ஐடியா. கொண்டா இங்கே அதை. நான் போட்டுவிடறேன்,'' என்றான்.

''நீங்க எப்படி இப்போ என் கையில் போட்டுவிட முடியும்? நான் அப்புறமா போட்டுக்கிறேனே.''

''அந்தத் கதையெல்லாம் வேண்டாம். இன்னிக்கு இங்கே நமக்குக் காந்தர்வ விவாகம். இதோ பார்! முருகன் திருக்கோயில் கோபுரம். முருகன் தான் நம் தமிழ்க் கடவுள்களில் முதல் காதல் கடவுள். வள்ளியைக் கல்யாணம் பண்ணின இவரை விடவா யாரும் காதலுக்கு உதாரணமாக முடியும்?'' என்றவன், அவள் கையிலிருந்து அதை எடுத்துத் தானே போட்டுவிட்டான். ''ரொம்ப அழகாக இருக்கு, கண்ணம்மா. இந்த வளை உனக்கு!'' என்று அவள் கைகளைப் பற்றி மென்மையாக முத்தமிட்டான். ''உனக்குப் பிடிச்சிருக்கா, டார்லிங்?'' என்று கேட்டான். ''ரொம்பவே பிடிச்சிருக்கு, தேங்க்யூ!'' என்றாள்.

''அதுசரி, வெறும் தேங்க்ஸ் மட்டும்தானா, வேறே ஒண்ணும் கிடையாதா?'' என்று கேட்டான்.

''நான் இன்னிக்கு ஒண்ணும் வாங்கிட்டெல்லாம் வரல்லே. சம் அதர் டே. நல்ல கிஃப்ட்டாகப் பார்த்து வாங்கிட்டு வரேன்.''

''ஏய், கடைல வாங்கற கிப்டெல்லாம் யார் கேட்டாங்க. இப்போ நான் தந்தேனே. அந்த மாதிரி வேணும்.''

''சீ, போங்க நீங்க! அதெல்லாம் கல்யாணத்துக்கு அப்புறம்தான்!'' என்றாள், துர்கா.

''ஏய், அதுதான் நமக்குக் கல்யாணம் ஆயிடுத்தே - காந்தர்வ முறைப்படி.''

''நாம என்ன கந்தர்வர்களா? மனுஷ முறைப்படி கல்யாணம் ஆகட்டும், அப்புறம் அள்ளி அள்ளிக் கொடுக்கப்படும்.''

''இது அநியாயம். நான் கொடுக்கல்லே இப்போ?''

''நீங்க ஆண்பிள்ளை, வெட்கமே கிடையாது.''

''சரி, மாட்டியா? போகட்டும். நான் கொடுத்ததை யாவது திருப்பிக் கொடுத்துடு, கல்யாணத்துக்கு அப்புறம் நான் தரேன்.''

''அந்தக் கதையெல்லாம் எங்கிட்டே நடக்காது. மிஸ்டர் மன்மதன்! இப்போதைக்கு ஒரு ப்ளையிங் தான்!'' என்று சொல்லி ஒரு முத்தத்தைக் காற்றில் பறக்கவிட்டாள். அதைக் காற்றிலிருந்து பிடித்துத் தன் உதட்டில் வைத்துக் கொண்டான். ''சரி சொல்லு! நம்ம கல்யாணம் எப்போ?''

''எனக்கு நீங்க எப்ப சொன்னாலும் சரிதான்.''

''அப்ப, இன்னிக்கே.''

''உஷ், மூச்சு விடப்படாது! நான் பி.ஹெச்டி. முடிச்சதுமே வெச்சுக்கலாம்.''

''ஐயோ! அதுக்குள்ள நான் தொண்டு கிழவனாயிடுவேன்.''

''இல்லை, அரைக் கிழவனாயிருக்கறச்சேயே முடிச்சுடுவேன்.''

''ஏய், நீ ஸீரியஸாகப் பதில் சொல்லப் போறியா, இல்லையா?''

''ஆதி, நான் சீரியஸாகச் சொல்றதானா எனக்கே தெரியல்லே. எப்படியும் செப்டம்பர் ஆயிடும் ரிசல்ட் வர. அதற்குள் நரசிம்மம் அங்கிளோ, வேங்கடராஜு அங்கிளோ ஒரு வேளை அவங்க வீட்ல யாராவது சின்ன வங்களைப் பொறுப்பை ஏத்துக்கச் சொல்றாங்களான்னு பார்க்கணும். அப்பாவுக்கு வயசாச்சு, முடியல்ல. அவருக்கும் ரொம்ப ஸ்ட்ரெயின் பண்ணிக்க முடியல்ல.''

''அது சரி, நடராஜ் ஏத்துக்கற எண்ணத்தில இல்லையா?'' என்று கேட்டான் ஆதி.

''அவன் எடுத்துகிட்டா பிரச்சனையே இல்லையே! எல்லாருக்கும் நிம்மதியாயிடும். அப்பா அம்மா அவனுக்குன்னு ஒரு பொண்ணை மனசிலே வெச்சிருக்காங்க.''

''சரி, மனசிலே வெச்சுக்கிட்டிருப்பானேன்? கல்யாணத்தைப் பண்ணி வெச்சுட்டா அவனும் பொறுப்பா பிஸினஸ்ஸைக் கவனிப்பானோ என்னவோ!''

''ஆனா, சார் யாரையோ லவ் பண்றாராமே!''

''சரி, அதில என்ன இவ்வளவு கேலி? இப்போ நான் கூட உன்னை லவ் பண்ணல்லியா?''

''லவ்வுன்னா எல்லாம் லவ்வாகிவிடுமா? பொண்ணு ரொம்ப பணக்காரி.''

''இருக்கட்டும். நீங்க மட்டும் பணக்காரங்க இல்லையா?''

''அதில்லை பிரச்னை. அந்தப் பணக் கர்வம் அவ தலைல நல்லா அகம்பாவமா ஏறி உட்கார்ந்திருக்கு. எங்க காலேஜ் தான். அவ அண்ணனுக்கு அவ ரொம்ப செல்லம். காலேஜ்ல எல்லார் கூடவும் சண்டை. எங்க அம்மா ரொம்ப பாவம் சாது. இந்தப் பொண்ணால எங்க குடும்பம் சுகப்படுமாங்கறது எனக்குச் சந்தேகமா இருக்கு. நான் முடிஞ்சா அண்ணன் மனசை மாத்தணும்னு பார்க்கறேன். எங்க வீட்ல வேறு யாருக்கும் தெரியாது இந்த விஷயம். நீங்களும் இப்போதைக்கு யாரிடமும் சொல்லிடாதீங்க, ஆதி ப்ளீஸ்!''

''ஆக, இத்தனை விஷயம் இருக்கா நம்ம கல் யாணத்தில. எத்தனையோ, நாளா நாம பார்த்துக்காமே, பேசிக்காமே பொறுமையா இருந்திருக்கோம்! இன்னும் கொஞ்ச நாள் அப்படியே இருந்துடலாம். ஆனா, நடராஜ் பாவம்! அவனை நினைச்சா கவலையா இருக்கு. சரி, என்ன நடக்குதோ பார்க்கலாம். உங்க அப்பா, அம்மா நல்லவங்க. நல்லதே நடக்கும்னு நம்புவோம்!'' என்றான் ஆதி.

''சரி, வாங்க, கிளம்பலாம். வெயில் நல்லா ஏறிடிச்சி,'' என்றாள் துர்கா.

சரி என்று எழுந்து பத்து தப்படி நடந்த ஆதி, ''ஆ! அம்மா!'' என்று காலைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்தான்.

''என்ன ஆச்சு, ஆதி?'' என்று பதறியபடி அவன் அருகில் உட்கார்ந்தாள் துர்கா.

''இங்கே பாரு!'' என்று காலைக் கொத்தாகக் குத்தியிருந்த முள்ளைக் காண்பித்தான் ஆதி. ''முள்ளை எடுக்கப் பயமா இருக்கு, துர்கா!'' என்றான் சின்னக் குழந்தை மாதிரி.

''கண்ணை மூடிக்குங்க!'' என்று அவனைக் கண்ணை மூடிக்கொள்ளச் சொல்லி விட்டு வெடுக்கென்று குத்தியிருந்த நாலு, ஐந்து முட்களையும் பிடுங்கித் தூர எறிந்தாள் துர்கா. ''பார்த்து நடக்கக் கூடாதா, ஆதி?'' என்றும் கேட்டாள்.

''பார்த்துத்தான் நடந்தேன், துர்கா! உன்னையே...!'' என்று வழிந்தான் ஆதி.

''ஐயே, சமர்த்து!'' என்றபடி கையிலிருந்த பாட்டில் தண்ணீரால் அவன் காலில் ரத்தம் துளிர்த்து இருந்த இடங்களைத் துடைத்தாள்.

ஒரு ஐந்து நிமிடங்கள் உட்கார்ந்திருந்த பின், ''சரி வாங்க,'' என்று தானும் எழுந்து, அவனுக்கும் கை கொடுத்தாள். அவன் நிற்கவே முடியாமல் வலியில் தடுமாற,

''என் தோளைப் பிடிச்சிகிட்டு இறங்குங்க!'' என்றாள். அப்படியே அவன் துர்காவின் தோளைப் பிடித்துக் கொண்டு இறங்கினான். காரைக் கண்ணால் பார்க்கும் தூரம் வந்ததும் ஓடிப்போய்க் காருக்கருகில் போனான்.

''ஏய், ஆதி... ஆதி!'' என்று கூப்பிட்டுக் கொண்டே வேகமாகப் பின் தொடர்ந்த துர்கா, ''ஏய், ஆதி! இது என்ன டிராமா?'' என்று கேட்டவளுக்குக் கதவைத்திறந்து விட்டான். முகத்தை உம் என்று தூக்கி வைத்துக் கொண்டு, அவன் பக்கத்தில் ஏறி உட்கார்ந்தாள். கொஞ்ச நேரம் வாயைத் திறக்கவேயில்லை.

''டார்லிங்! கோபமா?'' என்று கேட்ட ஆதிக்குப் பதில் ஒன்றும் சொல்லவில்லை.

''ஸாரி துர்கா! ரொம்பக் கோவிச்சுக்காதே கண்ணா!'' என்று அவள் முகத்தைத் திருப்பினான். அவள் வெடுக்கென்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''ப்ளீஸ்மா, என்னோடு பேசேன்! அதான் ஸாரி சொல்லிட்டேன்ல.''

''ஸாரி சொல்லிட்டா சரியாப்போச்சா? எல்லோரும் எப்படி வேடிக்கை பார்த்தாங்க? நானும் பதறிப் போயிட்டேன்ல! இதென்ன டீன் ஏஜ் லவ் மாதிரி விளையாட்டு?''

''டீன் ஏஜில நம்ம காதல வெளியிட்டுக்கல்லே. எப்போ வெளியிட்டுக்கறோமோ, அப்போது தான் முதல் காதல், டீன் ஏஜ் காதல் எல்லாம். இப்போதானே இந்தக் குறும்பெல்லாம் பண்ண நேரம் வந்திருக்கு? இல்

லேன்னா, 'வாலிபத்தில் காதலிக்க ஜாதகத்தில் வழியும் இல்லை' ன்னு பாடிக் கிழவனான அப்புறம் விளையாட முடியுமா? அப்படி நான் வலின்னு சொல்லலேன்னா நீ உன்னைப் பிடிச்சிகிட்டு வர விட்டிருப்பியா? அது எவ்வளவு சுகமா இருந்தது, தெரியுமா?'' என்றதும், துர்கா சிரித்து விட்டாள்.

''அப்பாடா, இப்போதான் எனக்கு உயிரே வந்தது!'' என்றான் ஆதி பெருமூச்சு விட்டபடி.

கொஞ்ச தூரம் போனதும் ரோட்டோரத்தில் இளநீர் விற்றுக் கொண்டிருந்த ஒரு இடத்தில் காரை நிறுத்தினான். இவன் சொல்லு முன். ''இரண்டு இளநீர்ப்பா!'' என்று காரிலிருந்தபடியே உரக்கச் சொன்னாள் துர்கா.

''ஏய், இந்தா, உனக்கும்தான் வாங்கினேன். எதுக்கு இப்படிக் கத்தினே?''

''பின்னே, நீங்க அதையும் டீனேஜ் லவ்வர்ஸ்ன்னு ஒண்ணு வாங்கிகிட்டு வந்தீங்கன்னா?'' என்றாள் துர்கா.

''ஐயோ, கொன்னுட்டே, போ! இரண்டு ஸ்ட்ரா, ஒரு இளநீர்தான் மஜா. போகட்டும். அம்மையார் கோபப் படறீங்களேன்னுதான் அப்படிப் பண்ணல்ல!'' என்றவன் அவளை வீட்டில் இறக்கிவிட்டு விட்டு, கொஞ்சம் தண்ணீர் வாங்கிக் குடித்துவிட்டுக் கிளம்பி விட்டான்.

அவன் கிளம்பிப் போனதும், நாராயணசாமி அவளிடம் வந்து, ''என்னம்மா, எல்லாம் ஓ.கே.யா? நாள் குறிச் சுடலாமா?'' என்று கேட்டார்.

''எங்க இரண்டு பேருக்கும் இதில் ஆட்சேபணை பெரிதாக இல்லைப்பா!'' என்று பொதுவாகச் சொன்னாள் துர்கா.

''பின்னே சீக்கிரம் முடிச்சுடலாம், இல்லையாம்மா?'' என்று கேட்டாள் தனம்.

''கொஞ்சம் நம்ம வீடும் அண்ணனும் சரியாகட்டும்!'' என்று சொல்லிவிட்டுத் துர்கா உள்ளே போய்விட்டாள்.

''எப்போ இந்த அலையெல்லாம் ஓயறது, எப்போ நாள் குறிக்கறது?'' என்று கேட்டாள் தனம் தன் கணவனிடம்.

''கடவுள் இருக்கிறார், கவலைப்படாதே!'' என்றார் அவர்.

சாப்பிட்டு விட்டு மாடிக்குப் போன துர்கா, மேக்ஸிக்கு மாறிக் கட்டிலில் விழுந்தாள். பரவசம் தூக்கலாக இருந்தாலும், கவலையாகவும் இருந்தது. படுக்கை கொள்ளாமல் லாப்டாப்பை ஆன் செய்தாள். ஏற்கெனவே இவளுடன் தொடர்புப் பட்டியலில் இருந்த ஆதித்யா லைனில் இருக்கிறானா என்று பார்த்தாள். அவள் நினைத்தபடியே அவன் லைனில்தான் இருந்தான். இவள் லைனில் வந்திருப்பதைப் பார்த்ததும், ''ஹாய்...'' என்று ஒரு ஸ்மைலி அடித்தான். இவளும் ஹாய் என்று இரண்டு ஸ்மைலி அடித்து விட்டு, ''எப்படி இருக்கிறாய்?'' என்று ஆங்கிலத்தில் டைப் செய்து அனுப்பினாள். ''இரண்டு மணி நேரத்தில் அழகாகவும் இன்னும் சமர்த்தாகவும் ஆயிட்டேன்!'' என்று பதில் அனுப்பினான்.

இரண்டே மணி நேரத்தில், 'எப்படி இருக்கே?' என்று கேட்டதை அவன் கேலி செய்கிறான் என்று துர்காவுக்குக் கோபம் வந்தது. ''வேறு ஏதோ பார்க்க லேப்டாப்பைத் திறந்தேன். நீங்க லைன்ல இருந்ததும் ஹலோ சொன்னேன்,'' என்றவள், ரொம்ப களைப்பா இருக்கு, படுக்கப் போகிறேன் என்று செய்தி அனுப்பி விட்டு லைனைத் துண்டித்து விட்டாள்.

அவளுடைய செல் சிணுங்கியது. எதிர்பார்த்த மாதிரியே ஆதிதான். ''ஏய். கோபமா?'' என்று கேட்டான்.

''இல்லையே, எதுக்கு? நிஜமாகவே எனக்கு டயர்டா இருக்கு, அதான்.''

''சரி. நீ கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கோ. சாயந்திரம் பேசலாம். ஆனால், எனக்கு காலம்பற கோவிலுக்குப் போய்விட்டு வந்ததிலிருந்து உன்னைத் தவிர வேறே நினைப்பே இல்லை. ஐ லவ் யூ டார்லிங்!'' என்றான்.

''ஸோ டூ ஐ. அதேதான் இங்கேயும்!'' என்றவள், ''இப்போ பை!'' என்று சொல்லி போனை வைத்தாள்.

8

காலை 8 மணிக்கெல்லாம் டோனியின் வீடியோ ஷாப்பிற்குக் கிட்டத்தட்ட ஒரே சமயத்தில் ஆஷாவும், நடராஜும் போய்ச் சேர்ந்துவிட்டனர். அப்போதுதான் அவனும் கடையைத் திறந்து கொண்டிருந்தான். மூவரும் ஹாய் சொல்லிக் கொண்டனர்.

''ஏய், ஆஷா! சீக்கிரமே புறப்படலாம், வெயிலா யிடும்,'' என்றான் நடராஜ்.

''போகப் போறது கார்ல. அப்புறம் என்னடா வெயில்?'' என்றான் டோனி.

''உனக்கென்ன ஜே யா இருக்கா?'' என்று கேட்டுச் சிரித்தாள் ஆஷா.

''எனக்கென்ன ஜே. சீக்கிரம் இடத்தைக் காலிபண் ணுங்க. என் லேடீ கஸ்டமர்ஸ் எல்லாம் இப்போ வந்துடுவாங்க!'' என்றான் டோனி அசராமல்.

''வா ஆஷா,'' என்று கதவை நடராஜ் திறக்க, ''பை, டோனி!'' என்று இருவரும் பறந்து விட்டனர்.

வண்டி புறப்பட்டுச் சற்று தூரம் போகவிட்டு, ''நட்ஸ்...'' என்று ஆரம்பித்து ஏதோ சொல்ல ஆரம்பித்தாள் ஆஷா.

''கிறீச்'' என்று சப்தத்துடன் கார் நின்றது. ''இறங்கு கீழே. என்னைப் பார்த்தா உனக்கு நட்ஸ் மாதிரியா தெரியுது? அப்படிக் கூப்பிடாதேன்னு உனக்கு எத்தனை தரம் சொல்லியிருக்கேன்!'' என்றான் நடராஜ்.

''ஸாரி, ஸாரி நட்ஸ்!'' என்றாள் ஆஷா.

''பார்த்தியா. திரும்ப அப்படித்தானே கூப்பிடறே? இப்போ நிஜமாகவே உன்னை இறக்கிவிட்டுட்டு, நான் வீட்டுக்குப் போகப்போறேன்!'' என்றான் நடராஜ்.

''ஸாரி, சாரிப்பா! இனிமே அப்படிக் கூப்பிடல்லே. தப்பு. தப்பு!'' என்று கன்னத்தில் போட்டுக் கொண்டாள்.

''அப்படிவா, வழிக்கு!'' என்று காரைத் திரும்பச் செலுத்த ஆரம்பித்தான். 'துர்கா சொன்ன மாதிரியா இவ இருக்கா? உடனே சாரி சொல்லிட்டாளே! ஒருவேளை கல்யாணத்

திற்கு அப்புறம் சுய புத்தியைக் காண்பிப்பாளோ?' என் றெல்லாம் யோசித்துக் கொண்டே வண்டியை ஓட்டினான். அத்தனை நேரம் அவன் மௌனமாக இருப்பது சகிக் காமல், "என்ன ராஜ்! இன்னுமா கோபம்?" என்று கேட்டாள்.

"இல்லை டியர்! வேறே ஏதோ யோசனை."

"அப்படி எந்த சாம்ராஜ்யத்தைப் பிடிக்க யோசனை?"

"இதோ, இந்த ஆஷா என்னும் அழகு சாம்ராஜ்யத்தை உரிமையோடு கட்டிப் பிடிக்கத்தான்!" என்றான்.

"சீக்கிரமே இரண்டு பேரும் வீட்டில் சொல்லிவிட வேண்டியது தான்."

"உன் அண்ணன் உனக்கு எப்படிப்பட்ட பையன் பார்க்கணும்னு நினைச்சிட்டிருக்காரோ, என்னவோ, என்னை மாப்பிள்ளையா ஒத்துப்பாரா, ஆஷா?"

"ஒத்துக்க வைக்க வேண்டியதுதான். உங்க வீட்ல?"

"ஒத்துப்பாங்கன்னுதான் நினைக்கிறேன்."

"உன் தங்கை துர்காவைப் பார்த்திருக்கிறேன். அவள் ரொம்ப கர்வினு என் கணிப்பு."

"எதுனாலே சொல்றே?" ஆச்சரியம் நடராஜுக்கு.

"அவ நல்லாப் படிப்பா இல்லையா? அவள் பேட்ச் மேட்ஸ் எல்லோரும் அவளைத் தலைல தூக்கி வெச்சுகிட்டு ஆடுவாங்க. அவளும் அந்த ஸ்டேட் டஸ்ஸை என்ஜாய் பண்றாள்னு தோணும் எனக்கு."

"சரி, விடு. அவதான் வீட்லேயும் அப்பா, அம்மாவை முழுசா பார்த்துக்கறவ. எனிவே, அவ இன்னொருத்தர்

வீட்டுக்குப் போகப்போறவதானே! அவளைப் பத்தி என்ன? எங்கம்மா ரொம்ப சாது. எங்க வீட்ல உனக்கு ஒண்ணும் பிரச்சனை இருக்காது!'' என்றான் நடராஜ்.

''ஏய், நான் புறப்படறச்சே ஒண்ணும் சாப்பிடாமே கிளம்பிட்டேன். வயத்தைப் புரட்டுது,'' என்றாள் ஆஷா.

''நானும் ஒண்ணும் சாப்பிடல்லே. இங்கே கொஞ்ச தூரத்தில நல்ல ஹோட்டல் ஒண்ணு இருக்கு. அங்கே போகலாம்,'' என்றான் நடராஜ்.

கொஞ்ச தூரத்திலிருந்த அந்த ஹோட்டலுக்குப் போய் டிபன் சாப்பிட்டு விட்டு, வைகை அணையை நோக்கிக் காரைச் செலுத்தினான்.

மதுரை பக்கத்திலுள்ள இடங்களில் உள்ளவர்கள் நிஜமாகவே கொடுத்து வைத்தவர்கள். சுருளி, கும்பக் கரை என்று அருவிகளும், சோத்துப்பாறை போன்ற சின்ன அணைக்கட்டுகளும் நிறைந்த இடம், ஆனால், காதலர்களின் முதல் தேர்வு வைகை அணைக்கட்டு தான். அதுவும், விளக்கு வைக்கும் நேரம் வரையெல்லாம் இருந்து விட்டால் சொர்க்க லோகமே தங்களுக்காக சிருஷ்டிக்கப்பட்டு விட்டது என்பதே அவர்களின் நினைப்பாகி விடும்.

அவர்கள் இருவரும் இன்னும் இரண்டு இடங்களில் காரை நிறுத்தி டீ சாப்பிட்டுவிட்டு மெதுவாகத்தான் போய்ச் சேர்ந்தார்கள் அங்கே. பெரிய தலை போகிற அவசரம் எதுவும் இல்லையே இருவருக்கும். மெதுவாகப் போய்ச் சேர்ந்தவர்கள் ஒரு மணி நேரம் போல் நடந் தார்கள். செல்போன்களில் விதவிதமான போஸ்களில்

கிளிக்கிக் கொண்டார்கள். பசி வந்ததும் அங்கிருந்த கான்டீனில் போய்ச் சாப்பிட்டார்கள். அதன் பிறகு நடக்கும் போது இருவரும் களைத்துவிடவே, அங்கே பச்சைப் பட்டாக விரிந்திருந்த புல்வெளியில் உட்கார்ந்தனர். கொஞ்சம் கொஞ்சமாகக் கோணம் சரிந்து கொண்டே வந்து இருவரும் படுத்து விட்டனர். அன்று வானம் மப்பும் மந்தாரமுமாய்த் தான் இருந்தது. தொடும் தூரத்தில் படுத்துக் கிடந்ததால் கைகள் சும்மா இருக்குமா? உண்ட மயக்கம். காதல் மயக்கம். ஒரடி தூரத்தில் படுத்திருந்தாலும், ஆஷாவின் துப்பட்டாவை இழுத்து, கைகளில் சுற்றிச் சுற்றி விஷமம் செய்தன நடராஜின் கைகள். ஆஷாவோ அவன் ரிஸ்ட்வாட்ச் ஸ்ட்ராப்பில் விஷமம் செய்து கொண்டிருந்தாள். அது காதலர்களின் உலகம். தனி உலகம். சுற்றுப் புறம், சூழ்நிலை, அருகில் இருப்பவர்கள் என்று எதையும் கவனிக்காத தனி உலகம். இல்லையானால், ஆஷாவின் அண்ணன் இவர்களைச் சற்று தூரத்திலிருந்து தன் செல்போனில் படம் பிடித்ததைக் கூடக் கவனிக்காமல் இருந்திருப்பார்களா?

ஆம், அன்று தன் அயல்நாட்டு நண்பர்கள் ஊருக்குப் போவதற்கு முன் வேலையெல்லாம் முடிந்து, நேரம் இருந்ததால் வைகை அணைக்கட்டிற்குக் கூட்டி வந்திருந்தான் ஆஷாவின் அண்ணன் விக்ரம். அவர்களுக்கு வீட்டிலிருந்தே சாப்பாடு புளி, காரமெல்லாம் அதிகமில்லாமல் பண்ணிக் கொடுத்திருந்தாள் அவனின் மனைவி ரேவதி. இவர்கள் சாப்பிட்டு விட்டு அப்படியே சாய, கொஞ்ச தூரத்தில் நடந்து போய்க்கொண்டிருந்த

ஜோடியில் பெண்ணைப் பார்த்ததும் ஆஷாவைப் போலிருக்க, மெதுவாக நழுவி வந்து பார்த்தான் விக்ரம். அவனுக்கு அதிர்ச்சியோ அதிர்ச்சி. இதெல்லாம் என்ன அக்ரமம் என்று தான் முதலில் தோன்றியது.

ஒரு நிமிஷம் தன்னைத்தானே ஆசுவாசப் படுத்திக் கொண்டான். அவள் தான் பொது இடத்தில் அநாகரிக மாக நடந்து கொள்கிறாள் என்றால், தானும் இங்கே எதுவும் பேசக் கூடாது என்று நினைத்துத் தன்னை அடக்கிக் கொண்டான். அதுவும் கௌரவமிக்க விருந் தாளிகளின் எதிரில் என்று திரும்ப அவர்களுடன் போய்ச் சேர்ந்து கொண்டான்.

இவன் எத்தனை சாதாரணமாக நடந்து கொண்டாலும் இரண்டு பேர் அவனைக் கேட்டு விட்டார்கள். "எனிதிங் ராங்?" என்று. "நத்திங். நத்திங்!" என்று சொல்லிச் சமாளித்தான். "புறப்படலாமா? மதுரை போய் ஹோட்டலில் செக் அவுட் பண்ணிவிட்டு புறப்படச் சரியாக இருக்கும்," என்றான். காரை இன்னொரு நண்பர் செலுத்தப் பின்னால் சாய்ந்து கொண்டான்.

இவளைப் பிரசவித்தபின் அம்மா இறந்து போனது இவனுக்கு நினைவு தெரிந்து நடந்த விஷயம். அப்பா அதன் பிறகே பாவம், மனது தான் காரணமோ என்னவோ, இவன் பிஸினஸ்ஸைப் பார்த்துக் கொள்ளத் தயராகும் வரை காத்திருந்தது போல் உயிரை விட்டார். ரேவதி இவனுடைய அத்தை பெண் தான். நன்றாக இருப்பாள். பட்டப் படிப்பு முடித்திருந்தாள். நல்ல பெண். இவனையும் சரி, ஆஷாவையும் சரி, நன்றாகப் பார்த்துக்

கொண்டாள். குடும்பத்தையும் நல்ல முறையில் நிர்வகித்தாள். அத்தை இவனுக்கு அப்போதிருந்த மனநிலையில் கல்யாணமே வேண்டாம் என்று சொல்லிக் கொண்டிருக்கையில் வற்புறுத்தித்தான் கல்யாணம் பண்ணி வைத்தாள். பின்னால் எத்தனையோ முறை இவனுக்குத் தோன்றியிருக்கிறது, அத்தை அன்றைக்குத் தனக்கு நல்லது தான் செய்தாள் என்று.

கொள்ளைப் பிரியம் இருந்தாலும் ஆஷாவின் முன்னால் இவனும் சரி, ரேவதியும் சரி. அடக்கியே வாசிப்பார்கள். பார்க்கப் போனால் இவன் தான் ஆஷாவிடம் கண்டிப்பாக இருப்பான். ரேவதி அவளிடம் ரொம்பவே சினேகிதமாகத்தான் இருப்பாள். அவளுக்கு நன்கு படித்த, பணக்காரப் பையனாகத்தான் பார்க்க வேண்டும். அதிலும் பிக்கல் பிடுங்கல் இல்லாதவனாக இருக்க வேண்டும் என்பதில் விக்ரம் ரொம்பவே உறுதியாக இருந்தான். ஏனெனில், அவனுக்குத் தன் தங்கையின் குணாதிசயங்கள் எல்லாம் தெரிந்து தான் இருந்தன. ஆனால், இன்று இது அவனுக்கு ஒரு பெரிய அதிர்ச்சி தான்.

மதுரை போய்ச் சேர்ந்து, ஹோட்டலில் பில் செட்டில் பண்ணிவிட்டு, அவர்களை ஏர்போர்ட் போய் வழி யனுப்பிவிட்டு வீடு வந்து சேர்ந்தான் விக்ரம். ரொம்பவே களைத்து விட்டான் அன்று. மனது அதிர்ச்சி அடையாம லிருந்திருந்தால், உடம்பு இவ்வளவு அசந்திருக்காதோ என்னவோ.

சூடாக ஒரு வென்னீர்க் குளியல் போட்டுவிட்டுச் சாப்பிட உட்கார்ந்தான்.

''ஒரு மாதிரி ஃபாரின் சிநேகிதர்களை வழியனுப்பி யாச்சா?'' என்று கேட்டாள் ரேவதி.

''ஆமாம் ரேவதி! ஏர்போர்டிலிருந்துதான் வரேன்.''

''ரொம்பவே களைப்பாத் தெரியறீங்க இன்னிக்கு. வாங்க. சூடா சாப்பாடு போடறேன். மிளகு ரசமும், கத்தரிக்காய் வதக்கலும் பண்ணியிருக்கேன். காலைல சீக்கிரமா ஒண்ணும் போக வேண்டிய வேலை இல்லையே?''

''ஒண்ணுமில்லே, இன்னிக்கு ரொம்பவே அலைச்சல்!'' என்றான். வரும் போதே தீர்மானித்துக் கொண்டுதான் வந்திருந்தான், ரேவதியிடம் அவசரமாக எதுவும் சொல்ல வேண்டாம் என்று.

''ஆஷா வந்துட்டாளா?'' என்று கேட்டான்.

''லேட்டாகத்தான் வந்தாள். பேருக்கு ஏதோ சாப்பிட்டு விட்டுப் போய்ப் படுத்துட்டா,'' என்றாள் ரேவதி.

எல்லாம் இவளை மயக்கியிருக்கும் அந்தத் தடியன் வரும்போதே ஏதாவது வாங்கிக் கொடுத்திருப்பான் என்று நினைத்துக் கொண்டான்.

சாப்பிட்டுவிட்டுத் தன் ரூமுக்குப் போகும் முன் ஆஷா ரூமில் கதவைத் தட்டிவிட்டு உள்ளே நுழைந் தான். ஏ.ஸி.யை ஃபுல்லாகப் போட்டிருந்தாள். ரொம்பவே சில்லென்று இருந்தது. ஒண்டிக் கொண்டு பூனைக் குட்டியாய்ச் சுருண்டிருந்தாள். அவளுக்குப் போர்த்தி

விட்டு ஏ.ஸி.யைக் குறைத்தான். அவளின் நெற்றி மயிரை ஒதுக்கிவிட வந்தவன், அவள் தூக்கத்திலேயே சிரிக்கவும், கோபம் வர வெளியே வந்து விட்டான். தூக்கத்திலும் வந்திருப்பான் அந்த ராஸ்கல் என்ற எண்ணம்தான்.

இது பெண்ணைப் பெற்றவர்கள் எல்லோருக்கும் தோன்றுவதுதானே! ஏதோ தங்கள் பெண் ஒன்றுமே தெரியாதவள், எவனோ கடங்காரன் மயக்கிக் காதல் பண்ண வைத்து விட்டான் என்பதுதான் அவர்கள் எண்ணம்.

மாடிக்குப் போய்த் தன் ரூமில் படுத்தவன் ரொம்ப நேரம் தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்து விட்டு விடியும் வேளையில் தூங்கிப் போனான்.

9

அன்று காலை சீக்கிரமே விழிப்பு வந்து விட்டது துர்காவிற்கு, அன்று வெள்ளிக் கிழமை என்பது நினைவுக்கு வர, எழுந்து, குளித்துத் தயாராகி, அம்மாவிடம், ''நான் கோவிலுக்குப் போயிட்டு வரேன்மா,'' என்றாள்.

''மீனாட்சியம்மன் கோவிலுக்கா போறே?'' என்று கேட்டாள் தனம்.

''இல்லைமா. அத்தனை தூரம் தனியே எங்கே? பக்கத்திலே இருக்கிற துர்கை கோவிலுக்குத்தான். ஆமா. அப்பா எங்கேம்மா?''

''அப்பா எழுந்து காப்பி சாப்பிட்டுட்டுத் திரும்பத் தூங்கறார்!'' என்றாள் தனம்.

''இருக்கட்டும்மா. பாவம் அவருக்கு என்ன அச திியோ, தூங்கட்டும்!'' என்று சொல்லிவிட்டுக் கோவி லுக்குப் போனாள் துர்கா.

''அம்மா தாயே! அப்பாவை உடம்பு ஒன்றுமில்லாமல் வையம்மா. இந்த ஸ்கூல் பிரச்னை, என் கல்யாணப் பிரச்னை, அண்ணா கல்யாணப் பிரச்னை எல்லாத் துக்கும் ஒரு நல்ல வழி காண்பிம்மா!'' என்று மனமுருகி வேண்டிக் கொண்டு அர்ச்சனை, பிரதட்சணம் எல்லாம் செய்துவிட்டு வீட்டுக்கு வந்தாள்.

அப்பா ஈஸிசேரில் சாய்ந்து கொண்டிருக்க, அம்மா அவர் பக்கத்தில் உட்கார்ந்து அவர் நெஞ்சை நீவிவிட்டுக் கொண்டிருந்தாள். பதறிப் போன துர்கா. ''என்னம்மா, என்ன ஆச்சு?'' என்று கேட்டுக் கொண்டே கிட்டே வந்து உட்கார்ந்தாள்.

''பேப்பர் பார்த்துக்கிட்டிருந்தவர் அப்படியே உட்கார்ந்துட்டார்மா,'' என்றாள் தனம் கவலையோடு.

அதற்குள் லேசாகக் கண்ணைத்திறந்த நாராயணசாமி, ''நம்ம ஸ்கூல்ல எஸ்.எஸ்.எல்.சி. ரிசல்ட் பாரும்மா. ஆனாலும் 50% தான் வந்திருக்கும்மா!'' என்றார்.

அதற்குள் துர்காவின் செல் போன் அடித்தது. காதில் வைத்து ஹலோ சொன்ன துர்கா. ஒன்றுமே காதில் விழவில்லை என்று வாசலுக்குப் போனாள்.

எதிர்பார்த்தது போல் அப்பாவின் பள்ளிக்கூட பார்ட் னர்களில் ஒருவரான நரசிம்மம்தான்.

''என்னம்மா துர்கா, எப்படியிருக்கே?'' என்று விசாரித்தார் நரசிம்மம்.

''நல்லாயிருக்கேன் அங்கிள். நீங்க, ஆன்ட்டியெல்லாம் சௌக்கியமா?''

''எல்லாரும் நல்லாயிருக்கோம்மா. அது சரி, அப்பா எப்படியிருக்கார்மா? பேப்பர் பார்த்தியாம்மா?'' என்று கேட்டார்.

''பார்த்தேன் அங்கிள்,'' என்றாள் மெதுவாக.

''நானும், வேங்கடராஜுவும் அப்பாவை வந்து பார்க்கறதாகத்தான் இரண்டு வாரமா நினைச்சிகிட்டிருக்கோம்,'' என்றார்.

துர்கா மௌனம் காக்க, ''எதுக்குன்னு கேக்கமாட்டியாம்மா? பள்ளிக் கூடத்தைக் கட்டிக் காக்க உங்கப்பாவாலேயும் முடியாது. உன் அண்ணாவும் செய்வான்னு தோணல்லே. நீயோ கல்யாணம் ஆகிப் போக வேண்டியவ. அதனாலே...'' என்று நிறுத்தினார் அவர்.

''அதனாலே.''

''வேறென்னம்மா? டீச்சர்ஸுக்கும், பேரண்ட்ஸுக்கும் நோட்டிஸ குடுத்துட்டு ஸ்கூலை மூடிடலாம். இல்லைனா, அப்படியே யாராவது வாங்கிக்கறாங்களான்னு விளம்பரம் குடுத்துப் பார்க்கலாம். என்னம்மா சொல்றே நீ? உங்கிட்டேதான் இதைப் பத்தி பேச முடியும்னு தான் உன்னைக் கூப்பிட்டேன்மா,'' என்றார்.

''நிஜம்தான் அங்கிள். அப்பாவுக்குத் தாங்காது. ஸ்கூல் பத்தி பேசினாலே எமோஷனலா ஆயிடறார். அண்ணா சம்பந்தப் பட்டுக்கப் போறதில்லை. ஆனா,

எனக்கு உங்ககிட்டே ஒரு கோரிக்கை இருக்கு, அங்கிள், கேட்கலாமா?''

''சொல்லும்மா. எங்கிட்டே உனக்கு என்ன தயக்கம்?''

''ஒரு வாரம் டைம் கொடுங்க அங்கிள். நானே எம்.எஸ்சி. முடிச்சாச்சு. மேற்கொண்டு என்ன? எங்க குடும்பத்தோட இந்த இரண்டு சொத்தான பள்ளிக் கூடத்தையும், ஜவுளிக்கடையையும் என்ன பண்ணற துன்னு யோசிச்சிக்கிட்டிருக்கேன். நடுவில அப்பா, அம்மா என் கல்யாணத்தை நிச்சயம் பண்ணணும் கறாங்க. ஆதித்யாவைத் தெரியுமில்லையா அங்கிள் உங்களுக்கு?''

''ரங்கதுரை பிள்ளை ஆதித்யாதானே! நல்ல பிள்ளை. அந்த மாதிரி வரன் அமையக் கொடுத்து வெச்சுருக்கணும். நீ என்ன சொல்றேம்மா?''

''ஆதி என்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போறார்ங் கறதுனாலே, அவருக்கும் இந்தக் குடும்பத்து விஷயங் கள்ல அக்கறை இருக்கும். இல்லையா? அவரோடயும், அப்பா, அம்மா, அண்ணா எல்லோரையும் கலந்துகிட்டு உங்களுக்கு ஒரு வாரத்தில் பதில் சொல்றேன். வேங்கடராஜு அங்கிள்கிட்டேயும் சொல்லிடறீங்களா?'' என்றாள்.

''சரிம்மா. எனக்கு உன்னைத் தெரியாதா? நீ இத்தனை தூரம் சொல்லும் போது நாங்க கொஞ்சம் காத்துகிட்டுருக்கறதில என்ன வந்தது? அப்புறமா நீயே போன் பண்ணும்மா,'' என்று சொல்லி போனை வைத்து விட்டார்.

அம்மாவிடம் வந்த துர்கா. ''அம்மா, நான் போய் ராகவன் மாமாவைப் பார்த்து விட்டு வரலாம்னு இருக்கேன். நீ என்னம்மா சொல்றே?'' என்று கேட்டாள்.

''சீரங்கத்துக்கா? நீ ஒண்டியா எப்படியம்மா போவே? நட்ராஜை வேணா கூட்டிகிட்டுப்போறயா?'' என்று கேட்டாள் தனம்.

''வேணாம்மா. நம்ம கார் டிரைவர் முருகேஷைக் கூட்டிகிட்டு நாளை காலை கிளம்பினா ராத்திரி வந்துடுவேன்மா. இரும்மா! மாமா ஊர்ல இருககாரான்னு கேட்டுக்கறேன்,'' என்றாள்.

போன் செய்து விட்டு வந்தவள், ''அம்மா பழம் நழுவிப் பாலில் விழுந்திருக்கும்மா. மாமா இங்கேயே பெண் வீட்டுக்கு வந்திருக்காராம். எல்லார் ஜாதகத் தையும் முருகேஷிடம் குடுத்தனுப்பி விட்டு, நீ சாயந்தரம் வந்தா எல்லா விவரமும் சொல்றேன்னார்.''

''அம்மாடி, நடராஜ் ஜாதகத்தையும் கரண்பிச்சுட்டு வாம்மா. ஆதித்யாதும் இருக்கு, தரேன்,'' என்றாள்.

தன் கேள்விகளை வரிசையாக, தெளிவாக எழுதி, அவைகளை ஜாதகங்களுடன் முருகேசிடம் கொடுத் தனுப்பினாள் துர்கா.

ராகவன் மாமா என்று இவள் குறிப்பிட்டவர் இவளுடைய தாத்தாவின் நாளிலிருந்து இந்தக் குடும் பத்துக்குப் பழக்கமானவர். ஒரு காலேஜில் ப்ரொஃபஸ ராக இருந்து ஓய்வு பெற்றவர். 'ஜாதகம் பார்ப்பதில் கைதேர்ந்தவர். ஆனா அதை வியாபாரமாக இல்லாமல்

நட்புக்காகச் செய்பவர். மஹா தெய்வ பக்தி உள்ளவர். ஏதேனும் பிரச்னை என்றால் காப்பாகத் தாயத்து வைத்துத் தருவார். இவர்கள் வீட்டில் எந்தக் காரியமானாலும் அவரைக் கேட்காமல் செய்யவே மாட்டார்கள்.

மாலையில் இவள் போய் அவரை நமஸ்கரித்துவிட்டு உட்கார்ந்தாள்.

''இதோ பாரம்மா! நீ மேல்கொண்டு படிப்பதைவிட, வேலைக்குப் போவதை விட உன் குடும்பச் சொத்தைப் பராமரிப்பது தான் நல்லது. உனக்கு வரப்போற புருஷன் நல்லவனாக உனக்குத் துணையாக இருப்பான். உன் அப்பாவுக்குத் தீர்க்காயுசம்மா. கவலையே வேண்டாம்!'' என்றார்.

''மாமா, அண்ணாவைப் பற்றி...?'' என்று கேட்டாள்.

''அவன் இப்படித்தான்மா இருப்பான். மனசுப்படி தான் கல்யாணமும் பண்ணிப்பான். பெரிதாகக் கெடுதல் ஒண்ணும் வந்துடாது. ஆனால், அவனால் பெரிய உபயோகமும் இல்லைமா.''

முகம் சுண்டிப் போனது துர்காவுக்கு.

''நீ கவலைப்படாதே! நான் ரட்சை பண்ணித்தரேன். அவனைக் கட்டிக்கச் சொல். இல்லே, அவனுக்காக உன் அம்மாவைக் கட்டிக்கச் சொல்லு. எல்லாம் நல்ல படியாகவே நடக்கும்!'' என்றார்.

''சரி மாமா! நான் வரேன்!'' என்று விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டாள் துர்கா.

வீட்டிற்கு வந்து அம்மாவிடம் விவரம் சொன்னாள். நடராஜும் நன்றாகிவிடுவானாம் என்று சொல்லிவிட்டு விட்டு விட்டாள்.

ஆதி இன்னும் சென்னைக்குக் கிளம்பவில்லை. எனவே, அவனுக்கு போன் செய்து மறுநாள் வருவானா என்று கேட்டாள். அவன் மறுநாள் ஏதோ சிநேகிதன் கல்யாணம் என்பதால் அதற்கு மறுநாள் பார்க்கலாமா என்று கேட்டான். சரி என்றாள்.

''ஏய், கோபமா, கண்ணா?'' என்று கேட்டான்.

''இல்லை ஆதி! நான் என்ன சின்னக் குழந்தையா?'' என்றாள் துர்கா. பெரியவளாகி விட்டோம் என்ற எண்ணமே பாரமாக இருந்தது. சோர்ந்து போகக்கூடாது என்று ஜக்கி வாசுதேவின் 'அத்தனைக்கும் ஆசைப் படு 'புத்தகத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தாள்.

10

வைகை அணைக்கட்டில் தங்கையைப் பார்த்து விட்டு வந்த அன்று இரவு ரொம்ப நேரம் கழித்துத் தூங்கின விக்ரம், காலை எழுந்திருக்கும் போதே நல்ல ஜுரத் துடன் எழுந்தான். பயங்கரத் தலைவலி வேறு. அலைச்சல், மன உளைச்சல், வெளியில் சாப்பாடு எல்லாமாகச் சேர்ந்திருக்க வேண்டும். ரொம்ப ஜுரம். தொட்டுப் பார்த்த ரேவதி மிகவும் பயந்து போய்விட்டாள். ''டாக் டர்கிட்டே போகலாம் வாங்க!'' என்று கூப்பிட்டாள்.

''முடியல்லே ரேவா. முதல்லே ஏதாவது மாத்திரை குடு. ஜுரம் குறையவிட்டுப் போகலாம்,'' என்றான்.

''இத்தனை ஜுரம் இருக்கும் போது எப்படி சும்மா இருப்பது?'' என்று டாக்டருக்குப் போன் செய்தாள்.

ஆஷாவும் அண்ணாவைப் பார்த்ததும், ''என்ன அண்ணா இது, இப்படிக் கொதிக்கிறதே, டிரைவரை அனுப்பி டாக்டரைக் கூட்டி வரச் சொல்லட்டுமா?'' என்ற கேட்டாள். விக்ரம் ஒன்றுமே பதில் சொல்லவில்லை.

''இல்லை ஆஷா! நான் டாக்டருக்குப் போன் பண்ணிட்டேன். இதோ வரேன்னார்,'' என்றாள் ரேவதி.

டாக்டர் வந்து பார்த்து ஊசி ஒன்று போட்டார். ''அலைச்சல் தான், வேறே ஒண்ணுமில்லே,'' என்றவர், மருந்துகளும் எழுதிக் கொடுத்தார். ''ஜுரம் இப்போ இறங்கிடும். இறங்கல்லேன்னா, 3 மணிபோல் கூப்பிடுங்க. எப்படி இருந்தாலும் மூணு மணிக்கு எனக்குப் போன் பண்ணுங்க,'' என்று சொல்லிவிட்டுப் போனார்.

ஜுரம் குறைந்தது. ஆனால் மறுபடியும் ஏறிவிட்டது. இரண்டு நாள் அலைக்கழித்து விட்டுத்தான் போயிற்று. மூன்றாம் நாள் முழுவதும் இறங்கிவிட்டது. அதற்கும் மறுநாள் தான் அவனுக்குப் பேசவே தெம்பு வந்தது. ரேவதியை, ''ஆஷா எங்கே?'' என்று கேட்டான்.

''ஏதோ பிரண்ட்டுகிட்டே இருந்து புக் வாங்கி வந்தாளாம். அதைத் திருப்பிக் கொடுத்துவிட்டு வரேன்னு போனாங்க,'' என்றாள் ரேவதி.

''ரேவா, எப்பவாவது அவ எந்த பிரண்டு வீட்டுக்குப் போறா என்னன்னு கேட்டுருக்கியா?'' என்றான் விக்ரம்.

''ஒருத்தர், இரண்டு பேரைத் தெரியும். எதுக்குக் கேக்கறீங்க?''

பேசாமல் ஜன்னலுக்கு வெளியே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தான் விக்ரம்.

''என்னாச்சுங்க, ஏதாவது பிரச்சனையா?''

''பிரச்சனை தான் தங்கச்சி பண்ணிக்கிட்டு இருக்கிற காரியம். நல்லா இழுத்து நாலு அறை விடற எண்ணத்தில் தான் அன்னிக்கு வந்தேன். முளைச்சி மூணு இலை விடல்லே!'' என்று பொரிந்தான்.

''என்னங்க, ஏதாவது காதல் விவகாரமா?''

''இப்போ கேளு, நீயும் கொஞ்சம் கவனித்திருக்கலாமில்லையா?'' என்று கணவன் கேட்டதும், கண்ணீர் முத்துக்கள் திரளத்தொடங்கின அவளுக்கு.

''உன்னை வருத்தப் படுத்தறதுக்காகச் சொல்லல்லே. ஆனா, அவ ஒரு பையனோடு சுத்தறா.''

''நிஜமாகவா?'' என்று திறந்த வாய் திறந்தபடியே கேட்டாள் ரேவதி.

''இந்தா, இதைப் பாரு!'' என்று தன் செல்போனில் அவன் எடுத்த போட்டோவைக் காண்பித்தான்.

''ஐயோ, என்னங்க இது? அநியாயமா இருக்கே? நம்ம ஆஷாவா இப்படி? நம்பவே முடியல்லியே! இந்த போட்டோ எங்கே எடுத்தது?''

''அன்னிக்கு அந்த ஃபாரினரோடு வைகை டேம் போயிருந்தேன், இல்லையா? அங்கே நம்ம வீட்டுப் பெண் இருந்த திருக்கோலம் தான் இது.''

''அங்கேயே நீங்க ஒண்ணும் கேக்கல்லியா?''

''பொது இடத்தில அதுவும் என் பிஸினஸ் சம்பந்தப் பட்ட வெளி நாட்டுக்காரங்கெல்லாம் எதிரே இருக்கும் போது என்னத்தைக் கேக்க முடியும்? இனிமேத்தான் கேக்கணும். நீ சொல்லு. இதை எப்படி டீல் பண்ண லாம்?''

''நேரிடையாகவே கூப்பிட்டுக் கேட்கலாம். அந்தப் பையன் படிப்பு என்ன? குடும்பம் எப்படி? எல்லாம் கேக்கணும். அவனுக்குக் கெட்ட பழகக்கம் எதுவும் இல்லாமே இருக்கணும்.''

''ஆமா, நீ இதெல்லாம் விசாரிச்சு வேணும், வேண் டாம்னு சொன்னா, நம்ம வீட்டுப் பெண் கேட்டுக்கப் போறாளாக்கும்! எனக்கு நம்பிக்கையே இல்லை. எரிச்சலா இருக்கு.''

''எதுக்கு வருத்தப்படறீங்க? எல்லாம் சரியாயிடும்னே நம்பலாம். ஆஷா நல்ல பொண்ணு. ஏதோ வயசுக் கோளாறு, அவ்வளவு தான்!'' என்றாள் ரேவதி. ''இதோ பாருங்க, நான் கேக்கறேன் அவளை. நீங்க இரண்டு நாளா அடிச்ச ஜுரத்திலே ரொம்பவே வீக்கா இருக் கீங்க, இல்லைனா நாளைக்குக் கேளுங்க,'' என்றாள் தொடர்ந்து.

''நான் அவளை வீட்டுக்கு ஒரே பொண்ணு, பெரிய இடத்தில கொடுக்கணும். அவளை வசதியா வாழ வைக்கணும்னெல்லாம் நினைச்சிகிட்டுருக்கேன். ஆனா, அவ போற வழியைப் பாரு!'' என்றான் விக்ரம்.

"சரி, நீங்க எழுந்து ஏதாவது சாப்பிட்டுட்டு மருந்து மாத்திரை எல்லாம் எடுத்துக்குங்க. அதுக்குள்ளே அவளே வந்துடுவா," என்றாள் ரேவதி.

சொன்னது போலவே நடராஜை சந்தித்து விட்டு 11 மணி சுமாருக்கு வீட்டுக்கு வந்தாள் ஆஷா. நேரே விக்ரமிடம் வந்து, "அண்ணா எப்படி இருக்கே?" என்று கேட்டாள்.

"வாம்மா, வந்து இப்படி உட்கார்," என்றான் விக்ரம்.

"என்ன அண்ணா?" என்று கேட்டவளிடம் தன் செல்போனிலிருந்த போட்டோவைக் காண்பித்தான். சற்றே மௌனமாக இருந்த ஆஷா, இனித் தப்பிக்க முடியாது என்று தீர்மானமாகத் தெரிந்து கொண்டாள். என்றைக்கானாலும் சொல்ல வேண்டிய விஷயம் தானே என்று முடிவு செய்து கொண்டவளாய், "இவன் பெயர் நடராஜ். நான் இவனைத்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்!" என்றாள்.

"அவன், இவன்கறியே, அதிலேயே தெரியறதே நீ அவனுக்கு மதிப்பு கொடுக்கற லட்சணம். உன் அண்ணி ரேவதி என்னோடு சின்ன வயசிலேருந்து பழகியவள் தான். அத்தை பெண் தான். என்னிக்காவது என்னைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டுருக்காளா? வா, போன் னவது சொல்லியிருக்காளா? சரி, அதை விடு. இப்போ அதில்லை பிரச்னை. இந்தப் பொறுக்கி யாரு? ஒண்ணும் தெரியாத பொண்ணைக் கூட்டிப் போய்..." என்று அவன் இன்னும் தொடரும் முன்,

"அண்ணா, ஸ்டாப் இட். அதென்னா நீ பாட்டுக்கு பொறுக்கின்னுல்லாம் சொல்லிகிட்டுருக்கே! அவர்

இந்த வீட்டு மாப்பிள்ளையா வரப் போறவர்!'' என்றாள்.

''அதை நான் தான் தீர்மானிக்கணும்.'' இது விக்ரம்.

''வாழப்போறவ நான். அதைத் தீர்மானிக்க வேண்டிய அதிகாரம் எனக்குத் தான் உண்டு.''

''இது உங்க இரண்டு பேர் கையிலும் இல்லை. கடவுள் தீர்மானிக்கறதுலதான் இருக்கு கல்யாண மெல்லாம்!'' என்றாள் ரேவதி.

''யார் என்ன தீர்மானிச்சாலும் என் தீர்மானத்தில் மாறுதல் கிடையாது.''

''அத்தனை திமிரா உனக்கு? யார் குடுத்த தைரியம் இது? அந்த ராஸ்கலா?''

''அண்ணா, மரியாதை, மரியாதை!'' என்றாள் ஆஷா.

''கூடப்பொறந்தவன், சின்ன வயசிலேருந்து உன்னை வளர்த்தவன். எனக்கு நீ கொடுக்கிற மரியாதையை விடவா?'' என்று சீறினான் விக்ரம்.

இதற்குப் பதிலாக ஆஷா எதையாவது சொல்லி ரசாபாசமாகும் முன் ரேவதி குறுக்கே வந்தாள். ''இரண்டு பேரும் பொறுமையாகத்தான் பேசுங்களேன்!'' என்று குரலை உயர்த்திச் சொன்னாள்.

''அண்ணி, இதோ பாருங்க! நான் தேர்ந்தெடுத் திருக்கிறவருக்கு எந்தக் குறையும் கிடையாது.''

''அப்படியா, சொல்லேன். என்ன படிப்பு, குடும்பப் பின்னணி எல்லாம் உங்க அண்ணாவுக்கு. நீங்களும் கொஞ்சம் அமைதியாகக் கேளுங்க,'' என்றாள் ரேவதி.

''அவர் பெயர் நடராஜ். படிப்பு பி.காம். வீட்டுக்கு ஒரு பெரிய துணிக்கடை, ஒரு ஸ்கூல் எல்லாம் சொந்தம். அப்பா, அம்மா ஒரு தங்கை இது தான் குடும்பம்,'' என்று மளமளவென்று சொன்ன ஆஷா, ''என்னை அவருக்குப் பண்ணி வைக்கறதுல அவங்க குடும்பத்துல எந்த ஆட்சேபணையும் இருக்காது!'' என்றாள்.

''ஆமாம். இருக்காது. ஒரு மத்தியதரக் குடும்பம். சாதா படிப்புள்ள பிள்ளை. நம்மளை மாதிரி கோடி கோடியா சொத்து இருக்கறவங்களைப் பண்ணிக்க வலிக்குமோ?'' என்றான் விக்ரம்.

''அவருக்கு ஒண்ணும் என் சொத்து மேலே ஆசை யில்லை.''

''எல்லாம் பார்க்கத்தானே போறோம். சாயந்தரம் அவன் வீட்டுக்குப் போறோம். ஆமா, வீடாவது சொந்த வீடா, இல்லை அதுகூட வாடகை வீடா?'' என்று கேட்டான் விக்ரம் நக்கலாக.

''சரி, இப்ப நீங்க ரெஸ்ட் எடுங்க. சாயந்தரம் நாம இரண்டு பேருமாய்ப் போய் வரலாம்!'' என்றாள் ரேவதி.

''இவளும் நம்ம கூட வரட்டும். நாம மட்டும் போய்க் கேட்டால், 'எனக்கு ஆஷான்னு யாரையும் தெரி யாது!'ன்னு சொன்னாலும் சொல்லுவான் இந்த மாதிரி பசங்க.''

''அண்ணா, நீ அநாவசியமாக ஒரு நல்ல மனுஷர் மேலே தப்பான அபிப்ராயத்தை வளர்த்துண்டே போறே!'' என்றாள் ஆஷா.

சாயந்திரம் மூன்று பேருமாகப் போகலாம் என்று தீர்மானித்து, தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, மாலையில் வருவதாக ரேவதி தான் போனில் சொல்லியிருந்தாள். அந்த முனையில் பேசியது துர்கா. அவள் போனில் எதையும் காண்பித்துக் கொள்ள வில்லை.

அதன் பிறகு அம்மா, அப்பாவிடம் விவரம் சொன்ன போது, அவர்களுக்கு ரொம்பவே அதிர்ச்சி. ''ஏம்மா, அந்தப் பெண்ணை உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டாள் தனம்.

''பார்த்திருக்கேம்மா. அழகா இருப்பா. பணக்காரப் பொண்ணு. இந்த வருஷம் தான் டிகிரி எழுதியிருக்கா. துடியாய் இருப்பாள்!'' என்றாள் துர்கா.

''குணம்?''

''எப்படி யிருந்தாலும் நமக்கு நடராஜ் வேணும். அவனுக்காக வரவளும் வேணும். நாம அட்ஜஸ்ட் பண்ணிக்க வேண்டியதுதான்.''

காப்பி, டிபனுக்குச் சமையல்கார சுவர்ணாவிடம் சொல்லிவிட்டு எல்லோரும் கொஞ்சம் ரெஸ்ட் எடுத் தனர். ஆனால் பாவம்! நாராயணசாமி புலம்பித் தீர்த்து விட்டார்.

வேறென்ன? கல்யாணம் பண்ணிக் கொள்வதற்கு முக்கிய தகுதியான சம்பாத்தியமே இன்னும் ஏற்பட வில்லை. அப்படி இவனே தேடிக் கொள்ள என்ன அவசியம் அவனுக்கு என்பதுதான். தவிர, பெண் குடும்பத்துக்கு ஏற்றவளாக இருக்க வேண்டுமே என்ற

கவலை. ஆனாலும், 'அமைதியாக இருங்க!' என்று திரும்பத் திரும்பத் துர்கா சொல்லிக் கொண்டே இருந்ததால், வாயை மூடிக் கொண்டிருந்தார்கள். நடராஜிடம் விவரம் சொன்னார்கள். ''நான் எப்படியும் ஆஷாவைத்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன். அதனால வரவங்களை எரிச்சல் படுத்தாமே, ஆக வேண்டியதைப் பாருங்க!'' என்று அப்பா, அம்மா, தங்கை மூணு பேரும் இருக்கும் போதே கண்டித்துச் சொல்லி விட்டான்.

புறப்படும் போது தயாராகி வந்த ஆஷாவைப் பார்த்த ரேவதிக்குச் சரியாகப் படவில்லை. ''என்ன ஆஷா, இந்த டிரஸ்லயா வரப்போறே?'' என்று கேட்டாள்.

''ஏன், இதுக்கென்ன?'' என்ற ஆஷா கூடவே, ''இது நடராஜுக்கு ரொம்பப் பிடிக்கும்!'' என்றாள்.

''அவருக்குப் பிடிக்குமாயிருக்கும். ஆனா, முதல் தடவை பார்க்கும் போது பெரியவர்களுக்கும் பிடிக்கற மாதிரி ஏதாவது போட்டுக்கோ. புடவை வேணுமானா கட்டிக்கோ!'' என்றாள் ரேவதி.

''ஐயோ, புடவையெல்லாம் வேண்டாம்!'' என்ற ஆஷா சூடிதார் செட்டில் வெளியே வந்தாள். அந்த வரைக்கும் திருப்திப் பட்டுக் கொண்டாள் ரேவதி.

சாயந்தரம் அவர்களுடைய பெரிய படகுக் கார் துர்கா வீட்டிற்கு வந்து நின்றது. அவர்களிடம் இன்னொரு சின்னக் கார் இருப்பது துர்காவிற்குத் தெரியும். அநாவசிய அலட்டல் என்று நினைத்துக் கொண்டாள்.

உள்ளே வந்தவர்களைப் பார்த்து வாசலுக்குப் போன துர்கா, ''வாங்க, வணக்கம்!'' என்று கைகூப்பி வர வேற்றாள். பதிலுக்கு ரேவதி மட்டும் தான் கை கூப்பி னாள். இவர்கள் அன்று ஆஷாவை எதிர்பார்க்கவில்லை. ''வா ஆஷா!'' என்று துர்கா சொன்ன பிறகும் அவள் ஒரு புன்னகைதான் செய்தாள்.

உள்ளே போனதும் கைகூப்பி, ''வணக்கம்! வாங்க!'' என்று வரவேற்ற நாராயணசாமி தம்பதிகளையும் அவர்கள் கண்டு கொள்ளவில்லை.

நேராகப் போய் விக்ரம் ஒரு சோபாவில் கால்மேல் கால் போட்டுக் கொண்டு உட்கார, அவன் அருகில் யாரும் செல்வதற்குக் காத்திருக்காமல் ஆஷா போய் உட்கார்ந்தாள். ரேவதி தான் வாங்கி வந்திருந்த பழங்களையும் பூவையும் தனலட்சுமியிடம் கொடுத்து, புன்னகை புரிந்து, கைகூப்பினாள். ''உட்காருங்க!'' என்றாள் தனம்.

''நான் ஆஷாவுடைய அண்ணி!'' என்றாள் ரேவதி.

''உங்க பிள்ளை வீட்டில் இல்லையா?'' என்று கேட்டான் விக்ரம், நாராயணசாமியைப் பார்த்து.

''மாடியில் தான் இருப்பான்னு நினைக்கறேன். நீங்க பெண்ணோட அண்ணாவா?'' என்று கேட்டார்.

''ஆமாம், நான் ஆஷாவுடைய அண்ணன். அது என் மனைவி ரேவதி. இது ஆஷா. உங்கள் பிள்ளை காதலிக்கும் என் தங்கை!'' என்றான் முகத்தில் சிறிது கூடச் சிரிப்பில்லாமல்.

''அப்படியா. நீ இந்த வருஷம் டிகிரி கிடைசி வருஷம் எழுதிட்டே இல்லையா?'' என்று கேட்டார் நாராயண சாமி. ''மேற்கொண்டு என்ன பண்ணப் போறேம்மா?'' என்று கேட்டார், ஏதாவது பேச வேண்டுமே என்று.

''உங்க பிள்ளை டிகிரி முடிச்சதும் இந்தக் கேள்வியைக் கேட்டதாகத் தெரியல்லியே!'' என்றான் விக்ரம்.

சரி, இவன் வேண்டுமென்றே நக்கலாகப் பேசுகிறான் என்று புரிந்து கொண்ட நாராயணசாமி, ''அவன் கொஞ்ச நாள் ஃப்ரீயாக இருக்க நினைத்தான். குடும்ப பிஸினஸ்ஸில் எனக்கு உதவியாக இருக்கான்!'' என்றார்.

''அதுக்காக, வெறும் டிகிரியோட படிப்பை நிறுத் திடுவாங்களா, என்ன? என்னவோ என் தங்கையை அத்தை இத்தைச் சொல்லி மயக்கித் தன் வலையில் போட்டுக் கொண்டிருக்கிறான். இல்லாட்டா, நான் என் தங்கையைக் குறைந்த பட்சம் ஐ.ஏ.எஸ்., டாக்டர் என்று படிச்ச பையனாத்தான் பார்த்துக் குடுக்கணும்னு நினைச்சிகிட்டிருந்தேன்,'' என்றான் விக்ரம்.

''சாரி, மிஸ்டர் விக்ரம். இரண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் விரும்பறாங்க. கல்யாணம் பண்ணிக்க நினைக் கிறாங்க. இதில் மயக்கறது என்ன, மயங்கறது என்ன?'' என்றார் நாராயணசாமி.

''எல்லாம் எங்க சொத்து பண்ற வேலைதான்!'' என்றான் விக்ரம்.

''இல்லை யில்லை. அப்படி யெல்லாம் திட்டம் போட்டு ஏமாத்தவறன் இல்லை என் பிள்ளை. அப்படி

ஒன்றும் நாங்களும் இல்லாமபட்டவங்களும் இல்லை!'' என்றார் நாராயணசாமி.

''என்ன, ஏதாவது பிஸினெஸ் ஆரம்பிக்கப் பணம் கேட்டிருப்பான். நீங்க குடுத்திருக்க மாட்டிங்க. அதான் என் தங்கை மாட்டிக்கிட்டா!'' என்றான் விக்ரம்.

பளிச்சென்று குறுக்கிட்டாள் துர்கா. ''நான் குறுக் கிடறதுக்கு மன்னிச்சுக்குங்க. எங்கண்ணன் தன்னோட பேசறது பிடிக்கல்லேன்னா ஆஷா உங்ககிட்டே சொல்லிக் கண்டிக்கச் சொல்லியிருப்பா. அவளுக்கும் பிடிச்சிருக் கறதுனாலதானே உங்ககிட்டே புகார் பண்ணாமே இரண்டு பேருமே பழகியிருக்காங்க. அப்புறம் எதுக்கு மயக்கியிருக்கான்னு எங்கண்ணனைச் சொல்றீங்க. பணத்துக்காக அப்படிச் செய்ய வேண்டிய அவசியம் அவனுக்கில்லை.''

''ஏங்க, நீங்க அவனுக்கு அக்காவா, தங்கையா?''

''நான் நடராஜுடைய கூடப் பிறந்த தங்கை. தங்கையானாலும் நியாயம்னு படறதைச் சொல்ற அவசியத்தை நீங்க உண்டு பண்ணிட்டீங்க.''

''இன்னும் அவனைக் கூப்பிடாமே நீங்கள் ஆளா ளுக்குப் பேசிகிட்டிருக்கீங்க!''

நாராயணசாமியின் முகம் சுருங்கியது. ''இதோ பாருங்க! இப்ப நீங்க கல்யாணம் பேசத்தானே வந் திருக்கீங்க. உங்க பேச்சும் நடவடிக்கையும் அப்படித் தெரியல்லையே! மாப்பிள்ளை ஆகப் போறவனை அவன், இவன்னு பேசறீங்க. மரியாதை...'' என்றெல்

லாம் அவர் மேலே தொடரும் முன், பேச்சு வேண்டாத திசையில் போவதைக் கவனித்த ரேவதி, ''தப்புத்தான் அங்கிள். நீங்க உங்க பிள்ளை இருந்தாக் கூப்பிடுங்க. வந்ததற்கு அவரையும் பார்த்துவிட்டு, நாம மேற் கொண்டு ஆக வேண்டியதைப் பார்க்கலாம்,'' என்றாள்.

அந்த நேரம் கீழே இறங்கி வந்த நடராஜ், விக்ரமிற்கு வணக்கம் தெரிவித்து விட்டுத் துர்காவின் அருகில் உட்கார்ந்தான். தன் அருகில் வந்து உட்காருவான் என்று எதிர்பார்த்த ஆஷாவின் முகம் சின்னதாகி விட்டது.

''ஆஷா, இதுதான் நடராஜா?'' என்று கேட்டான் விக்ரம்.

''ஆமாம். நான் தான் நடராஜ். நீங்க வந்ததிலே ரொம்ப மகிழ்ச்சி!'' என்ற நடராஜைப் பார்த்து. ''நீங்கதான் வரவைச்சுட்டீங்களே!'' என்றான் விக்ரம் காட்டமாக.

திரும்பப் பேச்சுப் போகும் போக்கு சரியில்லாததைக் கவனித்த துர்கா, ''நான் போய் எல்லாருக்கும் காப்பி கொண்டு வரேன்,'' என்று எழுந்தாள்.

''சமையலுக்கு ஆள் இல்லையா?'' என்று கேட்டான் விக்ரம்.

''இன்னிக்கு அவளுக்கு லீவு கொடுத்து அனுப் பிட்டோம்,'' என்றாள் துர்கா. நாம் பேசும் போது வேறு யாரும் எதுக்கு என்றுதான் என்ற அர்த்தம் தொனித்தது.

''இல்லைமா, காப்பி எல்லாம் வேண்டாம்!'' என்ற ரேவதி, கணவனை, 'ஒரு நிமிடம்...' என்று தனியே

கூப்பிட்டாள். எழுந்து வந்த விக்ரம் அவளைத் தொடர்ந்து வாசல் ஹாலுக்குப் போனான்.

''இதோ பாருங்க. ஆஷா தீவிரமா அந்தப் பையனைத்தான் பண்ணிப்பேன்னு சொல்லிவிட்டு, நீங்க எதுக்கு வேண்டாத பேச்செல்லாம் பேசிக்கிட்டிருக்கீங்க? அப்படி ஒண்ணும் வசதி இல்லாதவங்களாகவும் தெரியல்லே. நாகரிகமாகவும் தான் இருக்காங்க. ஆக வேண்டியதைப் பேசுங்க. இல்லைனா, நான் வேணுமானா பேசட்டுமா?'' என்றாள்.

''நம்ம இரண்டு பேர்ல யார் பேசினா என்ன? எனக்கு எரிச்சலா இருக்கு. நீதான் பேசு,'' என்றான்.

உள்ளே வந்த இருவரிடமும், ''ரொம்ப ஐஸ் போடல்லே. சாத்துக்குடி ஜூஸ்தான். சாப்பிடுங்க!'' என்று நீட்டினாள் துர்கா. ஏற்கெனவே நடராஜும், ஆஷாவும் ஜூஸ் குடித்துக் கொண்டிருந்தார்கள்.

''அம்மா, நீங்க ஜாதகம் பார்ப்பீங்களா?'' என்று கேட்டாள் ரேவதி.

''இவ்வளவு தூரம் அவங்க தீவிரமா இருக்கும்போது ஜாதகம் பார்ப்பதில் அர்த்தம் இல்லைமா. எங்கள் ஜோசியர் நாள் பார்த்துக் கொடுப்பார். அதில்தான் கல்யாணம் பண்ணணும். எங்களுக்கு வேறே எதுவும் முக்கியமில்லை!'' என்றாள் தனலட்சுமி.

அவளருகே போய்ச் சற்று கிசுகிசுப்பான குரலில், ''இன்னிக்கு அவருக்கு மூடு சரியில்லை. கொஞ்சம் சிடுசிடுன்னு பேசிட்டார். தப்பா நினைச்சுக்காதீங்க.

நாங்க வர வேண்டிய முறைப்படி கூட வரல்லே. நீங்க நாள் பார்த்துட்டு போன் பண்ணுங்க. தனியா நிச்சய தார்த்தம் வெச்சுக்கலாமா? இல்லே, நேரிடையாகவே கல்யாண முகூர்த்தம் பார்த்துடலாமான்னு நீங்க தான் சொல்லணும்,'' என்றாள் ரேவதி.

''நேரடியா கல்யாண முகூர்த்தமே வெச்சுக்கலாம்மா. நான் இன்னும் இரண்டு நாள்லே உங்களுக்குப் போன் பண்ணறேன்,'' என்றாள் தனலட்சுமி.

அதற்குள் ஆஷாவிடம் சற்று சிநேகமாகப் பேசும் நோக்கத்தோடு, ''நீ என்னை காலேஜில் பார்த் திருக்கலாமே. நான் உன்னைப் பார்த்திருக்கிறேன்,'' என்றாள் துர்கா.

''நானும் உங்களைப் பார்த்திருக்கேன்,'' என்ற ஒரே வாக்கியத்தோடு வேறே பக்கம் பார்த்தாள் ஆஷா. மேற்கொண்டு பேச்சைத் தொடர இஷ்டமில்லாத வளாக.

அதற்குள் ரேவதி வந்து விக்ரமிடம், ''கிளம்பலாமா?'' என்று கேட்க, எல்லோரும் கிளம்பினார்கள்.

போகும் போது விக்ரம் நடராஜைக் கூப்பிட்டு, தன் செல்லில் வைகை அணையில் எடுத்த படத்தைக் காண்பித்து, ''சீக்கிரம் தேதி வெச்சுடுவோம். அது வரைக்கும் கொஞ்சம் இந்த மாதிரி சுத்தாம இருந்தா நல்லாயிருக்கும்!'' என்று சொல்லிவிட்டுப் புறப்பட் டான்.

துர்காவுக்கும் அந்த போட்டோ கண்ணில் பட, 'இப்படியெல்லாம் நடந்து கொண்டால் எந்த அண்ண

னுக்குத்தான் கோபம் வராது?' என்று நினைத்துக் கொண்டாள்.

அவர்கள் போனபிறகு வீட்டில் அவர்கள் பற்றிப் பேச்சு நடந்தது. யாருக்கும் எந்த திருப்தியும் இல்லை. மாறாகப் பயமாகவே இருந்தது. நடராஜுக்கே கூடச் சற்று குழப்பமான மனநிலை தான். ஆனால், ஆஷாவின் மேல் இருந்த காதலில் ஏதும் வாய் திறக்கவில்லை.

''நம் காலம் எப்படியோ கழிந்து விடும். அந்தப் பொண்ணு நம்ம ராஜுவைச் சரியாப் பார்த்துக் கொண்டாலே போதும்!'' என்றாள் தனம்.

''அதேதான். நம்மை வயசுக்காகவோ, பெண்ணை இவங்க வீட்ல குடுக்கறோம்ங்கறதுக்காகவோ மதிக்காட்டா போறாங்க. அவங்க வீட்டு மாப்பிள்ளையை யாவது மதிக்கணும். என்ன நடக்குதோ நடக்கட்டும்!'' என்று சொல்லிவிட்டுப் போய்ப் படுத்து விட்டார் நாராயணசாமி.

நல்ல வேளையாக, அன்றிரவே ரேவதி துர்காவிற்கு போன் செய்தாள். ''காலையில் என் வீட்டுக்காரர் பேசின விதமும் சரியில்லை. ஆஷா நடந்து கொண்ட விதமும் சரியில்லை. நான் அவங்களுக்கு எடுத்துச் சொல்லிப் புரிய வைக்கிறேன். அம்மா, அப்பாவைக் கவலைப் படாமே இருக்கச் சொல்லுங்க,'' என்றாள்.

அதை அவள் சொன்னதும் நிஜமாகவே நாராயண சாமி தம்பதிக்கு ரொம்பவே சந்தோஷம்.

11

மறுநாள் ரேவதி தன் அப்பா, அம்மாவை வர வழைத்தாள். அவர்கள் வந்ததும் எல்லா விஷயத்தையும் இவள் சொல்ல, ''அப்படியும் பேசுவாங்களா பொண்ணை கொடுக்கப் போற இடத்திலே!'' என்று சொல்லிவிட்டு விக்ரமை உட்கார்த்தி வைத்துப் புத்தி சொன்னார்கள். ''ஒண்ணு. பொண்ணைக் குடுக்கக்கூடாது. இல்லே இப்படிப் பேசியிருக்கக்கூடாது!'' என்று கண்டித்தார் மாமா. இவர்கள் வீட்டுப் பெரியவர்கள் என்று நெருங்கிய சொந்தத்தில் யாரும் இல்லை. அதனால் அத்தை, மாமா வார்த்தையை விக்ரம் எப்போதும் தட்டமாட்டான். காது கொடுத்துக் கேட்பான்.

''சரி, மாமா! நாம எல்லாரும் இன்னொரு தடவை அவங்க வீட்டுக்குப் போய் நல்ல படியா பேசிட்டு வரு வோம்,'' என்ற விக்ரம், அதுக்கு முன்னாடி ஆஷா கிட்டே இன்னொரு தரம் கேட்டுடுவோம் என்று ஆஷாவைக் கூப்பிட்டான். வாய் திறக்காமல் வந்து நின்றாள் அவள்.

''இதோ பார் ஆஷா! நாங்க போய் நடராஜ் வீட்லே பேச லாம்னு பார்க்கறேன். நீ உன் தீர்மானத்தை மாத்திக்க ணும்னா இப்போகூட மாத்திக்கலாம். நான் சொல்றதைக் கொஞ்சம் பொறுமையாக் கேளு. அவங்க நிச்சயமா நம் மளை விட வசதி குறைவானவங்க தான். கொஞ்சம் பழங் காலத்து மனுஷங்களா இருப்பாங்களோனு தோணுது.''

''நான் கல்யாணம் பண்ணிக்கப் போறது நடராஜைத் தானே!''

''அப்படிச் சொல்லாதே ஆஷா. ஒரு பொண்ணு ஒருத்தனைக் கல்யாணம் பண்ணி அவங்க வீட்டுக்குப் போனா, அவங்க வீட்டு மனுஷங்க எல்லோரையும் தான் அனுசரித்துப் போகணும்!'' என்றார், அவள் அத்தையின் கணவர் நாவுக்கரசு.

''ஏன் உன் அண்ணி நம்ம வீட்டுக்கு வந்த நாளா நம்மளை அட்ஜஸ்ட் பண்ணிகிட்டுத்தானே போறா!'' என்றான் விக்ரம்.

''சொல்லும்மா. அந்தப் பையனுக்கு உத்தியோகம் இல்லையாமே?''

''சரியான படிப்பும் கிடையாது, மாமா! எல்லாத் தையும் திரும்ப யோசி, ஆஷா. அதுக்கப்புறமும் நீ அவனையே பண்ணிப்பேன்னு சொன்னா எனக்கு வேறே வழியில்லை!'' என்றான் விக்ரம்.

''நான் ரொம்பத் தெளிவா, நிச்சயமாச் சொல்றேன். எனக்குக் கல்யாணம்னா அது நடராஜோடதான். நீ காத் திருக்கச் சொன்னியானா, காத்திருக்கேன். ஆனா, நீ நிச் சயமா வேறே மாப்பிள்ளை பார்க்காதே!'' என்றாள் ஆஷா.

''கல்யாணம் பண்ணறதுன்னு தீர்மானிச்சுட்டா, காத்துகிட்டு இருக்கறதுலே என்ன பிரயோசனம்? நான் உன்னைப் பெரிய படிப்பு படிச்சவனா, பெரிய உத்தி யோகம் பார்க்கறவனா பார்த்துக் கொடுக்கணும்னு நினைச்சேன். உன் அதிர்ஷ்டம் இப்படி இருந்தா நான் என்ன பண்ண முடியும்?'' என்றான் விக்ரம்.

யாரும் வாயைத் திறக்கவில்லை. போகும் முன் அத்தை, ''வெள்ளிக் கிழமை நாள் நல்லாயிருக்கப்பா, நாம முறைப்படி போய்த் தட்டு மாத்திகிட்டு வந்துடு வோம்,'' என்றாள்.

இவர்கள் போன் பண்ணிவிட்டு நடராஜ் வீட்டுக்குப் போனார்கள். நிறைய வெற்றிலை, பாக்கு பழங்கள் எல்லாம் வாங்கிக் கொண்டு போயிருந்தார்கள். அவர்களும் எல்லாம் வாங்கி வைத்துக் கொண்டு தயாராக இருந்தார்கள். அன்று ஆஷாவைக் கூட்டிப் போகவில்லை.

போனதும் அத்தை, மாமாவை அறிமுகப்படுத்தி வைத்த விக்ரம், நாராயணசாமியிடம் மெதுவாகப் போய் அவர் கைகளைப் பிடித்துக் கொண்டு, ''ஸார், நான் அன்னிக்கு வந்த போது அப்போது தான் இந்த விஷயம் தெரிஞ்சதுனாலே டென்ஷனா இருந்தேன். அதுதான் கொஞ்சம் வேகமாப் பேசிட்டேன். எதையும் மனசில வெச்சுக்காதீங்க!'' என்றான்.

''பரவாயில்லை தம்பி! இது யாருக்கும் அதிர்ச்சியும், டென்ஷனும் ஏற்படுத்தற விஷயம் தான். நாங்க அதை அப்பவே மறந்துட்டோம்!'' என்றார்.

''எங்க தங்கையைத் தாய், தகப்பனில்லாத பெண் ணாச்சேன்னு கொஞ்சம் செல்லமா வளர்த்துட்டோம். நான் நல்லா நடந்துக்கச் சொல்லி அவளுக்குப் புத்தி சொல்றேன். நீங்களும் கொஞ்சம் சின்னவ, குழந்தை மாதிரி இருக்காங்கறதுனாலே, மெதுவாகச் சொல்லிப் புரிய வெச்சுப் பாத்துக்கோங்க!'' என்றான்.

''கவலைப் படாதீங்க தம்பி! நாங்களும் ஒரு பொண்ணை வெச்சிட்டுருக்கோம். நல்லாப் பாத்துக்கு வோம். ஒரு பிரச்னையும் வராது!'' என்றார் நாராயண சாமி.

கிட்டத்தட்ட இதே மாதிரி தான் விக்ரமின் அத்தையும் ரேவதியும் தனலட்சுமி, துர்கா இருவரிடமும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அதன் பின் இருவீட்டாரும் தாம்பூலத்தட்டை மாற்றிக் கொண்டனர். அன்றைய விசேஷத்திற்கு ஆதித்யாவின் பெற்றோரை அழைத்திருந்தார் நாராயணசாமி.

அதன் பிறகு ரேவதி தனத்திடம், ''பொண்ணுக்கு நாங்க என்ன செய்யணும்னு சொல்லுங்கம்மா!'' என்றாள்.

''அதெல்லாம் உங்களுக்கு என்ன ஆசையோ, என்ன வழக்கமோ, அதைச் செய்யுங்கோம்மா. நாங்களும் எல்லாம் எங்க வீட்டு வழக்கப்படி எல்லாம் குறைவில் லாமல் செய்வோம். எப்ப வேணுமோ போன்ல கூப் பிடுங்க. கலந்து பேசி மற்ற எல்லாத்தையும் செஞ்சுட லாம்,'' என்றாள் தனலட்சுமி.

சிற்றுண்டி அருந்திவிட்டு மகிழ்ச்சியாக வீடு திரும்பி னர் ஆஷாவின் குடும்பத்தினர்.

பிறகென்ன? கை நிறையப் பணத்தை வைத்துக் கொண்டால் கல்யாண வேலைகள் நடப்பதற்குக் கேட்பானேன்?

ஆஷாவும் நடராஜும் அதிகம் சந்திக்கவில்லை. இடைப்பட்ட காலத்தில் போனில் தான் பேசிக்

கொண்டார்கள். புடவை நகையெல்லாம் வாங்கத் தனலட்சுமியும் துர்காவும் ஆஷாவையும் கூட்டிப்போய் அவள் விருப்பப்படியே எடுத்தார்கள்.

* * *

அம்மா அப்பாவிடம் சொல்லிவிட்டு, ராகவன் மாமாவையும் கலந்து ஆலோசித்துவிட்டு, அந்த வாரமே ஆதித்யாவை வீட்டுக்கு வரச் சொல்லி அழைத்தாள் துர்கா.

''அம்மா, இன்னிக்கு ஆதி வரான்மா. ஏதாவது நல்ல டிபன் பண்ணச் சொல்லும்மா,'' என்றாள் துர்கா.

சரி. ஆனா, நீ இனிமே ஆதித்யாவை அவன் இவன்னு கூப்பிடறதை நிறுத்து. மாத்திக்கணும்மா. இல்லாட்டா பாக்கிப் பேரும் அப்படிக் கூப்பிடுவாங்க. நமக்குப் பிடிக்குமா, சொல்லு?'' என்றாள் தனலக்ஷ்மி.

''நிஜம்தாம்மா நீ சொல்றது. நானும் நினைச்சுண்டு தாம்மா இருக்கேன். மாத்திக்கறேன்மா!'' என்றாள் துர்கா.

12

''என்ன துர்கா மேடம்! இன்னிக்கு நாங்கள்லாம் ஊர்லேருந்து வரவும் நீ கூப்பிடவும் சரியாக இருந்தது. உடனே உன் சர்வீஸுக்கு நான் ஆஜர்!'' என்றான் ஆதித்யா. இருவருமே டிபன் சாப்பிட்டுவிட்டு மாடி பால்கனியில் உட்கார்ந்தார்கள்.

''அப்பா, அம்மாவும் வந்திருக்காங்களா, ஆதி?'' என்று கேட்டாள் துர்கா.

''ஆமாம்மா. அப்பாவுக்கு இங்கே கொஞ்சம் வேலை யிருக்கு. அது தான் எங்கூடவே வந்துட்டார். அது சரி, நீ எதுக்கு கூப்பிட்டே?''

''ஒண்ணுமில்லே ஆதி, உங்ககிட்டே கொஞ்சம் பேசணும்.''

விசிலடித்தான் ஆதித்யா. ''ஆமா, இது என்ன புது மரியாதை.''

''இத்தனை நாள் நாம வெறும் சிநேகிதர்கள்தான். இனிமே அப்படியா?'' என்றாள்.

''அப்படி இல்லைன்னா, பின்னே எப்படி? கொஞ்சம் சொல்லேன், பார்க்கலாம்.''

''அதெல்லாம் சொல்ல முடியாது.''

''சரி, எதுக்குக் கூப்பிட்டே, சொல்லு. நம்ம கல்யாணத்தையும் நடராஜ் கல்யாணத்தோட சேர்த்து வெச்சுக்கலாமா, அப்பாகிட்டே சொல்லி?''

''சாரி ஆதி, நீங்க ரொம்ப ஆர்வமா இருக்கீங்க. நான் சரி சொல்ல முடியாமே இருக்கேன்.''

''இரு இரு! என்ன சொல்றே, துர்கா? என்னைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டியா?'' நிஜமாகவே அதிர்ச்சி அடைந்து விட்டான் ஆதித்யா.

''ஆதி, என்ன பேச்சு இது? விளையாட்டுக்குக்கூட அப்படியெல்லாம் சொல்லாதீங்க!'' என்றாள் துர்கா. அதற்குள் அவள் கண்ணில் நீர் கட்டிவிட்டது.

''என்னம்மா இது? நீ இத்தனை தொட்டாற்சிணுங் கின்னு எனக்குத் தெரியாதே.''

''ஆமா. இந்த ஒரு விஷயத்தில நான் அப்படித்தான் ஆயிட்டு வரேன்!'' என்றாள் துர்கா. சற்று நேரம் மௌன மாக இருந்த அவளைப் பார்த்து ஆதி, ''என்ன சங்கடம்? சொல்லு கண்ணம்மா,'' என்றான்.

அவன் அப்படி அழைத்ததால் ஏற்பட்ட உள்ளக் கிளர்ச்சியைவிட அவள் மனதில் கவலை தான் பெரிதாக இருந்தது.

''ஆதி, உங்ககிட்டே எப்படிச் சொல்றது? நீங்க இதை எப்படி எடுத்துப்பீங்கன்னு தெரியல்லே. நான் சொல்றதைக் கேட்டா உங்களுக்குக் கோபம் வரலாம்.''

''சொல்லு துர்கா. உன் மேல் நான் கோபப்படு வேனா? நீ எது சொன்னாலும் அதுக்குக் காரணம் இருக்கும். கோபப்பட மாட்டேன்.சொல்லு.''

''நடராஜ் எப்பவுமே எந்தப் பொறுப்பையும் எடுத் துக்க மாட்டான். இப்போ கல்யாணம் வேறே ஆகப் போறது!'' என்று தயங்கினாள் துர்கா.

''அதனாலே?''

''இந்த வருஷம் ஸ்கூல் ரிசல்ட்டைப் பார்த்தீங்கள்லே! நிறையப்பேர் ஒண்ணா டிசி கேக்கறாங்க. அப்பா அதுல ரொம்பவே அப்செட்டாயிட்டார். மேற்கொண்டு கடையிலேயும் பிரச்னையாம். காரணம் முன்னே மாதிரி அப்பா நேரிடையா அந்த இரண்டு இடத்திலேயும் இருந்து கவனிக்க முடியாமே போனது தான். அதுனாலே ஸ்கூல்ல பணம் போட்டுருக்கிற அப்பாவின் சிநேகி தர்கள் இரண்டு பேரும் ஸ்கூலை மூடிடலாம்ங்கறாங்க.

அப்பா ரொம்ப ஆடிப் போயிருக்காரு. அதனால நான் ஒரு வருஷம் இந்த ஸ்கூல், கடை இரண்டையும் ஒரு சவாலா எடுத்துகிட்டு என்னால என்ன செய்ய முடியும்னு பார்க்கறேன். நீங்க என்ன சொல்றீங்க?'' என்று கேட்டாள் துர்கா.

''நம்ம கல்யாணத்தைக் கொஞ்ச நாள் கழிச்சுத்தான் நடத்த வேண்டியிருக்கும்கறே. அதுதானே! இப்படி யோசியேன். கல்யாணம் பண்ணிண்டா இந்தச் சவாலை நிறைவேற்ற முடியாதா?''

மௌனமாக இருந்தாள் துர்கா.

''முடியாதுன்னு நினைக்கிறியா, துர்கா? ஏதானாலும் எங்கிட்டே சொல்லும்மா. என்ன தயக்கம்?''

''அப்படித்தான் நினைக்கிறேன். யோசித்துப் பாருங்களேன். இப்போ போய் நீங்க உங்க அப்பா. அம்மாவை மதுரைக்கு வரச் சொல்ல முடியுமா? அல்லது நான் அங்கே போயிட்டா, இங்கே இந்தப் பொறுப்புகள் எல்லாத்தையும் யார் ஏத்துப்பாங்க? நான் அங்கே வந்து உங்க அப்பா, அம்மாவைப் பாத்துக்கறதுதான் நியாயம். இரண்டு இடத்திலுமே என் பொறுப்பை நிறைவேத்த முடியாமே நான் என்ன செய்வேன்? சொல்லுங்க ஆதி,'' என்றாள்.

''உன்னால் பள்ளிக்கூடப் பிரச்னையைச் சமாளிக்க முடியும்னு நினைக்கிறியா, துர்கா?'' என்றான். அவள் கைகளைத் தன் கைகளில் எடுத்துக் கொண்டு.

''ரொம்ப கஷ்டம். முதல்ல துணைக்கு யாரும் கிடையாது. அதிலும் நான் பெண்ணுங்கறதுனால சில

நிர்பந்தங்கள் உண்டு. அதுவும் தெரியாமே இல்லை. நடராஜ் இதுக்கெல்லாம் ஒத்து வரமாட்டான். வித்துட லாம்பான். அப்பா அந்த வார்த்தையைக் கேட்டாலே மனமொடிஞ்சு போயிடறார். வர பொண்ணு அனு சரணையா இருப்பான்னு நினைச்சாக்கூட. அவளைக் கூட வெச்சுக்கிட்டு நான் செய்ய நினைக்கறதைச் செய்வேன். ஆனா ஆஷா அப்படி இணக்கமான ஒரு பொண்ணாத் தெரியல்லே. எல்லாம் ஒரே குழப்பமா இருக்குப்பா!'' என்றாள் துர்கா.

''கொஞ்சம் யோசிச்சா எந்தப் பிரச்சனைக்கும் தீர்வு கிடைக்கும். தீர்வில்லாத பிரச்னைனு ஒண்ணு கிடை யவே கிடையாது. ஒரு நாள், இரண்டு நாள் ஆறப்போடு, உன் மனதிலிருக்கும் கேள்விகளையெல்லாம். தானே விடை கிடைக்கும்,'' என்றவன், ''சரி, இப்போ நான் கிளம்பறேன்,'' என்று எழுந்தான்.

கீழே கார்வரைக்கும் அப்பா, அம்மாவிடம் விடை பெற்ற அவனைத் தொடர்ந்தாள் துர்கா.

காரில் ஏறிவிட்டு, ''கவலைப்படாதே. நான் போனில் உன்னைக் கூப்பிடுகிறேன்,'' என்று சொல்லிக் காரை நகர்த்தியவன், ''துர்கா!'' என்று சற்றுப் பெரிய குரலில் அழைத்தவன் காரை நிறுத்தி விட்டான்.

''என்ன ஆதி? எனி பிராப்ளம்?'' என்று கேட்டாள் துர்கா.

''இல்லை துர்கா, பிராப்ளத்திற்குத் தீர்வு!'' என்றபடி காரைவிட்டு இறங்கி உள்ளே வந்த ஆதித்யா, ''வா! மாடிக்குப் போகலாம்,'' என்று தான் முன்னே ஏறினான்.

பின்னாலேயே போன துர்கா, ''என்ன ஆச்சு, சொல் லுங்களேன்,'' என்றாள்.

''உட்கார், துர்கா! இப்போ நான் வேறே வேலைக்குப் போற எண்ணத்தில் இருக்கேன். சில கம்பெனிகளில் ஒவ்வொரு பிராஜக்டாகக் கொடுத்துச் செய்யும்படி சொல்வதுண்டு. அப்படிப்பட்ட ஒரு பிராஜக்ட்டை எடுத்து நாம சௌகரியப்பட்ட நேரத்தில் செய்துக்கலாம். நான் இங்கேயே இருந்து உனக்கு ஸ்கூலிலும் கடையிலும் நிர்வாகத்தில் உதவி செய்துகொண்டே அந்த பிராஜக்ட்டைச் செய்யலாம். சென்னையிலும் மதுரையிலும்தானே, அப்பப்ப அப்பா, அம்மாவைப் பார்த்துக்கலாம்,'' என்றான்.

''என்ன ஆதி? உங்க அப்பா அம்மா சம்மதிக்கணும், இல்லையா? முதல்ல அவங்க சம்மதம் கிடைச்சப்புறம் தான் இதைப் பத்தி யோசிக்கணும்,'' என்றாள் துர்கா.

''நிச்சயமா துர்கா! அவங்க சம்மதம் இல்லாமே நான் எதையும் யோசிக்கக்கூட மாட்டேன். வீட்டுக்குப் போய் அவங்களைக் கேட்டு யோசிச்சுட்டு சொல் றேன். இது திடீர்னு தோணினதால் தான் திரும்பி வந்தேன். இந்த ஐடியா உனக்குப் பிடிச்சிருக்கா, சொல்லு?''

''நீங்க என்னோட இருந்தா எனக்கு யானை பலம். என்னால எத்தனையோ சாதிக்க முடியும். ஆனா இது ஆன்ட்டி, அங்கிள் கைலதான் இருக்கு. கேட்டுப் பாருங்க,'' என்று சொல்லி அவனை வழியனுப்பினாள். இந்த யோசனை பலிக்கணுமே என்று மனதில்

அம்பாளைப் பிரார்த்தித்துக் கொண்டாள். அன்று இரவே ஆதித்யாவின் அப்பா துர்காவுக்குப் போன் செய்தார்.

''நமஸ்தே, அங்கிள்! நல்லா இருக்கீங்களா? ஆன்ட்டி நல்லா இருக்காங்களா?'' என்று விசாரித்தாள்.

''எல்லோரும் நல்லா இருக்கோம்மா. ஆதித்யா வந்து விவரமெல்லாம் சொன்னான். எங்ககிட்டே இதைக் கேட்க உனக்கு என்னம்மா தயக்கம்? உன்னைத் தெரியாதா, இல்லை... உங்கப்பாவைத்தான் தெரியாதா? நீ நாளை காலைல இங்கே வாம்மா. நாம இதைப்பத்தி நேரே பேசலாம்,'' என்றார்.

''தேங்க்ஸ் அங்கிள்! நிச்சயமா வரேன்,'' என்றாள் துர்கா.

அடுத்த நாள் காலையில் துர்கா போனதுமே, அன்பாகக் கூப்பிட்டு, அருகில் உட்கார்த்தி வைத்துக் கொண்டனர் ஆதியின் அப்பாவும் அம்மாவும்.

''அப்பா உடம்பு எப்படியம்மா இருக்கு? வாம்மா, டிபன் சாப்பிட்டுக் கொண்டே பேசலாம்,'' என்று அழைத்தாள் ஆதியின் அம்மா.

''நான் டிபன் சாப்பிட்டுட்டேன், ஆன்ட்டி, அப்பா உடம்பு பரவாயில்லை! கவலைதான் அவர் உடம்புக்குக் காரணம். வேறு ஒன்றுமேயில்லை.''

''என்னம்மா நீ, இங்கே வரச்சே சாப்ட்டுட்டா வருவே? உனக்குப் பிடிக்குமேன்னு இடியாப்பம், தேங்காய்ப் பால் பண்ணச் சொன்னேன். சரி, போகும் முன்னே சாப்பிடுவியாம்.''

அதற்குள் ஆதித்யா குளித்துத் தயாராகி வந்து விட்டான்.'' என்ன மேடம், டிஸ்கஷனுக்குத் தயாரா?''

கேட்டுக் கொண்டிருந்த அவன் அப்பா, ''இங்கே வாம்மா! நான் பெரியவனா சில யோசனைகள் சொல்ல லாமில்லையா?'' என்றார்.

''என்ன அங்கிள், இப்படிக் கேக்கறீங்க? எனக்கு நல்லது, பொல்லாதது சொல்ல உங்களுக்கு இல்லாத உரிமையா? இல்லே, உங்களுக்கு இல்லாத அக் கறையா?''

''இதோ பாரம்மா! துணிக்கடை கொஞ்ச நாளைக்கு ஓடிக்கிட்டுருக்கிறபடி ஓடட்டும். அதுக்கு உடனடியா கவனம் தேவையில்லை. ஸ்கூலைத்தான் கவனிக்கணும் உடனடியா. வேங்கடராஜுவும், நரசிம்மமும் ஸ்கூலை மூடிடலாம்னு சொல்றாங்களாமே! நிஜமாம்மா?''

''ஆமாம். அப்படி ஒரு வார்த்தையைச் சொன்னா அப்பா தாங்கவே மாட்டார். அதுதான் எனக்குக் கவலை யாக இருக்கு.''

''கவலைப்படாதேம்மா! ஆதி எந்தக் கம்பெனியி லாவது வீட்டிலிருந்து செய்யற மாதிரி ஒரு ப்ராஜக்ட்டை எடுத்துக்கட்டும். நாங்க இரண்டு பேரும் நிறைய மதுரையில இருக்கற மாதிரி பார்த்துக்கறோம். அப்பா கிட்டே சொல்லிடு. மத்த இரண்டு பாகஸ்தர்கிட்டேயும் சொல்லி ஒரு வருஷம் டைம் கேளு. ஆதி மட்டு மில்லை, நானும் உனக்குக் கணக்கு வழக்கிலும் பள்ளிக்கூடத்தைச் சீர்திருத்தறதிலேயும் உதவி பண்ண றேன்.''

"தேங்க்யூ, அங்கிள்!" என்று அவர் கைகளைப் பிடித்துக் கொண்ட துர்கா, "எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியல்லே, அங்கிள்!" என்றாள்.

"அது இருக்கட்டும். ஸ்கூல்ல என்ன பிரச்சனைங் கறதையும், அதை எப்படிச் சரி பண்ணலாம்ங்கறதையும் பத்தி யோசிச்சியா?" என்று கேட்டான் ஆதித்யா.

"அதுக்கெல்லாம்தான் உன்... சாரி, உங்க யோசனை இருந்தா நல்லா இருக்கும்," என்றாள் துர்கா.

"அது சரி, அவனை 'நீங்க போங்க'ன்னு கூப்பிட ஆரம்பிச்சுட்டே. எங்களுக்கு எப்போ அத்தை, மாமா பட்டம்?" என்று அவன் அம்மா கேட்க, "இப்பவே மாத் திக்கறேன், அத்தை," என்றாள் வெட்கத்துடன்.

"கல்யாணம்தான் இப்போ இல்லைன்னுட்டே. எங்க பையனுக்கு எப்படியோ, எனக்கு ரொம்ப ஏமாற்றம் தான்!" என்றாள் பங்கஜா. ஆதியின் அம்மா.

"பாவம்மா, அதை விடு," என்றான் ஆதி.

"அதுக்குள்ளே பரிஞ்சிகிட்டு வரதைப் பார்த்தீங் களா?"

"சரி, இரண்டு பேரும் வேலையை இன்னிக்கே ஆரம்பிங்க. ஆதித்யாவை நிர்வாக மேலாளர்னு ஒரு பதவியிலே உட்கார வெச்சுடும்மா. பல சங்கடங்களை அது தவிர்க்கும்," என்றார் அப்பா.

"நிஜம்தான் மாமா. நாளைக்கு ராத்திரி வேங்கடராஜு, நரசிம்மம் இரண்டு பேரையுமே கூப்பிட்டு அப்பாவை விஷயத்தைச் சொல்லச் சொல்லலாம். நீங்க

அத்தைகூட வந்துடுங்க. ராத்திரி எல்லாருமா சாப்பிட்டுட்டு எல்லாத்தையும் பேசிட்டு வரலாம். என்ன சொல்றீங்க மாமா?''

''அப்ப, ஆதி வேண்டாங்கறே?'' என்று சொல்லிச் சிரித்தார்.

''அவர்தான் மெயின். அவரில்லாம எப்படி?'' என்றாள் துர்கா வெட்கத்துடன்.

''சரி, இரண்டு பேருமா உட்கார்ந்து, பிரச்சனை என்ன, அதற்குத் தீர்வு எப்படின்னு ஒரு லிஸ்ட் தயார் பண்ணுங்க,'' என்றார் ஆதியின் அப்பா.

சரியென்று இருவரும் கீழ்த்தளத்திற்குப் போய் ஆதியின் அறையில் அவனது லாப்டாப்பைத் திறந்து வைத்துக் கொண்டு உட்கார்ந்தனர்.

''முதல் பிரச்னை நம்ம கல்யாணம் எப்போ?'' என்று சிரிக்காமல் கேட்டான் ஆதி.

''உஷ்! பி சீரியஸ், ஆதி!'' என்றாள் துர்கா.

''ஸாரி, முதலாளியம்மா! இப்ப நீ சொல்லு,'' என்றான்.

''முதல் பிரச்னை. இந்த தரம் ஸ்டூடென்ட்ஸ் வாங்கியிருக்கிற மார்க்ஸ் 50% தான். அதுனாலேதான் பேரன்ட்ஸெல்லாம் வந்து டி.சி. கேக்கறாங்க. வேறே ஸ்கூல்ல சேர்க்கறதுக்கு.''

''அப்படியா? அது மாதிரி டி.சி. கேக்கறவங்க எத்தனை பேர் இருப்பாங்க?''

''ஒரு 20 அல்லது 25 இருக்கும்.''

''ஓ! நிஜமாகவே அதிகம்தான். என்ன பண்ணலாம்?''

''எப்படியும் எஸ். எஸ். எல். சி. பரிட்சை எழுதின வங்களுக்கு இம்ப்ரூவ்மெண்ட் எழுத சான்ஸ் உண்டு. அதுக்குள்ள அவங்களுக்கு ஸ்பெஷல் கிளாஸ் வெச்சு மார்க் வாங்க வெச்சுடலாம்.''

''பண்ணலாம். ஆனா, ஸ்கூலோட பொருளாதாரம் வாத்தியார்களுக்குச் சம்பளம் குடுக்க இடம் குடுக்குமா?''

''கொஞ்சம் கஷ்டமானாலும் பண்ணித்தானே ஆகணும்,'' என்றாள்.

''அதுக்கு முன்னாடி, இன்னும் இரண்டு நாள்ல எல்லா பேரண்ட்ஸையும் வரச் சொல்லு. ஒரு தரம் நேர்ல அவங்களைப் பார்த்துப் பேசிட்டு, அதுக்கப்புறம் இந்த ஸ்பெஷல் கிளாஸ் திட்டத்தை வெச்சுக்கலாம்.''

''நீங்க சொல்றது சரி ஆதி. அப்படியே பண்ணிட லாம்,'' என்றாள் துர்கா.

அதன் பிறகு அடுத்தடுத்து என்ன பிரச்சனைகள் என்பதை இருவருமாகப் பட்டியலிட்டனர். சில விஷயங்களுக்குத் தீர்வு உடனே தெரிந்தது. சிலவற்றை ஆறப் போடலாம் என்று விட்டுவிட்டனர்.

13

நாராயணசாமியிடம் விவரம் சொன்னதும், அவருக்கு ரொம்ப சந்தோஷம்தான். மறுநாள் இரு பாகஸ்தர்களையும் வரச் சொல்லி அழைத்தார். ஆதியின் அப்பாவிற்கு நன்றி தெரிவித்தார். தனலட்சுமிக்குக்

கல்யாணத்தை இன்னும் ஒரு வருஷம் தள்ளிப் போடுகிறார்களே என்று வருத்தம்தான். வேறுவழி யில்லை என்று மனசைத் தேற்றிக் கொண்டாள்.

நடராஜிடமும் ஒரு வார்த்தை சொன்னார்கள். அவன் பெரிதாக அக்கறை காட்டவில்லை. அது இவர்கள் எதிர்பார்த்ததுதானே!

''ஆஷாவையும் அவள் அண்ணா, அண்ணியையும் கூப்பிடப்போறமா?'' என்று கேட்டாள்.

''வேண்டாம்மா. இது நம்ம பிஸினஸ் பிரச்னைகளைப் பத்தி யோசிக்க. அதுக்குப் போய் சம்பந்திகளை எதுக்குக் கூப்பிடறது?'' என்று நாரயணசாமி நல்ல விதமாகச் சொல்லவும் சரி என்று விட்டுவிட்டனர்.

மாலை எல்லாம் சித்ரான்னங்கள். இன்னும் சூடாக சப்பாத்தி குருமா என்று தயார் செய்திருந்தார்கள். எல்லாம் செய்வதற்கு உதவி செய்துவிட்டு, துர்கா தன்னை எளிமையாக அலங்கரித்துக் கொண்டு ஹாலுக்கு வந்தாள். அவரவர்களே எடுத்துக் கொண்டு நாற்காலிகளுக்கு வருகிற மாதிரி அடுக்கியிருந்தார்கள்.

எல்லோரும் வந்ததும் சற்று நேரம் பொதுப் படையாகப் பேசிக் கொண்டிருந்து விட்டுச் சாப்பிட ஆரம்பித்தார்கள். சமையல்காரி சுவர்ணா எல் லோருக்கும் உதவி செய்தாள்.

அதன் பிறகு எல்லோருமாக உட்கார, துர்கா ஆரம் பித்தாள்.

''நான் உங்ககிட்டேயேல்லாம் ஒரு முக்கியமான விஷயம் சொல்லணும்னுதான் அழைச்சிருந்தேன். என்

அழைப்பை மதித்து நீங்க எல்லோரும் வந்ததற்கு மிக்க நன்றி!'' என்றாள்.

உடனே நரசிம்மம், ''என்னம்மா, நீ! சின்ன வயசி லேருந்து உன்னைப் பார்க்கிறோம். நீ பொறுப்பான பெண். யாரோட நேரத்தையும் வீணடிக்க மாட்டே. அந்த நம்பிக்கையில் தான் நாங்க வந்திருக்கோம். நீ சொல்ல வந்ததைச் சொல்லும்மா,'' என்றார்.

அதற்குள் நாராயணசாமி, ''நான் முதல்ல ஒரு சந்தோஷ சமாசாரம் சொல்லிடறேன். என் பிள்ளை நடராஜுக்குக் கல்யாணம் நிச்சயமாயிருக்கு. பிஸினஸ் மேன் விக்ரமோட தங்கை தான். அந்தக் கல்யாணத்துக்கு அடுத்த மாசமே நாள் குறிச்சிருக்கோம்.

''அப்புறம் துர்காவை இந்தப் பிள்ளை ஆதித்யாவுக்குக் குடுக்கப்போறோம். ஆதித்யா அஹமதாபாத் ஐ. ஐ. எம்.ல பிஸினஸ் மேனேஜ்மெண்ட் படிச்சவர். இவங்கதான் அவரோட அப்பா, அம்மா!'' என்றார்.

அவர் நீளமாகப் பேசிச் சிரமப்படுவதைப் பார்த்த ஆதியின் அப்பா, ''இவங்க கல்யாணத்தை ஒரு வருஷம் தள்ளித்தான் வெச்சுக்கணும்னு துர்கா எங்களைக் கேட்டுகிட்டா. காரணம், அதற்குள் அவள் அங்கயற் கண்ணி உயர்நிலைப் பள்ளியை எப்படியும் மேம் படுத்திக் காண்பிக்கறேன்னு சொல்லியிருக்கா. அவ ளுக்கு என் பிள்ளை அந்த வேலையில் ஒத்தாசையாக இருப்பான். அதுக்காக அவனுக்கு 'அட்மினிஸ்ட்ரேடிவ் ஆபீஸர்'ங்கற ஒரு பதவி குடுங்கோ. அது சம்பளத்

துக்காக இல்லை. 'இவன் ஏன் தலையிடறான்?'னு யாரும் கேட்காம இருக்கறதுக்குத்தான்,'' என்றார்.

துர்கா தொடர்ந்தாள் ''அங்கிள்! நீங்க இரண்டு பேரும் ஸ்கூலைப் பத்தி எதிர்மறையா எதுவும் நினைக்காம நான் ஜெயிக்கணும்னு ஆசிர்வாதம் பண்ணணும். நான் துர்காஷ்டமியிலே பிறந்தேனாம். அந்தப் பண்டிகை ஒரு மாதத்தில் வருது. அடுத்த துர்காஷ்டமிக்குள்ளே நான் வெற்றி பெறணும்னு ஒரு உறுதி எடுத்துக்கிட்டு இந்த வேலைல இறங்கப்போறேன். நீங்க இரண்டு பேரும் அதுவரை எனக்காகக் கொஞ்சம் பொறுமை காப்பீங்களா, அங்கிள், ப்ளீஸ்?!'' என்று கேட்டாள். கூடவே, ''எங்கப்பாவாலே இந்த ஸ்கூலை மூடறதுங்கறதையெல்லாம் நினைச்சுக் கூடப் பார்க்க முடியாது. தாங்க மாட்டார். அங்கிள்! இத்தனை நாளைய உங்க சிநேகிதத்துக்காக என்னுடைய இந்த வேண்டுகோளை ஏத்துப்பீங்களா?'' என்று கண்களில் நீர் மல்கக் கை கூப்பினாள்.

அத்தனை உணர்ச்சிபூர்வமாக வேண்டிக் கொள்ளும் அந்தப் பெண்ணிடம் அவர்களால் வேறு என்ன செய்ய முடியும்?

''அம்மா துர்கா! உன்னை எங்களுக்குச் சின்ன வயதிலேருந்து தெரியும்மா. நீ ரொம்ப பொறுப்பான பொண்ணு. ஒரு நாளும் அர்த்தமில்லாத பேச்சு பேச மாட்டே. அதனாலே, நீ ஸ்கூல எடுத்து ஒரு வருஷம் நடத்திப் பார்க்கலாம்னுதான் எனக்குத் தோணுது. உன்னால இந்தப் பிரச்னைக்கு ஒரு தீர்வு காண

முடியும்னு நீ நம்பினா, தாராளமாக நடத்து. நாங்க குறுக்கே வர மாட்டோம். உன் பேர்ல எங்களுக்கு நம்பிக்கை இருக்கும்மா!'' என்றார் நரசிம்மம். சொல்லி விட்டு அவர் வேங்கடராஜுவைப் பார்க்க, ''ஆமாம், துர்கா! நீ எடுத்து நடத்து. நாங்க எங்களால ஆன உதவியைச் செய்யறோம்,'' என்றார்.

எல்லோரும் கை தட்டினார்கள். ''தேங்க்ஸ் அங்கிள், ரொம்ப ரொம்ப தேங்க்ஸ்!'' என்றாள் துர்கா.

''எப்போலேருந்து வேலையை ஆரம்பிக்கறோம். துர்கா?'' என்று கேட்டான் ஆதி.

''நாளைக்கே!'' என்றாள் துர்கா. ''முதல்ல எல்லா பேரண்ட்ஸ்களையும் கூப்பிட்டுப் பேசலாம்.''

உடனே ஆதியின் அப்பா, ''மொதல்ல உங்க ஸ்கூல்ல இருக்கிற டீச்சர்ஸைக் கூப்பிட்டு வெச்சுப் பேசிடும்மா. அப்புறமா பேரண்ட்ஸைக் கூப்பிடலாம்,'' என்றார்.

''நிஜம்தான் மாமா. அப்படியே செய்யறேன்,'' என்றாள் துர்கா. சற்று நேர மௌனத்துக்குப் பின், ''நான் ரொம்ப குடுத்துவெச்சுருக்கேன், மாமா, உங்க வீட்டிற்கு வரதுக்கு,'' என்றாள்.

''என்னம்மா. நீ என்ன, நம்ம குடும்பமே குடுத்துத் தான் வெச்சுருக்கணும், இப்படி ஒரு சம்பந்தம் கிடைக்க!'' என்றார் நாராயணசாமி.

''என்ன நீங்க, இப்படியெல்லாம் பேசிகிட்டு, அவ எங்க மருமகளாகப் போறா. அவ பிரச்னையெல்லாம்

எங்க பிரச்னை இல்லையா? சரி, நாங்க புறப்படறோம்,'' என்று சொல்லிக் கிளம்பி விட்டார்கள்.

அடுத்த அரை மணி நேரம் இருக்கும். துர்காவின் செல் போன் அடித்தது.

''சொல்லுங்க, டியர்,'' என்றாள்.

''என்ன பண்ணறது. இன்னும் ஒரு வருஷம் சொல்லிக்கிட்டே இருக்க வேண்டியதுதான். வேறே ஒண்ணும் செய்யத்தான் முடியாதே!'' என்றான்.

''நிஜம்தான். உங்களுக்குக் கஷ்டமாகத்தான் இருக்கும். ஒத்துக்கறேன்.''

''ஏன், உனக்குக் கஷ்டமா இல்லையா டார்லிங்?''

''போங்க ஆதி! எனக்குக் கஷ்டமா, இல்லையான்னு நான் சொல்லித்தான் தெரிஞ்சுக்கணுமா? இன்னிக்கு நீங்க ஜீன்ஸ்லயும், ரெட் டீ ஷர்ட்லேயும் ரொம்ப நல்லா இருந்தீங்க.''

''நானும் அதைச் சொல்லத்தான் போன் பண்ணினேன்.''

''எதை? நீங்க எப்படி இருந்தீங்கன்னா?''

''ஏய், வாலு! நீ எப்படி இருந்தே, தெரியுமா? அந்தக் க்ரீம் கலர்ல வயலட் பார்டர் புடவையும், அதிலிருந்த ஜரிகைக் கோடும். உன் வயலெட் டிஷ்யூ பிளவுஸும் பிரமாதமா இருந்தது உனக்கு.''

''ஒரு பொண்ணு கண்ல பட்டா, இப்படியெல்லாமா கவனிப்பீங்க?''

''எல்லாப் பொண்களையும் பார்ப்பேனா? பார்த்தாத் தான் உங்கிட்டே சொல்லுவேனா?''

''நான் போனை வைக்கறேன்.''

''சும்மா உன்னைச் சீண்டறேன்டா! தேவதை மாதிரி இருந்தியா, ஒரே கிக்! அங்கே சொல்ல முடியல்லே.''

''சரி சரி! போனை வெச்சுட்டு தூங்கற வழியைப் பாருங்க. காலைல ஸ்கூலுக்குப் போகணும்.''

''சரி, மம்மி.''

''என்னது மம்மியா?''

''பின்னே, தூங்கு, காலைல ஸ்கூலுக்குப் போக ணும்னு சொன்னா கரெக்டா பதில் சொன்னேன். சரி, தூங்க முயற்சி பண்ணறேன். ஆனா, நீ என்னை எங்க தூங்க விடப்போறே?''

''ரொம்ப வழிய வேண்டாம். இப்போ குட்நைட்!'' என்று சொல்லி போனை வைத்து விட்டாள்.

14

காலையில் சொன்னபடி ஒன்பது மணிக்கெல்லாம் ஆதித்யா தன் அப்பாவோடு வந்து விட்டான். துர்காவையும், நாராயணசாமியையும் ஏற்றிக் கொண்டு அங்கயற்கண்ணி ஸ்கூலை நோக்கிப் புறப்பட்டான்.

அங்கு போனதும், ''வாசல் முகப்பை முதலில் சரிப்படுத்தணும்,'' என்று மனதில் குறித்துக் கொண்டாள்.

அங்கே அனேகமாக டீச்சர்ஸ் எல்லாருமே வரத் தொடங்கியிருந்தார்கள். மற்றவர்களும் வந்துவிடு வார்கள் என்று ஆபீஸைப் பார்த்துக் கொள்ளும் சந்தியா சொன்னாள்.

முதலில் சற்று நேரம் இவர்கள் பிரின்சிபல் ரூமில் இருந்தார்கள். இவர்கள் சொல்லிவிட்டுப் போயிருந் தாலும் நேரிடையாகப் பார்க்கும் போது அவளுக்குச் சங்கடமாக இருந்திருக்க வேண்டும். ''ரிஸல்ட்'' என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தாள்.

''பரவாயில்லை. ரிலாக்ஸ்டாக இருங்க. நாம எல்லாம் விரிவாகப் பேசலாம்,'' என்றாள் துர்கா. சற்று நேரத்தில் எல்லா டீச்சர்ஸும் வந்து விட, இவர்களும் மீட்டிங் நடைபெறும் ஹாலுக்குப் போனார்கள்.

நாராயணசாமி பேச எழுந்தார் ''அனைவருக்கும் வணக்கம். இந்தப் பள்ளிக்கூடம் என் அப்பா காலத்திலிருந்து நடக்கிறது. இந்த தரம்தான் இத்தனை மோசமான ரிசல்ட் எஸ். எஸ். எல்.சி.யில வந்திருக்கு. உங்களுக்கே தெரிந்திருக்கும். நாம் எல்லோரும் அதுக்குக் காரணம், தீர்வு இரண்டும் கண்டுபிடிக்க இன்னிக்கு இங்கே கூடியிருக்கோம்.

''இதோ இவர் பெயர் ரங்கதுரை. நம்ம பள்ளிக்கூடத் துக்குக் கௌரவ ஆலோசகர். இவருக்கு அடுத்து அமர்ந்திருப்பவர் ரங்கதுரையின் பிள்ளை ஆதித்யா. அஹாமதாபாத் ஐ. ஐ.எம்.மில் கோல்ட் மெடலுடன் பாஸ் பண்ணியவர். இனிமே நம்ம பள்ளிக்கூடத்தில் எல்லா விஷயங்களையும் சீர் செய்யவென்றே சென்னையில்

பார்த்துக் கொண்டிருந்த வேலையை விட்டு விட்டு வந்திருக்கார்!'' என்றார்.

எல்லோரும் கைதட்டினார்கள். சிலர் கை கூப்பினார்கள். ஆதித்யா எழுந்தான்.

''எல்லோருக்கும் வணக்கம். நான் இந்தப் பள்ளியின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதின் நோக்கமே பள்ளியை முன்னேற்றுவதுதான். யாரையும் குற்றம் சாட்டுவதற்கோ, மனதைப் புண்படுத்துவதற்கோ இல்லை. அடுத்ததாக நீங்கள் உங்களுக்கு என்ன பிரச்னை இருந்தாலும் தயங்காமே எங்கிட்டே வரலாம்,'' என்று சொல்லி அமர்ந்தான். பிறகு துர்கா எழுந்தாள்.

''முதலாவதாக நாம எடுத்துக்க வேண்டியது சில டீச்சர்ஸ் பாதியிலே பள்ளியை விட்டுப் போவது பற்றி, எப்படியும் அரசு சொன்ன சம்பளம், படிகள் எல்லாம் கொடுக்கறோம். எனவே, யாராவது வேலையை விடுகிறார்கள் என்றால் வேறே ஏதாவது காரணம் இருக்க வேண்டும்.

''ஆனால் ஒரு டீச்சருக்கு ஒரு மாணவன் சரியானபடி, இசைவாக நடந்து அவரிடம் ஒரு புரிதல் வரும் வேளையில் அவர் போய்விட்டால், அடுத்த டீச்சரை நாங்கள் பொருத்த மானவராகத் தேடிப்பிடித்து, அவர் பாடம் நடத்த ஆரம் பித்து இந்த மாணவன் அவருக்குச் சரியாக வர எத்தனை நாட்கள் ஆகும்? ஆகவே வருடம் பூரா போகாமலிருக்கும் எண்ணம் இல்லாதவர்கள் இப்போதே சொல்லிவிட்டால், பள்ளி ஆண்டில் கஷ்டமிருக்காது. திடீரென்று எதிர் பாராத சந்தர்ப்பங்களுக்கு ஒருவரும் ஒன்றும் சொல்ல முடியாதுதான். ஆனால், இப்போதே எண்ணம் இருப் பவர்கள் சொல்லிவிட்டால் ரொம்ப வசதியாக இருக்கும்.

''அடுத்தது இந்த முறை எஸ்.எஸ்.எல்.சி. குழந்தைகள் வாங்கியிருக்கும் மார்க்குகள் ரொம்பவே வருத்தமாக இருக்கிறது, அதனால நிறைய பேரண்ட்ஸ் வந்து டிசி கேட்டுகிட்டு இருக்காங்க. அவங்களுக்கு ஒரு உத்தர வாதம் கொடுத்து இந்த மாணவர்களைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் ஸ்கூல் பெயர் கெட்டுவிடும்.

''இந்தப் பள்ளிக்கூடம் என் தாத்தா காலத்திலிருந்து இருக்கிறது. உங்களிலேயே இரண்டொருவர் இந்த ஸ்கூலிலேயே படித்தவர்கள். இதற்கு ஏதாவது அவப் பெயர் வந்தால் என் தந்தை தாங்கமாட்டார்.

''இது வரை நடந்ததற்கு எது வேண்டுமானாலும் காரணமாக இருக்கட்டும். இனி நடக்கப் போவதைப் பார்க்க வேண்டும். அதற்கு என் யோசனை சாயந்தரம் ஸ்பெஷல் கிளாஸ் வைத்துக் குழந்தைகளைப் படிக்க வைக்க வேண்டும்.''

இதைத் துர்கா சொன்னதும் எல்லா ஆசிரியர்களும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

துர்கா தொடர்ந்தாள் ''எனக்குத் தெரியும், உங்களில் சிலர் வீட்டில் ட்யூஷன் எடுப்பது. அதனால் வேறு ஒழுங்கீனங்கள் ஏதும் நடக்காத வரை வீட்டிற்குப் போய் நீங்கள் உங்கள் ஓய்வு நேரத்தை எப்படிச் செலவழிப்ப திலேயும் இதுவரை இந்த ஸ்கூல் நிர்வாகம் தலையிட்ட தில்லை. இப்போது அந்தப் பணத்தை உங்களுக்கு உபரியாக நிர்வாகம் கொடுக்கும்.

"உங்களுக்கெல்லாம் மாலைச் சிற்றுண்டிக்கும் டீக்கும் நிர்வாகம் ஏற்பாடு செய்யும். இந்த அதிகப்படி வகுப்புகள் என்பது குழந்தைகள் இம்ப்ரூவ்மெண்ட் எழுதும்வரை தான். எப்படியாவது வருகிற இம்ப்ரூவ்மெண்ட் பரிட்சையில் குழந்தைகளை நல்ல மார்க் வாங்க வைத்துவிட வேண்டும். அதுதான் நம்முடைய முதல் லட்சியம்!" என்றாள் துர்கா.

ஒரு ஸீனியர் டீச்சர் எழுந்தார் "மேடம்! நாங்க எங்களுக்குள்ள கலந்து ஆலோசிக்க கொஞ்ச நேரம் கொடுக்கிறீர்களா?" என்று கேட்டார்.

"தாராளமாக. நாங்களும் ஸ்கூலைச் சுற்றிப் பார்க்க வேண்டும்," என்றான் ஆதித்யா. பின் அவர்களெல் லோரும் அந்த ஹாலை விட்டுக் கிளம்பிப் போனார்கள்.

துர்கா ஆதித்யாவைக் கூட்டிக் கொண்டு ஒரு ரவுண்ட் ஸ்கூல் முழுவதையும் காண்பித்தாள். பல வகுப்பறை களுக்குச் சுவர்கள் பூச வேண்டிய, வெள்ளை அடிக்க வேண்டிய நிலையில் இருந்தன. மின் விசிறிகள் எல்லாம் பழுது பார்க்க வேண்டிய நிலையில் இருந்தன. துர்கா பெண்கள் கழிப்பறைக்கும் போய்ப் பார்த்து விட்டு வந்தாள்.

"நிறைய ரிப்பேர் வேலைகள் இருக்கே, ஆதித்யா? நம்மால முடியுமா? ரொம்ப செலவாகும் போலவும் இருக்கே. எனக்குப் பயமாக இருக்கு!" என்றாள் துர்கா.

"எண்ணித் துணிக கருமம் என்று நாம யோசனை பண்ணித்தான் இதில் புகுந்திருக்கோம். நடக்கும் துர்கா. அப்பாவைக் கொஞ்சம் பணம் கேட்கிறேன். தருவார்."

''தருவார். ஆனா, அது இல்லாமே நான் வேற என்ன செய்ய முடியும்னு பார்க்கறேன்.''

''ஆனா, நீ என்ன செய்தாலும் என்கிட்டே சொல்லிட்டுத்தான் செய்யணும்.''

''ஏனோ?''

''ஏன்னா, நான் உன் புருஷ்ன்.''

''எப்போலேருந்து?''

''நீ பிறந்ததிலிருந்து.''

அவன் சிரித்துக் கொண்டே தான் இதையெல்லாம் சொன்னான். ஆனால் துர்கா நெகிழ்ந்து போய்க் கண்கள் பனிக்க, அவனைப் பார்த்தாள்.

''ஏய். வா! எல்லோரும் காத்துக் கொண்டிருப்பாங்க,'' என்றபடியே திரும்ப மீட்டிங் ஹாலுக்கு நடந்த ஆதியைப் பின் தொடர்ந்தாள் துர்கா.

அங்கே போனதும் ராம்குமார் என்ற எம்.எஸ்சி. பட்டதாரி டீச்சர், ''எனக்கு ஒரு பிரச்னை மேடம்!'' என்றபடி துர்காவிடம் வந்தான்.

''வாங்க ராம்குமார். சொல்லுங்க,'' என்றாள் துர்கா.

மேசையின் அருகே வந்து, ''எனக்கு அநேகமாக இஸ்ரோவில் வேலை கிடைச்சுடும்னு தோணுது, மேடம். இன்னும் மூணு மாசம் ஆகலாம் ஆர்டர் வர,'' என்றான் ராம்குமார்.

''அப்படியா? சந்தோஷம். அப்படீன்னா நீங்க இந்த இம்ப்ரூவ்மெண்ட் நடக்கும் வரை மட்டும் இருந்துடுங்க.

அதில ஒண்ணும் பிரச்னை இருக்காதில்லையா?'' என்றாள் துர்கா.

''ஆமாம், மேடம். ஆனாலும் அடுத்த பள்ளி ஆண்டுக்கு நீங்க வேறே டீச்சர் பார்த்துக்க வேண்டியிருக்குமேன்னு முன்னாடியே சொன்னேன்,'' என்றான்.

''ஆமாம். அது நிஜம்தான். ரொம்ப நன்றி, மிஸ்டர் ராம்குமார்!'' என்றாள்.

அடுத்ததாகச் சுபத்ரா என்ற ஒரு இளம் பெண் ஆசிரியை எழுந்து வந்தாள். ''எனக்குக் கல்யாணம் நிச்சயமாயிருக்கு, மேடம். கல்யாணம் ஜூலைலதான் இருக்கும். அதுவரை என்னை வர அனுமதிக்கணும், மேடம்,'' என்றாள். ''என் வருமானம் வீட்டுக்குத் தேவை,'' என்றாள்.

''கன்கிராட்ஸ் சுபத்ரா! கல்யாணம் ஆகி எந்த ஊருக்குப் போகப்போறீங்க?'' என்று கேட்டாள் துர்கா.

''பெங்களூருக்கு மேடம். அவர் அங்கு 'பெல்'லில் இருக்கிறார்.''

''ஆல் த பெஸ்ட்மா. ஸ்கூல் திறக்கறவரை வந்து இம்ப்ரூவ்மெண்ட் கிளாசுக்கு உதவி பண்ணிடுங்க,'' என்றாள் துர்கா.

''கண்டிப்பாச் செய்யறேன், மேடம்.''

மற்ற எல்லா டீச்சர்ஸும் இவர்களின் இந்தப் புது ஏற்பாட்டிற்குச் சம்மதித்துக் கலைந்து சென்றனர்.

அதற்குப் பின், ''பேரண்ட்ஸ்சை சந்திக்க ஏற்பாடு பண்ணணுமே!'' என்றான் ஆதி.

''இந்த வருடம் பொதுத் தேர்வு எழுதின 70 பேர்களில் 30 பேர் பெயில். 10 பேர் சுமார் மார்க். 30 பேர் நல்ல மார்க். நாம எந்த பேரண்ட்ஸை வரவழைக்கணும்?'' என்று கேட்டாள் துர்கா.

''எல்லாரையுமே வரவழைக்கப்பார்க்கலாம். நல்ல மார்க் வாங்கினவங்க வராத போனாக் கூடப் பரவா யில்லை. மற்றவங்க கண்டிப்பா வரணும்,'' என்றான் ஆதி.

''எல்லோருக்கும் போன் பண்ணுவோம். எப்படியும் டி.சி. கேட்க இன்னிக்கு வந்தவங்களை நம்ம சீனியர் டீச்சர் வடிவேலு சமாதானம் சொல்லி நாளைக்கு வரச் சொல்லியிருக்காரு. பாக்கிப் பேருக்குப் போன் பண்ணு வோம். இல்லை, ஆளனுப்புவோம். நான் வேணா அந்த வேலையைப் பார்த்துட்டு வரேன். நீங்க அப்பாவையும், மாமாவையும் வீட்டுக்கு அழைச்சிட்டுப் போயிடறீங் களா?'' என்று கேட்டாள். ''நான் வேலையை முடிச்சிட்டு ஆட்டோ பிடிச்சு வந்துடறேன்.''

''நீ சொல்றது சரிதான். ஆனா, நீ எதுக்கு ஆட்டோ பிடிச்சி வரணும்? நான் அவங்களைக் கொண்டு விட்டுட்டு திரும்ப வந்து உன்னைக் கூட்டிக்கிறேன்,'' என்றான் ஆதி.

''நீங்க ஏன் எனக்காகக் கஷ்டப் படறீங்க?''

''என் ராணிக்குச் சாரதியாக இருக்கறது கஷ்டமா? அது இனிப்பான வேலையாச்சே!''

பிறகு போய்ப் பார்த்தால், பெரியவர்கள் இரு வரும், ''இப்போ வீட்டுக்குப் போயும் சும்மாதானே

உட்கார்ந்திருக்கப் போறோம்? அதை இங்கேயே செய்யறோம். நீ வேலையை முடிச்சுட்டு வா,'' என்று சொல்லி விட்டார்கள்.

அதன் பிறகு ஆபீஸில் வேலை பார்க்கும் சந்தி யாவையும் உடன் வைத்துக் கொண்டு எல்லோரையும் வரச் சொல்லி போனில் சொல்ல அரை மணிதான் ஆயிற்று. போனில் கிடைக்காதவர்கள் வீட்டுக்கு நேரே போகச் சொல்லி விலாசம் எழுதிக் கொடுத்து வாட்ச் மேன், தோட்டக்காரன் இருவரையும் அனுப்பினாள். ஒன்றிரண்டு பேர் வீட்டுக்கு ஆயாவைக் கூட அனுப்பி வைத்தாள்.

பிறகு புறப்பட்டு இவர்களைக் கொண்டு விட்டு விட்டுத் தன் வீட்டிற்குத் திரும்பினான் ஆதி. வண்டி யில் வரும்போதே மறுநாள் வரும் பெற்றோர்களிடம் என்ன பேச வேண்டும், எப்படிப் பேச வேண்டும் என்றெல்லாம் பேசி வைத்துக் கொண்டனர்.

மறு நாளும் நாராயணசாமி இவர்களுடன் வந்தார். பெற்றோர்கள் அநேகமாக எல்லோருமே சொன்ன நேரத்திற்கு வந்துவிட்டனர்.

நாராயணசாமி முதலில் பேசினார். ''வணக்கம், உங்களில் நிறைய பேர் இந்த ஸ்கூலின் மேல் அதிருப்தி யாக இருப்பது எனக்குத் தெரியும். அதற்காக, அதன் காரணமாக நான் உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். மேற்கொண்டு என்ன செய்யலாம் என்பதையெல்லாம் என் பெண்ணும், ஸ்கூலுக்குப் புது நிர்வாக அதிகாரியாக நியமனம் ஆகியிருக்கும் திரு.

ஆதித்யாவும் உங்களோடு பகிர்ந்து கொள்வார்கள்,'' என்று சொல்லி அமர்ந்துவிட்டார்.

அடுத்ததாகத் துர்கா எழுந்தாள். ''அனைவருக்கும் வணக்கம். பள்ளியில் இந்த முறை ரிசல்ட் ரொம்பவே சுமாராகத்தான் வந்திருக்கிறது. உங்களில் சில பேர் கூட இந்தப் பள்ளியில் படித்தவர்கள். எனவே இது உங்கள் பள்ளி என்பதுதான் எங்கள் பள்ளி என்பதை விடப் பொருத்தமாக இருக்கும். எனவே வரப்போகும் இந்த வருடத்திற்குப் பள்ளியைத் தாங்கிப் பிடிக்க எங்களுக்குத் தோள் கொடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். நான் இந்த வருடம் தான் எம்.எஸ்,சி.யை முடித்தேன். அதனால் என்னால் இத்தனை நாட்கள் பள்ளி விஷயங்களில் கவனம் செலுத்த முடியவில்லை. இப்போது நான் முழுவதுமாகப் பொறுப்பேற்கப் போகிறேன். என்னுடன் ஒத்துழைக்க திரு ஆதித்யா அவர்கள் சேர்ந்திருக்கிறார்கள். திரு. ஆதித்யா அஹமதாபாதில் ஐ.ஐ.எம்.மில் படித்துத் தங்கப் பதக்கம் பெற்றவர். நிர்வாகத் துறையில் நன்கு பயிற்சி பெற்றவர். இவருடைய முழுநேர உழைப்பில் பள்ளிக்கூடம் நன்கு முன்னேறும் என்று நிச்சயமாக நம்புகிறேன். நீங்களும் நம்பிக்கையோடு எங்களுக்கு தயவு செய்து ஒத்துழைக்க வேண்டுமாய் வேண்டிக் கொள்கிறேன்,'' என்று சொல்லிவிட்டு உட்கார்ந்தாள்.

அடுத்து ஆதித்யா எழுந்தான். ஆளை அசரடிக்கும் அவன் கம்பீரத்தைப் பார்த்துப் பெற்றோர்கள் கூட்டம் இவன் என்ன சொல்லப் போகிறான் என்று ஆர்வத்துடன் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தது.

''அனைவருக்கும் வணக்கம். தந்தையும், மகளும் என்னை அறிமுகப்படுத்தி விட்டார்கள். உங்கள் எல்லோருடைய வருத்தமும் உங்கள் பிள்ளைகளின் மதிப்பெண்கள் தான். அது இயற்கை தான். நடந்ததைப் பற்றி இனிப் பேசிப் பயனில்லை. இப்போது இந்த முடிவுக்கான காரணங்களையும், அதைப் பற்றின தீர்வுகளையும் பற்றி பேசலாம்.

''முதலில், ஸ்கூல் நிர்வாகம் முன்னாலேயே வகுப்புகள் சரியாக நடக்கிறதா என்றெல்லாம் கவனித்திருக்க வேண்டும். பெரியவர், அவரின் உடல் நிலை தான் முக்கிய காரணம். அடுத்து, ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர், நீங்கள், மற்றும் உங்கள் பிள்ளைகள் அனைவருக்குமே இதில் பங்கு உள்ளது. தலைமை ஆசிரியர் அவர்களின் வார்த்தைப்படி நிறைய ஆசிரியர்கள் தங்கள் வகுப்பு நேரத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கற்பிக்கவில்லை. பெற்றோர்களான நீங்கள் சற்று இதைக் கவனித்து நிர்வாகத்தின் கவனத்திற்கு இதைக் கொண்டு வந்திருக்கலாம். இப்போதெல்லாம் பிள்ளைகளுக்கும் படிப்பு தவிர, இதர விஷயங்கள் புத்தியைத் தடுமாற வைக்க நிறைய வந்துவிட்டன. அவற்றிலிருந்தெல்லாம் குழந்தைகளைப் பாதுகாப்பது பெற்றோர்களின் கடமையல்லவா? கொஞ்சம் கசப்பாக இருந்தாலும் நான் சொல்வதிலுள்ள உண்மையைப் புரிந்து கொள்வீர்கள் என நம்புகிறேன்,'' என்று அவன் சொல்லி நிறுத்தியதும் பெற்றோர்கள் ஆமோதிப்பது போல் தலையை அசைத்தனர்.

"இப்போ மேலே என்ன செய்யப்போறீங்க?" என்று கேட்டார் ஒருவர்.

உடனே துர்கா எழுந்து, "முதலில் உடனடியாக கோச்சிங் கிளாஸ் ஆரம்பித்திருக்கிறோம். லீவிற்கப் புறமும் அது தொடரும்," என்றாள்.

"அதற்கு வேறு பணம் கட்டுவதென்பது கையைக் கடிக்குமேம்மா. எங்க வீட்லே இரண்டு பெண்கள் 10ஆவதும், 9ஆவதும் படிக்கிறாங்க," என்றாள் ஒரு பெண்மணி.

"இருங்க. நீங்க யாருமே கோச்சிங் கிளாசுக்குனு தனியா பணம் கொடுக்க வேண்டியதில்லை. குழந் தைகள் நல்ல மார்க் வாங்கட்டும். அதன் பிறகு விருப்பப்பட்டு, நீங்க ஏதேனும் நன்கொடை அளித்தால் ஏற்றுக் கொள்வோம். அடுத்தது எல்லா எஸ்.எஸ்.எல்.சி. மாணவர்களையும் இம்ப்ரூவ்மெண்ட் எழுத வையுங்க. இங்கே நாங்க படிக்கவைக்கறதைத் தவிர, வீட்லேயும் படிக்கிறாங்களான்னு பாருங்க. கொஞ்ச நாளைக்கு டி.வி., கம்ப்யூட்டர், வீடியோ கேம்ஸ் பக்கம் போகாமே முழு மனதோட படிக்க வையுங்க. அவர்கள் தினமும் காலை யில் நான்கு மணி நேரம் வரட்டும்.

"அடுத்து 9-ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் தினமும் இரண்டு மணி நேரம் கிளாஸ் உண்டு. தயவு செய்து டி.சி.க்கு விண்ணப்பித்தவர்கள் அதை மறுபரிசீலனை செய்யுங்க. குழந்தைங்க நல்ல மார்க் வாங்குவாங்க. நான் உத்தரவாதம் தரேன். நான் இங்கேயே இருப்பேன். எந்த நேரமும் என்னையோ, அல்லது ஆதித்யாவையோ

தொடர்பு கொள்ளலாம். அதுக்கு எங்க மொபைல் நம்பரும், மெயில் ஐடியும் எடுத்துக்குங்க. உங்களுடைய தையும் குடுங்க.

''வெயில் நாள் குழந்தைகளுக்கு நல்ல ஆகாரம் குடுங்க. நிறைய திரவ உணவு குடுங்க!'' என்றாள்.

''இங்கே நல்ல குடி தண்ணீர், பாத்ரூம் வசதி யெல்லாம் சரியா இல்லையேம்மா!'' என்றாள் ஒரு பெண்மணி.

''ஆமாம். நானும் கவனித்தேன். உடனடியாக நல்ல தண்ணீருக்கு ஏற்பாடு பண்றேன். நான்தான் சொன்னேனே! வரப்போகும் வருடம் மொத்தமும் நான் இந்தப் பள்ளிக்கூடத்து மேம்பாட்டுக்காகத்தான் செலவழிக்கப் போகிறேன். இது என் தாத்தா கட்டிய ஸ்கூல். அப்பா நடத்தின ஸ்கூல். நான் படிச்ச ஸ்கூல். எங்க ஸ்கூல். ஏன், உங்க ஸ்கூலும் தான். இதை நிச் சயமா நல்லா ஆக்கிடுவேன். நீங்கள் எல்லாம் ஒத்துழைப்பீங்க, இல்லையா?'' என்று உணர்ச்சி பொங்கக் கேட்டாள்.

''ஒத்துழைக்கிறோம், மேடம்! நிச்சயமாக ஒத்துழைக் கிறோம்!'' என்று அவர்களும் உணர்ச்சி பொங்கக் கூறினார்கள்.

''அடுத்து நான் 11, 12ஆவது வகுப்புகளுக்குக்கூட அனுமதி வாங்க விண்ணப்பிக்கப் போகிறேன். ஏற்கெனவே அப்பா விண்ணப்பித்திருந்தது தான். நடுவில் கொஞ்சம் கவனிக்கவில்லை. இப்போது திரும்ப நான் தீவிரமாக முயற்சிக்கிறேன். உங்க குழந்தைகளோட

இம்ப்ரூவ்மென்ட் ரிசல்ட் வந்து, இந்த ஸ்கூல்லேயே படிப்பாங்க. நம்புங்க!'' என்றாள்.

ஆவேசம் வந்தது போல் அவள் பேசிய விதத்தில் அனைவரும் அவள் பேசியதை முழுவதும் ஒப்புக் கொண்டனர்.

''மேற்கொண்டு விவரங்கள் எல்லாம் நீங்கள் அந்தந்தப் பாட ஆசிரியர்கிட்டே கேட்டு நேரம் முதலியவற்றைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்,'' என்று சொல்லிவிட்டு தலைமை ஆசிரியரிடம் தனியாகப் பேசினார்கள். ''மேடம்! உங்களாலே கண்டிப்பா இருந்து நாம் எதிர்பார்க்கிற ரிசல்ட்டைக் கொண்டு வர முடியும் என்கிற நம்பிக்கை இருக்கா?'' என்று ஆதி நேரிடையாகவே கேட்டு விட்டான். பேசாமல் தலை குனிந்து நின்று விட்டாள் தலைமை ஆசிரியர்.

''என்ன பிரச்னை, மேடம்?'' என்று துர்கா கேட்டாள்.

''இல்ல, இதை இத்தனை நாள் நான் இன்னும் கொஞ்சம் தீவிரமாகக் கண்காணித்திருக்கலாமே என்ற வருத்தம். இனி நீங்களும் என்னோடு முழுத்துணையாக இருப்பதால் கண்டிப்பா என்னால் நல்ல ரிசல்ட் காண்பிக்க முடியும் என்று தோன்றுகிறது, மேடம். கூடவே, ஏற்கெனவே என்னுடைய அனுபவமின்மையால்தானே, ஸ்கூலுக்குக் கெட்ட பெயர் வந்தது. திரும்ப நான் தலைமை ஆசிரியராகத் தொடர்வது சரியில்லையோ என்று தோன்றுகிறது, மேடம்,'' என்றாள்.

''அப்படி நினைச்சிருந்தா உங்களை முதல்லேயே தலைமை ஆசிரியராக நியமிச்சிருக்க மாட்டாங்களே?''

''இல்லை மேடம்! நான் எம்.எஸ். சி., பி.ஹெச்டி வாங்கிறதுனால தான் என்னை இதுக்குத் தேர்ந் தெடுத்தாங்களே தவிர, வயசுன்னு பார்த்தா குறைச்சல் தானே! அதுதான் என்னை விடப் பெரியவங்களை எதுவும் சொல்ல முடியாமே, கண்டிக்க முடியாமே தடுத்து விட்டது,'' என்றாள்.

''சரி, போனது போகட்டும். இனிமே எல்லார் கிட்டேயும் கண்டிப்பா இருங்க. அப்பத்தான் சமாளிக்க முடியும். சலுகைகள் காட்ட வேண்டிய நேரத்தில காட்டலாம். ஆனா, எப்பவுமே கொஞ்சம் பயத்திலே வெச்சாத்தான் வேலை நடக்கும்,'' என்றான் ஆதித்யா.

மறுநாளிலிருந்து காலை 8.30 க்கு மற்றவர்கள் வருவார்கள் என்றால், தலைமை ஆசிரியரும், துர்காவும் 8 மணிக்கே பள்ளியில் இருந்தார்கள். எல்லோரும் ஒரு புது உத்வேகத்துடன் வேலை செய்ய ஆரம்பிக்க, அனைவருக்கும் ஒரு நம்பிக்கை பிறந்தது.

15

இவர்கள் வீட்டிலிருந்து புடவைகள் வாங்க வேண்டிய தங்கள் உறவினர்களைத் தவிர, ஆஷாவின் வீட்டில் யார் யாருக்கு வாங்க வேண்டும் என்று கேட்டு லிஸ்ட் கேட்டனர்.

''நம்ம உறவுக்காரங்களுக்கு வாங்கறதெல்லாம் நாமே போய் வாங்கிட்டு வந்துடலாம்,'' என்றாள் துர்கா.

பாவம்! ஸ்கூலுக்காகவும் அலைந்து, மேற்கொண்டு கடை கண்ணிகளுக்கும் போக வேண்டியிருந்ததில், தினமுமே படுக்கும் வேளையில், 'அப்பாடா' என்றிருக்கும். ஒவ்வொரு நாள் அவளும் ஆதியும் பேசிக்கொள்ளும் போது, ''காலை ரொம்ப வலிக்கறது, ஆதி!'' என்பாள்.

''ஐயோ பாவம்! என் ராஜாத்திக்கு நான் கிட்டே இருந்தால் நல்லா காலைப் பிடிச்சி விடுவேன்!'' என்பான் ஆதி.

''ஐயே, பெண்டாட்டிக்குக் கால அமுக்குறாராம். சுத்த வீரர்தான்!'' என்பாள் துர்கா.

''பெண்டாட்டி ஆகும் முன்னமேயே, இப்பவே வந்து வேணுமானாலும் பிடிச்சிவிடுவேன். பார்க்கறியா, என் வீரத்தை?'' என்பான் ஆதி விளையாட்டாக.

''ஐயா சாமி! நீங்க பெரிய வீரர் தான். ஒத்துக்கறேன். ஆளை விடுங்க,'' என்பாள் அவள்.

''ஒழுங்கா சாப்பிடறியா, இல்லையா? பி.காம்ப்ளெக்ஸ் மாத்திரை ஏதாவது எடுத்துக்கோயேன்,'' என்பான்.

ஒரு நாள் அவன் பேசுவதைக் கேட்டுக் கொண்டே வந்த பங்கஜம், ''யாருக்குடா கவனிப்பெல்லாம் பலமாயிருக்கு?'' என்று கேட்டாள் சிரித்துக் கொண்டே.

''அதில்லேம்மா. இந்த துர்கா தான் ரொம்ப அலையறாளா, அதனால...'' என்று திக்கித் திணறி வழிந்தான் ஆதி.

''பேஷ்! இப்பவே இவ்வளவு கவனிப்பா? நாளைக்கு என் பேரனை வயத்திலே வெச்சுருக்கச்சே எப்படி

யெல்லாம் தாங்குவே?'' என்று சிரித்துக் கொண்டே போய்விட்டாள்.

''அம்மா வந்துட்டுப் போனாங்க. கேலி பண்ணிட்டுப் போறாங்க!'' என்றான் ஆதி, துர்காவிடம்.

''மானம் போறது. குட்நைட்!'' துர்கா.

இவர்கள் பக்கத்துக்காரர்களுக்குப் புடவை வாங்கி விட்டு, அவர்கள் பக்கத்துக்காரர்களுக்கு வாங்கப் போகும்போது, ரேவதியை அழைத்தார்கள். ''நானும் வரேனே. சும்மாத்தானே இருக்கேன்,'' என்று ஆஷாவும் கிளம்பினாள்.

''அங்கு வந்த, நான் ஏதாவது உன்னைக் கேட் டாத்தான் நீ பேசணும். மற்றப்படி வாயைத் திறக்கக் கூடாது,'' என்று சொல்லி ரேவதி கூட்டிப் போனாலும் ஆஷா அவர்கள் வாங்கும் போதெல்லாம் ஏதோ ஒன்று சொல்லிக் கொண்டிருந்தாள்.

துர்காவுக்கு செலக்ட் செய்யும் போது ரொம்ப சுமா ரான ஒரு வெந்தயக் கலர் செல்ப் பார்டர் புடவையை ஆஷா எடுத்து வைத்தாள்.

''ஆஷா, இது என்னன்னு இப்படி எடுக்கறே? அவங்க வீட்டுக்கு ஒத்தைக்கு ஒரு பொண்ணு, நாம நல்லாத்தான் வாங்கணும்,'' என்றாள் ரேவதி.

''இது நல்லாத்தானே இருக்கு,'' என்று ஆஷா சொல்லவும், எல்லாவற்றையுமே கேட்டுக் கொண்டிந்த துர்கா, ''ஆமாம், ஆஷா! நல்லாத்தான் இருக்கு. இதே இருக்கட்டும்!'' என்று சொல்லிவிட்டாள்.

''இல்லை, நீ வேறே வேணுமானா எடுத்துக்கோ!'' என்றாள் ஆஷா இழுத்தபடி.

சற்றுத் தள்ளிக் கூட்டிப் போன ரேவதி, ''என்ன நீ, அவ உனக்கு நாத்தனார். வா, போங்கறே - மரியாதை இல்லாம!'' என்று கடிந்து கொண்டாள்.

''நான் எதுக்கு அவளுக்கு மரியாதை குடுக்கணும்? அவருக்குத் துர்கா தங்கைதானே?''

''ஆனாலும் அவ உன்னை விடப் பெரியவ. நல்லபடி அக்கான்னு கூப்பிடு. அப்படி நினைச்சுப் பழகு. மரியாதையும் குடு, அது தான் சரி,'' என்றாள் ரேவதி.

வேறொரு நல்ல நாள் பார்த்துக் கூறைப் புடவை வாங்கப் போனார்கள். போகும் போதே தனலட்சுமி தீர்மானமாகச் சொல்லிவிட்டாள். தன் மாமியாருடைய, அவங்க மாமியாருடைய, தன்னுடைய கூறைப்புடவை, மயில் கழுத்துக் கலரில் அரக்கு பார்டர், அப்படித்தான் இவளுக்கும் வாங்க வேண்டும் என்று. கடையில் போய்ச் சொன்னதும், ''எனக்கு ராணி ரோஸில் தான் முகூர்த்தப் புடவை வேணும்!'' என்று அடம் பிடித்தாள், ஆஷா - சின்னக் குழந்தை மாதிரி.

''ராணி ரோஸும் வாங்கிக்கோ. வேறே சந்தர்ப்பத் திலே கட்டிக்கோ. ஆனால முகூர்த்தப் புடவை எங்க வீட்ல மூணு தலைமுறையா அதே கலர் தான் வாங்கற வழக்கம்கறதுனாலே அந்தக் கலரே வாங்கிக்கோ!'' என்றாள் துர்கா.

''நான் ராணி ரோஸ்லதான் கூறைப் புடவை வாங்கணும்னு ரொம்ப நாளா நினைச்சிகிட்டிருந்தேன். அதைத்தான் எடுத்துப்பேன்!'' என்றாள் ஆஷா.

''இதோ பாரும்மா. எங்க மாமியாருடைய இந்தக் கலர் புடவையை நாங்க வெச்சி சாமி கும்பிடும்போதெல்லாம், நடராஜுக்கு நல்ல பொண்ணா அமையட்டும். இதே கலர் வாங்கி வெச்சி சுமங்கலிப் பிரார்த்தனை பண்ணி உங்களைக் கும்பிட்டுட்டு அதை உடுத்திக்கச் சொல்றேன்னு எப்பவும் நான் நினைச்சுப்பேம்மா. அதனால நீ அதையே வாங்கிக்கோம்மா!'' என்று கெஞ்சும் குரலில் தனலட்சுமி சொல்ல, முகம் சிவந்து கடுப்பாகி ஆஷா ஏதோ சொல்ல முற்பட, நிலைமை ரசாபாசமாகிவிடப் போகிறதே என்ற பதைபதைப்பில் ஆஷாவை ரேவதியும் அவள் அம்மாவும் சற்றுத் தள்ளி அழைத்துப் போய்க் கண்டித்தனர்.

''அந்தம்மா அத்தனை தூரம் சொல்றாங்க, அதென்ன மரியாதையே இல்லாமே, சின்னக் குழந்தை மாதிரி அடம். நல்லாயில்லை நீ செய்யறது. அவங்க எண்ணப்படி அவங்க வாங்கற புடவையை வாங்க விடு!'' என்றார்கள்.

''பின்னே என்னை எதுக்குக் கடைக்குக் கூட்டி வரணுமாம்!'' என்று காலை உதைத்துக் கொண்டு வாயை மூடிக் கொண்டாள் ஆஷா.

வீட்டிற்குப் போனதும் தனம், துர்காவிடம், ''என்னம்மா அந்தப் பொண்ணு இப்பவே இப்படி இருக்கே!'' என்றாள்.

''பேசாமே இரும்மா. நம்மால என்ன பண்ண முடியும்? சாமியை வேண்டிக்கோ. எல்லாம் சரியாகிவிடும்!'' என்றாள் துர்கா.

இதைப் போல நடராஜுக்கு ஸில்க் சட்டையும் வேஷ்டியும் வாங்கப் போகும் போதும் தானும்தான் போகணும் என்று அடம் பிடித்தாள். முன்னாலேயே இதை எதிர்பார்த்து துர்கா, ரேவதியிடம், ''எங்க வீட்டு வழக்கப்படி என்ன சட்டை வாங்கணுமோ அதை அப்பா இன்னும் எங்க மாமா அவங்க போய்த்தான் வாங்குவாங்க. கல்யாணத்திற்கப்புறம் வாங்குற எல்லா டிரெஸ்ஸையும் ஆஷாவே செலக்ட் பண்ணட்டும். அவள் இஷ்டப்படி எங்கண்ணாவை டிரெஸ் பண்ணிக்கச் சொல்றேன்.''

''இவ என்ன சொல்றது? எப்படியானாலும் கல்யாணத்துக்கப்புறம் என் விருப்பப்படிதான் என் கணவன் டிரெஸ் பண்ணிப்பாரு. ஆனாலும் அவளுக்கு ரொம்ப கர்வம்!'' என்றாள் ஆஷா.

ரேவதி அவளிடம், ''ஆஷா, நீ பேசறது சரியில்லை. அவ நல்ல பொண்ணாத்தான் தெரியறா. நீயா தப்பான எண்ணங்களை வளர்த்திண்டியானா எப்படி அங்கே போய் இருக்கப் போறே?'' என்றாள்.

''கொஞ்ச நாள் சமாளிக்கப் பார்ப்பேன். முடியல் லேன்னா இங்கே வந்துடுவேன்,'' என்றாள் ஆஷா.

''அதென்ன கொஞ்ச நாள்? அப்பறம் எங்கே போறதா உத்தேசம்? கல்யாணம் ஆயிடுச்சுன்னா அதுதான் உன் வீடு. அவங்கதான் உன் மனுஷங்க. அவங்களை நீ அட்ஜஸ்ட் பண்ணித்தான் போகணும்,'' என்றாள் ரேவதியின் அம்மா.

''கல்யாணத்துக்கப்புறம் நீ சொல்ற மாதிரி வந்தா உன் அண்ணா ஒரு நாளும் ஒத்துக்க மாட்டார்,'' என்றாள் ரேவதி.

''அதெல்லாம் எங்கண்ணா ஒரு நாளும் என்னை விட மாட்டார்!'' என்றாள் ஆஷா.

மேற்கொண்டு அவளுக்குக் கொஞ்ச நேரம் புத்தி சொல்லிப்பார்த்த ரேவதியும், அவள் அம்மாவும், ''இந்தப் பொண்ணு புகுந்த வீட்டுக்குப் போய் நல்ல பெயர் வாங்குமா?'' என்ற பயத்தோடேயே கல்யாண வேலை களைக் கவனித்தனர்.

16

புதிய திட்டத்தின்படி தலைமை ஆசிரியர் வசுந்தரா காலை 7.30 மணிக்கெல்லாம் ஸ்கூலுக்கு வந்துவிட வேண்டும். அடுத்து துர்காவும் வந்து விடுவாள். ஆதி ஒரு மல்டி நேஷனல் கம்பெனியின் பிராஜெக்ட் ஒன்றை எடுத்துக் கொண்டிருந்ததால், ஒரு நாளைக்கு ஒரு முறை யாவது சற்று நேரம் வந்து விட்டுப் போகவேண்டும். ஸ்கூலில் முறைகேடாக ஏதாவது நடந்தால் தன்னிடம் சொல்லச் சொல்லி ரொம்ப வருடங்களாக வேலை பார்க் கும் இரு ஆசிரியர்களைக் கேட்டுக் கொண்டிருந்தாள் துர்கா.

அன்றைக்கு இவர்கள் மீட்டிங் முடிந்து நான்கு ஐந்து நாட்கள் ஆகியிருந்தன. காலை 7.30 மணிக்கு வந்துவிட்ட வசுந்தரா உள்ளே நுழைந்து தன் ரூமுக்கும்

வந்து விட்டாள். வாட்ச்மேனைக் காணோம். காலையி லேயே வந்துவிடும் தோட்டக்காரனையும் காணோம். சரி என்று தன் ரூமில் போய் உட்கார்ந்தாள் வசுந்தரா. எங்கோ கலகலவென்ற வளையல் சப்தம். ஒரு பெண் அதற்கிணையாகச் சிரிக்கும் சப்தம் இரண்டும் கேட்டது. இத்தனை அருகிலா? யாரையும் காணோம். எங்கிருந்து இந்த சப்தம் வருகிறது? சற்று உற்றுக் கேட்டாள். இப்போது கட்டையான ஆண் குரல் ஒன்று கேட்டது. ஆனால், மெதுவாகப் பேசி இருவரும் சிரித்ததனால் யார் என்ன என்று புரியவில்லை. அந்த அறைக்குப் பக்கத்து அறை ஸ்போர்ட்ஸ் சாமான்கள் வைக்கும் அறை. அதற் கடுத்து ரிகார்டுகள் வைக்கும் அறை, அங்கிருந்து தான் பேச்சும் சிரிப்பும் வருகிறது என்று புரிந்து கொண்ட அவள் அவசரமாக எழுந்தாள். அங்கு போய்ப் பார்த்தால் வாசல் அறை முழுவதுமாகச் சாத்தி இருந்தது. அந்த அறைக்குப் பின் புறம் வராண்டாவில் ஜன்னல் உண்டு. இரண்டு கதவுகளையும் சாத்தித் தாழ்ப்பாள் போட்டு வைத்திருப்பார்கள். நேற்று தான் துர்கா கதவின் பின்புறம் ஒரு சட்டம் அடிக்க வேண்டும். இடுக்கு இருக்கிறது என்று சொன்ன நினைவு வரவும் பின்புறம் போய்ப் பார்த்தாள்.

சீச்சீ. இதென்ன வேலை! பி.டி.மாஸ்டெர் ஷ்யாம் உட்கார்ந்திருந்தான். ஆபீஸ் இன் சார்ஜ் சந்தியா அவன் முகத்தோடு முகம் வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந் தாள். அந்த அறையில் ஒரே நாற்காலிதான் இருந்தது.

வந்த சுவடு தெரியாமல் தன் இடத்துக்கு வந்து விட்டாள் வசுந்தரா. அவள் அந்த மாதிரிக் காட்சிகளை யெல்லாம் சினிமா, டி.வியில் தான் பார்த்திருக்கிறாள்.

வயதான பெற்றோரின் ஒரே மகளான அவளுக்கு எங்கேயும் இதெல்லாம் பார்க்க நேர்ந்ததில்லை. ஏதோ இவள் தப்பு செய்துவிட்டாற் போல் குப்பென்று இவளுக்கு வேர்த்துக் கொட்டி விட்டது.

இந்தப் பெண் சந்தியா தான் சின்னவள். போன வருடம் தான் காலேஜில் டிகிரி முடித்து விட்டு இங்கு வேலையில் சேர்ந்திருக்கிறாள். ஷ்யாம் ஆறு வருடங் களாக இங்கிருக்கிறான். என்ன அசிங்கம்! பள்ளிக்கூடம் என்பது கோவில் அல்லவா? இங்கு போய் இப்படிச் செய்கிறார்களே! இன்னும் என்னவெல்லாம் நடக் கிறதோ? இதைக் கண்டிப்பாகத் துர்காவிடம் சொல்லித் தான் ஆக வேண்டும். ஆனால் எப்படிச் சொல்வது? சொல்லவே வெட்கமாக இருக்கும் போலிருக்கிறதே என்று நினைத்துக் கொண்டாள்.

அவள் ரூமை விட்டு வெளியே வந்து சற்று உலாத்தினாள். வாசல் அருகே அவள் வரும் போது சந்தியா அவள் தன் ஆபீஸ் ரூமிற்கு வருவது தெரிந்தது. வேறு பக்கம் நடந்து கொண்டிருந்து விட்டு உள்ளே வந்தாள். ''இப்போ தான் வரீங்களா, மேடம்?'' என்று சந்தியா கேட்டாள்.

''ஆமாம்மா. நீ?''

''நான் வந்து கொஞ்ச நாழி ஆச்சு. ரிக்கார்ட்ஸ் ரூமில கொஞ்சம் பேப்பர்ஸ் வைக்கப் போயிருந்தேன், மேடம்,'' என்றாள்.

''அப்படியா...?'' என்று தன் அறைக்குள் போன வசுந்தரா கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். கொஞ்ச

நேரத்தில் ஷ்யாம் தன் ரூம் கதவைத் திறந்து கொண்டிருந்தான். தான் தனியாக இருக்கிறோம். இவர்களிடம் வாய் கொடுக்கக்கூடாது என்று வசுந்தரா சும்மா இருந்தாள்.

கொஞ்ச நேரத்தில் துர்காவும் வந்து விட்டாள். ஆதித்யா அவளை இறக்கி விட்டுவிட்டு, 'தன் வேலை ஒன்றிருக்கிறது, பார்த்துவிட்டு வருகிறேன்,' என்று சொல்லிப் போனான். துர்கா தான் பொறுப்பேற்றுக் கொண்டதும் அந்த பெரிய ஹாலில், இன்னும் இரண்டு டேபிள், சேர் போடச் சொல்லிவிட்டாள். தனக்கும் ஆதிக்குமாக.

சற்று நேரத்தில் ஆதியும் வந்து விட, அவனும் துர்காவுமாக அவரவர் இருக்கையில் அமர்ந்தனர். சந்தியா மும்முரமாக வேலை செய்துகொண்டிருந்தாள். சற்று நேரத்தில் ஷ்யாம் உள்ளே வந்தான். தனக்கு வேண்டிய ஸ்போர்ட்ஸ் சாமான்கள் லிஸ்டுடன்.

வசுந்தராவுக்கு தான் கண்ட காட்சியைத் துர்காவிடம் சொல்லச் சந்தர்ப்பமே கிடைக்கவில்லை. கொஞ்ச நேரம் கழித்துத் துர்காவும், ஆதியும் மட்டும் இருக்கும் நேரம் பார்த்துத் துர்காவிடம், ''மேடம், உங்களிடம் கொஞ்சம் தனியாகப் பேச வேண்டும்,'' என்று ஒரு பேப்பரில் எழுதி நீட்டினாள்.

அதன் பிறகு துர்கா, ''ஆதி, வெளில எனக்கு கொஞ்சம் வேல இருக்கு. போயிட்டு வந்துடறேன்,'' என்று சொல்லிவிட்டு வகுப்புகளுக்கு இடையே இருந்த காலி இடத்துக்குப் போனாள். பின்னாலேயே வசுந்தராவும் போனாள்.

''என்ன விஷயம், சொல்லுங்கள், வசுந்தரா?'' என்று கேட்டாள் துர்கா.

''மேடம், இது ரொம்ப தர்ம சங்கடமான விஷயம். எப்படிச் சொல்றது, நீங்க எப்படி எடுத்துப்பீங்கன்னே தெரியல்ல. தயக்கமா இருக்கு,'' என்றாள், வசுந்தரா.

''நான் வந்தவுடனேயே கவனித்தேன். நீங்க வழக்கம் போல் இல்லை. எதுவானாலும் தயங்காமல் சொல் லுங்க. பர்ஸனலா இல்லை ஸ்கூல் விஷயமா?'' என்று கேட்டாள் துர்கா.

''இல்லை மேடம்! ஸ்கூல் விஷயம் தான். இன்னைக்குக் காலைல...'' என்று தொடங்கி ஒரு மாதிரியாகத் திக்கித் திணறி தான் பார்த்ததைச் சொல்லி முடித்தாள். அதற்குள் சொன்ன வசுந்தராவுக்கும், கேட்ட துர்காவுக்கும் வேர்த்து ஊற்றி விட்டது.

''சரி. நீங்க போங்க, வசுந்தரா! இதை எப்படி டீல் பண்ணலாம்னு யோசிக்கிறேன். எங்கிட்டே சொல்லிட் டீங்க இல்லே, இனிமே நான் பார்த்துக்கறேன்,'' என்று கூறி விட்டாள் துர்கா.

அடுத்த ஒரு மணி நேரம் கழித்து வசுந்தரா வந்து, ''மேடம், ரொம்ப தலையை வலிக்கிறது. நான் வீட் டுக்குப் போகலாமா?'' என்று கேட்டதும், அவளுடைய நிலைமை புரிந்து சரி என்று சொல்லிவிட்டாள் துர்கா.

கொஞ்ச நேரத்திற்குப் பின் ஆசிரியர்கள், மாணவர்கள் எல்லோரும் வந்து அவரவர் வகுப்புகளுக்குப் போன பிறகு சன்னமான குரலில் ஆதித்யாவுடன் இந்த

விஷயத்தைத் தலை குனிந்து கொண்டே விவாதித் தாள்.

'''வயசு!' வேறென்ன?'' என்று அவன் சொன்னாலும் ''ஸ்கூலில் இந்த மாதிரி ஒழுங்கீனத்தையெல்லாம் ஒரு நாளும் அனுமதிக்கக் கூடாது!'' என்றான்.

''சரி. என்ன பண்ணலாம், சொல்லுங்க?'' என்றாள் துர்கா.

''ஆமா, தோட்டக்காரனுக்கும் காவல்காரனுக்கும் இதெல்லாம் தெரிந்திருக்குமா? அல்லது அவர்களுக்குத் தெரியாமல் நடந்திருக்குமா? அவர்களுக்குத் தெரிந்திருந் தால் அவர்களையும் ஒரு பிடி பிடிக்கவேண்டியதுதான்,'' என்றான் ஆதி.

''அப்பா காதுக்கு இதெல்லாம் போக வேண்டாம், ஆதி,'' என்று கேட்டுக் கொண்டாள் துர்கா.

அடுத்தது இருவருமாகச் சந்தியாவை அழைத்தனர். துர்காவுக்கு அவளைப் பார்க்கவே பிடிக்கவில்லை. ஆனாலும் ஆதி, ''ஒரு பெண்ணை நான் விசாரிப்பது முறையாக இருக்காது. நீ கேளு,'' என்று சொல்லிவிட்டு நாற்காலியைத் தொலைவில் போட்டுக் கொண்டு லாப்டாப்பைத் தன் மடியில் வைத்துக் கொண்டு உட் கார்ந்து விட்டான்.

''காலைல எத்தனை மணிக்கு வந்தே?'' என்று துர்கா அவளைக் கேட்டாள்.

''சீக்கிரமே வந்து விட்டேன்,மேடம்,'' என்றாள் சந்தியா.

''தோட்டக்காரனும், வேலைக்காரனும் அப்போ இருந்தாங்களா?''

''நான் கவனிக்கல்லே, மேடம். கதவு திறந்திருந்தது. நான் உள்ளே வந்து வேலையைப் பார்க்க ஆரம்பிச் சுட்டேன்,'' என்றாள் சந்தியா.

''உன் ரூம்லேதான் வேலை பார்த்துகிட்டிருந்தி யாம்மா?''

''ஆமாம் மேடம். ஏன் மேடம் இதெல்லாம் கேக்கறீங்க?''

''அது கிடக்கட்டும். உனக்கு அடுத்ததா யார் வந்தாங்க?''

''அது வந்து... வந்து, ப்ரின்சிபால் மேடம் வந்தாங்க.''

''ஏம்மா, உனக்கு நிச்சயமா தெரியாதா? தடுமாறு றியே!''

''இல்லை மேடம். அவங்கதான் வந்தாங்க. ஏன் மேடம், ஏதாவது பொருளைக் காணோமா?''

''காணாமல் போயிட்டுயிருக்கறது ஸ்கூலோட மானம், நல்ல பேர். உன்னைப் போல மனிதர்களால் தான்!'' என்றாள் துர்கா.

''என்ன மேடம் சொல்றீங்க?'' என்று கேட்டாள் சந்தியா. அவள் முகம் வெளுத்து விட்டது.

''உன் காதல் விளையாட்டையெல்லாம் ஸ்கூலுக்கு வெளியே வெச்சுக்கோன்னுதான் சொல்ல வரேன்.''

சரியாக அதே சமயத்தில் ''எக்ஸ்க்யூஸ்மி, மேடம்!'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே வந்தான் ஷ்யாம்.

மகா கெட்டிக்காரனான அவன் ஒரு நொடியில் விரும்பத்தகாத ஏதோ ஒன்று நடக்கிறது என்று புரிந்து கொண்டு விட்டான்.

''என்ன மேடம், என்ன ஆச்சு?'' என்று கேட்டுக் கொண்டு அவன் வரவும், ஆதித்யா எழுந்து வந்து தன் சேரை இடத்தில் போட்டுக் கொண்டு உட்கார்ந் தான்.

''என்ன சந்தியா, பள்ளிக்கூடம் கோவில் மாதிரின்னு உனக்குத் தெரியாதா?'' என்றாள் துர்கா. ''ஆதித்யா, அந்த லெட்டரை ப்ரிண்டவுட் எடுத்துட்டீங்கல்ல? கொடுங்க. இப்பவே சந்தியாகிட்டே குடுத்துடலாம்,'' என்றாள்.

''என்ன லெட்டர் மேடம் அது?'' என்று கேட்டாள் சந்தியா.

''உன் வேலை நீக்க உத்தரவு தான்!'' என்றாள் துர்கா.

தடுமாறிப்போன சந்தியா, ''நான் என்ன தப்பு செய்திருந்தாலும் மன்னிச்சுடுங்க மேடம். தயவு செய்து என்னை வேலையை விட்டு நீக்கிடாதீங்க, மேடம்,'' என்றபடி அவள் காலில் விழப் போனாள்.

''நீ எதுக்கு சந்தியா மன்னிப்பெல்லாம் கேட்டு கிட்டு? அப்படி யெல்லாம் திடீர்னு யாரும் யாரையும் வேலையை விட்டு நீக்கிவிட முடியாது,'' என்றான் ஷ்யாம்.

''முடியும், மிஸ்டர், ஷ்யாம். இந்தாங்க துர்கா, ஷ்யாமோட டெர்மினேஷன் லெட்டர். ஆஸ் தி

கரஸ்பாண்டெண்ட் ஆப் திஸ் ஸ்கூல் நீங்க கையெழுத்துப் போட்டு அதை மிஸ்டர் ஷ்யம் கிட்டே குடுத்துடுங்க,'' என்றான் ஆதித்யா.

''நான் இந்த ஸ்கூலின் பர்மெனன்ட் எம்ப்ளாயீ. என்னை அத்தனை சுலபமா நீக்கிவிட முடியாது.'' ஷ்யாம்.

''ஒழுங்கீனத்துக்கு நடவடிக்கையாக நிர்வாகம் எந்தக் கடுமையான நடவடிக்கையையும் எந்த நேரமும் எடுக்க முடியும்,'' என்றான் ஆதி, அலட்டிக் கொள்ளாமல்.

''அப்படி என்ன நாங்க ஒழுங்கீனமாக நடந்து கொண்டு விட்டோம்?'' என்று ஆங்காரமாகக் கேட்டான் ஷ்யாம்.

''காரணம் எல்லாம் அந்த லெட்டரில் இருக்கு. நாளைக்கு வந்து அரியர்ஸ்ஸை வாங்கிக்குங்க,'' என்றான் ஆதி.

''இதை நான் சுலபமா விடமாட்டேன். உங்களை எப்படிச் சந்திக்கு இழுக்கிறேன்னு பாருங்க,'' என்றான் ஷ்யாம்.

''இதோ பாருங்க. இதுக்குப் பதிலா நீங்க 'இனிமே இப்படி நடந்துக்க மாட்டேன்'னு சொல்லிக் கேட்டுக் கிட்டீங்கன்னா ஒருவேளை நிலைமை மாறுமா யிருக்கும்,'' என்றாள் துர்கா.

''என்ன துர்கா, மிரட்டுறீங்களா?'' என்று ஆரம்பித்த ஷ்யாமை இடை மறித்தான் ஆதி. ''இது மரியாதை இல்லை, மிஸ்டர் ஷ்யாம்!'' என்றான்.

''நீங்க குற்றம் என்னன்னுகூடச் சொல்லாமே ஏதோ டெர்மினேஷன் லெட்டர் குடுக்கறீங்களே, அது ரொம்ப

மரியாதையா? மரியாதைங்கறது குடுத்து வாங்கணும், மிஸ்டர் ஆதித்யா!'' என்றான் ஷ்யாம்.

''அவமரியாதை தர மாதிரியான காரியங்களைச் செய்தா, அதுதான் கிடைக்கும்.''

''அப்படி என்னய்யா செய்துட்டோம். நீயும் இந்த துர்காவும் செய்யாததை யெல்லாம்...'' என்று ஷ்யாம் குதிக்க, குபீரென்று நாற்காலியை விட்டெழுந்த ஆதித்யா, ''ஷட்டப். இதுக்கு மேல ஒரு வார்த்தை நல்ல படியா வீடு போய்ச் சேர மாட்டிங்க. போங்க இந்த இடத்தை விட்டு,'' என்றான்.

''ஏய், நீயும் இந்த துர்காவும் என்னவோ இந்த ஸ்கூலை முன்னுக்குக் கொண்டு வந்து கிழிக்கறதா திட்டம் போடறீங்களா? அது நடக்கறதை நானும் பார்க்கிறேன்.''

''இதோ பாரு. ஸ்கூல்ல வந்து அசிங்கமா ஒரு பெண்ணோட நடந்துகிட்ட. தப்பு உனக்கே தெரிந் திருக்கறதுனால இந்த எகிறு எகிர்ரே. மொதல்ல நட வெளியே. உன் சம்பளப் பாக்கியைக் கூடத் தரதா இல்லை. உன்னால ஆனதைப் பார்த்துக்கோ,'' என்றான் ஆதி.

வகுப்பறைகள் சற்று தூரத்தில் இருந்ததால் அந்த வரை சப்தம் எட்டவில்லை. ஆனால் தோட்டக்காரனும் வாட்ச்மேனும் வந்து விட்டார்கள்.

''இந்த ஆளைக் கழுத்தைப் பிடிச்சு வெளியே தள்ளிட்டு இங்கே வாங்கய்யா!'' என்றான் ஆதி.

அதற்குள் சந்தியா துர்காவின் காலிலேயே விழுந்து விட்டாள்.

''எத்தனை நாளா பழக்கம்?'' என்று கேட்டாள் துர்கா.

''ஒரு மாதம் கூட இருக்காது.'' இது சந்தியா.

''அதற்குள்ளேயா இத்தனை தூரம் வளர்ந்திருக்கு? கல்யாணம் பண்ணிக்கற எண்ணமா?''

''இல்லே, மேடம்! அந்த மாதிரியெல்லாம் பேசிக் கல்லே.''

''எத்தனை தூரம் போயிருக்கே அவனோட?''

''இந்த ரிக்கார்ட் ரூம் வரைதான்.''

''நான் கேக்கறது வேறே.''

''ஐயய்யோ, மேடம்! அப்படியெல்லாம் ஒன்று மில்லை. ஸாரி, மேடம். நான் நடந்துகிட்டது தப்பு தான். என்னை வேலையை விட்டு நீக்கிடாதீங்க, மேடம். எங்க வீட்டுக்கு இந்த நேரம் என் சம்பளம் ரொம்ப முக்கியம்!'' என்று அழுது கொண்டே கெஞ்சினாள் சந்தியா.

''அந்த ஆள் சவால் விட்டுட்டுப் போயிருக்கான். நீ வெளியே அவனோட சேர்ந்து ஸ்கூலுக்கு எதிரா எதுவும் செய்ய மாட்டேன்னு என்ன நிச்சயம்?'' என்று கேட்டான் ஆதி.

''சத்தியமா மாட்டேன் சார். எங்க அப்பா, அம்மா மேல சத்தியமா சார். இனி அந்த ஆளைப் பார்க்க நேர்ந்தாக்கூட பேச மாட்டேன்,'' என்று மறுபடியும் கெஞ்சினாள் சந்தியா.

''ஒரு பத்து நிமிஷம் வெளியே இரு. நான் திரும்பக் கூப்பிடறேன்,'' என்றாள் துர்கா.

அவள் போனதும் துர்கா, ''என்ன சொல்றீங்க, ஆதி?'' என்று கேட்டாள்.

''அந்தப் பொண்ணு ரொம்ப பயந்திருக்கா. பத்து நிமிஷம் காத்திருக்கச் சொல்லியிருக்கியே, அந்தத் தண்டனையே போதும். அவளைக் கூப்பிட்டு அந்த லெட்டரைக் கிழிச்சிப்போடு. பாவம், சின்னப் பொண்ணு!'' என்றான் ஆதி.

''ஓஹோ, சின்னப் பொண்ணுன்னா சாருக்கு ரொம்ப மனசு இரங்கிடுமாக்கும். இருக்கட்டும். கவனிச்சிக் கறேன்.''

''பெண்கள்னாலே எனக்கு ரொம்ப சாஃப்ட்கார்னர் தான்!'' என்றான் ஆதி.

''இருக்கும், இருக்கும். நான் உங்க வீட்டுக்கு வந்தப் புறம் வெச்சுக்கறேன் கச்சேரியை.''

''அப்பாடா!''

''எதுக்கு இப்போ அப்பாடா?''

''பின்னே, எங்க என் பச்சைக்கிளிக்கு இந்த ஸ்கூல் நிர்வாகத்திலெல்லாம் மாட்டிண்டு, சுபாவமான விளையாட்டெல்லாம் போயிடுச்சோன்னு நினைச்சேன். சரி சரி. கூப்பிடு அவளை,'' என்றான்.

''சந்தியா...'' என்று இவள் கூப்பிடவும், உள்ளே வந்த அவள் கண்களில் நீர் மல்கக் கை கூப்பினாள்.

''இதோ பார்! இந்த டெர்மினேஷன் லெட்டரைக் கிழிச்சிப் போட்டுடறேன் நீ திரும்ப இந்த ஸ்கூலின் அலுவலக நிர்வாகி தான். பொதுவா ஒரு வார்த்தை சந்தியா! யாரோட பழகினாலும் ஜாக்கிரதையா இருக்க வேண்டியது பெண்கள்தாம்மா. எப்பவும் நினைவு வெச்சுக்க வேண்டிய விஷயம் இது!'' என்றாள்.

அவள் தலை குனிந்து நிற்க, ஆதி ஒரு பொருள் பொதிந்த பார்வையை இவள் மேல் வீசினான். நமுட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டாள் துர்கா.

''பாவம் அழுதழுது கண்ணு முகமெல்லாம் சிவந்து கிடக்கு பார் அந்தப் பெண்ணுக்கு!'' என்றான் ஆதி அவள் போனதும். துர்கா அவனை முறைக்க, கன்னத்தில் போட்டுக் கொண்டான் சிரித்துக் கொண்டே.

அடுத்துத் தோட்டக்காரனையும், வாட்ச்மேனையும் கூப்பிட்டான் ஆதி. தோட்டக்காரனுக்கு ஸ்கூல் காம்பௌண்டின் பின் சுவரை ஒட்டியே ஒரு ரூம் உண்டு. அவன் மனைவியும், வெளியிலிருந்து வரும் ஒரு பெண்ணும் தான் பெருக்குவது, பாத்ரூமை யெல்லாம் அலம்புவது போன்ற வேலைகளைக் கவனித்துக் கொண்டனர்.

வாட்ச்மேன் இரண்டு பேர் உண்டு. இவன் பகல் நேர வாட்ச்மேன். காலை 7 மணிக்குள் இரவு நேர வாட்ச் மேன் இவனிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டுப் போய்விடுவான்.

''துர்கா! நீ இவங்களோடு பேச வேண்டாம். படிக் காதவங்க. ஏதாவது தரக் குறைவா வார்த்தையை

விட்டுட்டாங்கன்னா நமக்குத்தான் அசிங்கம். நான் பேசிக்கறேன்,'' என்றான் ஆதி. அவனுக்குத் தன் மேல் இருக்கும் அக்கறையை நினைத்து மனம் பூரித்தாள் துர்கா.

''ஏம்பா, ஸ்கூலைத் திறந்து போட்டுட்டு அப்படி முக்கியமான என்ன வேலை பார்க்கப் போயிருந்தீங்க?'' என்று கேட்டான் ஆதி.

''இல்லை சார். தோட்டக்காரர் வீட்டுக்குப் போய்க் காப்பி சாப்பிட்டுட்டு வரேன்னு போனாரு. என்னை ஷ்யாம் சார் தான் கடைக்கு அனுப்பிச்சாரு.''

''கடைக்கா? என்ன வாங்க?''

''சிகரெட்.''

''அவருக்குத்தான் அறிவில்லை. ஐயா, உனக்குக் கூடவா தெரியாது. இது ஸ்கூல், சிகரெட் பிடிக்கக்கூடா துன்னு? பார்க்கப்போனா எங்கே சிகரெட் பிடிச்சாலும் தப்பு தான். அவரு வாங்கிட்டு வரச்சொன்னாராம். இவரு போனாராம்! எத்தனை நாளா இவங்க இரண்டு பேரும் பழகறாங்க?''

''இப்போ ஒரு பத்து நாளாத்தான் சார்! அந்தம்மா ரூமிலே தான் உட்கார்ந்து பேசிக்கிட்டிருப்பாங்க. இன்னிக்குத்தான் அவங்களை நான் திரும்பி வரச்சே அங்கே காணோம்!'' என்றான்.

''சரி, உனக்குத் தொடர்ந்து இங்கே வேலை செய்ய இஷ்டமா? இல்லே, ஷ்யாம் மாதிரி வெளியே போறீங் களா இரண்டு பேரும்?'' என்று கண்டிஷனாகக் கேட் டான் ஆதித்யா.

''சார்! சார்! மன்னிச்சுடுங்க சார். இனிமே பொறுப்பா நடந்துக்கறோம் சார். வேலையை விட்டெல்லாம் எடுத்துடாதீங்க. திண்டாடிப் போயிடுவோம் சார். குழந்தை குட்டியோட நடுத்தெருவில நிக்க வேண்டியிருக்கும் சார்!'' என்று இருவரும் மாறி மாறிக் கெஞ்சினார்கள். திரும்பத் திரும்ப மன்னிப்புக் கேட்டார்கள்.

''சரி சரி. போய் வேலையைப் பாருங்க. திரும்ப இப்படி நடக்க இடம் கொடுத்தீங்கன்னா உங்களைத் தூக்கிடுவேன்!'' என்றான் ஆதி.

''ரொம்ப டான்க்ஸ் சார். டான்க்ஸ் மேடம்!'' என்று சொல்லி சல்யூட் அடித்தபடி அவர்கள் வெளியேறினார்கள்.

அதன் பிறகு ஆதியும், துர்காவும் வேலையில் மூழ்கி விட்டனர்.

17

கல்யாண நாள் நெருங்க நெருங்க, ஆஷாவின் அட்டகாசம் அதிகரித்துக் கொண்டே போயிற்று. கூறைப் புடவை எடுத்து வந்த அன்றே நடராஜிடம் உன்னைச் சந்தித்தே ஆவேன் என்று அடம் பிடித்து, வீட்டிலும் ஏதோ சொல்லிவிட்டு டோனி கடைக்கு வந்து விட்டாள். நடராஜும் அங்கு வர, வழக்கமான ஆஷாவாக இல்லாமல் அவனிடம் பொரிந்து கொட்டித் தீர்த்தாள்.

''இதென்ன, உங்க வீட்ல எல்லாமே உங்க தங்கை, உங்க அம்மா இஷ்டப்படிதான் நடக்கணுமா? எனக்குன்னு அபிப்ராயமே கிடையாதா?''

இவர்கள் இரைந்த குரலில் வாக்குவாதம் செய்யவே, டோனியும் உள்ளே யிருந்து வந்து பார்த்தான். அவனிடமும் பெரிதாக நியாயம் கேட்டாள்.

நடராஜுக்கு ஏற்கெனவே நாசூக்காகப் பாதி விஷயங்கள் சொல்லியிருந்தாள் துர்கா. அதனால் அவன் ஆஷா நினைத்தபடி பொங்கி எழவில்லை.

''இதோ பாரு ஆஷா. வம்பு தும்பு இல்லாமே இரண்டு வீட்டிலும் ஒத்துகிட்டு கல்யாணம் நடக்கிறது பெரிய விஷயம். அப்படி இருக்கும் போது இந்த விஷயங்களையெல்லாம் நீ பெரிசு பண்ணாதே. கல்யாணத்தின் போது நீ உடுத்திக்கற புடவையெல்லாம் பத்தித்தான் அவங்க பேசினாங்களே தவிர, அப்புறம் உன் இஷ்டம் தானே! நீ கொஞ்சம் பொறுத்துப் போவதுதான் நல்லது. கல்யாணம் ஸ்மூத்தா நடக்க வேணாமா, சொல்லு?'' என்றான்.

''நீ இப்படி உன் தங்கைக்குத்தான் பரிஞ்சு பேசுவியா யிருக்கும். நான்தான் ஏமாளி.''

''ஏய், எதுக்கு என்ன சொல்றே ஆஷா நீ? நடராஜ் சொல்றது நியாயம்தானே. யோசித்துப் பாரேன்,'' என்றான் டோனி.

''போ டோனி! உங்களுக்கெல்லாம் புரியாது. நான் ரொம்பவே இன்ஸல்ட்டடா ஃபீல் பண்ணறேன்,'' என்றாள் ஆஷா.

''ஆஷா, எதையுமே நாம எடுத்துக்கற விதத்திலதான் இருக்கு. நீ கிளம்பு. கொஞ்சம் பொறுமையா இரு. அந்த

ஒரே யோசனைதான் நான் உனக்குச் சொல்வேன். உங்கண்ணா நாம இரண்டு பேரும் சந்திக்கக்கூடாதுன்னு சொல்லியிருக்கார். அனாவசியமான உரசல் எல்லாம் எதுக்கு. நீ கிளம்பு,'' என்றான் நடராஜ்.

''நீ என்னோட நடராஜ்தானான்னே எனக்குச் சந்தேகமா இருக்கு.''

''இதோ பார். இப்போ நாம பொறுப்பா நடந்துக்கிட்டு கல்யாணத்தை முடிச்சுக்கணும். அதுதான் முக்கியம். சரியா?'' என்றான் நடராஜ்.

அரைமனதோடு, கோபமாகக் கிளம்பிப்போனாள் ஆஷா.

நடராஜ், டோனியிடம், ''டேய், எனக்குப் பயமா இருக்குடா!'' என்றான். ''இவளைக் கல்யாணம் பண்ணிக்க முடிவெடுத்ததே தப்போ! வீட்டுக்கு வந்து ஒத்து இருப்பாளான்னே கவலையா இருக்குடா.''

''ஏய், போடா! அவ ஒரு பிடிவாதக்காரி. அனுபவமும் வேறே கிடையாது. கொஞ்ச நாள் ஆனா எல்லாம் சரியாயிடும். கவலைப்படாதே!'' என்றான் டோனி.

அன்றைக்கு ரேவதி, அவள் அம்மா, அப்பா, ஆஷா எல்லாரும் உட்கார்ந்து ரிசப்ஷனில் என்ன ம்யூசிக் ப்ரோக்ராம் வைக்கலாம் என்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

''அமரிக்கையா ஒரு பாட்டுக் கச்சேரியை வெச்சுடலாம்,'' என்று பெரியவர்கள் இருவரும் சொல்ல, ரேவதி ஆஷாவின் முகம் போன போக்கைப் பார்த்தவள்,

''இல்லைமா, லைட் ம்யூசிக்கே வைக்கலாம்,'' என்றாள்.

''லைட் ம்யூசிக்கில் இப்போ லேட்டஸ்டா தாரகா ட்ரம்ஸ்காரங்க பாட்டு தான் எனக்கு வேணும். அது தான் லேட்டஸ்ட்!'' என்றாள் அஷா.

''இல்லை ஆஷா, அத்தனை மாடர்ன் ட்ரூப்பை கூப்பிட்டா அவங்க ரொம்ப லேட்டஸ்டான குத்துப் பாட்டா பாடுவாங்க. பெரியவங்களுக்கெல்லாம் பிடிக்காது.''

''யாரு, நம்ம அத்தை மாமாவுக்கா?''

''இல்லைம்மா. உங்க அத்தை, மாமா அவங்க உறவுக்காரங்க எல்லோருக்கும் பிடிக்க வேண்டாமா? குத்துப் பாட்டு இவங்க ஏக சத்தமா பாட, கூட்டத்தில் சின்னப் பசங்கள் எல்லாம் எழுந்து ஆட, அதெல்லாம் நல்லா இருக்காதும்மா!'' என்றாள் ரேவதி.

''நான் அவங்க பாட்டு வைக்கச் சொல்றதே அதுக்காகத்தான். என் சிநேகிதிங்க, நடராஜ் சிநேகிதங்க எல்லோரும் ஆடுவாங்க. ஒரு ஸ்டேஜ்ல நானும் நட ராஜும் கூட ஆடுவோம். மஜாவா இருக்கும். அண்ணி, என் ப்ரெண்ட் கல்யாணத்தில என்ன கலாட்டா தெரியுமா?'' என்றாள் ஆஷா.

''அவங்க வீட்டுக் கலாச்சாரம் அப்படி இருந்திருக் கலாம்மா. நம்ம வீடுகளுக்கெல்லாம் அது சரிப்பட்டு வராது, ஆஷா!'' என்றாள் ரேவதி.

''அது மட்டுமல்லாமல், உங்க அண்ணனுக்கே அதெல் லாம் பிடிக்காதும்மா,'' என்றாள் ரேவதியின் அம்மா.

''எங்க அண்ணனைப் பத்தி எனக்குத் தெரியாததா உங்களுக்குத் தெரிஞ்சுடுத்து. இது என் கல்யாணம் தானே. என் இஷ்டப்படி எதுவும் நடக்காட்டா என்ன அர்த்தம்? சீ... எனக்கு ஒண்ணுமே பிடிக்கல்லே!'' என்று சொல்லி அவள் எழுந்து போனாள்.

ஆஷா சொன்ன வார்த்தைகளிலும் அவள் நடந்து கொண்ட விதத்திலுமாய் மனம் புண்பட்டுப் போன பெரியவர்கள் இருவரும் எழுந்து போய்விட்டனர்.

ஆஷாவின் கோபம் ரொம்ப பழக்கமென்பதால், ரேவதி முதலில் தன் அப்பா, அம்மாவைத் தேடிப் போனாள். இவள் போகும் போது இவள் அம்மா, பாவம்! ரொம்ப வருத்தமாய்த்தான் உட்கார்ந்திருந்தாள். அப்பா படுத்துக் கொண்டிருந்தார். அம்மா, வருத்தப்படாதேம்மா! அவ குணம் தெரிஞ்சதுதானே!'' என்ற ரேவதி அவளை மெல்லத் தொட்டாள்.

''அவ குழந்தை. அவ மேல எனக்கென்னம்மா கோபம்? ஆனா ரொம்ப பயமா இருக்கு ரேவதி. கவலையாகவும் இருக்கு. இந்தப் பொண்ணு அங்கே போய் நல்லா வாழல்லேன்னா, அவளுக்கும் கஷ்டம், உனக்கும், ஏன், நமக்கெல்லாமும் தான் கஷ்டம். அது தான் பயந்து போய் உட்கார்ந்திருக்கிறோம்.''

''இல்லேம்மா. அவ சொன்னதுக்குக் கோபப்பட்டுத் தான் இங்கே வந்து உட்கார்ந்திருக்கீங்கன்னு நினைச்சேன். நீங்க சொன்ன கவலை எனக்கும் இருக்கு. அவ அண்ணாவை விட்டுப் புத்தி சொல்லச் சொல்றேன். அதுக்கும் அவ சரிப்பட்டு வரல்லேன்னா, அப்புறம் கடவுள் விட்ட வழி. கவலைப் பட்டுப் பிரயோஜனமில்லை!'' என்றாள் ரேவதி.

"இதோ பார். நாங்க இரண்டு பேரும் இங்கே வந்து தங்கியிருக்கோம்னா இந்த பந்தம் இன்னி பந்தமா? சொல்லு. என்னிக்கு என் அண்ணா அண்ணி இரண்டு பேரையும் இழந்துட்டு விக்ரமும், ஆஷாவும் நின்னாங்களோ. அன்னிக்கே அவங்களை நாங்கதான் பார்த்துக் கணும்ங்கறது எங்க தீர்மானம். அதனாலதான் இந்தக் குடும்பத்துக்கு ஆதரவா உன்னையும் விக்ரமுக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுத்தோம். இப்போ நீ அனுபவமில்லாதவ, சின்னவள்னு உனக்குத் துணையாக உன் நாத்தனார் கல்யாணத்தில நல்லது பொல்லாதது சொல்ல வந்து உட்கார்ந்திருக்கோம். இது வரைக்கும் விக்ரமும் சரி, ஆஷாவும் சரி, ஒரு வார்த்தை முகம் சுழிக்க எங்களைப் பார்த்துப் பேசியிருப்பாங்களா? அதுவும் மாப்பிள்ளைக்கு எங்க பேர்ல ரொம்ப மரியாதை. ஆனா, இந்தப் பொண்ணோட குணம்தான் கவலையா இருக்கு. வேறென்ன?" என்றாள்.

* * *

ஷியாமை வேலையை விட்டுத் தூக்கி ஒரு வாரம் இருக்கும். ஆதித்யாவையும் அழைத்துக் கொண்டு துர்கா மாவட்டக் கல்வி அதிகாரி ஆபீஸுக்குப் போக நிச்சயித்தாள். இருவரும் அவர்கள் ஆபீஸுக்கு விண்ணப்பித்திருந்தது சம்பந்தமான எல்லா பேப்பர்கள் இருந்த ஃபைலையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டார்கள்.

அங்க போனதும் அந்த ஆபீஸரைப் பார்க்க அனுமதி கிடைத்து உள்ளே போனார்கள். ஏற்கெனவே தாங்கள் விண்ணப்பித்திருந்ததையும் சொல்லி அதற்குண்டான பேப்பரையும் கொடுத்தார்கள்.

''ஸோ, நீங்க உங்க பள்ளிக்கு 11, 12 இரண்டு வகுப்புகளுக்கும் அனுமதி கேக்கறீங்க. நான் அதற்ருண்டான தகுதிகள் என்னென்ன இருக்க வேண்டும் என்று எழுதி அனுப்பறேன். அதற்கப்புறம் பார்க்கலாம். இப்போ எனக்கு ஒரு மீட்டிங் இருக்கு. நான் கிளம்பணும். நான் திரும்ப உங்களை போன்ல கூப்பிடறேன்,'' என்றார் அவர்.

''மேடம், தேவையான தகுதிகள் எல்லாமே பள்ளிக் கூடத்திற்கு இருக்குன்னு நினைக்கிறேன். அதுல ஒண்ணு இரண்டு குறைஞ்சா பர்மிஷன் கிடைக்காதா?'' என்று கேட்டாள் துர்கா கவலையோடு.

''நாளைக்கே வந்து பேப்பர்ஸ் எல்லாம் வாங்கிக் கோங்க. அப்படி ஏதாவது குறைஞ்சா. அதைச் சரி பண்ணப்பாருங்க. உங்க ஸ்கூல் ரொம்ப வருஷமா நல்ல பேரோட நடந்துகிட்டிருக்கிறது தானே. ஏதாவது குறைஞ்சா அதை உடனே சரி பண்ணிடுங்க. நாங்க டைம் கொடுக்கறோம்,'' என்றார் அந்த அதிகாரி.

''சரி, மேடம்! இந்த வருஷம் தான் அப்பா கொஞ்சம் உடம்பு முடியாமே சரியா ஸ்கூலைக் கவனிக்க முடியாமே போயிட்டார். எனக்கும் போஸ்ட் கிராசுவேஷன் பைனல் இயர். அதனால படிப்புல தீவிரமா கவனம் செலுத்த வேண்டியிருந்தது. அதனாலேயே இவரையும் நிர்வாகத்திலே முக்கிய உறுப்பினரா சேர்த்துக்கிட்டு, மும்முரமா எல்லாத்தையும் சீர்திருத்திகிட்டுருக்கோம். நிச்சயமா சீக்கிரமே மாணவர்களை நல்ல மார்க் வாங்க வெச்சுருவோம்.''

''இம்ப்ரூவ்மெண்ட் எழுத வெச்சுருக்கீங்களா எல்லாரையும்?''

''ஆமா, மேடம்! எல்லாருமே இம்ப்ரூவ்மெண்ட் எழுதறாங்க. பைதவே, இவர் மிஸ்டர் ஆதித்யா. எங்க குடும்ப நண்பர் வீட்டுப் பிள்ளை.''

''நமஸ்தே மேடம்! நான் ஐ.ஐ.எம்., அகமதாபாத்ல எம்.பி.ஏ. படிச்சி கோல்ட் மெடலோட பாஸ் பண்ணி யிருக்கேன். வீட்லேருந்து பண்ணறமாதிரி ஒரு எம்.என்.சி. பிராஜக்ட் எடுத்துகிட்டு, கூடவே இவங்களுக்கு ஸ்கூல் விஷயத்திலேயும் உதவி பண்ணறேன், மேடம்.''

''வெரிகுட், மிஸ்டர் ஆதித்யா! நான் இன்னிக்கு அவசரமா போக வேண்டியிருக்கு. நாளைக்கு வந்து கனெக்டட் பேப்பர்ஸ் எல்லாம் வாங்கிக்கிங்க. ஆல் த பெஸ்ட்!'' என்று சொல்லி விட்டுக் கிளம்பிவிட்டார் அந்த அதிகாரி.

இவர்கள் திரும்ப வரும் வழியில் லைன்ஸ் கிளப்பில ஏற்கெனவே கேட்டிருந்த ஒரு விஷயத்தை அவர்களுக்கு ஞாபகப்படுத்த அங்கு சென்றார்கள். லைன்ஸ் கிளப் காரர்கள் நல்ல பள்ளிக்கூடங்களுக்குக் குடி நீர் சுத்தி கரிக்கும் பெரிய மெஷின்கள் வாங்கித் தருகிறார்கள் என்று தெரிந்து, அதற்கு இவர்கள் விண்ணப்பித் திருந்தார்கள். அந்த மெஷின் பள்ளிகளுக்குத் தேவை யானதெனின் லட்ச ரூபாய்க்கு மேல் ஆகும் என்பதால் தான் லயன்ஸ் கிளப்காரர்களை அணுகினார்கள். அவர்கள் இதுவரை பல பள்ளிக் கூடங்களுக்குப் பல ஊர்களிலும் உதவியிருக்கிறார்களாம். எனவே, இவர்கள் கேட்ட போது அவர்களுக்கான தலைமை அலுவலகத் திடம் இருந்து அனுமதி வாங்க வேண்டும். இந்தப் பள்ளிக்கூடம் அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளி தான் என்பதற்கான அத்தாட்சிப் பத்திரமும் கேட்டிருந்தார்கள். இவர்கள் அதைக் கொண்டு வந்து கொடுத்து ஒரு வாரம்

ஆகிவிட்டது. அதற்கு ஏதேனும் பதில் உண்டா என்று கேட்டறிய நேரிலேயே போனார்கள்.

'அந்த மகிழ்ச்சியான செய்தி வர இன்னும் கொஞ்ச நாளாகும். ஆனால், நிச்சயம் தருவார்கள். போர்ட்மீட் டிங்கில் பாசானதும் மெஷின் வந்துவிடும்,'' என்று சொன்னார்கள். சரி, கேட்டவரை திருப்தியான செய்தி தான் என்று மகிழ்ச்சியுடன் இவர்கள் திரும்பினார்கள்.

இப்போது வசுந்தரா, ஆதித்யா, துர்கா மூவரும் பள்ளிக்கூடத்தில் முதல் ஆள் வரும் முன் கடைசி ஆள் போகும்வரை இருந்தார்கள். இவர்களின் உற்சாகமான தூண்டுதலினால் எல்லா டீச்சர்ஸும் நன்றாகவே சொல்லிக் கொடுத்தார்கள். அதிலும் பத்து ஆண்டுகளின் கேள்வித் தாள்களை கம்ப்யூட்டரில் ஏற்றி, அனைத்துக் கேள்விகளுக்கும் அழகாக விடைகள் தயாரித்து, ஒவ்வொரு மாணவருக்கும் கொடுத்துத் திரும்பத் திரும்ப அவைகளை எழுத வைத்தார்கள். குறைந்த பட்சம் இரண்டு நாட்களுக்கு ஒரு முறையாவது பெற்றோர்களை அழைத்துப் பேசினார்கள். யாருக்கு என்ன புரியவில்லையோ வீடு, பள்ளிக்கூடம் இரண்டிலுமே அத்தனை கவனிப்பு இருந்ததற்கு நிச்சயம் பலன் இருக்கும் என்ற நம்பிக்கையோடு மாணவர்களைப் பரிட்சை எழுத வைத்தார்கள்.

18

கல்யாணத்திற்கான ஏற்பாடுகள் இரு வீட்டிலும் மும்முரமாக நடந்து கொண்டிருக்கையில் வழக்கம் போல் இரவு படுக்கப் போனாள் ரேவதி.

விக்ரம் ஏதோ படித்துக் கொண்டிருந்தான். இவளைப் பார்த்ததும் புத்தகத்தை மூடிவிட்டு, ''கதவைத் தாழ்ப்பாள் போட்டாயா?'' என்று கேட்டான்.

''நாமென்ன புது மணத் தம்பதிகளா?'' என்று கேட்டுச் சிரித்த ரேவதி வெறுமே சாத்தியிருந்த கதவைத் தாழ் போட்டுவிட்டு வந்தாள்.

''ஒண்ணுமில்லே ரேவதி. உங்கிட்டே கொஞ்சம் பேசணும்னு நினைச்சேன். ஆஷா தூங்கிட்டாளா?'' என்று கேட்டான்.

''தூங்கிட்டாள்னுதான் நினைக்கிறேன். சப்தத்தைக் காணோம். இல்லே, கதவைச் சாத்திட்டு, மாப்பிள்ளை யோட பேசிகிட்டிருக்காளோ, என்னவோ.''

''இந்தக் கல்யாண வேலைல நீ ரொம்பவே மெலிஞ் சுட்டே, ரேவா! கொஞ்சம் உன் உடம்பையும் கவ னிச்சுக்க வேண்டாமா? கல்யாணம் முடிஞ்சதும் எனக்கு என் ஜுனியர் வரணும்!'' என்றான்.

''பார்ப்போம். கடவுள் என்ன நினைச்சிருக்காரோ?'' என்று சொல்லும் போதே அவள் கண்களில் நீர் திரண்டு விட்டது.

''சீ! டாக்டர்தான் ஒரு கோளாறும் இல்லை. அடுத்த முறை நீ நல்லபடியா பெற்று எடுப்பது என் பொறுப் புன்னு சொல்லிட்டாங்களே!'' என்றான் விக்ரம்.

''சரி. நீங்க சொல்லுங்க. என்னவோ சொல்ல வந்தீங்களே?''

''ஒண்ணுமில்லே கண்ணம்மா! உடம்பைப் பார்த்துக் கோன்னுதான் சொல்ல வந்தேன்.''

''இல்லை, வேறு ஏதோ சொல்லுவதற்கு அது பீடிகை, அவ்வளவு தான். எனக்குத் தெரியாதா உங்களை? என்ன சொல்ல வந்தீங்களோ அதைச் சொல்லுங்க.''

அவளுக்கு இரண்டு முறை கருச் சிதைவு ஏற்பட்டு விட்டது. அதனால் கூடுமானவரை இருவரும் அதைப் பற்றிப் பேச மாட்டார்கள். சாதாரணமான கர்ப்பப்பை பலவீனத்தால் ஏற்பட்ட சிதைவுதான் என்று கருப்பை பலமடைய மருந்து கொடுத்திருக்கிறார்கள்.

''ரேவா! ஆஷா நம்மோட இன்னும் கொஞ்ச நாள் தான் இருக்கப்போறா. எதுக்கு அவள் மனசு வருத்தப் படும்படி எதுவும் சொல்லணும்?''

''அப்படி இருக்கணுமேங்கற கவலைதான் என்னை அப்படி பேசவைக்கிறது அவகிட்டே.''

''புரியல்லியே, நீ சொல்றது!''

அவன் தோளில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள் ரேவதி. அவள் தலையை ஆதரவாகத் தடவிக்கொடுத் தான் விக்ரம். ''ரேவா, என்னம்மா பிராப்ளம்?''

இத்தனை நாட்களில் ரேவதி ஆஷாவைப் பற்றிப் புகாராக எதுவுமே சொன்னதில்லை. பார்க்கப்போனால் சொல்லக் கூடிய சந்தர்ப்பங்கள் இல்லாமல் இருந்த தில்லை. காலேஜைக் கட்டடித்துவிட்டுச் சிநேகிதி களுடன் சினிமா, ஹோட்டல், ஷாப்பிங் போனது, காலேஜில் லெக்சரர்களை உண்டு இல்லை என்று ஆக்கியது. சிநேகிதிகளை அழவிட்டது என்று நிறைய பிரதாபங்கள் வைத்திருந்தாள். பெருமையாக அவள் வந்து சொல்லும் போது, அவை அதிகமாகிறதோ என்று

தோணும்போது, விக்ரமிடம் சொல்லலாமா என்று தோன்றும். பின் அவளே, 'தாய் தகப்பன் இல்லாத பெண். எதுக்குத் திட்டு வாங்கி வைக்கணும்!' என்று விட்டுவிடுவாள். சுபாவமாகவே அவளுக்கு இளகிய மனது. அதிலும் வீட்டில் இருக்கும் இரண்டே பெண்களான தங்கள் இருவரும் மனஸ்தாபப் பட்டுக் கொண்டாலும் வீட்டுச் சூழ்நிலையே மாறிவிடும். தவிர, விக்ரமிற்கு இருக்கும் ஆபீஸ் பிரச்னைகளில் இதையெல்லாம் சொல்லி அவனையும் கவலைப் படுத்துவானேன் என்ற எண்ணமும் காரணம். ஆக, ஒரு நாள் கூட விக்ரமிடம் ஆஷாவைப் பத்தி எதையும் சொன்னதில்லை. இப்போது அது தப்போ, அதனால் தான் அவளுக்கு இத்தனை பிடிவாதம் வளர்ந்து விட்டதோ என்று தோன்றியது.

''சொல்லும்மா. நீயும் மனதில் எதையோ வைத்துக் கொண்டு தான் இப்படிக் குமைகிறாய். என்னதான் நடந்தது?'' என்று கனிவுடன் கேட்டான் விக்ரம்.

''இல்லை, நீங்க சொன்னீங்க, அந்த மாதிரியே அவ நம்ம ளோட கொஞ்ச நாள் மட்டும் இருந்துவிட்டுப் போகிறவள், அங்கேயே இருக்கணுமேங்கற கவலை தான். ஏன்னா, அவளுக்கு அங்கே இருப்பவர்களோடெல்லாம் ஒத்துப் போகிற எண்ணம் எல்லாம் கொஞ்சம் கூட இல்லை. 'சரிப் படல்லேன்னா வந்துட்டுப் போறேன் திரும்ப இங்கேயே!'னு ரொம்ப சுலபமா சொல்றாங்க!'' என்று ஆரம்பித்து நடந்தவற்றில் சிலவற்றை மட்டும் சொன்னாள்.

''முகூர்த்தப் புடவை வாங்கப் போகும்போது நடந்தது, துர்காவுக்கு ஏன் மரியாதை குடுக்கணும்னு அத்தையோட தர்க்கம் பண்ணது - அதெல்லாம் செல்லல்லியே!'' என்றான் விக்ரம்.

"உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"என்ன ரேவா, என் மக்குப் பெண்டாட்டியே!" என்று அவளுடைய தலையில் செல்லமாகக் குட்டியவன், "நான் தானே இந்த விஷயத்தையே இப்ப பேச ஆரம்பிச்சேன். எப்படி? என் அருமைத் தங்கச்சி உங்க இரண்டு பேர் பத்தியும், நீங்க எப்படி அவளைப் படுத்தறீங்கன்னும் எங்கிட்டே அப்பப்ப புகார் பட்டியல் வாசிக்கறாளே."

"பின்னே, நீங்க என்னை ஒண்ணுமே கேக்கல்லியே."

"எனக்கு உன்னையும், அத்தையையும் தெரியும். ஆஷாவையும் தெரியும். கேட்டிருந்தா நான்தான் முட்டாள். நான் அவளுக்கு நானா சொல்றாப்பல புத்தி சொல்றேன். கவனிச்சியா? நான் சொல்றாப்ல எடுத்துக் கிட்டு நல்லபடியா ஆனா, அது அவளுக்கு நல்லது. பார்க்கலாம். நீ கவலைப்படாதே! இப்போ நான் உன்னைக் கேட்டது கூட நீங்க இனிமே எதுவும் பேசிக் கெட்ட பெயர் வாங்க வேண்டாம், நான் பாத்துக்கறேன். அதுக்கு மேலே அவள் தலைவிதின்னு உங்கிட்டே சொல்ல முடியாது. அதுக்காக நீ எப்பவும் கவலைப்பட்டு உன் உடம்பைக் கெடுத்துக்காதேன்னு சொல்லத்தான், சரியா? இப்போ சமத்தா படுத்துத் தூங்கு!" என்றான்.

19

"ஏம்மா, ஸ்கூல் வேலையெல்லாம் எப்படிம்மா போயிகிட்டிருக்கு?" என்று கேட்டார் நாராயணசாமி.

''நல்லா போயிக்கிட்டுருக்குப்பா. இந்த இம்ப்ரூவ் மெண்ட் பரிட்சையினுடைய ரிசல்ட் ரொம்ப நல்லா வரும்னு எதிர்பார்க்கிறோம்பா!'' என்றாள்.

''பார்க்கறோம்னா யாரெல்லாம்மா? ஆதித்யா தினம் வரானா?''

''ஆமாம்பா. அவரும் வசுந்தராவும் நான் போற மாதிரியே சீக்கிரம் வந்துடுவாங்க. நிறைய வருஷத்துக் கேள்வித்தாள்களையெல்லாம் வெச்சி நல்லா சொல்லிக் கொடுத்திருக்கோம்பா.''

''ரொம்ப சமத்தும்மா நீ. இன்னிக்கு வேணா நானும் வரட்டுமாம்மா?''

''வேண்டாம்பா. நீங்க சிரமப்பட வேண்டாம். வேணுங்கறபோது நானே கூப்பிடறேன்,'' என்று சொல்லிவிட்டு வாசலுக்கு வந்தாள். ஆதி வந்துவிட் டான். அவனோடு புறப்பட்டு ஸ்கூலுக்குப் போனாள். பெரிய லீவு ஆரம்பித்து மூன்று வாரங்கள் ஆகிவிட்டன. இன்னும் மூன்று வாரங்களில் ஸ்கூல் திறக்கும் முன் ரிப்பேர் வேலையெல்லாம் பார்த்தாகணும், அதற்குப் பணம் வேண்டுமே என்ற கவலையில் இருந்தாள்.

வீட்டின் மேல் கடன் வாங்கி வீட்டை ரிப்பேர் பண்ணலாம் என்பது அவள் எண்ணம். மெதுவாக ஆதியைக் கலந்து ஆலோசிக்கணும் என்று அவள் நினைத்துக் கொண்டிருக்கும்போதே, ஆதியே பேச்சை ஆரம்பித்தான்.

''என்ன துர்கா கவலையா இருக்கே? பணக் கவலையா?'' என்று அவள் மனதிலுள்ளதைப் படித்தது போல் கேட்டான். இதுதான் நேசமுள்ள நெஞ்சம்.

"இல்லைன்னு சொன்னா அது பொய். நான் பொய் சொல்ல மாட்டேன்."

"சரி. உன் கவலை ஏதானாலும் பங்கு போட்டுக்க நான் இருக்கும் போது, எங்கிட்டே ஆலோசனை கேக்கலாம், இல்லையா?"

"பாவம், இப்பவே நீங்க எனக்காக எத்தனையோ சுமக்க வேண்டியிருக்கிறது."

"உன்னையே சுமக்க வேண்டியவன் நான்தானே, கண்ணம்மா! சொல்லு, நீ என்ன ஐடியா வெச்சுருக்கே?"

"எங்கிட்டே ஒரே ஐடியாதான் இருக்கு. எனக்காக அம்மா நிறைய நகைகள் சேர்த்து வெச்சுருக்கா. ஆனா, அதல ஒரு பிரச்னை இருக்கு."

"என்ன அது?"

"அதலே சிலதெல்லாம் எங்கம்மம்மா கொடுத்தது. இன்னும் இரண்டு தலை முறையாகக்கூட வந்தது சிலது. அதையெல்லாம் போய் விப்பாங்களான்னு தயக்கமா இருக்கு."

"அந்த எண்ணத்தை நான் ஒத்துக்கல்லே. அதை விட்டுட்டு வேறே எதையாவது பேசு."

"அடுத்து நான் யோசிக்கறது வீட்டை வெச்சுப் பணம் வாங்கறதுதான்."

"ஏன் கண்ணா? என்னைக் கேட்டா நான் தரமாட்டேனா? எங்கப்பா ஒண்ணும் சொல்லமாட்டார்."

"அதுக்கில்லை..." என்று துர்கா இழுத்தாள்.

''பரவாயில்லை துர்கா. நான் வேலைக்குன்னு இன்னும் போகல்லே. போனா நிறையச் சம்பாதிப்பேன். அது நிச்சயம். அப்படி இருக்கும் போது என் மனைவி கடன் வாங்கணுமா?''

''சரி ஆதி. உங்க அப்பாகிட்டே கேளுங்க. ஒரு வேளை கொஞ்சம் ஆட்சேபித்தாலும் நீங்க வற்புறுத்தக் கூடாது. சரியா?''

''உத்தரவு, ராணியாரே.''

அதன் பிறகு ஸ்கூலில் முதலில் எலெக்ட்ரீஷியன், அடுத்தது பிளம்பர், அடுத்தது கார்பெண்டர், கடைசியா கட்டட காண்ராக்டர் என்று எல்லோரையும் கூப்பிட்டு வேலைகளைச் சொல்லி கொடேஷன் கேட்டிருந்தாள். அதை வைத்துப் பார்க்கையில், பெயிண்டிங்குடன் சேர்த்து நிறையவே ஆகும் போலிருந்தது. அதுமட்டு மில்லாமல் கையிலிருந்த நேரமும் குறைவு. மூன்றாவது வாரத்தில் ஸ்கூல் திறக்கும் முன் எல்லாவற்றையும் முடிக்க வேண்டும். நல்ல வேளையாகக் கல்யாணத்திற்கு அதற்குப் பின் ஒரு வாரம் இருந்தது.

இருவரும் ஆபீஸிலேயே இருந்தார்கள் அன்று முழுவதும். வீட்டிலிருந்து டிரைவரிடம் சாப்பாடு அனுப்பச் சொல்லி போன் செய்தாள் துர்கா. முழுச் செலவுக் கணக்கையும் போட்டு நாள் கணக்கையும் போட்டால் தலை சுற்றியது.

''பரவாயில்லை துர்கா! பயப்படாதே. சமாளிக்கலாம். நான் இப்போ ஒரு வேலை செய்யப்போறேன். உனக்குச் சம்மதமா பார்,'' என்றான் ஆதி.

மளமளவென்று ஒரு விண்ணப்பத்தை லேப்டாப்பில் அடித்து அவளிடம் காண்பித்தான்.

''ஆமாம். நான் இதை மறந்தே போயிட்டேன்!'' என்றாள் துர்கா. ஆமாம். அவள் நூல் நிலையத்தை முன்னேற்ற என்ன செய்யலாம் என்று யோசிக்க மறந்திருந்தாள். இவர்கள் ஸ்கூலில் இருந்தது பேருக்கு ஒரு லைப்ரரிதான்.

பொதுவாக இந்தப் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருக்கும், படித்து முடித்து வெளியிடங்களில் வேலை பார்க்கும் பழைய மாணவர்களுக்கான ஒரு விண்ணப்பம் அது. படித்து முடித்த மாணவர்களுக்குப் பயன் படக்கூடிய புத்தகங்கள், அவை எந்த வகைப் புத்தகங்களாக இருந்தாலும் முழுவதுமாக இருந்தால், கொடுத்தால் அவை வீணாகாமல் குழந்தைகளுக்குப் பயன்படும் என்று கேட்டிருந்தான். தவிர இந்தப் பள்ளிக்கூடம் கட்டுவதற்கு ரிப்பேர் மற்றும் இதர செலவு களுக்காகப் பணம் தேவைப் படுவதாகவும், வசதியும், மனமும் உள்ளவர்கள் உதவினால் ஏற்றுக்கொள்வதாயும் வேண்டுகோள் விடுத்திருந்தான்.

''எப்படித் தோணிச்சு, இந்த யோசனை?'' என்று கேட்டாள் துர்கா.

''சுயநலத்தோடு மூளையையும் கசக்கிக் கொண் டதன் பலன்தான் இது!'' என்றான் ஆதி.

''புரியல்லியே?''

''சீக்கிரம் பள்ளிக்கூடம் முடிந்தால்தான் என் தேவியின் கடாட்சம் எனக்குக் கிடைக்கும்.''

''அது சரி, ஆதி! எனக்காகக் காத்திருந்து கல்யாணம் பண்ணிக் கொள்ளும் அளவு நான் என்ன பேரழகி?''

''என் கண்களுக்கு நீ பேரழகி தான், பார்த்தவரை!'' என்று சிரித்தான். ''ஹூம் எப்போது வேளை வரப் போகிறதோ?'' என்று போலியாக ஒரு பெருமூச்சு விட்டான்.

''ஏய், ரொம்பத்தான் குறும்பு! அப்படிச் சிரிக்காதீங் களேன், ஆதி.''

''ஏனாம்?''

''ஏன்னாக்க பொறுமையின்மையும் அவசரமும் ஆண்பிள்ளைகளுக்கு மட்டும் தான் சொந்தமா?'' என்று சொல்லிவிட்டு வெட்கத்துடன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''ஆஹா! நான் தான் மொதல்லேயே சொன்னேன் இல்லே. கல்யாணத்தைப் பண்ணிக்கிட்டு பாக்கி வேலையைப் பார்க்கலாம்னு. நீங்கதான், மேடம், கேட்கல்ல.''

''இன்னும் கொஞ்ச நாள்தானே. வேகமா ஓடிடும். மனத்தைச் சிதறவிடாமே வேலையைப் பார்க்கணும். முதலில் லட்சியம்.''

''உத்தரவு, மேடம். வேலையை என்னிக்கு ஆரம்பிக்க உத்தேசம்?''

''நாளைக்கே!'' என்றாள் துர்கா.

''உங்க அவசரம் புரியுது, மேடம்.''

''நான் போய் அப்பாகிட்டே வெறுமே ஆதித்யா குடுத்தார்னு மட்டும் சொன்னால் போதுமில்லையா?''

என்று கேட்ட துர்காவிடம், ''போதும், துர்கா! அவரைத் தொந்தரவு செய்யாதே. இப்போ அடுத்ததா இரண்டு மூணு பேர்கிட்ட கொட்டேஷன் கேட்கறதுனால எது தேவலைன்னு நாம் யோசிக்கணும். முதல்ல எலக்ட்ரிசிடி பார்க்கணும். அதுனால அதுக்கு நாம வாங்கின மூணு கொட்டேஷன்களையும் முதல்ல பார்ப்போம். எலக்ட்ரி சிட்டி விஷயத்தில கொஞ்சம் கூடப் பணத்திற்காகப் பார்க்கப்படாது.

''அடுத்தது துர்கா. இன்னொரு விஷயம். ஸ்கூல்ல ஆண் ஆசிரியர்களில யார் யார் உன் பேச்சுக்குக் கட்டுப்படுவாங்க? யார் ஸ்கூல்லேருந்து கிட்டே இருக்காங்க? உண்மையானவங்க அப்படீன்னெல்லாம் ஒரு 5,6 பேரைப் பார்த்து நாளைக்கு வரச் சொல்லு. இந்த வேலையெல்லாம் நடக்கும் போது முழுசாக நானும் நீயுமே மேற்பார்வை பார்க்க முடியாது. இல்லையா? அதுக்காகத்தான் கேக்கறேன்,'' என்றான்.

''ஆமாம் ஆதி! நான் இப்பவே பார்த்து போன் பண்ணறேன். அப்புறம் புது பி.டி. ஆசிரியருக்கு விளம்பரம் குடுக்கணும்னு பேசிக்கிட்டோமே!'' என்றாள் துர்கா.

''நல்ல வேளை, ஞாபகப்படுத்தினே! இப்பவே இன்டர்நெட்ல போடறேன்,'' என்று நெட்டைத் திறந்தால், அதற்குள்ளேயே டெல்லியிருந்து பழைய மாணவன் தான் 10,000 ரூபாய் குடுக்க விரும்புவ தாகவும், யார் பேருக்குச் செக் கொடுக்கணும் என்று கேட்டு மெயில் அனுப்பியிருந்தான். ஒரு வாரிசு இல்லாத காலேஜ் லெக்சரர் தன்னிடம் இருக்கும்

புத்தகங்களை யெல்லாம் அனுப்ப விரும்புவதாகத் தெரிவித்திருந்தார்.

''எக்ஸலண்ட் ஆதி!'' என்று துள்ளிக் குதிக்காத குறையாக சந்தோஷப்பட்டாள் துர்கா.

''இந்த சந்தோஷத்தை எனக்கு ஏதாவது குடுத்துக் கூட கொண்டாடலாம்!'' என்றான் ஆதி.

''ஆதி, ப்ளீஸ்! வீட்டுக்குப் போகும் போது ஐஸ்க்ரீம் வாங்கித் தரேன், சரியா?''

''சரி சரி. நான் அட்வர்டைஸ்மெண்ட் போடற வழியைப் பார்க்கிறேன்,'' என்றான் ஆதி.

''நேரமாயிடிச்சி, ஆதி! கிளம்பலாமா?'' என்றாள் துர்கா. இருவருமே கிளம்பி வீட்டுக்குப் போனார்கள். அன்று காரை சர்வீஸுக்கு விட்டிருந்ததால், ஸ்கூட்டரில் தான் வந்திருந்தார்கள். அதுவும் கௌரவமாக அவனைப் பிடித்துக் கொள்வதைக் கூடத் தவிர்த்துத் தனியாகத் தான் உட்கார்ந்து போனாள் துர்கா.

20

''ஆஷா, ஆஷா!'' என்று காலையிலேயே தன் தங்கையைக் கூப்பிட்டான் விக்ரம். ''என்னண்ணா?'' என்று கேட்டுக் கொண்டே வந்தவளிடம், ''இன்னிக்கு என்ன வேலை பார்க்கப் போறே கல்யாணம் சம்பந்தமா?''

''ம்யூசிக் பார்ட்டியை புக் பண்ண அண்ணியுடன் நானும் போவேனாயிருக்கும்,'' என்றாள். ''என்ன

ம்யூசிக்?'' என்று கேட்ட அண்ணனிடம் தான் நினைத்துக் கொண்டிருப்பதைச் சொன்னாள்.

''வேண்டாம் ஆஷா! அந்த மாதிரி டப்பாங்குத் தெல்லாம் நம்ம வீடுகளுக்கெல்லாம் சரிப்பட்டு வராது. அதுவும் அவங்க வீட்ல எல்லாரும் வயசானவங்க. இதெல்லாம் எப்படிப் பிடிக்கும்? சாதாரண மெல்லிசைக் கச்சேரி வைக்கலாம்மா. அது தான் சரிப்பட்டு வரும்.''

''எல்லாமே யார் இஷ்டத்துக்கோ என் கல்யாணத்தில் நடக்கணுமா?''

''இதோ பாரு, அவங்க யாரோ இல்லை. நீ கட்டிக்கப்போற மாப்பிள்ளையைப் பெத்தவங்க. அதுவும் நீயே தேர்ந்தெடுத்த மாப்பிள்ளையை. நீ அவங்களுக்கு பூரணமான மரியாதை குடுக்கணும். அவங்களோட தான் இருக்கணும். நாளைக்கே நடராஜைப் பிரிச்சு தனிக் குடுத்தனம் போகலாம்ங்கற எண்ணம் வெச்சுக்காதே. அங்கே இருக்கறதே ஒரு வயதான தம்பதி, ஒரு புருஷன் வீட்டுக்குப் போகப் போற பொண். அவ்ளோதான் உனக்கு நான் முதலும் கடைசியுமாகக் குடுக்கற அட்வைஸ்.''

''அவங்க வீட்டுப் பொண்ணுக்கே அங்கே என்ன அதிகாரம் தெரியுமா?'' என்றாள் ஆஷா தொங்கிப் போன முகத்துடன்.

''அதில என்ன அதிசயம், ஆஷா? நடராஜைப் பத்தி எனக்கும் தெரியும். அந்தப் பொண்ணு துர்கா தான் பொறுப்பா எல்லோரையும் பாத்துக்கறா. அதனால அவ மேல எல்லோருக்கும் ஒரு பிரியமும், கௌரவமும் இருக்கு. அது இயற்கைதானேம்மா. அவ நாளைக்கே கல்யாணம் ஆகிப் போயிட்டா, நீ அந்த வீட்ல

எல்லாத்தையும் பாத்துக்க ஆரம்பிச்சுக்கலாம். அதனால அவ மேல வெச்சுருக்கிற அன்பு எல்லாம் உன் மேலே திரும்பிடும். நீ தான் அவங்க அப்படி சேஞ்சாற மாதிரி நடந்துக்கணும். மொத்தத்தில உன்னை அன்பா, அடக்கமா, எல்லோருக்கும் இதமா நடந்துக்கற மாதிரி வளர்த்திருக்கோம்னு சொல்ற மாதிரி நீ நடந்துக்கணும்,'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

தன் ரூமில் போய்க் கதவைச் சாத்திக் கொண்டு கட்டிலில் விழுந்தவளுக்கு அழுகை பொங்கி வந்தது. அண்ணனுக்குத் தன் மேல் இவ்வளவுதானா மதிப்பு என்று ரொம்பத் துக்கமாக இருந்தது. தான் என்ன சொன்னாலும், செய்தாலும் அண்ணனின் சப்போர்ட் உண்டு என்று திடமாக நம்பியிருந்தவளிடம், அவனின் இந்தச் செய்கை மிகவும் ஏமாற்றத்தையே அளித்தது.

சற்றைக்கெல்லாம் ரேவதி வந்து ஆஷா, ஆஷா என்று கத்திக் கத்திக் கூப்பிட்டாள். எத்தனை தரம் கூப்பிட்டாலும் ஏன் என்று கேட்காததால் ரேவதிக்குச் சற்றுப் பயமாகிவிட்டது. பங்களாவைச் சுற்றிக் கொண்டு போய்த் திறந்திருந்த ஜன்னல் வழியே பார்த்தாள். ஆஷா கட்டிலில் படுத்து அழுது கொண்டு இருந்தது தெரிந்தது. அங்கிருந்து ரேவதியும், அவள் அம்மாவும் மன்றாடிக் கேட்கவிட்டுத்தான் அவள் கதவைத் திறந்தாள்.

''என்னம்மா? என்ன ஆச்சு? ஏன் அழறே?'' என்று ஆதூரத்துடன் கேட்டாள் ரேவதி.

''சும்மா நிறுத்துங்க, அண்ணி! அண்ணா இப்படியெல்லாம் பேசறானே. அதுக்கெல்லாம் நீங்கதான்

காரணம்னு எனக்குத் தெரியாதா? ஏதோ ஒரு கல்யாணம்னு பண்ணி என்னைக் கைகழுவி விடணும்னு தானே? உங்களை எனக்குத் தெரியாதா?''

ரேவதியின் அம்மா குறுக்கிட்டாள். ''இதோ பாரம்மா, ரேவதியிடம் நீ இப்படியெல்லாம் பேசறது கொஞ்சம் கூட நியாயம் இல்லை. நீ ஆசைப்பட்ட பையனையே, அவங்க வீட்ல இஷ்டப்பட்டாங்களோ, இல்லையோ, நிச்சயம் பண்ணிக் கல்யாணம் செய்யும்போது, இப்படி கண்டபடி பேசுவியா? அவ அழறா பாரு.''

''ஆமா, அவ அழறா. நீங்க கண்ணைத் தொடச்சி விட்டுகிட்டு உட்கார்ந்திருங்க!'' என்று அத்தையையும் தூக்கி எறிந்து பேசிவிட்டு உள்ளே போய்விட்டாள் ஆஷா.

அழுது கொண்டிருந்த ரேவதி அவள் அம்மாவிடம், ''எனக்கு இப்போ கூட அவ என்னை எடுத்தெறிஞ்சு பேசினது வலிக்கல்லேம்மா. இவ அங்கே போய் எப்படி இருக்கப்போறாளோன்னுதான் கவலையாக இருக்கு!'' என்று கேவினாள்.

அடுத்த பிரச்னை பத்திரிகையில் ஆரம்பித்தது. இவர்களும் சரி, பிள்ளை வீட்டுக்காரர்களும் சரி, அழைப்பிதழ் அடித்து எல்லோருக்கும் கொடுக்க ஆரம்பித்தாயிற்று. ஆஷா இப்போது புதிதாக வேறே பத்திரிகை அடிக்கணும் என்றாள். ''இப்ப அடிச்சிருக்கிற பத்திரிகையும் நீ பார்த்து செலக்ட் பண்ணினது தானேம்மா?'' என்றான் விக்ரம்.

''ஆமாம். ஆனா, நானும் நட்ராஜும் எங்க கல்யாணத்துக்குக் கூப்பிடற மாதிரி ஒரு இன்விடேஷன்

அடிக்கணும். என் சீனியர் எல்லாம் அப்படித்தான் அனுப்பிச்சிருக்காங்க. இதோ பாருங்க,'' என்று அவளுடைய சீனியர் ஒருத்தியின் கல்யாணப் பத்திரிகையைக் காண்பித்தாள்.

வாங்கிப் பார்த்த விக்ரம், ''அதெல்லாம் சரிம்மா. அந்தப் பொண்ணும் இப்போ மும்பையில வேலை பார்க்கறா. பையனும் மும்பை பையன் தான். அங்கெல்லாம் இது போல புது நாகரிகமெல்லாம் வழக்கமா இருக்கும். உன் கல்யாணம் சென்னையில் கூட இல்லை. மதுரையில் நடக்கப்போறது. இங்கே நாகரிகம் அந்த அளவு வளரல்லியேம்மா. அதனால இந்த எண்ணமே வேண்டாம், விட்டுடு!'' என்றான்.

''போண்ணா, நான் எது கேட்டாலும் இந்தக் கல்யாண விஷயத்தில நடக்கவே மாட்டேங்குது. எனக்கு உன்மேல ரொம்ப கோபம்.''

''ஆஷா, நான் காரணம் இல்லாமே சொல்வேனாம்மா? நட்ராஜ் வீட்ல எல்லோரும் பெரியவங்க. சுத்து வட்டாரக் கிராமங்கள்லேருந்து உறவுக்காரங்க எல்லாம் வருவாங்க. அவங்களுக்கெல்லாம் இந்த மாதிரி செஞ்சா நிச்சயம் பிடிக்காதும்மா.''

''எதுக்கெடுத்தாலும் அவங்க வீட்டு மனுஷங்க ஒத்துக்கிட்டாத்தான் செய்யணுமா? இதென்ன அண்ணா, அராஜகமா இருக்கு! கல்யாணம் எனக்கா இல்லே அவங்க வீட்டுப் பெரியவங்களுக்கா?'' என்று ஆத்திரமாக ஆஷா கேட்க, ''கல்யாணம் உனக்கானாலும் அவங்க வீட்டுப் பெரியவங்க அபிப்ராயப்படிதான் நடக்கணும். அதுதான் முறை!'' என்று சொன்னான்.

சொன்னவன் நேராக மாடிக்குப் போய்விட, ஆஷாவும் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு தன் ரூமிற்குப் போய்க் கதவைத் தாழிட்டுக் கொண்டாள்.

விக்ரம் பின்னாலேயே போன ரேவதி, ''ஏங்க, அவ இஷ்டப்படிதான் கொஞ்சம் நடக்க விடுங்களேன்.அவ கொஞ்சமாவது சந்தோஷப்படட்டுமே!'' என்றாள்.

அவளை முறைத்த விக்ரம், ''எல்லாம் நீ குடுக்கற இடம். சரி, அவங்க வீட்ல யாரையாவது கேட்டுப் பாரு,'' என்றான்.

''யாரைக் கேக்கறது ? துர்காவைக் கேக்கறேன்.''

''என்னவோ செய்,'' என்ற விக்ரம் வெளியே கிளம்பிப் போய்விட்டான்.

ஹாலிலிருந்த போனிலிருந்து ரேவதி துர்கா வீட்டுக்குப் போன் செய்தாள். துர்காவேதான் போனை எடுத்தாள்.

நலம் விசாரித்துவிட்டு, கொஞ்சம் சுற்றிவளைத்து ரேவதி பிரச்னைக்கு வந்தாள். ''அவ ஆசைப்படறா. உங்க அப்பா அம்மாவுக்குப் பிடிக்காதேன்னுதான் அவ அண்ணன் வேண்டாங்கறாரு. நீங்க என்ன நினைக் கிறீங்க. உங்க வீட்ல ஒத்துப்பாங்களா?''

''கொஞ்சம் சிரமமாகத்தான் இருக்கும். ஆனா, இதுக்காக, பாவம், அந்தப் பெண் ஆசையைக் கெடுக் கணுமா? பரவாயில்லை. அடிக்கச் சொல்லுங்க. நான் பாத்துக்கறேன். மெதுவா, நல்லவிதமா சொன்னா அப்பா ஒத்துப்பாங்க!'' என்றாள் துர்கா.

ரேவதி போனை வைத்து விட்டுத் திரும்பிப் பார்த்தால் ஆஷாவை அவள் ரூமில் காணோம். ''அவ சிநேகிதி வீட்டுக்குப் போறாளாம். சாயந்திரம் தான் வருவேன்னு சொல்லிட்டுப் போனாள்,'' என்று ரேவதியின் அம்மா சொல்ல, ஆஷாவின் செல்போனுக்கு போன் பண்ணினாள். ''நான் என் ஃபிரண்ட்டோட ஷாப்பிங் போறேன். சாயந்திரம் தான் வருவேன்,'' என்றாள் ஆஷா.

''நீ வரத்துக்கு முன்னாடி நீயே பார்த்து நீ சொல்ற மாதிரி பத்திரிகை அடிக்கக் குடுத்துவிட்டு வந்துடறியா?'' என்று ரேவதி கேட்க, பட்டென்று போனை வைத்து விட்டாள் ஆஷா.

''சரிதான். இன்னிக்கு வந்து நல்லா சாமியாடப் போறா!'' என்று சொன்னாள் ரேவதி தன் அம்மாவிடம். அவள் நினைத்தது போலவே அன்று மாலை வீடு திருப்பிய ஆஷாவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. 'காப்பி டிபன் சாப்பிடறியா?' என்று கேட்ட ரேவதியிடம், 'எனக்கு எதுவுமே வேண்டாம்!' என்றவள் தன் அறைக்குப் போய்க் கதவைத் தாழிட்டுக் கொண்டாள்.

''ஏம்மா, புதுப் பத்திரிகை அடிக்கக் குடுத்துட்டியா?'' என்று கேட்டாள் ரேவதி.

''எனக்கு அது வேண்டாம். இரண்டு வீட்டிலும் கண்டவங்களெல்லாம் சிபாரிசு பண்ணி எனக்கு வாங்கிக் கொடுத்தா, எனக்கு ரோசம் இருக்காதா?''

''உனக்கு சிபாரிசு பண்ண அந்த கண்டவங்க நானும் இன்னும் யாரும்?''

"வேறே யாரு? அந்த துர்காதான்!" என்றாள் ஆஷா.

சரி, இது சொல்லித் திருந்தற ஜன்மம் இல்லை என்று ரேவதி உள்ளே போய்விட்டாள்.

21

காலையில் ஆதித்யா துர்காவைக் கூட்டிக் கொண்டு வரும் போது சற்றே தாமதமாகிவிட்டது. பறந்தடித்துக் கொண்டு புறப்பட்டார்கள். துர்கா, "நானே போய்க் கொள்கிறேன்," என்றாலும் ஆதித்யா விடுவதாயில்லை. அன்றைக்கும் அவளைக் கொண்டு ஸ்கூலில் விட்டு விட்டுத் தான் கல்வி இலாகா அலுவலகத்திற்குப் போவதாகச் சொல்லியிருந்தான். முதலிலேயே இவர்கள் இருவரும் போய்க் கேட்டு விட்டுவந்து ஒரு வாரத்திற்கு மேலாகிவிட்டது. இரண்டு முறை போன் செய்தாகி விட்டது. அடுத்து ஒரு முறை அவன் நேரில் போன போது, மேடம் இன்னும் அந்த ஃபைலைப் பார்க்கவே இல்லையாம். பார்த்ததும் போன் செய்வதாக மேடத்தின் உதவியாளர் சொல்லிவிட்டார்.

எனவே இன்று திரும்பப் போகணும் என்று திட்டமிட் டிருந்தான். துர்கா வீட்டில் கல்யாண வேலையெல் லாம் இருக்கிறதே என்று ஆதித்யா தான் தினம் ஸ்கூலுக்குப் போய்வந்து கொண்டிருந்தான். துர்காவை இறக்கிவிட்டு விட்டு அவன் கல்வி இலாகாவிற்குப் போனான்.

மாவட்டக் கல்வி அதிகாரி ஆபீஸில் அன்று என்னவோ அவனுக்கு வேறு மாதிரியாகப் பட்டது. முதலில் வந்தபோது பேசியது போல் அந்த மேடம் பேசவில்லை. ரொம்ப நேரம் காக்க வைத்து விட்டுத்தான் உள்ளேயே கூப்பிட்டாள். ''அந்தப் பட்டியல் இன்னும் வரவில்லை ஸார், வந்ததும் நானே கூப்பிடுகிறேன்,'' என்று சொல்லிவிட்டு நீங்கள் போகலாம் என்பதற்கு அடையாளமாக வணக்கம் என்றாள்.

சரி, இதில் ஏதோ இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்ட ஆதி யோசித்துக் கொண்டே வெளியே வந்தவன் எதிர்த்தாற்போல் வந்த ஆளின் மீது மோதிக் கொண்டான். ''ஸாரி!'' என்று ஆதித்யா சொல்ல, ''பார்த்து வரதில்லையா, மிஸ்டர்?'' என்று எதிரே வந்தவன் சொன்னதும் தான், அந்தக் குரலைக் கேட்டு நிமிர்ந்து பார்த்தான். ஆம். அவன் பி.டி. மாஸ்டர் ஷ்யாம் தான்.

'ஓஹோ, இதுதான் அந்த அதிகாரியின் பாராமுகத்துக்குக் காரணம்!' என்ற புரிந்து கொண்ட ஆதி அங்கிருந்து மேலும் தர்க்கம் வளர்க்காமல் நகர்ந்து விட்டான். அவன் அந்த மேடத்தின் அறையில் வெகு உரிமையோடு நுழைவதைப் பார்த்ததுமே, அந்த அதிகாரிக்கு ஷ்யாம் எந்த வகையிலோ வேண்டப்பட்டவன், அல்லது எந்த வகையிலோ பயமுறுத்தி வைத்திருக்கிறான் என்று புரிந்து விட்டது. அது என்ன என்று தெரிந்து கொண்டாலொழியப் பல பிரச்சனைகளுக்குத் தீர்வு காண முடியாது என்று தோன்றியது.

இவன் வெளியே வருகையில், அங்கு கீழே ரோடு கடையில் டீ குடித்துக் கொண்டிருந்த ஒருவன் இவனிடம் பேச வந்தான் ''என்ன விஷயம்?'' என்று

ஆதித்யா கேட்க, ''ஸார். நீங்க அங்கயற்கண்ணி ஸ்கூலுக்கு 11ஆவது, 12ஆவது வகுப்புகள் சேர்க்க அனுமதி வாங்கத்தானே வந்திருக்கீங்க?'' என்று கேட்டான்.

''ஆமாம், நீங்க?''

''நான் இங்கே ஸீனியர் ஸப்ஸ்டாஃபாக இருக்கேன். பாவம், நீங்க ரொம்ப அலையறீங்க. அநேகமா உங்க காரியம் நடக்க ரொம்ப கஷ்டப்பட வேண்டியிருக்கும்!'' என்றான்.

''என்ன விஷயம்னு சொன்னீங்கன்னா, அதைத் தீர்க்க என்ன செய்யலாம்னு பார்ப்போம் நாங்க,'' என்றான் ஆதி.

''என்னத்தைப் பார்க்கப்போறீங்க?''

''உங்க பேரு என்ன, ஸார்?'' என்று கேட்டான் ஆதி.

''பேர் எதுக்குங்க? விஷயம் தெரிஞ்சா, மேலே என்ன செய்ய முடியும்னு பாருங்க!'' என்று தலையைச் சொறிகின்ற மாதிரியும், கையை நீட்டுகின்ற மாதிரியும் ஒரு தினுசாக வளைந்து அபிநயம் பிடித்தான்.

சட்டையிலிருந்து ஒரு 50/- எடுத்துக் கொடுத்தான் ஆதி.

''ஒண்ணுமில்லே ஸார். இந்த ஷ்யாம் இருக்காரே. அவரை நீங்க அடிச்சு துரத்திட்டீங்களாமே? அவரு இந்த ஊர் எம்.எல்.ஏ.வுக்கு ரொம்பவே வேண்டியவராம். அதனால இந்த டி.இ.ஓ. மேடம் ரொம்பவே பயப்பட றாங்க. இந்த ஷ்யாம் தான் உங்க ஸ்கூலுக்கு 11ஆவது, 12ஆவது வராமே தடுக்கத் தன்னால முடிஞ்சதெல்லாம் செய்துகிட்டிருக்கிறார். துஷ்டர்களைக் கண்டா தூர

வில்குன்னு சொல்லுவாங்களே, நீங்க ஏன் ஸார் இந்த ஆளைப் போய் விரோதிச்சிகிட்டீங்க?''

''துஷ்டன் என்கிறதனால எந்த தப்பு செய்தாலும் வாயை மூடிக்கிட்டு இருக்க முடியுமா? நான் பார்த்துக்கறேன், தேங்க்ஸ்ப்பா!'' என்று சொல்லிவிட்டுத் தன் ஸ்கூட்டரை நோக்கி நடந்தான் ஆதி.

வண்டியில் ஏறும்போது, இத்தனை பிரச்சனை களையும் மீறி அவனுக்குச் சிரிப்பு வந்து விட்டது. வீட்டிலிருந்து வரும்போது அவன் பின்னால் உட்கார்ந்து வந்தாள் துர்கா. ஸ்கூலுக்கு வந்ததுமே ஆதி கேட்டான் சிரிக்காமல்.

''ஆதி, கோபமா? நான் ஒரு ஸ்கூலைப் பார்த்துக்கற பொறுப்பில் இருக்கேன். நாளைக்கு யாரும் எதுவும் சொல்லிவிட இடம் கொடுக்கக்கூடாதில்லையா? கல்யாணம் ஆயிடிச்சின்னா அது வேறே மாதிரி. ஸாரி ஆதி! உங்களுடைய இளமையான ஆண் மனத்திற்கு ஏற்றவளாய் என்னால் இப்போ நடந்துக்க முடியல்லே!'' என்றாள். இதைச் சொல்லுவதற்குள் அவள் முகமே தொங்கி விட்டது.

''ஏய், ஏய் துர்கா! நான் உன்னைச் சும்மா சீண்டினேன். அதுக்கு இப்படியா வருத்தப்படுவே? உன்னை மாதிரி எத்தனை பெண்கள் இந்த வயசில் இத்தனை பொறுப்பா இருப்பாங்க? எனக்கு அதிலே பெருமை தான் கண்ணா. நம்ம இனிய வாழ்வை ஒத்திப் போட்டிருக்கே. அவ்வளோதானே! இந்தப் பிரச்னையெல்லாம் தீர்ந்து நாம திகட்டத் திகட்ட அதை அனுபவிக்கப் போற நாள் வராமலா போகப்போறது. ஸாரி, கண்ணா!'' என்றான்.

நிஜமாகவே இத்தனை புத்திசாலியா, பொறுமை சாலியா, அழகா, அடக்கமா, ஒரு பொண்ணு கிடைக்க நான் எத்தனையோ அதிர்ஷ்டக்காரனாக இருக்கணும்னு தான் அவன் நினைப்பு.

ஸ்கூலுக்கு வந்து துர்காவை வீட்டுக்கு அனுப்பி வைத்தான். கேட்டவளுக்கு இன்னும் ஒரு வாரம் ஆகும் என்கிறாங்க என்று மட்டும் சொல்லி அனுப்பி வைத் தான். அவளுக்குக் கல்யாண வேலை தலைக்குமேல் இருக்கிறதே என்று தான்.

தீவிரமாக யோசித்தவனுக்கு ஒரு பொறி தட்டியது. அன்றைய வேலைகள் சரியாக நடக்கின்றனவா என்று பார்த்துக் கொண்டிருந்துவிட்டு வீட்டிற்குப் போனான்.

அப்பாவுடன் உட்கார்ந்து பேசினான். அதன் பிறகு சற்றே மனம் சாந்தி அடைய போன் செய்து துர்காவிற்கு குட்நைட் சொல்லிவிட்டு நிம்மதியாகத் தூங்கினான்.

அன்றைக்கே மதியம் ஜப்பான் நன்கொடையாக குடிதண்ணீர் சுத்தமாக வழங்கும் மெஷின் வந்துவிட் டதைச் சொல்லியிருந்தார்கள். அதன் விண்ணப்பத்திற் கெல்லாம் துர்கா தான் கையொப்பமிட்டிருந்தாள். அதனால் மறுநாள் காலை சிறிது நேரம் வர முடியுமா என்று கேட்டதற்கு, ''என்ன ஆதி, இப்படிக்கேக்கறீங்க! நீங்க சொன்னா வந்துடப்போறேன்,'' என்றாள் துர்கா.

''பார்ப்போம், பார்ப்போம்! நீ என் செல்லப் பெண் டாட்டியா வந்த அப்புறமும் இதே கௌரவம் எனக்கு நீடிக்கிறதா என்று,'' என்றான். மொத்தத்தில் இரு வருக்கும் இந்த ஒரு வருடத்தை எப்படித் தள்ளப் போகிறோம் என்றிருந்தது.

ஆதியின் அப்பா பணம் கொடுத்திருந்தார். அதனால் உடனடியாகக் கட்டட ரிப்பேர் வேல தொடங்கிவிட்டது. துர்கா வரமுடியாவிட்டாலும், ஆதியின் மேற்பார்வையில், சில ஆசிரியர்களை வைத்துக் கொண்டு மும்முரமாக நடந்தது வேலை.

22

கல்யாண நாள் நெருங்க, நெருங்க நடராஜுக்குத் தினம் மூன்று தடவையாவது போன் போட்டுப் பேசிக் கொண்டிருந்தாள் ஆஷா. வீட்டில் உறவுக்காரர்கள் எல்லாம் வந்து விட்டதால், நடராஜுவிற்கும் தனிமை கிடைப்பதே கஷ்டமாக இருந்தது. அதிலும் ஆஷா பேசுவது முக்கால் வாசி புகார்ப் பட்டியலாகத்தான் இருந்தது. அவளுடைய அண்ணா, அண்ணி, அத்தை, துர்கா என்று எல்லார் மீதும் ஒரே குற்றப்பத்திரிகை தான். நடராஜுவிற்குச் சற்றே பயமாக இருந்தது - தன்னுடைய தேர்வு சரியில்லையோ, இந்தப் பெண்ணோடு அட்ஜஸ்ட் செய்துகொண்டு வாழ்வது கஷ்டமாக இருக்குமோ என்று.

எப்போது யாரைப் பற்றிக் குற்றம் சொன்னாலும் நடராஜ், ''இப்போதைக்கு எல்லாம் பொறுத்துப் போம்மா. கல்யாணம் ஆயிடிச்சின்னா நம்மை யாரும் கண்ட்ரோல் பண்ண மாட்டாங்க!'' என்றே திருப்பித் திருப்பிச் சொன்னான். இதில் அவளுக்குத் துர்காவைக் கண்டிக்கிறேன் என்று கூடச் சொல்ல மாட்டேன் என்கிறானே என்று மனத்தாங்கல். இவன் கல்யாணத்திற்கு அப்புறமும் இதே மாதிரி தான் எது சொன்னாலும்

கேட்காமல் தனக்கு ஆதரவுக் குரல் கொடுக்க மாட்டானோ என்னவோ, தன் தேர்வு சரியா என்று பயம்.

ஆனாலும் தன்னால் நடராஜை முழுமையாகக் கைக்குள் போட்டுக் கொண்டு விட முடியும் என்று தான் நம்பினாள். பின்னே, ஆண்டவன் இவளை இத்தனை அறிவாளியாக அழகானவளாக ஏன் பிறப்பித்திருக்கானாம்?! இவள் துர்காவை விடக் கெட்டிக்காரி, அழகு, என்ற எண்ணம். என்னவோ முதலிலிருந்தே அவள் மேல் ஒரு எரிச்சல். எல்லோரும் அவளை இத்தனை கொண்டாடுவானேன் என்ற பொறாமைதான், வேறென்ன?

இருவருடைய பக்கத்திலும் வீட்டில் முன்னதாகவே வந்திருந்து கல்யாணத்தில் கலந்து கொள்ளும் உறவினர்கள் ஓஹோ என்று நிறையப் பேர் இல்லை. ஆனால் கல்யாணத்தன்றும் மறுநாள் இரண்டு வேளையிலும் கலந்து கொள்பவர்கள் நிறையப் பேர் ஆகிவிட்டார்கள்.

நாராயணசாமி விக்ரமிடம் நேரிடையாகவே கேட்டார். ''நான் இந்த ஊரிலேயே தலைமுறையாக வாழ்ந்து வரும் குடும்பத்தைச் சேர்ந்தவன். உங்களுக்குக் கூட கூட்டம் நிறைய வரும். அதனால் நான் பாதிக் கல்யாணச் செலவை ஏற்றுக் கொள்கிறேன்,'' என்றார்.

''எனக்கிருப்பதும் ஒரே தங்கை, நான் அவளுக்குச் செய்யாமல் யாருக்குச் செய்யப்போகிறேன், சார்! நல்லா நிறையப் பேர் வரட்டும். நல்லா சாப்பிட்டுட்டு வாழ்த்தட்டும். எனக்கு ரொம்ப மகிழ்ச்சிதான்!'' என்றான் விக்ரம்.

இரண்டு வீடுகளிலுமே பத்து நாள் முன்பிருந்தே, 2 சமையல்காரர்கள், 2 கார், 2 டிரைவர் என்று ஏற்பாடு செய்துகொண்டு வேலை பார்த்தனர். அங்கு ரேவதியும், அவள் அம்மாவுமாக வேலை பார்க்க, இங்கு துர்காவும் அவள் அம்மாவுமாகத்தான் நிறைய வேலை பார்க்க வேண்டியிருந்தது. ரொம்ப நெருங்கியவர்கள், ரொம்ப பெரியவர்களைத் தவிர மற்றவர்களைப் போனில் அழைத்துப் பத்திரிகைதான் அனுப்பினார்கள்.

தினம் யாரை ரயில்வே நிலையத்திலிருந்து கூட்டி வரணும், யார் போகணும், யாருக்குத் திரும்பிப்போக, என்றைக்கு ஏற்பாடு செய்யணும் என்பதிலிருந்து துர்கா நோட் போட்டு எழுதி வந்ததால், எந்த இடத்திலும் குழப்பமே இல்லாமல் வேலைகள் நடந்தன.

முதல் நாள் மண்டபத்துக்குப் போனபோதே நல்ல கூட்டம். ஆஷா இயல்பாக நல்ல அழகு. அதிலும் பியூட்டிஷியன் வந்து பொருத்தமாக அலங்கரித்து விட்டதில், தேவதையாக ஜொலித்தாள். விக்ரம் எல்லா வேலைகளையும் ஆசையாகப் பார்த்தாலும், மனதிற்குள், 'அந்தப் பையன் நடராஜ் கல்யாணத்திற்குப் பிறகு என்ன செய்யப் போகிறான்? எல்லாவற்றிற்கும் அப்பா கையை எதிர்பார்த்துச் செலவழிப்பானே? வருபவர்களுக்கு என்ன சொல்வது? ஒரு பெரிய டாக்டர், இஞ்சினியர், கலெக்டர் என்று மாப்பிள்ளை பார்த்துக் கொடுத்திருந்தால் கௌரவமாக இருந்திருக்கும். தங்கை இப்படிச் செய்துவிட்டாளே!' என்று வருத்தமாகத்தான் இருந்தது.

கல்யாணம் நிச்சயம் செய்த பின் ஒரு நாள் தன் மாமனாரையும் கூட்டிக் கொண்டு போய் நாராயண சாமியைப் பார்த்தான். பொதுவான விசாரிப்பு, காப்பி உபசரிப்பு எல்லாவற்றிற்கும் பிறகு மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தான். ''சார், ஒரு விஷயம்...'' என்று ஆரம் பித்தான். ''இன்னும் எதுக்குங்க சார்னுயெல்லாம் கூப்பிட்டுகிட்டு. மாமான்னே கூப்பிடுங்க!'' என்றார் நாராயணசாமி.

''நீங்களும் என்னை விக்ரம் வா, போன்னே கூப் பிடுங்க மாமா!'' என்றான். நிஜம்தான். ஆரம்பத் திலிருந்து தங்கை காதலித்தது, காதலித்த பையனின் படிப்பு எதுவும் பிடிக்காமலிருந்த அவனுக்கு. இப்போது இவர்களுடைய பண்பான நடத்தை ரொம்பப் பிடித் திருந்தது.

''சொல்லுப்பா, விக்ரம், என்ன விஷயம்?'' என்றார்.

''இல்லை மாமா, நீங்க தப்பா நினைக்கல்லைனா ஒரு விஷயம் சொல்லணும்.''

''சொல்லுப்பா. நான் அவ்வளவு சுலபமா எதையும் தப்பா எடுத்துக்க மாட்டேன். என்ன விஷயம்?''

''நடராஜ் இப்படி வேலையில்லாமல், ஒரு தொழிலும் பார்க்காமே இருக்காரே, அதுனால நான் வேணுமானா, ஒரு பிஸினஸ் ஆரம்பிச்சுக் கொடுக்கலாமான்னு யோசிக் கறேன். அதுக்குத்தான் உங்க அபிப்ராயத்தைக் கேட் டேன்,'' என்றான் விக்ரம்.

''இதோ பாருப்பா, விக்ரம்! என்னதான் ஸ்கூலை பிஸினஸ்ஸாகச் சொல்லக்கூடாதுன்னாலும், அதிலும்

பணம் வராமே இருந்திருக்கா? எடுத்துக்காமே இருந்திருக்கமா? இப்போதான் கொஞ்சம் கவனிப்பு இல்லாமே நஷ்டத்துக்கு ஓடுது. ஆனா, எங்க ஜவுளிக் கடை தான் எங்க வீட்டுக்கு எப்பவும் சோறு போடுது. இதிலே ஒண்ணை அவன் பொறுப்பா கவனிச்சு கிட்டாப் போதுமே! இரண்டுமே அவனுதுதான். எனக்கு அவன் ஒரே பிள்ளைதானே. அவனுக்கு இன்னும் மனசில தான் சம்பாதிக்கணும் என்கிற எண்ணம் வரணும். அது வந்து செய்ய ஆரம்பிச்சா, நல்லா வந்துடு வாம்பா!'' என்றார் நாராயணசாமி.

அதற்குள் விக்ரமின் மாமனார், ''நாளைக்கே ஆஷா கல்யாணத்திற்கப்புறம் மாப்பிள்ளையை நல்லா ஆக்கிட மாட்டாளா? பானை பிடிச்சவ பாக்கியம்தானே எல் லாம்!'' என்றார்.

''இப்போதைக்குக் கல்யாணம் ஆகப்போற பிள்ளை என்னைக் கேக்க கஷ்டப்படுவானேன்னு அவன் பேர்ல கொஞ்சம் பணம் போட்டு வெச்சுருக்கேன். கவலைப் படாதேப்பா. இதுகூட எனக்குத் தோணல்ல. துர்காவின் ஐடியாதான்!'' என்றார்.

''அவங்க ரொம்பவே புத்திசாலி!'' என்றான் விக்ரம்.

''நிஜம்தான். அவ கல்யாணத்துக்கும் எல்லாம் தயாராகத்தான் வெச்சுருக்கேன். அவதான் ஸ்கூலை நல்லாக்கிட்டுத்தான் கல்யாணம் பண்ணிப்பேன்னு பிடிவாதம் பிடிக்கறா!'' என்றார்.

''அவங்க ஸ்கூலை நல்லா ஆக்கிடுவாங்க!'' என்று சொல்லிவிட்டு விடை பெற்றுக் கிளம்பினார்கள்.

''எனக்கு அவன் ஒரே பிள்ளை. அவன் பண்ணுகிறேன் என்றால் இரண்டு வேலைகளையும் அவனிடமே விட்டுவிடுவேன். நீ கவலைப் படாதேப்பா. சீக்கிரமே உன் தங்கை அவனை மாற்றிவிடுவாப்பா!'' என்றார் நாராயணசாமி.

கல்யாணத்திற்கு முதல் நாள் மாலை மெஹந்தி என்றும், அதற்கும் முதல் நாள் சங்கீத் என்றும் ஆஷாவும் அவள் சிநேகிதிகளுமாய்க் கூத்தடித்தனர். துர்காவையும் போனில் கூப்பிட்டாள் ரேவதி. ''தப்பா நினைச்சுக்கா தீங்க, நான் வேளையே வந்துட்டா எங்கம்மாவுக்கு ரொம்பவே டென்ஷன் ஆயிடும். முன்னேயெல்லாம் நிறையப்பேர் வந்தாலும் கவலைப் படமாட்டாங்க. இப்போல்லாம் தொட்டதற்கெல்லாம் பதட்டம், பயம். இரண்டு பேர் சமையலுக்கு இருந்தாலும் ஒரு பயம் வந்துடிச்சி, நான் வரல்ல!'' என்று சொல்லிவிட்டாள் துர்கா.

போனை வைத்ததும், ஆஷா, ''எல்லாம் கர்வம். நம்ம வீட்ல நல்லா நடக்குதில்லே. அதை வந்து பார்க்கப் பிடிக்கல்லே அவளுக்கு!'' என்றாள்.

''எதுக்கு அப்படிச் சொல்றேம்மா. அதான் வீட்ல கஷ்டமாயிடும்னு சொல்றாயில்லே!'' என்றாள் ரேவதி.

''அதெல்லாம் சும்மா. சில பேருக்கு அடுத்தவ மேன்மையாகப் பார்க்கப் பிடிக்காது. அந்த லிஸ்ட்டைச் சேர்ந்தவங்க போலிருக்கு!'' என்றாள் ஆஷா.

திரும்ப ஒரு தரம் ஆஷா இல்லாத போது ரேவதி போன் செய்து, ''ஆஷா ரொம்ப வருத்தப் படுதும்மா.

நான் கார் அனுப்பறேன். வந்து ஒரு பத்து நிமிஷம் இருந்துட்டுப் போங்களேன்,'' என்றாள்.

அவள் சொல்லாத சிலதையும் அவள் சொன்ன திலிருந்து புரிந்து கொண்ட துர்கா புறப்பட்டு வந்தாள். அதன் பிறகு ஆஷாவுக்கு ஏன்டா கூப்பிட்டோம் என்றாகிவிட்டது. இத்தனைக்கும் ரொம்ப எளிமை யாகவே தான் தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தாள் துர்கா. கரும் பச்சையில் சின்ன மஞ்சள் பார்டர் போட்ட மைசூர் சில்க். கைகளிலும் கழுத்திலும் பச்சை நெக்லஸும், கல் வளைகளும், தலையைக் கொஞ்சம் தளர்வாகப் பின்னிக் கொஞ்சம் மல்லிகைப் பூவும். யாரையும் இன்னொரு முறை பார்க்கத்தூண்டும் அழகு.

''பாடு, பாடு!'' என்று ரேவதியின் அம்மா சொல்ல, ''நாம் முறையாகக் கத்துக்கல்லயேம்மா. எனக்கு அத்தனையாத் தெரியாது பாட்டெல்லாம்,'' என்றாள். ''நீங்க அத்தனை தூரம் கூப்பிட்டீங்க. ஒரு பத்து நிமிஷம் எங்கண்ணியோட இருந்துட்டு இதைக் குடுத்துட்டுப் போகலாம்னு வந்தேன்.'' ஒரு சுடிதார் செட்டும், ஒரு ஹான்ட்பேக்கும் கொடுத்தாள். இரண் டுமே நல்ல கலரில் கண்ணைப் பறித்தது.

''பிடிச்சிருக்கா, ஆஷா?'' என்று கேட்ட துர்காவிடம், ''பிடிச்சிருக்கு!'' என்று ஒற்றைச் சொல்லோடு நிறுத்திக் கொண்டாள் ஆஷா. நிஜமாகவே இரண்டும் ரொம்ப உயர்தரமான தேர்வு. ஆஷாவுக்குப் பிடித்துத்தான் இருந்தது. ரேவதி இல்லாவிட்டால், ஏதாவது குறை சொல்லித் துர்காவை நோகடித்திருப்பாள். அதற்குப் பிறகு துர்கா ஒரு பாரதியார் பாட்டும், ஒரு மீராபஜனும் பாடினாள்.

''கத்துக்கல்லேங்கறே, பிரமாதமா பாடறேயம்மா!'' என்றார் ரேவதியின் அப்பா. எல்லோரும் ரொம்பப் பிரமாதம்னு பாராட்டினார்கள், ஆஷாவைத் தவிர!

மாப்பிள்ளை அழைப்பிற்கு முதல் நாளே பெண் வீட்டுக்காரர்கள் சத்திரத்திற்குப் போய்விட, மறுநாள் காலையில் பிள்ளை வீட்டினரும் அங்கே போய்ச் சேர்ந்தனர். அப்போதே நிறைய பேர்களாகிவிட கல்யாணம் களை கட்டிவிட்டது. ஆதித்யாவும் அவன் பெற்றோரும் கூட அங்கேயே இருந்தனர்.

மாப்பிள்ளைத் தோழன் என்று ஆதித்யாதான் இருக்க வேண்டும் என்று நாராயணசாமி நிச்சயமாகச் சொல்லிவிட்டார். நடராஜுக்கு டோனி இருக்கணும் என்று ஆசை. ஆனால், இவர்களுக்குப் பிடிக்கவே யில்லை. ஆதித்யாவோட நடராஜும் சின்ன வயசி லேருந்து சிநேகிதன் தானே. ஃபேஷியலுக்கு அவனை டோனி கூட்டிப் போனாலும், மற்றவையெல்லாம் ஆதித்யா பார்த்துக் கொண்டான். பிறகு தீபக், சதீஷ், டோனி என்று நண்பர்கள் நடராஜை சூழ்ந்து கொள்ள, ஆதித்யா நாசூக்காக விலகிக் கொண்டான். பெரியவர்கள் மணப்பந்தலில் நடராஜுடன் இருக்கச் சொன்னபோது மட்டும் போனான்.

கல்யாணத்திற்கு முதல் நாள் மாலையும் சரி, மறுநாள் இரண்டு வேளைகளிலும் சரி, ரொம்பக் கூட்டம். துர்காவும், ரேவதியும் தான் களைத்துப் போனார்கள். ஆஷா பட்டு, டிஷ்யூ, வைரம் என்று தகதகத்தாள். அவளை அணு அணுவாக ரசிப்பதிலேயே இருந்தது நடராஜின் கவனம். ஆனால், தான் இத்தனை

பணக்கார இடத்து மாப்பிள்ளையாகத் தகுதியானவனா என்று சந்தேகம் வந்து விட்டது. ஏன், ஆஷாவுக்கும் தான் அவசரப்பட்டுவிட்டோமோ என்ற எண்ணம் வர, தன் நெருங்கிய சிநேகிதிகள் இருவரிடம் அதைப் பகிர்ந்து கொண்டாள். அவர்கள், ''ஏய்! இதுதான்டி நல்லது. மாமியார் வீட்டில் பணக்கார இடத்திலிருந்து வந்தவள் என்று உன்னை எதுவும் சொல்லவே பயப்படுவாங்கடி. அந்த வீட்டுக்கு நீதான் ராணி!'' என்று சொன்னார்கள்.

''ஆஹா, இதுவும் நல்லதுதான்!'' என்று ஸ்திரமாகத் தோன்றியது ஆஷாவுக்கு. சாயந்திரம் இவர்கள் தேர்ந்தெடுத்திருந்த அமரிக்கையான லைட் ம்யூசிக் குழுவினரின் பாட்டே பெரியவர்களுக்குச் சத்தமாக இருந்தது. யார் எதை ரசித்தார்களோ, ஆதித்யாவின் கண்கள் துர்கா மீதே இருந்தன. எத்தனை பொருத்தமாக அலங்கரித்துக் கொள்கிறாள் என்று அவனுக்குப் பெருமையாக இருந்தது.

23

அன்று முதல் இரவின் ஏற்பாடுகள் ஆஷாவின் வீட்டில் ஏற்பாடு செய்திருந்தார்கள். அதுவரை சற்றே வெட்கம் காட்டியவள், உள்ளே நுழைந்து கதவை மூடியதும், நடராஜைத் தானே கட்டியணைத்து முத்த மழை பொழிந்து விட்டாள். ''ஏய், ராஜ்! நாம எத்தனை அதிர்ஷ்டசாலிங்க, இல்லே?'' என்றாள்.

''ஆமாண்டி என் செல்லக் கிளியே!'' என்றான் நடராஜ்.

''என்ன வாய் நீளுது! என்னை டி போட்டுப் பேசறியா?''

''ஆமாண்டி, என் ஆசைப் பெண்டாட்டி.''

''நல்லா முதுகில விழும்!'' என்று பக்கத்திலிருந்த தலைகாணியால் அவனை இரண்டு மொத்து மொத்தினாள்.

''ஏய், நீ ஏதாவது புதுப் பொண்ணா லட்சணமா, வெக்கப்பட்டு, தலை குனிஞ்சி, என் கால்ல விழுந்து, இன்னும் பால் குடுத்துன்னு என்னன்னவோ சொல்வாங்களே... அதில ஒண்ணாவது பண்ணியா? நான் அதெல்லாம் எதிர்பார்த்திட்டுல்ல உட்கார்ந்திருக்கேன்!''

''போய்யா, போய்யா புண்ணாக்கு! நீ சொன்னதெல்லாம் இப்போ நீ பண்ணு, பார்க்கலாம். நான் பண்ற ஐடியாவில இல்லை.''

''சரி, மேடம்! வேறே என்ன பண்ணப் போறீங்க?''

''அதுவா, ரொம்ப கால் வலிக்குது. கொஞ்சம் பிடிச்சு விட்டீங்கன்னா நல்லாயிருக்கும் மிஸ்டர் ராஜ்.''

''ஏய், உதைபடுவே! எனக்கும் தான் காலை வலிக்குது. நீ பிடிச்சு விடு. அது தான் ஒரு பெண்ணோட கடமை. தெரியுமில்ல?''

இப்படி விளையாடிக் கொண்டே அப்படியே எப்போது என்று கணக்கில்லாமல் தம்பதிகள் சிரித்துக் கொண்டே இணைந்து விட்டனர். மறுநாளே ஆஷாவைக் கொண்டு நடராஜ் வீட்டில் விட்டனர். அத்தையும், ரேவதியும் வாயைத் திறக்கவில்லை. விக்ரம் தான் எத்தனையோ புத்திமதிகள் சொன்னான்.

இரவு நடராஜுடன் சுதந்திரமாக இருந்த அந்தக் குதூகலமான நினைப்பிலிருந்த ஆஷாவிற்கு

அதெல்லாம் எதுவும் மண்டையில் ஏறவில்லை. அண்ணன் போரடிக்கிறான் என்று தான் தோன்றியது. புறப்படும் போது மட்டும் அழுகை வந்து விட்டது. நடராஜின் வீட்டில் அவர்கள் செய்த மரியாதைகளை யெல்லாம் ஏற்றுக் கொண்டு அவர்கள் புறப்படும்போது ஆஷா, ரேவதி இருவருமே அழுதுவிட்டனர். ஏன், விக்ரமும் கண்கலங்கிவிட்டான்.

''பார்த்துக்குங்க, துர்கா! நீங்க தான் சின்ன வயசு. இவ ஒரு நாள் கூட அவ அண்ணியை விட்டு இருந்ததே யில்லை!'' என்று விக்ரம் துர்காவிடம் சொன்னதும், ''நீங்க கவலைப் படாதீங்க, அண்ணா! நாங்க அவளை நல்லாவே பாத்துக்குவோம்!'' என்று சொன்னதும், ஆஷாவின் மனமென்ற வேதாளம் திரும்ப முருங்கை மரத்தில் ஏறியது. 'என்ன இவளுக்கு இத்தனை முக்கியத்துவம் தருவது!' என்று கடுப்பானாள்.

அதன் பிறகு துர்கா வீட்டை, தோட்டத்தையெல்லாம் அவளுக்குச் சுற்றிக் காண்பிக்க அழைத்துப் போனாள். ''கொஞ்ச நாழி படுத்து ரெஸ்ட் எடு, ஆஷா!'' என்று சொன்னவள் நாக்கைக் கடித்துக் கொண்டு, ''இனிமே உன்னை அண்ணி, வாங்க போங்கன்னு கூப்பிட ணும்னு நினைச்சேன். சின்னவங்களா நீங்க, அது வர மாட்டேங்குது.''

''அதெல்லாம் வேண்டாம், நீ என்னை ஆஷா, வா, போன்னே கூப்பிடலாம். நான் தான் சின்னவ, உங்களை அக்கா வாங்க போங்கன்னு கூப்பிடணும்!'' என்றாள். ஏதோ கொஞ்சமாவது அவளை மட்டம் தட்டிவிட்டோம் என்ற அல்ப சந்தோஷம் அவளுக்கு.

''நாம் இரண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் எப்படிக் கூப்பிட்டாலும் சரி, அன்பா இருந்தா போதும்,'' என்றவள், ''நீங்க டிரெஸ் மாத்திக்கிட்டு வேணா கீழே வாங்க. ராத்திரி வண்டிக்கு கொஞ்சம் பேர் ஊருக்குப் போறாங்க. நான் பார்த்து அனுப்பணும்,'' என்றாள் துர்கா.

''சுடிதார் போட்டுக்கலாமா?'' என்று கேட்ட ஆஷா விடம், ''இன்னிக்கு வேண்டாம். ஆஷா, இரண்டு நாள் போகட்டும். வந்திருக்கறவங்க எல்லாம் போயாச்சுன்னா அப்புறம் நம்ம இஷ்டம்தானே!'' என்று சொல்லி விட்டுப் போய்விட்டாள் துர்கா.

வேறு புடவைக்கு மாறியவள், சற்று நேரம் அந்த அறைக் கட்டிலிலேயே படுத்து உறங்கிவிட்டாள். நடராஜ் வர மாட்டானா என்றிருந்தது அவளுக்கு. ஆனால் அவன் வந்திருந்த உறவினர்களிடம் பேசிக் கொண்டிருந்தான்.

சாயந்திரம் விளக்கேற்றத்தான் துர்கா வந்து எழுப்பி அழைத்துப் போனாள். கொஞ்சம் குற்ற உணர்வு எட்டிப் பார்த்தாலும், 'என் வீடு, நான் தூங்குவதில் என்ன தப்பு?' என்று தானே நினைத்துக் கொண்டாள். இதே மனோபாவத்துடன் அந்த வீட்டில் அவள் முதல் நாளிலிருந்தே நடந்து கொள்ள, மற்றவர்கள் பொறுமை காத்தனர்.

கல்யாண அமர்க்களமெல்லாம் முடிந்து, எல்லாரும் ஊருக்குப் போய், வீடு பழைய நிலைக்கு வர ஆரம்பித்தது. இரண்டு நாட்களாகத் துர்கா ஸ்கூலுக்குப் போக ஆரம்பித்து விட்டாள். ஆதித்யா தான் அவளைக் கூட்டிக் கொண்டு போய்க் கொண்டிருந்தான்.

அன்றைக்கு காரில் ஏறித் துர்கா உட்கார்ந்ததும் ஸ்கூலுக்குப் போகாமல் எதிர்ப்புறம் போனது கார். ''எங்கே, ஆதி?'' என்று கேட்டாள் துர்கா. ''சர்ப்ரைஸ்!'' என்ற ஆதி ரொம்ப தூரம் சென்று கலெக்டர் ஆபீஸ் முன் நிறுத்தினான்.

''வா,'' என்று கூட்டிக் கொண்டு உள்ளே போக அனுமதி கேட்டான். ஒரு சீட்டில் பெயர், மற்றும் வந்ததன் காரணம் ஆகியவற்றை எழுதித் தரும்படி அவர்கள் கேட்க, 'ஆதித்யா' என்றும், 'யார் பிள்ளை' என்றும் எழுதியனுப்பினான். உடனே வரச்சொன்ன கலெக்டர் மங்கயைர்க்கரசி, இவர்கள் உள்ளே போனதும், ''வாப்பா, ஆதி! நல்லா இருக்கியா? அப்பா அம்மா சௌக்கியமா? என்று கேட்டாள். ''உட்காருப்பா!'' என்று அவள் சொன்ன அப்புறம்தான் உட்கார்ந்தான்.

''இவர் என்னுடைய சிநேகிதி. சின்ன வயதிலிருந்தே குடும்ப நண்பர்கள். பெயர் துர்கா!'' என்று அவளை அறிமுகப்படுத்தினான். அதன் பிறகு மாவட்டக் கல்வி ஆபீஸிலிருந்து 11, 12-ஆம் வகுப்பிற்கு என்னென்ன நார்ம்ஸ் இருக்கணும்கற லிஸ்டைக் கூட கொடுக்காமல் இழுத்தடிக்கிறார்கள் என்றும், தான் அதற்கு என்ன காரணம் என்று ஊகித்திருப்பதாகவும் கூறினான்.

''அப்படியா, இந்த லிஸ்ட் அவங்க கொடுக்காட் டாலும், கொஞ்சம் அமைதியா திரும்பத் திரும்பப் போய்க் கேட்டு வாங்கிடு. என்னைத் தெரியும்னு இப்போ காண்பிச்சுக்காதே. அந்த லிஸ்ட் படி என்ன இருக்கு, என்ன இல்லைன்னு பார்த்துட்டு, சரி பண்ணப் பாரு. லிஸ்ட் பார்த்துட்டு எனக்குப் போன் பண்ணு,'' என்றார் கலெக்டர். ''அப்பா அம்மாவுக்கு என்

நமஸ்காரத்தைச் சொல்லு. இந்த ஸ்கூல்ல நீ இவங்களுக்கு உதவி செய்யறே. சரி. வேறே வேலைல சேர்ந்திருக்கியா? எப்போ கல்யாணச் சாப்பாடு கிடைக்கும்?''

அதன் பிறகு ஆதி, வீட்டிலிருந்து செய்யக்கூடிய பிராஜக்ட் ஒன்றை எடுத்திருப்பது, இந்த ஸ்கூலில் நிர்வாக அதிகாரியாக இருப்பது, எல்லாம் கூறினான்.

''கல்யாணம்?''

''இந்த ஸ்கூலை நல்லபடியா நடக்கச் செய்துவிட்டுத்தான் கல்யாணம் என்று துர்கா நிச்சயித்திருக்கிறார். துர்காவைத்தான் அப்பா அம்மா, மருமகளாக ஆக்கிக்க நினைக்கிறாங்க.'' இதைச் சொல்லுமுன்பே அவனுக்குக் காதுமடல் எல்லாம் சூடாகிவிட்டது.

''வெட்கத்தைப் பாரேன். துர்கா, நீ ஒரு அதிர்ஷ்டசாலியம்மா. ஆதி மாதிரி பையன்களெல்லாம் ரொம்ப அபூர்வம் அம்மா, இந்தக் காலத்தில. நீயும் ரொமப பொறுப்பான, நல்ல பெண்ணாகத்தான் தெரியறே. நல்ல ஜோடி. ஆல் த பெஸ்ட். எப்போ வேணுமானாலும் போன் பண்ணு ஆதித்யா,'' என்றார் கலெக்டர்.

இருவரும் வணக்கம் தெரிவித்து விட்டு வெளியே வந்தனர். போலியாக முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு ஆதியை வம்புக்கு இழுத்தாள் துர்கா. ''ஏன், நீங்க அதிர்ஷ்டசாலி இல்லையா? அதை மேடம் கிட்டே சொல்றதுதானே!'' என்றாள்.

''அது தான் சொன்னாங்களே, நல்ல பொண்ணு நல்ல ஜோடின்னு. அதனால்தான் சொல்லல்லே. எனக்குன்னா தெரியும் நான் எவ்வளவு அதிர்ஷ்டசாலின்னு!''

என்றவன் நேராக மாவட்டக் கல்வி ஆபீஸுக்குத்தான் வண்டியைச் செலுத்தினான்.

''ஆமா, உங்களுக்கு கலெக்டரை இவ்வளவு நெருக்கமாகத் தெரியும்னு எங்கிட்டே சொல்லவே யில்லையே?'' என்றாள் துர்கா.

''ஆமாம், எனக்கு எந்த எந்தப் பெண்களையெல்லாம் தெரியும்னு அம்மணிகிட்டே சொல்லணுமாக்கும்.''

''ஆதி...!'' என்று சிணுங்கி அவன் தோள்ப்பட்டையில் குத்தினாள் துர்கா.

''வலிக்கறதுடி!'' என்றான் பொய்யான கோபத்தோடு.

''என்னது, டீ யா?'' அதற்கொரு குத்து.

''ராட்சசி!'' என்றவன் மாவட்டக் கல்வி ஆபீஸ் வந்துவிட வண்டியை நிறுத்தி இறங்கினான். ''நீயும் வா!'' என்று துர்காவையும் அழைத்துக் கொண்டு ஆபீஸர் ரூமிற்கு சென்றவனைச் சற்றுக் காத்திருக்கச் சொன்னார்கள். உள்ளே இருந்த ஆபீஸர் இவர்களை ஒரு மணி நேரம் போல் காக்க வைத்து விட்டுப் பின் கூப்பிட்டாள். ஒரு வார்த்தைகூட எதுவும் பேசாமல் அந்த பேப்பரைக் கையில் கொடுத்தாள். ஆதி அதில் இருந்த தேதியைப் பார்த் தான். 2007-ல் வெளியான அறிக்கையின் காப்பி அது.

''மேடம், இது ரொம்ப பழசு. எங்களுக்கு லேட்டஸ்ட் காப்பி வேணும்!'' என்றான். காகிதத்தின் பழுப்புக் கலரே சொல்லியது அது லேட்டஸ்ட் இல்லை என்று.

''ஓ! உங்களுக்கு லேட்டஸ்ட் வேணுமா? ஜெராக்ஸ் எடுக்கணும். ஒரு 45 நிமிஷம் ஆகும். பரவாயில் லையா?''

''பரவாயில்லை, மேடம். இருந்து வாங்கிட்டுப் போறோம்,'' என்றான் ஆதி.

வேண்டுமென்றே இழுத்தடிக்கிறாள் என்று தெரிந்தது. மிகவும் பொறுமையாக வெளியே உட்கார்ந் திருந்தார்கள். ஒரு மணி கழித்து ப்யூன் ஒரு கந்தல் பேப்பரை அவனிடம் கொண்டு வந்து கொடுத்தார். தேதியைச் சரி பார்த்துவிட்டு, ''நன்றி!'' என்ற ஒற்றைச் சொல்லுடன் வெளியே நடந்தான் ஆதி.

24

ஸ்கூலுக்குப் பறந்தனர் இருவரும். அங்கு எலெக்ட்ரிக் வேலை முடிந்து, பாத் ரூம் வேலை ஆரம்பித்திருந்தது. இன்னும் சுவரெல்லாம் பழுது பார்க்கும் வேலை, ஜப்பானி லிருந்து வந்திருந்த குடி தண்ணீருக்கான மெஷினை நிறுவுவது என்று எல்லா வேலைகளும் மும்முரமாக நடந்து கொண்டிருந்தன. 4,5 ஆசிரியர்கள் அந்த வேலைகளை மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்தனர்.

இவர்கள் போய் உட்கார்ந்து அந்தப் பட்டியலில் என்னென்ன இருக்கிறது என்று பார்த்தார்கள். மற்றவை எல்லாமே அநேகமாக இருந்தன. இல்லாதது ஒரு பெரிய விளையாட்டு மைதானம். இவர்கள் பள்ளியில் மூன்று வரிசைகளாக வகுப்பறைகளும், பின்னால் கொஞ்சம் காலியிடமும் இருந்தன. அது தான் இத்தனை நாட்களாக மைதானமாகப் பயன்படுத்தப் பட்டு வந்தது. இப்போது

இதில் சொல்லியபடி பார்த்தால் மைதானம் பாதிதான் இருந்தது. ஆனால் அதில் மைதானம் ரொம்ப முக்கியம், இல்லாவிட்டால் பெர்மிஷன் கிடைக்காது என்று போட்டிருந்தது.

''சரி, என்ன செய்வது துர்கா? இருக்கும் மைதானத் தையே ஒத்துக் கொள்ளச் சொல்லிக் கேட்போமா? என்று கேட்டான் ஆதி.

''அவங்க தொந்தரவு பண்ற நோக்கத்தில இருக்காங்க. ஒத்துக்க மாட்டாங்க. இல்லைனா, 11, 12 படிக்கற பிள்ளை களுக்கு விளையாட வேறு நேரம் இருக்கா? சும்மா விதண்டா வாதம் பண்ணுவாங்க!'' என்றாள் துர்கா.

''சரி, இப்போ என்ன செய்யணும்?'' என்றான் ஆதி.

''முதல்ல நீங்க வயிறு ரொம்ப சாப்பிடணும். இல்லாட்டா நீங்க பிரச்னைக்குத் துவள்பவரா? இப்படிக் கேட்டுட்டு உட்கார்ந்திருக்கிறவரா?'' என்று கேட்டபடி ஆதியின் வீட்டிலிருந்து வந்திருந்த சாப்பாட்டை எடுத்து இலை விரித்துப் பரிமாற ஆரம்பித்தாள் துர்கா.

''நீயும் உட்கார் துர்கா!'' என்று அவன் ரொம்பவும் வற்புறுத்தவே, இன்னொரு இலை போட்டுத் தானும் சாப்பிட ஆரம்பித்தாள். ''ஆஹா, பாகற்காய் கறியை ஆன்ட்டி சூப்பரா பண்ணியிருக்காங்க!'' என்றாள்.

''உனக்குக் கசப்பு பிடிக்குமா?''

''உங்களைப் பிடிச்சிருக்கே.''

''நல்லா இரண்டு போடணும். ரொம்பத்தான் கொழுப்பு!'' என்றான் ஆதி.

''சரி, இப்போ சொல்லு, ஆதி! இந்த பிளேகிரவுண்ட் பிரச்னைக்கு என்ன பண்ணலாம்?'' என்று கேட்டாள் துர்கா.

இவள் ஆதியைத் திடீரென்று வா, போ என்பாள். அப்புறம் திடீரென்று, வாங்க, போங்க என்பாள். ஆதி சொல்லிவிட்டான். ''உனக்கோ மாத்திக்க முடியல்லே. சும்மா வாடா, போடான்னே சின்ன வயசில கூப்பிட்ட மாதிரியே கூப்பிடு!'' என்று.

''நிஜமாகவே வாடா போடாம்பேன்!'' என்று அவனைப் பயமுறுத்துவாள் விளையாட்டாக.

''இதோ பார், துர்கா! எந்தப் பிரச்சனைக்கும் தீர்வு அடுத்த நிமிடமே கிடைக்காது. ஒண்ணு இரண்டு நாளாவது ஆறப்போடு. தீர்வு தானே கிடைக்கும்!'' என்றான் ஆதி.

இருவருமாக நடக்கும் வேலைகளை மேற்பார்வை யிடச் சென்றார்கள். சாயந்திரம் துர்காவை அவள் வீட்டில் விடும்போது கூட இருவரும் அதே யோசனையில் தான் இருந்தனர். வீட்டிற்குப் போனதும் சொல்லி வைத் தாற்போல நாராயணசாமி, ''என்னம்மா, துர்கா. ஏதாவது புதுப் பிரச்னையா?'' என்று கேட்டுவிட்டார்.

துர்கா அன்றிருந்தமனநிலையில் அத்தனையையும் கொட்டிவிட்டாள். ''என்னம்மா, நீ இதை ஒரு பெரிய பிரச்னையா நினைக்கறே. பதட்டத்தினால உனக்கு யோசனை ஓடல்லேம்மா. இதுக்கு சுலபமான தீர்வு ஒண்ணு இருக்கே!'' என்றார்.

''நிஜமாகவாப்பா? என்ன தீர்வு அது?'' என்று ஆவலுடன் கேட்டாள்.

''நம்ம ஸ்கூலுக்குப் பின்னாடி இருக்கே 4 வீடுங்க, அதுக்கு முன்னாடி காலி மனை இருக்கேம்மா. அவங்க 4 பேர்ல இரண்டு பேருடைய பிள்ளைகள் ஸ்டேட்ஸ்ல இருக்காங்க. எல்லோரும் நமக்குத் தெரிஞ்சவங்கதானே! கேட்டுப் பார்க்கலாமே! ஒரு கோடி வீட்டுக்காரர், அவரே முதியோர் இல்லம் எதுக்காவது போகப் போறதா கேள்விப் பட்டேன். அந்த நாலு வீட்டிலும் கேட்கலாமேம்மா,'' என்றார்.

''கேட்டுப் பார்க்கலாம். ஆனா, அவங்க ஒத்துப் பாங்களா?''

''கேட்கும் முன்னே உனக்கு எதுக்கும்மா இத்தனை பயமும் சந்தேகமும்? முதல் இரண்டு வீட்டுப் பையன் களும் நம்ம ஸ்கூல்ல உன் கிளாஸ்லதானே ஒண்ணாங் கிளாஸிலிருந்து 10ஆவது வரைக்கும் படிச்சாங்க? உன்னை அந்த இரண்டு பேரோட அம்மாவும் பிரியமா கூப்பிட்டுப் பேசுவாங்களேம்மா. உனக்கு நினை வில்லையா?''

''ஆமாம்பா. இப்போ ஞாபகம் வருது. ஆனா அதுக் காகப் பூமியை விட்டுக் கொடுப்பாங்களா?''

''நம்ம அவசியத்தைச் சொல்லுவோம். அப்புறமா அவங்க சொல்றதைக் கேட்டு வேறே எதுவும் யோசிக் கலாம். வாசல் ரோடுக்கு எதிரே கூட ஒரு பெரிய மனை காலியா இருக்கு. ஆனா, குழந்தைகளை ரோடு கிராஸ் பண்ணிப் போக விடறது அபாயம்னு கல்வி ஆபீஸ்ல ஆட்சேபனை சொல்வாங்க. பார்க்கலாம். இப்போ போய் ஏதாவது சாப்டுட்டு ரெஸ்ட் எடுத்துக்கோம்மா. காலைல நானும் வரேன். போய்க் கேட்கலாம்,'' என்றார்.

காப்பி சாப்பிட்டு விட்டு மாடிக்குப் போன துர்கா உடனேயே ஆதித்யாவுக்குப் போன் செய்தாள். அவனுக்கு ஒரே மகிழ்ச்சி, ''நல்ல மனதுடன் முயற்சி பண்றோம், நல்லபடியாக முடியும் பாரு,'' என்றவன், ''காலையில அங்கிளையும் கூட்டிகிட்டுப் போகலாம்,'' என்றான்.

காலையில் எழுந்ததும் சீக்கிரமே தயாராகி விட்டார் நாராயணசாமி. துர்காவையும், அவரையும் அழைத்துப் போக ஆதித்யா வந்து விட்டான். ஸ்கூலுக்குப் போன துமே அங்கே நடப்பதை ஒரு பார்வை பார்த்து விட்டு முதல் வீட்டிற்குப் போனார்கள்.

''வாங்க, வாங்க!'' என்று பலமாக வரவேற்ற அந்த வீட் டின் பெரியவர், ''என்ன விஷயம்?'' என்று கேட்டார். இவர்கள் தாங்கள் வந்த விஷயத்தைச் சொன்னார்கள். அவர் தானே அதைப் பற்றிப் பேச நினைத்திருப்பதாகச் சொல்லி விட்டுப் பக்கத்து வீட்டுக்காரரையும் அழைத்து வந்தார்.

''நீங்க இன்டெர்நெட்ல ஒரு கோரிக்கை போட் டிருந்தீங்களாமே! எங்க இரண்டு பேர் பையன்களும் உங்க ஸ்கூல்ல படிச்சவங்கதானே. இன்னிக்கு இரண்டு பேரும் யு.எஸ். போய்ச் சம்பாதிக்கறாங்க. அவங்க நல்லா இருக்காங்கன்னா, அதுக்கு ஆதாரமான முதல் படிப்பு உங்க ஸ்கூல்தானே... நாங்க எப்படியும் யு.எஸ்லேயே க்ரீன் கார்டு வாங்கிட்டு தங்கிடற எண்ணம் இருக்கு. அதனால எங்க இரண்டு பேர் வீட்டெதிர் மனையையும் நம்ம ஸ்கூலுக்குத் தாராளமாகக் கொடுக்கிறோம். எங்க பையன்களும் அதைத்தான் விரும்புவாங்க!'' என்றனர் இருவருமாக.

''ரொம்ப நன்றி சார். அப்படியே அதோட விலையையும் சொல்லுங்க. எங்களால கொடுக்க முடியும்ன்னு பார்க்கணுமில்லையா?'' என்றார் நாராயணசாமி.

''ஸார், இவ்வளவு விருப்பத்தோட குடுக்கறோம்னு சொன்னதுக்கு என்ன ஸார் அர்த்தம்? அதை டொனேஷனாகத்தான் தரோம். அதன் ரெஜிஸ்ட்ரேஷன் செலவை மட்டும் நீங்க ஏத்துக்குங்க போதும்!'' என்றனர்.

துர்கா ஆனந்தத்தில் கண்களில் நீர் வழியக் கை கூப்பினாள்.

''என்னம்மா துர்கா, நீயே வந்து எங்களைக் கேட்டிருக்கலாமே! எதுக்கு அப்பாவைத் தொந்தரவு பண்ணினேம்மா? சரி, வாங்க. பக்கத்து வீட்டு டாக்டர் புறப்படறதுக்கு முன்னாடி அவரைப் போய்ப் பார்க்கலாம்,'' என்றார்.

எல்லோருமாக அந்த வீட்டிற்குப் போனார்கள். அவரும் இவர்களை நல்லபடியாக வரவேற்றார். ''நீங்க இப்படி யோசிக்க இத்தனை நாட்கள் ஆகியிருக்கு. ஆனா நானும் இவங்களோட சேர்ந்து இதையேதான் யோசிச்சேன். ஆனா ஒண்ணு, என் பெண் கல்யாணத்துக்கு எனக்குப் பணம் தேவைப்படுகிறது. அதனால எனக்கு அந்த மனைக்கு ஒரு விலையை விட கொஞ்சம் குறைச்சுக்கறேன்!'' என்று நேரிடையாக, இவர்கள் கேட்க இடமே வைக்காமல் சொல்லிவிட்டார்.

''ரொம்ப சந்தோஷம் டாக்டர்! நீங்க சொல்ற விலையைக் கொடுத்துடறேன்,'' என்று நாராயணசாமி சொல்லிக் கொண்டிருக்கையில், அடுத்த வீட்டுக் கிழவரும் வந்து விட்டார்.

இவர்கள் எல்லோரும் எழுந்து நின்று மரியாதையுடன் வரவேற்க, அவரும் உள்ளே வந்து உட்கார்ந்து தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

''ஸார், எனக்குக் குழந்தைகள் இல்லை. என் மனைவி போயும் ரொம்ப வருஷங்கள் ஆயிடுத்து. நான் இந்த வீட்டை ஏதாவது தர்ம காரியத்துக்குக் கொடுத்துட்டு ஒரு முதியோர் இல்லத்தில போய்ச் சேர்ந்துடலாம்னு இருக்கேன். இனிமேல்லாம் வீடு நடத்தற அளவு தெம்பு இல்லை. அலுப்பாவும் இருக்கு. நான் உள்ளவரை எனக்கு பென்ஷன் வரும். அது என் ஒருத்தனுக்குத் தாராளமா போறும். நீங்க தாராளமா எடுத்துக்கோங்க - இந்த வீடு, அதுக்கு முன்னால இருக்கற காலி இடம் இரண்டையுமே!'' என்றார்.

''வீடு எதுக்கு, ஸார்?'' என்றாள் துர்கா.

''இருக்கட்டும்மா. உங்களுக்கே ஏதாவது ஆபீஸ் டிபார்ட்மெண்ட்டுக்கோ, இல்லை லைப்ரரிக்கோ பிரயோஜனப்படும். ரிப்பேர் வேலை யெல்லாம் ஆரம்பிச்சுட்டீங்க போல இருக்கே! கூடவே இதையும் உங்களுக்கு வேணுங்கறபடி மாத்தி அமைச்சுக்கலாம். இல்லையா, 11ஆவது, 12ஆவது வகுப்புகளை இந்த வீட்டில் வெச்சுக்கோங்க. ஒரே ஒரு கோரிக்கை. உங்களுக்கு ஆட்சேபணை இல்லேன்னா அந்த பிளாக்கிற்கு என் மனைவி பெயரை வைங்கோ. அவளுக்குக் குழந்தை கள்னா ரொம்பவே ஆசை, பாவம்!'' என்றார்.

துர்கா அழுதுவிட்டாள். அந்தப் பெரியவரின் காலில் விழுந்து நமஸ்கரித்தாள்.

''நன்னா இரம்மா. நீ எடுத்துக்கிட்டுருக்கிற காரியம் ரொம்ப பெரிசு. அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் வைத்தலை விட, ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் சிறந்ததுன்னு பாரதி பாடல்லியா? ஒரு நல்ல காரியத்துக்காக என் வீடு உபயோகப்படறது எனக்கு ரொம்ப சந்தோஷம்!'' என்றார்.

''உங்க எல்லோருக்கும் ரொம்ப பெரிய மனசு. உங்களுக்கெல்லாம் எப்படி நன்றி சொல்றதுன்னு எங்களுக்குப் புரியல்லே!'' என்று நாராயணசாமி கண் கலங்கினார்.

''என்ன ஸார், இது? எத்தனை சொத்து இருந்தாலும் தலைல என்னவோ கொண்டு போகப் போறதில்லே. அதுவும் வாரிசே இல்லைன்னு நான் நினைச்சதுக்கு, உங்க ஸ்கூல் குழந்தைகள் எல்லாருமே என் வாரிசாயிட்டாங்க. அந்த வகையில் நான் கொடுத்து வெச்சவன். நான் பசுமலைல தான் ஒரு முதியோர் இல்லத்தில பதிவு பண்ணியிருக்கேன். முடியறச்சே வரேன், உங்களைப் பார்க்க,'' என்றார்.

உணர்ச்சிகரமான, நெகிழ்ச்சியான ஒரு சூழ்நிலை அங்கு நிலவியது. டாக்டரின் மனைவி எல்லோருக்கும் காப்பி கொண்டு வந்து கொடுக்க, அருந்திவிட்டு இவர்கள் விடைபெற்றனர்.

''இப்போ இந்த குறுக்குச் சுவரை இடிச்சுட்டு காலி இடத்தைத் தாண்டிக் கட்டணும். பெரியவர் வீடு நம்ம காம்பௌண்ட்குள்ள வர மாதிரி கட்டணும், இல்லையா?'' என்று கேட்டாள் துர்கா.

ஆபீஸில் போய் உட்கார்ந்து மற்ற விஷயங்களை எல்லாம் பேசிக் கொண்டிருந்தனர்.

''ஆனாலும் அவங்க நாலு பேருக்கும் பெரிய மனசு, இல்லையா?'' என்றான் ஆதித்யா.

''ஏம்பா, உன்னை விடவா? வெளியே வேலைக்குப் போறேன், சீக்கிரமா கல்யாணத்தைப் பண்ணிவையுங் கன்னு சொல்லாமே, எங்களுக்காகத்தானே இங்கே உட்கார்ந்திருக்கே?'' என்றார் நாராயணசாமி.

''நான் உங்கள்ல ஒருத்தன். ஆனா, அவங்க அப் படியா?'' என்றான் ஆதி.

''அதுவும் சரிதன்,'' என்றார் நாராயணசாமி.

''மொத்தத்தில நம்ம பிரச்சனையை மீனாட்சி அம்மன் தீர்த்து வெச்சுட்டா!'' என்றாள் துர்கா. ''ஏம்பா, இப்பவே எல்லோருக்கும் இனிப்பு வழங்கி இதைக் கொண்டாட லாமா?''

''இல்லை துர்கா! நீ வீட்ல போய்ப் பூஜை பண்ணு. ஆனா, இங்கே யார்கிட்டேயும் இப்போலேர்ந்து சொல்லி கிட்டுருக்க வேண்டாம். வேண்டாத காதுகளுக்கு விஷயம் போனா வம்பு!'' என்றான் ஆதித்யா, முன் யோசனையுடன்.

''நீங்க சொல்றது நிஜம்தான் ஆதி. இப்போ அடுத்து நாம செய்ய வேண்டியது என்ன?'' என்றாள் துர்கா.

''உடனே மாவட்டக் கல்வி அதிகாரி ஆபீஸுக்கு, 'எங்களுக்கு பிளேகிரவுண்ட் பெரிசாக்க இடம் கிடைச் சுடுச்சி,' அப்படீன்னு லெட்டர் எழுதிப் போட்டா,

அவங்க வந்து இன்ஸ்பெக்ட் பண்ணிட்டு பர்மிஷன் குடுப்பாங்க,'' என்றார் நாராயணசாமி.

''இல்லை மாமா! லெட்டர் எழுதிப்போட்டுப் பதில் வரவரைக்கும் காத்துகிட்டு இருக்கணும். நேர போய் அனுமதி வாங்கிட்டு வந்துடலாம். இன்னிக்கு நாம நினைச்ச வேலை நினைச்சதை விடச் சுளுவா முடிஞ்சுது. அதனால இன்னிக்கே போய் அந்த வேலையைப் பார்த்துடலாம், மாமா!'' என்றான் ஆதி. இப்போதெல்லாம் நாராயணசாமியை மாமா என்று கூப்பிட ஆரம்பித் திருந்தான்.

''சரிப்பா, அதுவும் சரிதான். நீங்க இரண்டு பேரும் கிளம்புங்க,'' என்றார்.

''இல்லை மாமா, இதுக்கு நீங்களும் வரணும்னு நினைக்கிறேன். ஏன்னா, ஸ்கூலுக்கு உரிமையாளர் நீங்க தான். உங்களுக்கு முடிஞ்சா இன்னிக்கே போயிட்டு வந்துடலாம். இல்லைன்னா, நாளைக்கோ, நாளன் னிக்கோ போயிட்டு வந்துடலாம்.''

''எனக்கு முடியாமெல்லாம் ஒண்ணுமில்லேப்பா. இன்னிக்கே போயிட்டு வந்துடலாம்,'' என்று சொல்லி உடனே எழுந்தார் நாராயணசாமி.

வேண்டிய பேப்பர்களை எல்லாம் எடுத்துக் கொண்டு மூவருமாய்க் கிளம்பினார்கள். இந்த முறை மாவட்டக் கல்வி அதிகாரி ஆபீஸில் நிறைய நேரம் காத்திருக்க நேராமல் சீக்கிரமே மேடத்துடைய பேட்டி கிடைத்து விட்டது.

''நான்தான் பட்டியல் கொடுத்தேனே, என்னென்ன இருக்கணும்னு,'' என்றாள்.

"ஆமாம் மேடம். அந்தப்படி எல்லாமே சரியா இருக்கு." என்று ஆதித்யா சொல்ல, அதிர்ந்து போன அந்த அதிகாரி தன்னைச் சுதாரித்துக் கொண்டு, "அங்கு நூலகம் பேருக்குத்தான் இருக்குன்னும், மைதானம் தேவையான அளவு இல்லைன்னும் கேள்விப்பட்டேனே!" என்றாள்.

"இரண்டையும் சரி பண்ணியாச்சு, மேடம் 11ஆவது, 12ஆவது தனியா வெச்சு நடத்த இடமும் ஏற்பாடு பண்ணிட்டோம்.

சற்று யோசனையில் ஆழ்ந்த அந்த அதிசாரி, "நீங்க பாட்டுக்கு உங்களுக்கு உரிமையில்லாத, அல்லது சொந்தக்காரர் சம்மதம் இல்லாத எந்த இடத்தையாவது உங்க மைதானம்னு சொல்லிட்டீங்கன்னா பின்னாடி பிரச்னை ஆயிடும். அடுத்து ரோடைக் கிராஸ் பண்ணிப் போறமாதிரி இடத்தை மைதானமா மாத்தினிங்கன்னா, அதையும் ரூல்ஸ்க்கு எதிராகத்தான் பார்ப்போம். இப்பவே சொல்லுங்க. இல்லைனா நாங்க இங்கிருந்து இன்ஸ்பெக்ஷனுக்கு வந்து போற நேரம், உங்க நேரம் எல்லாம் வீணாயிடும். என்ன சொல்றீங்க?" என்றாள்.

"அதெல்லாம் ஒரு பிரச்னையும் இல்லை, மேடம். நீங்க வந்து பாருங்க."

"இவர்தான் பள்ளிக்கூடத்தின் உரிமையாளர், மிஸ்டர் நாராயணசாமி. அவங்க அப்பா காலத்திலேருந்தே நடத்திக்கிட்டிருக்கார். இப்போ இவங்க பொண்ணும், நானும் பொறுப்பேத்துட்டிருக்கோம்," என்று ஆதி சொல்லவும், நாராயணசாமி கை கூப்பினார்.

"ஆமா, ஒரு தெரிஞ்சிக்கற ஆவல்லதான் கேக்கறேன். எப்படி இரண்டையும் சமாளிச்சீங்க?"

''எங்க ஸ்கூலுக்குப் பின்னாடி நாலு வீடு இருக்கு, மேடம். நாலு வீட்டுக்கு முன்னடி காலி இடம் நிறைய இருந்தது. அதை அவங்கல்லாம் நாங்க போய்க் கேட்டதும் உடனே குடுத்துட்டாங்க. லைப்ரரிக்கு புக்ஸ் எல்லாம் ஸ்கூலோட பழைய மாணவர்கள் எல்லாம் நன்கொடையாகக் கொடுத்தது மேடம்,'' என்றான ஆதித்யா.

''கன்கிராஜுலேஷன்ஸ்! சீக்கிரமா ரிஜிஸ்ட்ரேஷனை முடிச்சுட்டு எங்களுக்குத் தெரிவியுங்க. நாங்க வந்து இன்ஸ்பெக்ட் பண்ணிட்டா பர்மிஷன் கிடைச்சுடும்,'' என்றார் அந்த அதிகாரி.

''மிக்க நன்றி, மேடம்! எங்க விண்ணப்பம் இதோ இருக்கு. நாங்க வரோம் மேடம்,'' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டனர்.

''அப்பாவை வீட்ல விட்டுட்டு நான் கொஞ்சம் போய் ஸ்கூல்ல வேலை பார்க்கறேன். நீ கூட வீட்டுக்குப் போயிடறியா?'' என்று கேட்டான் ஆதி.

''நான் என்ன அப்பா மாதிரி வயசானவளா? நானும் ஸ்கூலுக்கு வரேன்.''

''அம்மாவைச் சாப்பாடு அனுப்ப வேண்டாம்னு போன் பண்ணிச் சொல்லிட்டேன். வீட்டுக்குப் போய்ச் சாப்ட்டுட்டுப் போயிடலாம்'' என்றாள் துர்கா.

25

வீட்டிற்குப் போனதும் அவசரமாகச் சாப்பிட்டுவிட்டுப் புறப்பட்டார்கள் ஆதியும், துர்காவும்.

அப்போதுதான் ஆஷா இறங்கி வந்தாள். தினமும் சாயந்திரம் அவளும் நடராஜும் எங்கேயாவது வெளியே போய்ச் சுற்றிவிட்டு வருவது வழக்கமாக இருந்தது. அன்று சாயந்திரமும் அவளும் நடராஜும் எங்கோ கிளம்பிக் கொண்டிருந்தார்கள். நடராஜ் காரை எடுக்கப் போய்விட்டான். தனலட்சுமி மெதுவாக, ''அம்மா ஆஷா, நகையெல்லாம் போட்டுகிட்டுப் போறே, ரொம்ப லேட் பண்ணாமே ஒரு 8 மணிக்கெல்லாம் வந்துடுங்கம்மா!'' என்றாள்.

''ஆஹா, கல்யாணம் ஆகாத பொண்ணும், ஒரு பையனுமா சுத்தறாங்க, எப்ப பார்த்தாலும். அதைப் பத்தி ஒரு கேள்வியும் இல்லை. இந்த வீட்ல. நாங்க புதுசா கல்யாணமானவங்க. சந்தோஷமா இரண்டு இடத்துக்குப் போனாத்தான் கண்ணை உறுத்துது!'' என்று தனலட்சுமி, கூடத்திலே இருந்த நாராயணசாமி காதிலும் விழுவது மாதிரியே வெடுக்கென்று சொல்லிவிட்டுப் புறப்பட்டுப் போய்விட்டாள் ஆஷா.

அதிர்ச்சியில் வாயடைத்து நின்ற தனம், தன் கணவர் பக்கத்தில் போய் உட்கார்ந்தாள்.

''ஏங்க, நான் ஒண்ணும்...'' என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தவள் முதுகைத் தடவிக்கொடுத்தார் நாராயண சாமி. ''நான் எல்லாம் பார்த்துக்கிட்டுத்தான் இருந்தேன். உனக்கு எப்பவுமே பொறுமை, தனம். இப்போ இன்னும் பொறுமையாக இருக்கணும்!'' என்றார்.

* * *

ஸ்கூல் திறக்கும் முன் அத்தனை வேலைகளும் நடக்க வேண்டுமே என்று எப்போதும் ஸ்கூலிலேயே

இருந்து எல்லா வேலைகளையும் கவனித்துக் கொண்டனர் ஆதியும், துர்காவும்.

''டென்ஷன் ஆகாதே, கண்ணம்மா. நான் இத்தனை நாளில் இத்தனை வேலை நடக்கணும்னு ஒரு டேபிள் போட்டுருக்கேன், பார். அதுபடிதான் இதுவரை நடந்துகிட்டு வருது. கார்ப்பெண்டர் வேலையும் நடக்குது. இது முடிஞ்சதும் பெயிண்டிங் நடந்தா வேலை ஓவர். வேணுமானா, மாவட்டக் கல்வி அதிகாரி கிட்டே பெர்மிஷன் கேட்டுகிட்டு ஒரு 10 நாள் தள்ளிக்கூட ஸ்கூலைத் திறக்கலாம். நீ கவலைப்படாதே!'' என்றான் ஆதி.

அப்போதுதான் பின் வீட்டினரிடம் போய் ரெஜிஸ்ட் ரேஷனுக்கு நாள் ஏற்பாடு செய்து கொண்டு வந்திருந் தார்கள். சற்று நேரத்தில் முதல் வீட்டுக்காரரிடமிருந்து போன். ''கொஞ்சம் வந்துட்டுப் போக முடியுமா, ஆதித்யா?'' என்று.

உடனே புறப்பட்டுப் போன ஆதித்யாவுக்கும், துர்காவுக்கும் ஒரே அதிர்ச்சி. அவர்கள் வீட்டிற்கு அந்த தொகுதியின் எம்.எல்.ஏ. வின் காரியதரிசி வந்திருந் தாராம். அந்த மனை அவர்களுக்கு வேணுமாம். அந்த மனைக்குச் சரியான விலை குடுக்கறாராம் அந்த எம்.எல்.ஏ. வேறே யாருக்கும் கொடுக்கக்கூடாதுன்னு மிரட்டிட்டுப் போறாங்க, தம்பி!'' என்றார்கள் இரண்டு வீட்டுக்காரர்களும், அழமாட்டாக் குறையாக.

''சரி, ஸார். உங்களுக்கு விலைக்கு விற்கலாமேன்னு இப்ப கூட தோணுதா?'' என்று கேட்டான் ஆதி.

''வேண்டவே வேண்டாம். பேச்சு மாறினா அப்புறம் நாங்க என்ன மனுஷங்க? எங்க பசங்களுக்கும் நாங்க இதை ஸ்கூலுக்குக் கொடுக்கறது தான் சந்தோஷம். நாங்க நாலு பேருமா கூடிப் பேசி உங்களுக்குத்தான் குடுக்கணும்னு சத்தியமா நினைக்கறோம். ஆனா, இந்த புதுத் தொந்தரவுக்கு என்ன பண்ணப் போறோம்? நாங்க இன்னும் கொஞ்ச நாள்ல வீட்டை வித்துட்டு ஸ்டேட்ஸ் போயிடுவோம். டாக்டர் கூட ஆஸ்பத்திரி தூரமா இருக்கேன்னு அங்கேயே வீடு பாத்துக்கப் போறாராம். இந்தப் பிரச்சனைன்னா வீட்டை வித்துட்டு கிட்டக்கவே ஒரு வீடு வாங்கிடுவேங்கறாரு. என்னங்க இது? எதுனால இந்தத் தொந்தரவு எங்களுக்கு?''

''சரி, அடுத்த முறை யார் வந்தாலும் இதையே தைரியமா, ஆனா சண்டை வராத படிக்கு, அதே சமயம் உறுதியாச் சொல்லிடுங்க. நான் பார்த்துக்கறேன். எங்களுக்குச் சில விரோதிங்க முளைச்சிருக்காங்க. ஆனா, எனக்கு அந்த எம்.ல்.ஏ. வைவிட சக்தியுள்ளவங்களைத் தெரியும். அவர் திரும்பக் கேட்கிறாரா என்று பார்த்துக் கொண்டு மேலே நடவடிக்கை எடுப்போம். எந்த நேரமும், என்ன நடந்தாலும் நீங்க எனக்குப் போன் பண்ணுங்க. கவலைப் படாதீங்க!'' என்று தைரியம் சொன்னான் ஆதித்யா.

அதன் பிறகு பள்ளி திரும்பிய இருவரும் ரொம்ப நேரம் வேலை பார்த்தனர். மாலை ஆறு மணிக்குத் திரும்ப வீட்டினர் ஆதிக்குப் போன் செய்தனர். ''எம்.எல்.ஏ. வந்துட்டு இப்பத்தான் போறாரு. அந்த மனையை அவருக்கே கொடுக்கணும்னு நயமாப் பேச ஆரம்பித்

தவர், கொஞ்சம் கொஞ்சமா சுருதி ஏறிக் கத்திப் பயமுறுத்திட்டுப் போயிருக்காரு. 'இதற்கான விளைவுகள் உங்களுக்கு ரொம்ப கெடுதல் செய்யப் போகிறது. நீங்க இதற்காக வருத்தப்படுவீங்க!' அப்படீன்னு மிரட்டிட்டுப் போயிருக்காரு. நாளைக்கு அவர் டெல்லி போறாராம். இரண்டு நாள்ல திரும்பிவிடுவாராம். அதற்குள்ள நல்ல முடிவோட தயாரா இருங்கன்னுட்டு போறாரு தம்பி. உங்களுக்குத் தெரிந்த பெரிய மனிதர் யாரு? கொஞ்சம் சொன்னீங்கன்னா, பயமில்லாம இருப்போம்!'' என்றனர்.

''ஸார்! இந்த ஊர் கலெக்டர் எங்க குடும்ப நண்பர். அந்தம்மா கைல போலீஸ் மொத்தமும் இருக்கு. இந்த எம்.எல்.ஏ. கருணானந்தம் இருக்காரே. அவரு ஷ்யாம் கற எங்க பி.டி.மாஸ்டருக்கு ஏதோ உறவு. அந்த பி.டி. மாஸ்டரை நடத்தை சரியில்லைங்கற காரணத்தினால வேலையை விட்டு எடுத்துட்டோம். அந்தக் கோபத்தில மாவட்டக் கல்வி ஆபீஸ் வரை போய் எங்க ஸ்கூலுக்கு 11ஆவது, 12ஆவது வகுப்பு வரக்கூடாதுன்னு சதி பண்றாரு. ஆனா இப்ப உங்க வீட்டைக் கேக்கற அரசியல் வாதிகளுக்குள்ள சொத்து சேர்க்கிற ஆசை. இப்பவும் சொல்றேன், உங்க மனசை மாத்திக்கறதா இருந்தா சொல்லுங்க,'' என்றான்.

''இல்லை தம்பி, நிச்சயமா இல்லை. மக்களுக்கு நல்லது செய்யறேன்னு ஓட்டு வாங்கிட்டு, இப்படி எதிர்ப்பதமா நடந்துக்கறவங்ககிட்டே எங்க பரம்பரை நிலம் போகக்கூடாது. எங்க பசங்க இப்போ கூட போன்ல பேசினாங்க. நிச்சயமா இந்த அராஜகத்துக்கு நீங்க துணை போகக் கூடாதுன்னு சொல்றாங்க. ஆனா, நாங்க

ஜாக்கிரதையாகவும், பத்திரமாகவும் இருக்கணும், இல்லையா?'' என்று கேட்டார் முதல் வீட்டுக்காரர்.

''நிச்சயமாக ஸார்! நான் கலெக்டர்கிட்டே பேசிட்டு உங்ககிட்டே பேசறேன்,'' என்றான் ஆதி. முதலிலேயே போனை ஸ்பீக்கரில் போட்டிருந்ததால் துர்காவுக்கும் தெரிந்தது எல்லா விஷயங்களும். அவள் எதுவுமே பேசவில்லை.

ஆதி கலெக்டருடன் விவரமாக போனில் பேசினான். ''இப்ப இன்னிக்கு நாளக்கி அவங்களுக்குத் தொந்தரவு எதுவும் இருக்காது. நாளைக்கே ரெஜிஸ்ட்ரேஷனை வெச்சக்கச் சொல்லு,'' என்றார் கலெக்டர்.

''இல்லே மேடம். நாளைக்கு வேறே ரிஜிஸ்ட்ரேஷன் நிறைய இருக்காம்.''

''நான் இப்பவே அவங்களுக்குப் போன் பண்ணி நாளைக்கே முதல் வேலையா உங்க ரெஜிஸ்ட்ரேஷனை வெச்சுக்கச் சொல்றேன். வேறே யார் கிட்டேயும் இப்போ சமாசாரம் சொல்ல வேண்டாம். அந்த எம்.எல்.ஏ.வும் நாளைக்கே ரெஜிஸ்ட்ரேஷன் ஆயிடும்னு எதிர்பார்க்க மாட்டார். நாளன்னிக்கு வந்தா எங்க பையன்களைக் கேட்டுச் சொல்றோம்னு இரண்டு வீட்டுக்காரங்களும் சொல்லட்டும். பையன்கள் லைன்ல கிடைக்கலே. ஒரு வாரம் டைம் கொடுங்கன்னு கேட்கச் சொல்லுங்க. மேலே நான் பாத்துக்கறேன். ரொம்பவும் யார் கவனத்தையும் கவராம ரெஜிஸ்ட்ரேஷன் ஆபீஸுக்குப் போய் வந்துருங்க. கவலைப் படாதீங்க. ஆல் த பெஸ்ட்.''

''ஸாரி, மேடம்! உங்களை இந்த நேரத்தில தொந்தரவு பண்ணினதுக்கு!'' என்றான் ஆதி.

''பரவாயில்லை ஆதி! திரும்ப எப்போ வேணுமானாலும் கூப்பிடு,'' என்று கலெக்டர் சொல்ல, அது மொத்தத்தையும் ஆதி பின் வீட்டுக்காரர்களுக்குச் சொன்னான்.

அவர்களும் சாமர்த்தியமானவர்கள் தான். ஒரேயடியாக நான்கு வீடுகளையும் பூட்டிக் கொண்டு வராமல், மறுநாள் இரண்டிரண்டு பேராக ரெஜிஸ்டர் ஆபீஸுக்கு வந்தனர். கலெக்டரே சொல்லிவிட்டதால், காதும் காதும் வைத்த மாதிரி நான்கு மனைகளும் பதிவாகிவிட்டன. ஆதித்யா, நாராயணசாமி, துர்கா ஒவ்வொருவரும் கலெக்டருக்கு நன்றி சொன்னார்கள்.

''ரெஜிஸ்டர் ஆனதை நாளை எம்.எல்.ஏ. வந்து கேட்டால் சொல்ல வேண்டாம். ஒரு பத்து நாள் டைம் கொடுங்க. பையன்கள் வராங்கன்னு சொல்லச் சொல்லு. அநேகமாக அவங்க பணம் வாங்கிகிட்டு உங்களுக்குக் கொடுக்கச் சொல்லிவிடுவாங்கன்னு சொல்லச் சொல்லு,'' என்ற கலெக்டர், ''நீ இப்ப வீட்டுக்கு வரியா. விவரமா பேசலாம்,'' என்றார். பிறகு நினைத்துக் கொண்டவராய், ''வேண்டாம் ஆதி. உனக்கு என்னைத் தெரியும்னே யாருக்கும் தெரிய வேண்டாம்!'' என்று சொல்லிவிட்டு, ''நான் உனக்குத் திரும்ப போன் பண்றேன்,'' என்றார்.

ஒரு மணி நேரம் கழித்துத் திரும்பவும் ஆதியை கலெக்டர் போனில் கூப்பிட்டார். ''இதோ பார், ஆதி!

நான் ஒரு திட்டம் சொல்றேன். துர்கா, அவங்க அப்பா கிட்ட மட்டும் இதைப்பத்தி பேசி சரியா வருமான்னு எங்கிட்டே இன்னும் ஒரு மணி நேரத்தில சொல்லு,'' என்று சொல்லித் தன் திட்டத்தை விவரித்துவிட்டு போனை வைத்து விட்டார்.

ஆதி வேறு வேலைக்காரர்கள் கூட இல்லையா என்று பார்த்து விட்டு, கலெக்டர் சொன்ன திட்டத்தை மற்ற இருவரிடமும் சொல்லிவிட்டு அவர்கள் சம்மதத்தைக் கேட்டான்.

''சரியாகத்தான் யோசிச்சிருக்காங்க, அந்த அம்மா!'' என்றார் நாராயணசாமி.

''இத்தனை மூளை இல்லைன்னா கலெக்டரா வர முடியுமா?'' என்றாள் துர்கா.

''முக்கியமா நம்ம மேல இருக்கிற அக்கறை, அதுக்குக் காரணம் எங்க அப்பாவோட அவங்களுக்கு இருக்கிற சிநேகமும், மரியாதையும்தான்!'' என்றான் ஆதி.

''நிஜம்தான், ஆதி! என்னப்பா, சம்மதம்னு சொல் லிடலாமா?'' என்று துர்கா கேட்க, ''தாராளமாக!'' என்று அவர் சொல்ல, ஆதி கலெக்டருக்குப் போன் செய்து ''நீங்க சொன்னபடியே எல்லாம் செய்துடறோம், மேடம்!'' என்று சொல்லிவிட்டான்.

தினமுமே அவன் வீட்டிற்குப் போகும் போது துர்காவிற்குத் தன் நெஞ்சத்தையே அவன் எடுத்துக் கொண்டு போவது போலிருக்கும். அவனுக்கும் அப் படித்தான் இருந்தது. பாவம், இளம் நெஞ்சங்கள் தானே. ஆனால் எடுத்துக் கொண்ட காரியம் நிறைவேறாமல்

வேறு சுகம் எதுவும் கிடையாது என்ற உறுதி இரு வரிடமும் இருந்தது. ஆதித்யா மனதிற்குள் அதைப் பாராட்ட, துர்காவோ, 'எனக்காக நீங்க இப்படி கஷ்டப் படறீங்களே!' என்று அவ்வப்போது சொல்லி மாய்ந்து போனாள். இருவருக்கும் இரவு படுத்தால் அடுத்தவர் நினைவு தான் ஹிம்சை செய்தது. சீக்கிரம் ஸ்கூல் நன்றாக வந்துடணும். இம்ப்ரூவ்மெண்ட் ரிசல்ட் நன்றாக வரணும் என்று தினமும் வேண்டிக் கொள் வார்கள்.

26

மாதத்தின் முதல் வாரம், ''துர்கா, சாமான் லிஸ்ட் போட்டுட்டா தேவலையேம்மா!'' என்றாள் தனலட்சுமி. ''ஆமாம்மா, சாமானெல்லாம் தீர்ந்துடுச்சும்மா!'' என்றாள் சமையல்காரச் சொர்ணா. ''இதோ வரேம்மா!'' என்று துர்கா பேப்பர், பேனா எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு டைனிங் டேபிளின் நாற்காலியில் வந்து உட்கார்ந்தாள்.

''நான் போடறேன் அந்த லிஸ்டை!'' என்று சொல்லிக் கொண்டே ஆஷா வந்து உட்கார்ந்தாள்.

''போடேம்மா. துர்கா சொல்லிக் கொடுப்பாள். அப்படி தெரிஞ்சுகிட்டுப் போடு,'' என்றாள் தனலட்சுமி.

''இதென்ன பெரிய வேலை. நானே போட்டுப்பேன்,'' என்றாள் ஆஷா.

''சரி, இந்த மாத லிஸ்ட். இதில இருக்கிறதெல்லாம் படிச்சா சொர்ணா எது இல்லைன்னு சொல்லுவா. அம்மா எத்தனை வாங்கணும்னு சொல்லுவாங்க. கேட்டுப் போடு. அம்மா, நான் கிளம்பறேன்,'' என்றாள் துர்கா.

''நான்தான் பாத்துக்கறேன்னேனே!'' என்ற ஆஷா லிஸ்டைப் பார்த்துப் படிக்க, சொர்ணா இருப்பது, இல்லாதது எல்லாம் சொன்னாள். ஆஷா மளமளவென்று தனக்குத் தோன்றிய அளவுகளை எழுதினாள்.

''அம்மாடி, எதுக்கும் லிஸ்டைக் குடு. அளவெல்லாம் சரியா இருக்கான்னு நான் ஒரு தரம் பார்த்துட்டுக் கொடுத்துட்டா நல்லது. அடுத்த மாதத்திலிருந்து நீயே போட்டுக்கோ!'' என்றாள் தனம்.

''இந்தாங்க!'' என்று முகத்தைத் தூக்கிக் கொண்டு அந்த லிஸ்ட்டைத் தூக்கித் தொப்பென்று வைத்து விட்டு அங்கிருந்து கூடத்தில் போய் உட்கார்ந்து கொண்டாள் ஆஷா.

லிஸ்டைப் படிக்கப்போன தனத்திற்கு, கண்ணாடி மாடியில் இருந்தது நினைவுக்கு வர, ''சொர்ணா, நீதான் கொஞ்சம் படி,'' என்றாள்.

லிஸ்ட்டை வாங்கிப் படித்த சொர்ணாவுக்குச் சிரிப்பை அடக்கவே முடியவில்லை. லிஸ்ட்டை வாங்கிப் பார்த்த தனம், ''கண்ணாடியைக் கொண்டா'' என்றாள். ஓடிப் போய் எடுத்துக் கொண்டு வந்த சொர்ணா அப்போதும் சிரித்துக் கொண்டேதான் இருந்தாள். லிஸ்ட்டின் லட்சணம் அப்படி!

துவரம் பருப்பு 1/2 கிலோ, முந்திரி பருப்பு 2 கிலோ, சர்க்கரை 1/2 கிலோ, திராட்சை 1 கிலோ, உளுத்தம் பருப்பு 1/4 கிலோ. சோப் பவுடர் 10 கிலோ, மைசூர்

சாண்டல் 10, கடுகு ஒரு கிலோ, ஜாம் பாட்டில் 4, ஸாஸ் பாட்டில் 4, அரிசி 10 கிலோ என்று ஒரே அபத்தக் களஞ்சியமாக இருந்தது அந்த லிஸ்ட்.

தனத்திற்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை. இருவரும் வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரிப்பதைக் கேட்டதும் புயலாக உள்ளே வந்த ஆஷா, அந்த பேப்பரை வாங்கி வெடுக்கென்று கிழிந்து எறிந்துவிட்டு மாடிக்குப் போய்விட்டாள். நடராஜ் வந்ததும் தனம் சுமாராக அவனிடம் விஷயத்தைச் சொன்னதும் அவன் போய் ஆஷாவைச் சமாதானப் படுத்திக் கூட்டி வந்தான். ஏற்கெனவே அங்கு யாரையும் பிடிக்காத ஆஷாவுக்கு அப்போதிலிருந்து சொர்ணாவை முழுவதும் பிடிக்காமல் போய்விட்டது.

ஒன்றாம் தேதி ஜவுளிக் கடை பணத்தை பேங்க் கிலிருந்து எடுத்து வருவாள் துர்கா. அதற்குக் கற்பூரம் காட்டி சாமி உண்டியலில் பணம் போட்டுவிட்டு டிரைவர், சமையல்காரி முதலியவர்களுக்கு ஒவ்வொரு கவரிலும் பணத்தைப் போட்டுப் பேரெழுதி வைத்து விடுவாள். அந்த மாதமும் அதே போல் எல்லாவற் றையும் எடுத்து வைத்து விட்டு அம்மாவிடம் சொன் னாள். ''நான் பார்த்து எல்லாருக்கும் கொடுக்கிறேன்,'' என்று வந்தாள் ஆஷா.

''இந்தா ஆஷா!'' என்று கவர்கள் அடங்கிய ஒரு சிறு பையை அவளிடம் கொடுத்துவிட்டாள் துர்கா. டிரைவர், சமையல்காரி என்றெல்லாம் எழுதாமல் எல்லோ ருடைய பெயரும் தான் எழுதியிருந்தது.

''இதென்ன, வேலைக்காரி, சமையல்காரி, டிரைவர்னு தெளிவா எழுத மாட்டீங்களா? இப்படி எழுதினா எனக்கு எப்படித் தெரியும்?'' என்று கடுப்பாகக் கேட்டாள் ஆஷா.

''நீ கொடுக்கப்போறேன்னு எதிர்பார்க்கல்லேம்மா. குடு, எழுதித்தரேன்,'' என்று அவளிடமிருந்து லிஸ்டை வாங்கி எழுதிக் கொடுத்தாள் துர்கா.

வாங்கிப் பார்த்த ஆஷா ''சமையல்காரி என்று போட்டு ரொடின் + 200/-னு போட்டிருக்கே!'' என்று கேட்டாள்.

''ஆமாம்மா. அவளுக்குச் சம்பளம் ஏத்தி ரொம்ப நாளாச்சு. அவளா கேக்கமாட்டா. நாங்கதான் பாத்து ஏத்திக் கொடுப்போம்!'' என்றாள் தனம்.

''ஆனால் அது எதுக்கு? ஒண்ணு அவ கேக்கல்லே, தவிர, சமையல்காரிக்கு இத்தனை சம்பளம் அனா வசியம்!'' என்றாள் ஆஷா.

''ஆஷா, இதோ பார்! அவங்க ரொம்ப வருஷமா நமக்கு வேலை செய்யறாங்க. இந்த வீட்ல யாரும் அவங்களைச் சமையல்காரின்னும் குறிப்பிடமாட்டோம். அவ, இவ, வா, போன்னெல்லாம் கூட பேசமாட்டோம். இந்தக் காலத்தில் இந்த மாதிரி ஒரு நம்பிக்கையான, தினசரி, கரெக்டா வரவங்களைப் பார்க்கறதே கஷ்டம்!'' என்றாள் துர்கா.

''நீங்கல்லாம் அந்த பொம்பளைக்கு ரொம்பவே இடம் கொடுக்கறீங்க. அந்த சமையல்காரிக்குக் கொடுக்கற மதிப்பை இந்த வீட்ல வாழ வந்திருக்கிற எனக்குக் கொடுக்கக் காணோமே!'' என்றாள் ஆஷா கடுப்பாக.

''என்ன ஆஷா இப்படிப் பேசறே? உனக்கில்லாத மதிப்பா, உரிமையா?'' என்று இன்னும் ஏதோ சொல்ல வந்த துர்காவை இடைமறித்தாள் ஆஷா.

''நீங்க, உங்க அதிகாரம் என்கிறதையெல்லாம் நீங்க போற இடத்தில வெச்சுக்கோங்க. நான் கேட்டது அத்தையை!'' என்றாள்.

துர்காவை யாரும் இத்தனை எடுத்தெறிந்து பேசியதில்லை. அவளுக்குக் கண் கலங்கி விட்டது. அதற்குள் ஹாலிலிருந்து அங்கே வந்த நாராயணசாமி, ''என்னம்மா, ஆஷா, துர்கா இந்த வீட்டுக்குப் பொண்ணு மட்டுமில்லேம்மா, எங்களுக்கெல்லாம் கண்ணு. எங்களுக்கு ஒரே பொண்ணுங்கறதுனாலே மட்டு மில்லே, அவ நடந்துக்கற விதத்தாலும், அவளுடைய பொறுப்புணர்ச்சியாலும் அவளை எல்லோரும் கொண்டாடுறாங்க. உன் புருஷனுக்கு கூடப் பொறந்தவ, அவளைத் தூக்கி எறிஞ்சு பேசறே. முதல் நாள்லெருந்து பார்க்கறேன். உனக்கு அவளைப் பிடிக்கல்லே. வந்து இன்னும் இரண்டு மாசம் முழுசா ஆகல்லே. அதுக்குள்ள இப்படி நடந்துக்கறது கொஞ்சம் கூட நல்லாயில்லே!'' என்று சொல்லிவிட்டுத் தன் ரூமிற்குப் போய்விட்டார்.

''அம்மாடி, இப்படிக்கூடவா ஆண் பிள்ளைங்க எல்லாம் பொம்பிள்ளை சண்டையில தலையிடுவாங்க? நல்லாவேயில்லை இந்த வீட்டு வழக்கம்!'' என்று ஆஷா பெரிதாகக் குரல் உயர்த்தி, அழுதுகொண்டே மாடிக்குப் போனாள். மாடியில் போய் நடராஜிடம் என்ன சொன் னாளோ, அடுத்த ஐந்து நிமிடத்தில் அவன் கீழே இறங்கி வந்தான்.

''இங்கே என்ன நடந்தது? அவளை என்ன சொன்னே?'' என்று துர்காவைக் கேட்டான்.

''அவகிட்டே ஏன் பாயறே? நான்தான் ஆஷாவை நல்லபடியா நடந்துக்கோன்னு சொன்னேன்,'' என்றார் நாராயணசாமி.

''ஏம்பா, பொம்பிள்ளைங்க பேச்சுக்கெல்லாம் நீங்க ஏன் போறீங்க?''

''இப்ப ஸார் என்ன பண்ணிகிட்டிருக்கீங்க? பொண்டாட்டி சொன்னதும் அதுதான் சரின்னு, உன் கூடப் பொறந்தவ அப்படிச் செய்வாளா, மாட்டாளான்னு கூட யோசிக்காம வந்து விசாரணை நடத்துறீங்களே, இது ரொம்ப சரியா?''

''இதோ பாருங்க. நான் எல்லோருக்கும் சொல்லிக் கறேன். என்னை நம்பி வந்திருக்கறவ அவ. ஒரு நாளும் அவங்க அண்ணா, அண்ணி இப்படிப் பேசினதில்லை யாம். இன்னொரு தடவை இப்படி ஏதாவது நடந்தா, நான் சும்மா இருக்க மாட்டேன்!'' என்று பொரிந்து தள்ளிவிட்டு மாடிக்குப் போனான் நடராஜ். அதன் பிறகு கூட ஏதாவது ஒரு காரணம் சொல்லித் தினம் சொர்ணாவைப் படுத்திக் கொண்டே இருந்தாள் ஆஷா.

''என்ன இன்னிக்கு சாம்பார் உப்பா இருக்கு!'' என்பாள். ஒரு நாள் கறிகாய் வேகவேயில்லை என்பாள். மஞ்சூரியா பண்ணு, பாவ்பாஜி பண்ணு என்பாள். பாவம், சொர்ணா! அதெல்லாம் என்னத்தைக் கண்டாள்.

சொர்ணா தனத்திடம், ''அம்மா, இந்தப் புதுப் பொண்ணு என்னை ரொம்பவே படுத்துதும்மா. நான்

சாப்பிடும் போது வந்து ரொம்ப மொறைக்குது. பாதியிலேயே சாதத்தை, மோரையெல்லாம் கொண்டு உள்ளே வெச்சுடுது. இந்த வீட்ல யாரும் இதுவரைக்கும் என்னை இப்படி நடத்தினதில்லையேம்மா!'' என்று அழுதுவிட்டாள். ''சமையல் அறை வலை அலமாரியில பணம் வெச்சுருந்தீங்கம்மா. அந்தப் பொண்ணு வந்து, 'இதென்ன சமையல்காரியெல்லாம் நடமாடற இடத்தில யார் இப்படிப் பணம் காசெல்லாம் வெச்சது?'னு சொல்லிட்டு உள்ளே கொண்டு வைக்குதும்மா. எனக்கு ரொம்ப அவமானமா இருக்கு!'' என்று சொல்லி அழுதாள்.

''ஆஷா, ஆஷா!'' என்று கூப்பிட்டாள் தனம். ''என்ன இது, சொர்ணாவைச் சந்தேகப் படறமாதிரியெல்லாம் பேசினியாம். என்ன நினைச்சிகிட்டிருக்கே?'' என்றாள்.

''என்ன நினைச்சுகிட்டிருக்கேன்? நானும் இந்த வீட்ல உரிமையுள்ள ஒருத்தின்னு. ஒரு வேலைக்காரி, கொடுக்கற சம்பளத்தை வாங்கிகிட்டு பொங்கிப் போடறவ, அவ பேச்சு உங்க மருமக பேச்சை விட ஒசத்தி யாயிடுச்சா?''

''இதோ பாரு. உனக்கு என்ன தெரியும் அவளைப் பத்தி? அவ நான் இந்த வீட்ல காலடி எடுத்து வைக் கறச்சே, அப்போ இருந்த அவங்க அம்மாவுக்கு ஒத் தாசையா இருந்தவ. அன்னியிலிருந்து இன்னி வரைக்கும் ஒரு ஸ்பூன் தொலைஞ்சிருக்குமா இந்த வீட்ல? நீ அவளைப் பேசறது நியாயமில்லை. நாங்க எத்தனையோ தடவை அவளை மட்டும் இந்த வீட்ல தனியா விட்டுட்டே போயிருக்கோம்.''

''அது உங்க தப்பு. நான் எனக்குத் தெரிஞ்ச நல்லதைத் தான் சொன்னேன். இனிமே அவ இந்த வீட்ல இருந்து பொங்கிப் போட்டா நான் சாப்பிடமாட்டேன். மொதல்ல அவ சீட்டைக் கிழிச்சு வெளியே அனுப்புங்க!'' என்று பொங்கினாள்.

வீட்டில் யாரும் இல்லை அப்போது. இரவுச் சமையல் ஆகிவிட்டது. சாதாரணமாக எல்லோருக்கும் பரிமாறிச் சமையல் அறையைச் சுத்தம் செய்துவிட்டுப் போகும் சொர்ணா, அன்றைக்கு, ''அம்மா, மனசு ரொம்பவே வேதனைப் படுதும்மா. நான் வீட்டுக்குப் போறேம்மா!'' என்றாள்.

''போய்ட்டு வா, சொர்ணா. அது ஏதோ அறியாத பிள்ளை. ஒண்ணும் புரிஞ்சிக்காமே பேசுது. நீ வந்துடு, நாளைக்கு. எங்களுக்கு நீ வேணும்!'' என்றாள் தனம்.

சொர்ணா அந்தப்புறம் போனதும் தனம் துர்காவிற்கு போன் செய்ய நினைத்தபோது துர்காவே வந்து விட்டாள். தனத்திற்கு அவளைப் பார்த்ததும் அழுகை வந்து விட்டது. ''என்னம்மா ஆச்சு?'' என்று துர்கா கேட்க, இந்தக் கேள்விக்காகவே காத்திருந்தது போல மொத்தத்தையும் கொட்டி விட்டாள் தனம்.

துர்காவுக்குக் கோபம், அதிர்ச்சி, அதை விட வியப்பு. எப்படி கல்யாணமாகிக் கொஞ்ச நாட்களிலேயே இப்படி யெல்லாம் நடந்து கொள்ள இந்தப் பெண்ணுக்குத் தைரியம் வருகிறது? வளர்ப்பு சரியில்லை என்று நினைத்துக் கொண்டாள். ஆனால் அவள் அண்ணி இப்படியா இருக்கிறாள்? இதெல்லாம் பிறவிக் குணம் என்று தோன்றியது.

''நீ கவலைப் படாதேம்மா. நான் போய் சொர்ணாவைப் பார்க்கிறேன்,'' என்றாள். உடனேயே புறப்பட்டு அடுத்த தெருவில் இருக்கும் சொர்ணாவின் வீட்டிற்குப் போனாள் துர்கா.

இவள் சொர்ணாவின் வீட்டுக் கதவைத்தட்டியதும், கதவைத் திறந்துவிட்டான் அவள் புருஷன். ''வாங் கம்மா!'' என்றான். சுவருக்கு முகத்தைக் கொடுத்து அங்கிருந்த கயிற்றுக் கட்டிலில் படுத்துக் கிடந்தாள் சொர்ணா.

''ஏய், சொர்ணா, துர்காம்மா வந்திருக்காங்க!'' என்று அவன் சொன்னதும் அலறி அடித்துக் கொண்டு எழுந்தாள் சொர்ணா. ''வாங்கம்மா, வாங்க!'' என்று அவளை வரவேற்றாள். அவள் புருஷன் ஒரு நாற் காலியை இழுத்துப் போட்டு, ''உட்காருங்கம்மா!'' என்றான்.

''இருக்கட்டும்,'' என்று சொல்லி உட்கார்ந்த துர்கா, ''என்ன சொர்ணா, எங்க அண்ணி உன்னைத் தூக்கி எறிஞ்சி பேசிடுச்சாமே!'' என்றாள்.

''அம்மாம்மா. என்னைப் பேசினா பேசிட்டுப் போகட்டும். பெரியம்மாவையும் இல்லே பேசிட்டாங்க அவங்க. பயமா இருக்கும்மா. அத்தனை பேசறவங்க நாளைக்கு என்மேல திருட்டுப் பழி கூடப் போடுவாங்க!'' என்றாள் சொர்ணா.

''அது கிடக்கு. அது சொன்னா இருக்கறவங்க நம்பிடுவாங்களா? போகட்டும். நீ நாளைக்கு வேலைக்கு வராதே!'' என்றாள் துர்கா.

''என்னம்மா சொல்றீங்க?''

''ஆமாம், சொர்ணா. ஒரு இரண்டு நாள் வீட்டுல இருந்துக்கோ. அப்புறமா போன் பண்ணி உன்னை நான் திரும்பக் கூப்பிடறேன். அப்போ நீ வந்தாப் போதும்.''

''ஏம்மா, பெரியம்மா இல்லே திண்டாடிப் போயிடு வாங்க. நீங்களும் பள்ளிக்கூடம்னு அலைஞ்சிகிட்டிருக் கீங்க. ஆஷா அம்மாவுக்குச் சமைக்கத் தெரியும்னு எனக்குத் தோணல்லே. பெரியம்மாவாலே முடியுமா?''

''இரண்டு நாளைக்கு நாங்க விழுந்து, எழுந்து பாத்துக்கறோம். அந்தப் பொண்ணு தான் பேசியது தப்புன்னு புரிஞ்சிக்கணும். எங்கண்ணனும் கொஞ்சம் விழிச்சுக்கணும். அதுக்குத்தான் சொல்றேன். நீ வராதே இரண்டு நாளைக்கு,'' என்றாள் துர்கா.

''அம்மா, பேசாமே நான் சமைச்சுக் கொடுத்தனுப் பிடறேன். நீங்க உள்ளே வந்து பாருங்க. நான் எல்லாம் சுத்தமாகத்தான் வெச்சுருக்கேன். நீங்க நான் அனுப் பறதை கடைல வாங்கிகிட்டு வந்ததுன்னு சொல் லிடுங்க!'' என்றாள் சொர்ணா.

''அதெல்லாம் வேண்டாம், சொர்ணா. அந்தப் பொண்ணுக்கு இந்த சமயம் கொஞ்சம் புத்தி வர மாதிரி நாம ஏதாவது செய்யல்லேன்னா, அம்மா பின்னால அதை வெச்சுக்கிட்டு ரொம்பவே கஷ்டப்படுவாங்க. அதுக்காகத்தான் சொல்றேன். சரியா...? நான் வரேன்,'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பினாள். அதற்குள் அவள் புருஷன் ஒரு மாஸா பாட்டில் வாங்கி வந்திருந்தான். அதைக் குடித்து விட்டு, ''சொர்ணா, நீ மனசு

சங்கடப்படாதே. நான் முக்கியமா அதைச் சொல்லத்தான் வந்தேன்,'' என்று சொல்லிப் புறப்பட்டு விட்டாள் துர்கா.

27

மறுநாள் காலைப் பொழுது சாதாரணமாக ஆறு அடிப்பதைச் சொர்ணாவின் வருகையை வைத்துச் சரி பார்த்துக் கொள்ளலாம். அவளுக்குக் கதவைத் திறந்து விடத்தான் கண் விழிப்பாள் தனலட்சுமி. வழக்கப்படி அன்றும் தனத்திற்கு விழிப்பு வந்து விட, மணியைப் பார்த்தாள். ஆறு மணியைத் தாண்டியிருந்தது. 'இத்தனை நேரம் கூடத் தாமதிக்க மாட்டாளே சொர்ணா!' என்று நினைத்தவளுக்கு, நேற்றைய சம்பவங்கள் நினைவுக்கு வர, அதையெல்லாம் அசை போட்டுக் கொண்டிருந்தாள். தன்னையுமறியமல் சற்றுக் கண்ண யர்ந்திருக்க வேண்டும்.

திரும்பத் திடுக்கிட்டு விழித்துக் கொண்டவள் மணியைப் பார்த்தாள். 6.40 ஆகியிருந்தது. சொர்ணா வராததை அப்போது தான் உணர்ந்தாள். ஐயோ! 6.30 'மணிக்கெல்லாம் கணவருக்குக் காப்பி கொடுக்க வேண்டுமே என்று நினைப்பில் படபடவென்று எழுந்து வேலையைப் பார்த்தாள். காப்பியைப் போட்டு அவள் எடுத்து வரவும், நாராயணசாமி ஹாலுக்கு வரவும் சரியாக இருந்தது. அதை அவருக்குக் கொடுத்து விட்டுத் திரும்பச் சமையல் அறைக்கு வந்தவளுக்கு நேற்றுச் சொர்ணா இட்லி மாவு அரைத்து வைத்திருந்தது நினைவுக்கு வந்தது. அதையும் சட்னியையும் தயார் செய்தவளுக்கு,

''ஐயோ! நடராஜ் சாம்பார் கேட்பானே!'' என்று தோன்ற, பருப்பை எடுக்கப் போனவள், தலை கிர்ரென்று சுற்ற, உள்ளே போய்ப் படுத்து விட்டாள்.

துர்கா எழுந்து வந்து தாயின் நிலையைப் பார்த்தவள் பதறிப் போனாள். ''கொஞ்ச நாழி படுத்துக்கோங்கம்மா, நான் பாத்துக்கறேன்,'' என்று தனக்குக் காப்பி கலந்து கொண்டாள். நடராஜ் எழுந்து வந்து, ''சொர்ணாம்மா, காப்பி!'' என்றான். ''அவள் இன்னிக்கு வரல்லே!'' என்று சொல்லி அவனுக்குக் காப்பி கொடுத்தாள்.

''ஆஷாக்கு கொஞ்சம் போர்ன்விட்டா கலந்துகொடு, துர்கா!'' என்று கேட்டான் நடராஜ். வாயைத் திறக்காமல் கலந்து கொடுத்தாள் துர்கா. அரைமணி கழித்துக் கீழே வந்த ஆஷா, ''சொர்ணா வரல்லியாமே! இந்த மாதிரி எப்ப பார்த்தாலும் லீவு போடற சமையல்காரி எல்லாம் வேலைக்கு வெச்சுக்கிட்டா பிரச்னைதான்!'' என்றாள்.

''அவளுக்குச் சுய மரியாதை அதிகம்!'' என்றாள் துர்கா.

''தேவைக்கதிகமா வேலைக்காரியையெல்லாம் கொஞ்சினா இப்படித்தான்!'' என்றாள் ஆஷா.

'சரி சரி. அம்மா டிபன் செஞ்சுட்டாங்க. சமையல் நீ பண்ணப் போறியா துர்கா?'' என்று கேட்டான் நடராஜ்.

''இல்லை. எனக்கு ஸ்கூல் வேலையா ஒருவரைப் பார்க்கணும். சீக்கிரமே போகணும். எனக்கு மத்தியானச் சாப்பாடு பங்கஜா ஆன்ட்டி அனுப்பிடுவாங்க!'' என்றாள் துர்கா.

உடனே ஆஷா, ''நீ வா நடராஜ். நாம இரண்டு பேரும் அண்ணன் வீட்ல போய்ச் சாப்பிடுவோம்!'' என்றாள்.

''அப்பா, அம்மா என்னம்மா செய்வாங்க? ஆஷா, நீ சமைப்பியா?'' என்று கேட்டாள் துர்கா.

''ஐயே, எனக்கு அதெல்லாம் தெரியாது. அதுக்காகவா எங்க அண்ணா இந்த வீட்ல என்னைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்தார்?'' என்று படக்கென்று கேட்டாள் ஆஷா.

''பின்னே, அவங்க சாப்பாடு?'' என்று கேட்டாள் துர்கா விடாமல்.

''எனக்குச் சமைக்கவெல்லாம் முடியாது. வேணுமானா சீக்கிரம் அடுத்த சமையல்காரியைப் பிடிக்கறேன்!'' என்றாள்.

''சரி,'' என்று துர்கா புறப்படும் முன் அம்மாவிற்கும் அப்பாவிற்கும் ஒரு சாம்பார், கறி சாதம் என்று சமைத்து வைத்துவிட்டுப் புறப்பட்டாள். ஆஷா வெவ்வேறு இடங்களுக்குப் போன் பண்ணி விசாரித்துக் கொண்டிருப்பது கேட்டது. அன்று மாலையிலிருந்தே சமையல்காரிகள் பேட்டிக்கு வரத் தொடங்கினர். சொர்ணாவுக்குக் கொடுத்ததுபோல் இரண்டு பங்கு கொடுத்தாலும், யாரும் முழு நாள் சொர்ணாவைப்போல் இருந்து செய்யத் தயாரில்லை.

மறுநாளும் சமையல்காரிக்குப் பேட்டிகள் தொடர்ந்தன. இரண்டு மூன்று பேருடைய டிரெஸ்ஸும் தோரணையும் ஆஷாவிற்கே பிடிக்கவில்லை. ஒருத்தி புகையிலையை வாயில் அடக்கியபடியே வந்தாள். ''எனக்கு இது இல்லாமே முடியாதும்மா!'' என்று கறாராகச் சொல்லிவிட்டாள். ஆஷாவிற்குப் பயமாக இருந்தது. ''சரி, இரண்டு மூன்று நாளைக்கு கேட்டரர்ஸ்கிட்டே சொல்றேன்,'' என்று ஏற்பாடு செய்தாள். அவளாலும்

முதல் ஒரு நாளைக்குப் பிறகு அண்ணன் வீட்டுக்குத் தைரியமாகப் போக முடியவில்லை. அன்று போனபோதே அத்தை, மாமா, அண்ணி, அண்ணா எல்லோரும் ஒன்றாக அவளுக்கு நன்றாக கிளாஸ் எடுத்தனர். ''தினம் சமைக்க வேண்டாம். ஒரு அவசர, ஆத்திரத்திற்குக்கூடத் தெரியாதுன்னு கையை விரிக்கற வயசா உனக்கு? நீ அங்கே போய் எத்தனை நாளாச்சு! இதுக்குள்ள நீயே சமையல் கத்துக்கிட்டுருக்க வேண்டாம். அவங்க வேண்டாம்னுதான் சொல்லுவாங்க. நீயே இல்லே வாலன்டியர் பண்ணியிருக்கணும். நீ பண்றது கொஞ்சம் கூட நல்லா இல்லை!'' என்று.

கேட்டரர்ஸ் அனுப்பிய சாப்பாட்டை மற்றவர்கள் கொஞ்சமாகச் சாப்பிட்டுச் சமாளித்துக் கொண்டனர். ஆஷாவிற்குச் சரிப்படவே யில்லை.

''டாக்டருக்கென்ன படுத்தே கிடக்கணும்னு சொல்லு வார். நம்மால முடியுமா? நான் எழுந்து முடிஞ்சதைச் செய்யறேன்,'' என்று தனலட்சுமி எழுந்திருக்க முயற் சித்தாலும், துர்கா கண்டிப்பாக அதை ஒத்துக் கொள்ள வில்லை.

கடைசியாக ஆஷாவின் சிநேகிதி அனுப்பினாள் என்று ஒரு பெண் வந்தாள். குளித்துவிட்டு வேலைக்கு வருவதானால், தன்னால் முடியாது என்று சொல்லி விட்டுப் போய் விட்டாள் அவள்.

இரண்டு நாள் கழித்து ஆஷாவின் அண்ணன் விக்ரம் போன் பண்ணி அன்று இரவு அவர்கள் வீட்டிற்கு

டின்னருக்கு எல்லோரும் வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டான். அன்று அவர்களுடைய கல்யாண நாளாம். ஒவ்வொருவரும் ஒவ்வொருத்தரையும் மரியாதையுடன் கூப்பிட, இரவு எல்லோரும் அங்கே போனார்கள். ஒரு ஜோடி மிக அழகான வெள்ளிக் குத்து விளக்கைத் துர்கா பிரசென்ட்டாக வாங்கி வந்தாள். ஆதித்யா வீட்டினரையும் கூப்பிட்டிருந்தார்கள்.

அவர்கள், ''எதுக்கம்மா, வீண் சிரமம்!'' என்று கேட்க, ''நல்லா இருக்கே! எங்க பொண்ணு வீட்டுக்குச் சம்பந்தின்னா, அவங்களும் மரியாதைப்பட்ட மனுஷங்க தான். கண்டிப்பா வரணும்!'' என்று சொல்லி விட் டார்கள்.

எல்லோருமாகச் சாயந்திரம் அங்கே போனதும், கல்யாணக் களை கட்டிவிட்டது. சற்று நேரம் வெளியே புல்வெளியில் உட்கார்ந்து எல்லோருமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''கேட்டரர்ஸ்கிட்டே சொல்லியிருக்கியாம்மா?'' என்று கேட்டாள் தனலட்சுமி.

''இல்லை அத்தை! அவளுக்கு அவளே சமைத்தால் தான் திருப்தி!'' என்றான் விக்ரம்.

''கிரண்டாகவெல்லாம் ஒண்ணுமில்லை. சும்மா சித்ரான்னங்கள்தான்!'' என்றாள் ரேவதி.

ஆஷா வந்ததுமே தன் அறைக்குப் போய்விட்டாள். பின்னே வேறே எப்படி இவர்களைவிடத் தனக்குத்தான் அந்த வீட்டில் அதிக உரிமை என்று காண்பித்துக் கொள்வது?

சற்று நேரம் கழித்துச் சாப்பிட எல்லோரும் உள்ளே போனதும் துர்கா, ''டைனிங் டேபிளில் எல்லாத்தையும் வெச்சுட்டா பஃபேயா சாப்பிட்டுக்கலாமே!'' என்றாள்.

''அதெல்லாம் வயசிலே பெரியவங்களுக்கு, மாப்பிள்ளை, சம்பந்திக்கல்லாம் அப்படிப் போடுவாங்களா? பெரியவங்க மூணு தம்பதிகளும் உட்காரட்டும். கூடவே நீங்களும் உங்க அண்ணாவும் உட்கார்ந்துடுங்க. நானும் ஆஷாவும் பரிமாறிட்டு அப்புறமா சாப்பிடறோம்,'' என்றாள் ரேவதி.

''வேண்டாம் அண்ணி! ஆஷா என் அண்ணனோட உட்காரட்டும். ஆமாம், விக்ரம் அண்ணா?''

'என்னோட கூடச் சாப்பிடுவார்!'' என்றாள் ரேவதி.

''அண்ணி, அப்ப நானும் உங்களோட தான்!'' என்ற துர்கா, ஆஷாவைக் கூப்பிடும்படி நடராஜை அனுப்பி விட்டு, ரேவதியோடு எல்லோருக்கும் பரிமாற ஆரம்பித்தாள். ஆஷா பேச்சுக்குக்கூட, 'துர்கா சாப்பிடட்டும், நான் பின்னால் சாப்பிடுகிறேன்!' என்று சொல்ல வில்லை என்பதை ஆஷா வீட்டினர் அனைவருமே கவனித்தனர்.

ஆஷாவிற்கென்னவோ துர்கா தன் அண்ணியிடம் நல்ல பேர் வாங்க அநாவசியமாக நாடகமாடுகிறாள் என்றே தோன்றியது.

எல்லோரும் சாப்பிட்டு முடிக்கும் வேளை உள்ளே போய் வெற்றிலை, பாக்கு வைக்கப் போனாள் ரேவதி, தடால் என்று சப்தம் கேட்டது. அனைவரும் எழுந்து ஓடினால், அங்கே ரேவதி கீழே விழுந்து கிடந்தாள்.

எல்லோருக்குமே பதற்றம். ''ரேவதி, ரேவதி!'' என்று கூப்பிடக் கூப்பிட அவளிடருந்து பதிலே இல்லை. எல்லோருக்கும் பயமாகிவிட்டது. துர்கா தான் அவள் முகத்தில் தண்ணீர் அடித்துச் சரியாகப் படுக்கவிட்டாள். அவள் தலையைப் பின் பக்கம் தடவிப் பார்த்தாள். நல்ல வேளையாக ரத்தக் காயம் ஏதுமில்லை. திரும்பத் தண்ணீரால் அவள் முகத்தைத் துடைத்து விட்டாள் துர்கா. ''ரேவதி, ரேவதி!'' என்று கூப்பிட்டுக் கொண்டிருந்த விக்ரமிற்குக் கண்களில் குளமாகக் கண்ணீர். அதற்குள் பாத்திரம் தேய்ப்பதற்காக வந்து விட்ட வேலைக்காரி ரேவதியின் கையைப் பிடித்துப் பார்த்து விட்டு, ''ஐயா, நீங்க அப்பாவாகப் போறீங்க. சந்தோஷம், சந்தோஷம், எல்லாத் தாத்தா பாட்டிக்கும் சந்தோஷம்!'' என்றாள். அவள் இவர்கள் காம்பௌண்டிலேயே பின்னால் ஒரு ரூமில் இருப்பவள். ''டாக்டரைக் கூப்பிட்டுகிட்டே இருக்கேன், வடிவு. போனே எடுக்கல்லே,'' என்றான் விக்ரம்.

''அதுதான் கர்ப்ப நாடி தெளிவாக் கேக்குதே! டாக்டர் வரபோது வரட்டும்,'' என்றாள் அவள்.

''வடிவு, நீ சொல்றது நிஜமா? பொய்யில்லியே?'' என்று கேட்டான் விக்ரம். செய்தியை உள் வாங்கச் சற்று நேரம் பிடித்தது எல்லோருக்கும். அதற்குள் ரேவதி கண் விழிக்க, விக்ரமும், துர்காவும் அவளைக் கொண்டு வந்து கூடத்து திவானில் படுக்க வைத்தனர். ரேவதிக்கு ஒரே வெட்கம். எழுந்திருக்க முயன்றாள். ''பேசாமே கொஞ்ச நாழி படு!'' என்றான் விக்ரம்.

''ராமா! ஒரு கர்ப்பிணிப் பெண் பண்ணிப் போட்டா நாம எல்லோரும் சாப்பிட்டிருக்கோம்! அதுவும் அவளைப் பட்டினி போட்டு! மகாபாவம்!'' என்றாள் பங்கஜம்.

''சரி, இப்போ உங்களுக்குச் சாப்பிட என்ன தரட்டும்? சொல்லுங்க அண்ணி,'' என்றாள் துர்கா.

ரேவதியின் அம்மா எல்லோருக்கும் உள்ளேயிருந்து கற்கண்டு கொண்டு வந்து கொடுத்தாள். பெண்ணிடம், ''எத்தனை நாளடி ஆச்சு?'' என்று மெல்லிய குரலில் கேட்டாள்.

''ஐம்பது நாளாச்சும்மா!'' என்றாள் முகம் சிவக்க.

அதற்குள் அந்தத் தெருவிலேயே இருக்கும் டாக்டர் சுபாஷிணி வந்து விட்டார். ஒரு நிமிஷம் கை பார்த்தவள், ''வாழ்த்துக்கள் ரேவதி, விக்ரம். உங்க நெடுநாள் ஆசை பலிக்கப் போகிறது. கொஞ்சம் ரெஸ்ட்டாகவே இருங்க. மொதல்ல சாப்பிடுங்க. காலைல வந்து பார்க்கிறேன்,'' என்றாள். அதற்குள் ரேவதியின் அம்மா பாயசம் கொண்டு வந்து கொடுத்தாள்.

''ரொம்ப நல்லா இருக்கு. ரேவதி, காலைல கிளினிக்கிற்கு வாங்க. செக்கப் பண்ணிடலாம்,'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பினாள்.

வீட்டினரில், முதலில் துர்கா, ''ரொம்ப மகிழ்ச்சி, அண்ணி, வாழ்த்துக்கள்!'' என்று சொல்லிவிட்டுத்தான் மற்றவர்கள் எல்லோருக்கும் தோன்றி வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.

''நீங்க ஏதாவது சாப்பிட்டுட்டுப் படுங்க, அண்ணி. நான் எல்லாத்தையும் வடிவை வெச்சுக்கிட்டு சுத்தம் பண்றேன்,'' என்றாள் துர்கா.

''ஆஷா, அவங்க செய்யறேங்கறாங்க. பாரு! கூடப் போய் ஒத்தாசை செய்யம்மா,'' என்றான் விக்ரம். அது வரை ஆஷாவை யாரும் கண்டுகொள்ளவே இல்லை. அண்ணன் வேறு இப்படிச் சொன்னதை அவள் அவமானமாகவே உணர்ந்தாள். இப்போது துர்கா, ரேவதி இரண்டு பேரும் கதாநாயகிகள் ஆகிவிட்டது போலவும், தான் ஏதோ துணை நடிகை போலவும் அவளுக்குத் தோன்றியது.

''உடம்பைப் பார்த்துக்கோம்மா!'' என்று ஆளாளுக்கு ரேவதிக்கு ஜாக்கிரதை சொல்லிவிட்டுப் போனார்கள்.

வீட்டிற்குப் போன ஆஷா நடராஜிடம் புலம்பித் தள்ளிவிட்டாள். ''சரி, கர்ப்பமாகிட்டாங்க, அதுக்காக எல்லோரும் இப்படியா கொஞ்சணும்? உங்க தங்கச்சி வேறே என்னமோ ரொம்ப நல்லவ மாதிரி வேஷம் போடறா.''

''என் தங்கச்சி ரொம்ப நல்லவதான். நீயும் கர்ப்பம் ஆயிடு. உன்னையும் எல்லோரும் கொஞ்சுவாங்க. எனக்குச் சாப்பாடு அதிகமாயிடுத்து. தூக்கம் வருது. குட்நைட்!'' என்றவன் அடுத்த சில நிமிடங்களில் தூங்கிவிட்டான்.

''என் தங்கச்சி நல்லவதான்!'' என்று அவளை விட்டுக் கொடுக்காமல் நடராஜ் சொன்னதில் வந்த எரிச்சலில் இரவெல்லாம் தூங்க முடியவில்லை ஆஷாவால். கல்யாணத்திற்கு முன் இருந்த நடராஜ் இல்லை இவன் என்று தோன்றியது.

மறுநாள் காலை, துர்காவைச் சீக்கிரமே வந்து அழைத்துச் செல்வதாய்ச் சொல்லியிருந்தான் ஆதி. இந்த நான்கு நாட்களாகக் காலைக் காப்பி, டிபன் துர்கா செய்ய, மத்தியானச் சாப்பாடு நாராயணசாமிக்கும் தனத்திற்கும் ஆதித்யா வீட்டிலிருந்தே வந்து கொண்டிருந்தது. இரவு துர்கா வந்து ஏதோ செய்வாள். ஆஷா - நடராஜ் ஹோட்டலில் சாப்பாடு. ஆஷாவிற்கு ஒத்துக் கொள்ளவேயில்லை. ஆனாலும் பிடிவாதம் அவளை விடவேயில்லை.

துர்கா அம்மாவிடம், ''அம்மா, டிபனுக்கு உப்புமா பண்ணியிருக்கேன். சுமாராகத்தான் வந்திருக்கு. சாப்பிடுங்க. மத்தியானம் ஆதிவீட்டிலிருந்து அனுப்பச் சொல்லிடறேன்,'' என்றாள்.

''துர்கா, சொர்ணத்தின் போன் நம்பர் உங்கிட்டே இருக்கா?'' என்று கேட்டார் நாராயணசாமி.

''இருக்கப்பா.''

''உடனே அவளுக்குப் போன் பண்ணி வேலைக்கு வரச்சொல்லு. என்ன பைத்தியக்காரத்தனம், இது! ஒழுங்கா செய்துகிட்டிருந்தவளைத் துரத்திட்டு, அதுவும் காரணமில்லாமே இப்படித் திண்டாட வேண்டிய அவசியம் என்ன?''

''அப்பா, அண்ணி வந்து...'' என்று ஏதோ சொல்ல ஆரம்பிக்க, ''இந்தா இந்த வீட்டுக்குப் பெரியவன் நான் தானே! அதுல ஒண்ணும் மாறுதல் இல்லையே?'' என்றார் குரலை உயர்த்தியபடி.

''அப்பா!'' என்றாள் துர்கா. அவர் இத்தனை கோபப் பட்டு அவள் பார்த்ததே இல்லை. ''போ, போய் போன் பண்ணு,'' என்றார்.

''சரிப்பா!'' என்றவள் போன் செய்ய, அடுத்த அரைமணியில் சொர்ணா வந்து விட்டாள்.

28

துர்காவைக் கூட்டிப் போக ஆதி வந்துவிட்டான். ''வா, துர்கா! இப்பவே லேட்டாயிடிச்சி!'' என்று வரும் போதே பறந்தான். ''கொஞ்சம் உப்புமா...'' என்று அவள் ஆரம்பிக்கும் போதே நாராயணசாமி குறுக்கிட்டார்.

''வேண்டாம் தம்பி! அப்புறம் போற இடத்தில பேசவே முடியாது,'' என்றார்.

''போங்கப்பா,'' என்று சிணுங்கினாள் துர்கா. ''ஆதி, வாங்க போகலாம்,'' என்று எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு புறப்பட்டாள்.

''எங்கா போறோம்னுதான் கேளேன், துர்கா?'' என்றான்.

''நான் ஏன் கேக்கணும்? நான் உங்க பொறுப்பு. அர்த்தம் இல்லாமே என்னை எங்கேயும் கூட்டிக்கிட்டுப் போக மாட்டிங்கன்னு எனக்குத் தெரியும்,'' என்றாள் துர்கா.

''சரி, வா!'' என்று எஸ். எஸ். காலனியில் ஒரு பெரிய பங்களா முன் காரை நிறுத்தினான். வெளியே ''கருணானந்தம் எம்.எல்.ஏ.'' என்று போர்டு தெரிந்தது

காரை விட்டு இறங்கும் முன், ''இதுதான் கலெக்டர் சொன்ன யோசனை. உங்க அப்பாகிட்டேயும் பேசிட்டேன். வா!'' என்று உள்ளே அழைத்துப் போனான். வாசலில் காத்திருந்து, பின் உத்தரவு கிடைத்தவுடன் அவரைச் சந்தித்தனர். இருவரும் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டனர்.

''சொல்லுங்க தம்பி, நான் உங்களுக்கு என்ன உதவி செய்யணும்? நம்ம ஏரியா பள்ளிக்கூடம். நான் அது நம்ம மாகாணத்திலேயே முதன்மையாக வரணும்ங்கற எண்ணத்தில இருக்கேன். என்ன செய்யணும்னு தயங்காமே சொல்லுங்க.''

முகத்தில் அதிர்ச்சி, எரிச்சல் இரண்டையும் காட்டாமல் இருக்க ரொம்பவே பிரயத்தனப் பட வேண்டியிருந்தது துர்காவுக்கும், ஆதிக்கும்.

''சார், எங்க ஸ்கூல் ஃபவுண்டர்ஸ் டே கொண்டாடப் போறோம். அதுக்குத்தான் உங்களைத் தலைமை தாங்க அழைக்க வந்தோம்!'' என்று மூன்று, நான்கு தேதிகள் எழுதி வைத்திருந்த பேப்பரைக் கொடுத்தான்.

''என்னுடைய காரியதரிசி இன்னிக்கு வரல்லே. கொஞ்சம் ஆலோசிச்சி நாளைக்கு போன் பண்ணட்டுமா?'' என்றார்.

''சரி சார்! ஆனா, மறந்துடாதீங்க, சார். நீங்க ரொம்ப பிஸின்னு எங்களுக்குத் தெரியும். ஆனாலும், நீங்க வந்தா எங்களுக்கும் பெருமை, அழைப்பிதழ் அடிக்கணும். அதுனால, சீக்கிரமா உங்களுக்குச் சௌகரியமான தேதியைத் தயவு பண்ணித் தெரியப்படுத்துங்க, சார்.

வரோம். வணக்கம்!'' என்று சொல்லிப் புறப்பட்டு விட்டனர்.

காரில் ஏறியதும் துர்கா கேட்டாள் ''இது நிஜமாகவே பெரிய அதிசயம், ஆதி. எதுக்கு இவரைப் பார்க்க கூப்பிட்டுகிட்டு வந்தீங்க? இவர் தானே...''

''இரு, இரு. காரணம் இல்லாமயா பண்ணுவேன்? கலெக்டர் சொல்லித்தான் பண்றேன். இதுனால நம்ம பிரச்சனைகள் எல்லாம் தீர்ந்துடும் பார்!'' என்றான்.

''அதென்னவோ நிஜம் தான். அதுக்குத்தான் கடவுள் உங்களை அனுப்பியிருக்கார். இல்லாட்டா, இப்படி இன்டர்நெட்ல போட்டு நிதியும் சேர்த்து, லைப்ரரி புத்தகங்களையும் சேர்த்து, இந்த ஐடியாவெல்லாம் எனக்கு வந்திருக்காது. அநேகமா வேலையெல்லாம் ஆயிடுச்சி, இல்லையா?''

''நமக்கு இப்போ இருக்கிற பின் பக்க காம்பவுண்ட் சுவரை இடிச்சுட்டு வேறே கட்டணும். அது இப்போ இல்லை. நீ டென்ஷன் ஆகாதே. வேடிக்கை பாரு. இப்போ சிரிச்சிகிட்டு என்னோட சந்தோஷமா வா,'' என்றான்.

* * *

எம்.எல்.ஏ. கருணானந்தத்திற்கு ஒரு பழக்கம். ஏதானாலும் தனக்குத்தானே இரைந்து பேசி யோசித்து முடிவெடுக்க வேண்டும். ஏனெனில் அவர் யாருடனும் கலந்து யோசிக்க மாட்டார். யார் மீதும் நம்பிக்கை கிடையாது. தான் யார் நம்பிக்கைக்காவது பாத்திரமாக என்றைக்காவது நடந்துகொண்டிருந்தால் தானே, தனக்கு

எவர் மீதாவது நம்பிக்கை வருவதற்கு? கோவிந்து என்று அவருக்கு ஒரு வேலைக்காரன். அவனுக்குப் பேசவராது. எழுதப் படிக்கத் தெரியாது. அடி முட்டாள். இவர் பேசுவதையெல்லாம் கேட்டுக் கொண்டு, ஆமாம், ஆமாம் என்று தலையாட்டிக் கொண்டு இருப்பது தான் அவன் வேலை. தான் ஏதாவது யோசிக்க வேண்டு மானால் கோவிந்துவைக் கூட்டிக் கொண்டு தனி அறைக்குப் போய்விடுவார். மனைவியைக் கூட நம்பாத அந்த மகானுபாவர். கோவிந்து ஆமாம் என்று தலையசைப்பதை நிறுத்தினால், கையில் கிடைப்பதை எடுத்து அவன் மேல் எறிந்து விடுவார். தனக்குக் காது கேட்காவிட்டாலும் எப்போது தலை அசைக்க வேண்டும் என்று அவன் நன்றாக அறிந்து வைத்திருந்தான்.

அன்றைக்கு கோவிந்துவை வைத்துக் கொண்டு அவர் இப்படித்தான் யோசித்தார். 'இந்த விழாவிற்குப் போவது தான் நல்லது. இதுவரைக்கும் அந்த நாலு வீட்டுக் காரங்களும் இவங்ககிட்டே எதுவும் சொல்லல்ல போலிருக்கு. நிஜமா சொல்லாம இருக்கத்தான் வாய்ப்பு நிறைய இருக்கு. ஏன்னா, ஒரு வேகத்தில இவங்களுக்கு அந்த மனையைக் காசு வாங்காமே தரதா சொல்லிட் டாங்களே ஒழிய, மனுஷ மனசு தானே? நாம தரேன்னு சொல்லியிருக்கிற பணத்துக்கு மயங்கமாட்டாங்களா என்ன? அவங்க இன்னும் தர மாட்டேன்னு சொல்ல லியே? கமுக்கமாக இருந்து நம்ம வேலையை முடிக்கணும். விழாவுக்குப் போயிட்டு ஒரு பத்தாயிரம் நன்கொடைன்னு விட்டெறிஞ்சுட்டா, ஆச்சு வேலை, நல்ல பேருக்கு நல்ல பேரு, சொத்துக்குச் சொத்து.

நாளைக்கே சரின்னு சொல்லிடலாம். ஆனா அவங்க போன் பண்ணட்டும், நாமளா போகக்கூடாது. என்னடா கோவிந்து?' என்று அவர் கேட்க. நடு நடுவில் சரியாகத் தலையாட்டிக் கொண்டிருந்த கோவிந்து, இப்போது அவர் ஒரு முடிவுக்கு வந்துவிட்டதை அறிந்து, பலமாகச் சிரித்துக் கொண்டே தலையாட்டினான்.

அவர் தானாகச் சம்மதம் தெரிவித்து போன் செய்ய மாட்டார் என்பதை நன்கு அறிந்திருந்த நாராயணசாமி, நிறைய பழங்கள் மாலைகள் எல்லாம் வாங்கிக்கொண்டு ஆதியுடன் போய் மறுநாள் அவரைப் பார்த்தார். ''சின்னவங்களுக்குச் சம்பிரதாயம் தெரியல்லை ஐயா. தப்பா நினைச்சுக்கக்கூடாது!'' என்று சொல்லி மாலையைப் போட்டார்.

''ஐயா, நான் இந்த ஆடம்பரத்தையெல்லாம் மதிக்கறதே யில்லை. இப்ப கூட தம்பி சொன்ன தேதியில் எது ஒத்துவரும்னு போன் பண்ணிச் சொல்ற தாகத்தான் இருந்தேன். மக்களுக்குச் சேவை பண்ணற துக்குத்தானே நாங்க இருக்கோம். அதுவும் கல்விச் சேவை. நீங்க இந்த இரண்டு தேதில ஒண்ணுல ஏற்பாடுகளைச் செய்யுங்க. நான் வந்துடுவேன்,'' என்றார் எம்.எல்.ஏ.

அதன் பிறகு ஆதி கலெக்டருடன் பேசிக் கொஞ்சம் தள்ளியிருந்த நாளைக் குறித்துக் கொண்டான். நாராயணசாமியை ஜவுளிக்கடையிலே இறக்கிவிட்டு விட்டு, தான் ஸ்கூலுக்குப் போய்த் துர்காவையும் கூட்டிக் கொண்டு பத்திரிகை அடிக்கக் கொடுக்கப் போனான்.

ஸ்கூலில் எலெக்ட்ரிசிடி. பிளம்பிங், தச்சு வேலை ஆகி பெயிண்டிங் வேலை நடந்து கொண்டிருந்தது. எனவே அவர் பத்து நாட்கள் கழித்துக் கொடுத்திருந்த தேதியில் விழா நடத்துவதில் பிரச்னை ஒன்றும் இருக்காது. ஆனால், ஸ்கூல் திறந்த முதல் வாரத்தில் வைத்துக் கொண்டால் மாணவர்களும் கலந்து கொள் வார்களே என்று தோன்றியது. காலிமனைப் பிரச்னை நினைவுக்கு வந்தவுடன் ஊர்ப் பெரிய மனிதர்கள் எல்லாரையும் அழைத்து விழாவைச் செய்துவிடலாம் என்று முடிவு செய்துகொண்டான்.

அடுத்து அன்றைய நிகழ்ச்சி நிரலை முடிவு செய்து கொண்டு, மாதிரி அழைப்பிதழ் தயார் செய்தான். துர்கா சரி என்று சொன்னதும் நல்ல மாடலாக அழைப்பிதழ் தேர்ந்தெடுத்து அச்சடிக்கக் கொடுத்தார்கள்.

29

சொர்ணா வந்தது எல்லோருக்கும் சந்தோஷமோ சந்தோஷம். ஆனால் ஆஷாவிற்கு மட்டும் தன்னை மட்டம் தட்டுவதற்காக மட்டுமே அவளை இவர்கள் திருப்பிக் கூப்பிட்டிருக்கிறார்கள் என்று ரொம்ப தீவிர மாகத் தோன்றிவிட்டது. ''நான் எங்க வீட்டிற்குப் போகப் போறேன், நீங்க?'' என்று நடராஜிடம் கேட்டாள்.

''நான் அப்புறமா வரேன்.''

''ஏன், என்னோட வந்தா கௌரவக் குறைச்சலா?''

''அதெல்லாம் இல்லை, நானும் வரேன். நீ போ, நான் பின்னாடியே சாயந்திரம் வரேன்,'' என்றான்.

கீழே இறங்கி வந்த ஆஷா, ''நான் எங்க வீட்டுக்குப் போறேன்,'' என்றாள், பொதுவாக எல்லோரையும் பார்த்து.

''இது தானே உங்க வீடு!'' என்று சிரித்துக் கொண்டே சொன்னாள் துர்கா.

''ஜோக்கா? என்னைப் பார்த்தா எப்படி இருக்கு எல்லாருக்கும்? என் வார்த்தைக்கு மதிப்பில்லாம பழைய சமையல்காரியைத் திரும்பக் கூப்பிட்ட இந்த வீட்டை என் வீடா நினைக்க முடியல்லே. என்னைத் தன் பொண்டாட்டியா நினைச்சா, நட்ராஜும் அங்கே வருவார்.''

''என்ன ஆஷா இது? நாமதான் பார்த்தமே! சாப்பாட்டுக்குத் திண்டாட்டமா இருக்குன்னு தெரிஞ்சதுனாலே சொர்ணாவைக் கூப்பிட்டோம். மற்றப்படி உனக்கு எதிராகவோ, உன்னை இன்சல்ட் பண்ணவோ இதைச் செய்யல்ல!'' என்றாள் துர்கா.

''எல்லாம் தெரியும். இங்கே நீங்க வெச்சது சட்டம். எனக்கு இப்படியெல்லாம் யாருக்கும் அடங்கி இருந்து பழக்கமில்லை. அது அவசியமும் இல்லை. நான் போறேன்,'' என்று கிளம்பிவிட்டாள்.

வாசலை நோக்கி நடந்த அவளைத் தடுக்கப் பின்னால் நடந்த துர்காவைத் தடுத்தார் நாராயணசாமி.

''போய்ப் பட்டுத் தெரிந்து கொள்ளட்டும், அம்மா! அவள் அண்ணன், அண்ணி எல்லோரும் ஒரு நாளும் இவளை உற்சாகப் படுத்தமாட்டார்கள்!'' என்றார்.

அங்கே போய்ச் சேர்ந்ததும் ஆஷாவுக்குக் காத்திருந்தது ஒரு பெரிய அதிர்ச்சி. ரேவதி ரொம்பவே பலஹீனமாகி மெலிந்து போயிருந்தாள். அதையும் தாண்டிக் கர்ப்பமானதினால் ஒரு அழகும் குடிகொண்டிருந்தது. ''வா, ஆஷா! மாப்பிள்ளை வரவில்லையா?'' என்று கேட்டவள், இவள் கையிலிருந்த பெட்டியை விநோதமாகப் பார்த்தாள். பிறகு, ''உள்ளே வா!'' என்று அழைத்துப் போனாள். எதிர்த்தாற் போல் ஒரு நர்ஸ் கையில் ஒரு பேசினில் வெந்நீர் எடுத்துக் கொண்டு வந்து கொண்டிருந்தாள்'' என்னதிது?'' என்று கேட்டாள் ரேவதியை ஆஷா.

''அம்மா நேத்திக்கி பாத் ரூம்ல வழுக்கி விழுந்துட்டாங்க. இடுப்பிலே அடி. உடனேயே ஆப்ரேஷன் பண்ணணும்னாங்க. ஆனா, அம்மா ஷுகர் பேஷண்ட் அதை நல்லா குறைச்சிட்டுத்தான் பண்ணணும்னு காத்துகிட்டிருக்காங்க!'' என்றாள் ரேவதி.

''ஐயோ, பாவம்! நீங்க பிரக்னண்ட்டா இருக்கற இந்த நேரத்திலேயா இதுவும் ஆகணும்? எனக்கு ஏன் அண்ணி போன் பண்ணல்ல?'' என்று கேட்டாள் ஆஷா.

''ஏதோ விழுந்துட்டாளே தவிர, ஒரே புலம்பல். எனக்கா சாப்பிடவே பிடிக்கவில்லை. பண்ணவும் முடியல்லே. உங்க அண்ணனுக்கு வீட்டு வேலை என்ன தெரியும்? என் அப்பாவால என்ன முடியும்? கொஞ்ச நாளாகவே சமையலுக்கு ஆள் தேடுகிறோம். ஒண்ணும் வகையா கிடைக்கல்ல. முடிந்ததைச் செய்து கொண்டு

திண்டாடுகிறோம். சரி, வா, உனக்குக் காப்பி கலந்து தருகிறேன். ஆமா, உன் வீட்டில் எல்லோரும் எப்படி இருக்காங்க? உனக்கென்ன விசேஷமா?'' என்றெல்லாம் கேட்டார் ரேவதி.

''அதெல்லாம் கேக்காதீங்க அண்ணி. என்னால அங்கே இருக்கவே முடியல்லே. எனக்கு அங்கே ஒரு மரியாதையும் இல்லை. அன்பும் இல்லை. சரி, அப்புறம் பேசிக்கலாம். வாங்க, உங்க அம்மாவைப் போய்ப் பார்க்கலாம்,'' என்றாள் ஆஷா.

அண்ணியின் அம்மா அசைய முடியாமல் படுத் திருந்தாள். ஆஷாவிற்கு ஏண்டா இங்கு வந்தோம் என்று தோன்றியது. இங்கே தன் வாழ்க்கை முன்பிருந்தது போல் இருக்குமா என்ற கவலை உடனேயே வந்து விட்டது.

ராத்திரி அண்ணன் வந்ததும், ''ஹலோ, அண்ணா!'' என்றாள். அவன் சுரத்தில்லாமல், ''ஆஷா, நீ எப்போ வந்தே?'' அதன் பிறகு, ''என்ன வாங்கிட்டு வரட்டும், ராத்திரி சாப்பிட?'' என்று ரேவதியைக் கேட்டவன், நினைத்துக் கொண்டவனாய், ''ஆஷா, நீ எதாவது சமைக்க கத்துகிட்டுருக்கியா?'' என்று கேட்டான்.

''இல்லை அண்ணா. நாளை தொடங்கி கத்துக்கப் பார்க்கிறேன்,'' என்றாள் மெதுவாக. அதன்பிறகு விக்ரம் வாங்கி வந்த சாப்பாட்டைச் சாப்பிட்டு விட்டு எல் லோரும் தூங்கப் போனார்கள். ஆஷாவுக்குத் தூக்கமே வரவில்லை.

காலையில் காப்பி போடுவதிலிருந்து யார் செய்வது? வழக்கம் போல் ரேவதி எழுந்து காப்பி

போடப்போனவள், முடியவில்லை என்று சற்றைக்கெல்லாம் படுக்க, ஆளாளுக்கு ஆஷாவைக் கண்டித்துத் தீர்த்தார்கள். அண்ணி மென்மையாகவே சொன்னாள். அண்ணன் நன்றாகவே கண்டித்தான். அத்தை புத்திமதியாகச் சொன்னாள். வேலைக்காரி சிரிக்கவே சிரித்து விட்டாள். ஆனால், இந்த வேலைக்காரியிடம் சண்டை போடத் தைரியமில்லை. அனுபவம் தந்த பாடம். அன்று மாலை நடராஜ் வந்தான்.

ஆஷாவிற்கு இப்படியெல்லாம் அடைந்து கிடந்து பழக்கமேயில்லை. கல்யாணத்திற்கு முன் இந்த வீட்டில் இருந்தபோதெல்லாம் தாராளமாக பாக்கெட் மணி கொடுப்பான் விக்ரம். சில வேளைகளில் அதற்கு மேலும் ரேவதியிடம் வாங்கிக் கொள்வாள். அவளுடைய பெட்ரோல், சினிமா, ஹோட்டல், ஷாப்பிங் செலவுக்குத் தான் அது பூராவும். இப்போது அவளுக்கு ப்யூட்டி பார்லருக்குப் போக வேண்டும். பணம் வேண்டும் என்று நடராஜிடம் கேட்டாள்.

''ஆஷா, எங்கிட்டே என் பெட்ரோலுக்கே பணம் இல்லைடா கண்ணு. எப்பவும் ஒண்ணாம் தேதி என் கணக்கில் பணம் போட்டுவிடுவாள் துர்கா. இந்த மாதம் நம்ம துணிக்கடையிலிருந்து வந்தது வீட்டுச் செலவுக்கே சரியாகிவிட்டதுன்னு அப்பாகிட்டே சொல்லிக்கிட்டிருந்தாள். சரி, அப்புறமா கேட்டுக்கலாம்னு விட்டுட்டேன். உனக்கு வேணுமானா கேக்கறேன்.''

ஆஷாவிற்கு வந்ததே பார்க்கலாம் ஒரு ஆத்திரம். ''உங்களுக்கு வெக்கமாயில்லை? அவ உங்களுக்குத்

தங்கையா, இல்லை, மேலதிகாரியா? இந்தச் சூழ்நிலை யெல்லாம் மாறினால்தான் நான் அந்த வீட்டுக்கு வருவேன்!'' என்று சீறினாள்.

''அப்படியா? சூழ்நிலை மாற என்ன செய்யலாம்? சொல்லு.''

''முதல்ல அந்தத் துணிக்கடையை உங்க பேருக்கு மாத்துங்க. அதாவது கேட்டு வாங்குங்க. போய் மேனேஜ் பண்ணி வர பணத்தை எடுத்துக்கோங்க. அவசியமானா நானும் வரேன்,'' என்றாள் ஆஷா.

''பார்க்கறேன்.''

''பார்க்கறேன் என்ன, பார்க்கறேன்! பண்றேன்னு சொல்லுங்க.''

இவள் இருக்கும் தீவிரத்துக்கு ஏதாவது செய்யணும் என்று நினைத்துக் கொண்டான் நடராஜ்.

அடுத்த நாள், ஆதியும் துர்காவும் வெளியே போயிருப்பார்கள் என்று தெரிந்து, அந்த சமயத்திற்கு ஸ்கூலுக்குப் போனான் நடராஜ். நேராகச் சந்தியாவிடம் போய், ''கொஞ்சம் பணம் குடு!'' என்றான்.

''எவ்வளவு சார்?'' என்று கேட்டாள் சந்தியா.

''2000 ரூபாய் வேணும்,'' என்றான் நடராஜ்.

''மேடம் இங்கே ரொம்ப பணமே வைக்கறதில் லையே சார்!'' என்று மனமறிந்து ஒரு பொய்யைச் சொன்னாள் சந்தியா.

''பணமில்லாமையா இங்கே வேலையெல்லாம் நடக்குது? அதுக்கு சாமான் எல்லாம் வாங்குறீங்க? நீ நகரு. நான் பார்த்து எடுத்துக்கறேன்.''

''இல்லை சார். அது வந்து, மேடத்தைக் கேட்காமே எப்படி சார்? நான் வேணுமானா மேடத்துக்குப் போன் போட்டுக் கேட்டுடட்டுமா?''

''இதோ பார். நான் உங்க துர்கா மேடத்துக்கு அண்ணன். நானும் ஸ்கூலோட ஓனர் தான். மொதல்ல நான் கேட்ட பணத்தை எடுத்துக் கொடு.''

அதற்கு மேல் செய்வதறியாமல் சந்தியா பணத்தை எடுத்துக் கொடுத்தாள். துர்கா வந்ததும் மொத்த சம்பாஷணையையும் சொல்லி விஷயத்தைச் சொன்னாள்.

''அடுத்த முறை அவர் வந்து இப்படிக் கேட்டால், கொஞ்ச நேரம் கழித்து துர்கா மேடம் இருக்கும் போது வந்து வாங்கிக்குங்க சார்ன்னு கண்டிப்பா சொல்லிடு. சந்தியா. அதை மீறிக் குடுத்தேன்னா, உன் சீட்டு கிழிஞ் சுடும்!'' என்று கண்டிப்புடன் சொன்னாள் துர்கா.

தன் வண்டிக்கு பெட்ரோல் மட்டும் போட்டுக் கொண்டு 1500/- ஆஷாவிடம் கொண்டு போய்க் கொடுத்தான் நடராஜ். அவனைத் துச்சமாகப் பார்த்தாள் ஆஷா. ''எனக்கு இது போதவே போதாது. நாளைக்கு மொதல் வேலையா இன்னும் கொஞ்சம் பணம் வாங்கிட்டு வந்து கொடுங்க,'' என்றாள்.

நடராஜுக்கு அது தாங்கவேயில்லை. மறுநாள் எப்போதடா விடியும் என்று காத்திருந்து திரும்ப சந்தியாவிடம் போய்க் கேட்டான்.

''சார். ஸ்கூல் பணம் ஸ்கூலுக்குத்தான் செலவழிக் கணும். இது நாலு பேர் நன்கொடையா கொடுத்தது. நீ

ஏன் என்னைக் கேட்காமே குடுத்தே? உன் சீட்டைக் கிழிச்சிடுவேன்னு நேத்து மேடம் ரொம்ப கோபப்பட் டாங்க சார்.''

''உன் மேடத்தோட நேத்து கோபம் கிடக்கட்டும். இப்ப நீ பணம் தரப் போறீயா இல்லியா?''

''ஒரு அரை மணி இருந்தா மேடமே வந்துடுவாங்க. அப்போ வாங்கிக்குங்க சார்.''

''நீ நகரு. சாவி எங்கே?'' என்று அதட்டினான் நடராஜ்.

''ஆங். சார்! எனக்கு இப்பதான் நினைவுக்கு வருது. நேத்திக்கு சாவியை மேடமே எடுத்துகிட்டுப் போயிட்டாங்க. சாரி சார்!'' என்று கை கூப்பினாள் சந்தியா.

''பொய் சொல்லாதே!'' என்றான் நடராஜ்.

''நான் கும்பிடற அந்த வேளாங்கண்ணி மாதா மேல சத்தியம் சார்!'' என்று கழுத்துச் செயினிலிருந்த சிலுவையைக் கையில் பிடித்துக் கொண்டு சொன்னாள் சந்தியா.

அதற்கு மேலும் என்ன செய்வதென்று தெரியாமல் அவ்விடம் விட்டு அகன்றான் நடராஜ். வீட்டிற்குப் போகும் போதே வாசலில் நின்ற ஆஷாவைப் பார்த் ததும் அவனுக்குப் பயமாக இருந்தது. அவள் இப்போது ஒரு ஆட்டம் ஆடுவாளே என்று தான்.

நினைத்தபடியே ஆஷாவிற்கு விபரீதமான கோபம் வந்து விட்டது. ''நீங்கள் என்ன ஒண்ணங்கிளாஸ்

படிக்கிற பையனா? என்னமோ அவள் சொன்னாளாம், இவர் கேட்டுக் கொண்டு வந்தாராம். வெட்கம் கெட்ட மனுஷர். ஒரு தங்கை வீட்டை இந்த ஆட்டம் ஆட்டி வைக்கிறாளே. அதை மாற்றி வீட்டைத் தான் நடத்து வோம். இல்லையா, தன் பொண்டாட்டியிடம் விடச் சொல்லுவோம் என்ற அறிவு கொஞ்சம் கூட இல் லையே. உங்க பேர்ல பணம் போட்டு வெச்சுருக் கேன்னு உங்க அப்பா சொன்னாராமே. அதுவும் உங்க தங்கை சொல்லி. அதெல்லாம் என்ன ஆச்சு?''

''என்ன ஆஷா இப்படி கேக்கறே? நாம எத்தனை தரம் பெரிய ஹோட்டலுக்குப் போனோம், கொடைக்கானல் போனோம். நீ தனியே உன் பிரண்ட்ஸோட எத்தனை தரம் வெளியே போன? ஷாப்பிங், சினிமான்னு நாமதான் செலவழிச்சிருக்கோம்.''

முகம் கோபத்தில் சிவந்துவிட்டது ஆஷாவுக்கு. ''என்னை இப்போ எங்கிருந்தாவது அதைத் திருப்பிக் குடுக்கச் சொல்றீங்க. அதுதானே?'' என்று அவள் கேட்க, ''உன்னைச் சொல்லாததெல்லாம் சொன்னதா நீயே நினைச்சுக்கிட்டு ஏன் அவஸ்தைப் படறே? எல்லாத் தையும் சரி பண்ணிடலாம். இப்போ கவலையை விடு!'' என்றான் நடராஜ் சமாதானமாக.

அதற்குள்ளேயே அவனுக்கு ஏன்டா கல்யாணம் பண்ணிக் கொண்டோம் என்று ஆகிவிட்டது. துர்கா சொன்னாளே, கொஞ்சம் யோசித்திருக்கலாமோ என்று கூடத் தோன்றியது. நாள் முழுவதையும் டோனியுடன் அவன் ஷாப்பிலேயே செலவழித்தான்.

சாயந்திரம் கொஞ்சம் லேட்டாகக் கிளம்பி ஆஷா வலுக்கட்டாயமாக நடராஜையும் கூட்டிக் கொண்டு அவன் வீட்டுக்குப் போனாள். வர மறுத்த அவனிடம், ''உனக்கு வேணுமானா ரோஷம் இல்லை. எனக்கு இருக்கே!'' என்றாள்.

அங்கு போய் அவர்கள் இருவரும் இறங்கின விதத்திலிருந்து ஏதோ பெரிய பிரச்னை வரப் போகிறது என்று எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. ஆனாலும் தனலட்சுமி கேட்டாள்.

''வாம்மா, ஆஷா! எப்படி இருக்கே? உங்க அண்ணி நல்லா இருக்காங்களா?''

''அவங்களுக்கென்ன, நல்லாத்தான் இருக்காங்க. நல்லா இல்லாததெல்லாம் நாங்க இரண்டு பேரும் தான்.''

''ஏம்மா என்ன ஆச்சு?'' என்று கேட்டாள் தனம்.

''கேளுங்க உங்க அருமை மக கிட்டே. அண்ணனை அவங்க எப்படி அவமானப் படுத்தினாங்கன்னு? எத்தனை அகம்பாவம்!'' என்று பொரிந்தாள் ஆஷா.

வாயடைத்து நின்றாள் தனம். நடராஜ் தனக்கும் இந்தப் பேச்சுக்கும் சம்பந்தம் இல்லாதது போல் தூரப் போய் உட்கார்ந்துவிட்டான்.

துர்கா கேட்டாள்: ''ஸ்கூலிலிருந்து பணம் தரல்லைங் கறதைத்தான் நீ சொல்றேன்னு நினைக்கிறேன். அது ஸ்கூல் பணம். நீ தான் பார்த்தியே, அங்கே என்னென்ன வேலைகள் எல்லாம் நடக்குதுன்னு. அதுக்கெல்லாம்

பணம் எங்கேயிருந்து கொடுக்கறது? அதுலேருந்து வீட்டுச் செலவுக்கெல்லாம் எடுக்க முடியாது. எடுத்தா ஆடிட்டர்ஸுக்கு யார் பதில் சொல்றது?'' என்று கேட்டாள்.

''ஸ்கூலும் நம்ம வீட்டுதுதானே. இவரும் இந்த வீட்டைச் சேர்ந்தவர் தானே! அவருக்கு அந்தப் பணத்தை எடுக்கிற உரிமை ஏன் கிடையாது? நீங்க ஒருத்தர்தான் தொடலாமா?''

''தெரியாமே பேசாதே, ஆஷா! நான் தொட்டால் அது ஸ்கூலை நல்லா ஆக்குவதற்காகத்தான். அந்தச் செலவிற்காகப் பழைய மாணவர்கள் அனுப்பிய பணம் அது. அதைத் தொட யாருக்கும் உரிமை கிடையாது. மொத்தமும் பேலன்ஸ் ஷீட் போட்டுக் காண்பிக்கணும். ஆடிட்டர்ஸோட தணிக்கைக்கு உட்பட்டது அது. செலவழிக்கிற ஒவ்வொரு பைசாவுக்கும் கணக்குக் காண்பிக்கணும். என்ன இந்த மாசம் உன் புருஷன் கணக்கில பணம் போடல்லே. கொஞ்சம் தட்டுப்பாடு. அவன் செலவுக்குத்தான் கல்யாணத்துக்கு முன்னாடியே போட்ட பணம் இருக்குமேன்னு நினைச்சேன். அவ்வளவுதான்.''

''அப்படியே 10 லட்ச ரூபாய் போட்டுட்டீங்க. அது அப்படியே இருக்கும் பாருங்க. இதோ பாருங்க, இதெல்லாம் சொல்ல வேண்டியதோ, பேச வேண்டியதோ உங்களோட இல்லை. உங்கப்பா எங்கே, கூப்பிடுங்க,'' என்றாள் ஆஷா ஆவேசமாக.

''என்னப்பா நடராஜ், நீ பாத்துக்கிட்டு பேசாமே இருக்கே? இவ இப்படிப் பேசறதெல்லாம் உனக்குச் சம்மதம்தானா?'' என்று கேட்டாள் தனம்.

''அவ கேக்கறதும் நியாயம் தானேம்மா? ஸ்கூல்ல அந்த கிளர்க் சந்தியா என்னை மதிக்காம எப்படிப் பேசிட்டா தெரியுமா?'' என்றான் நடராஜ்.

''இதோ பார், நீ ஸ்கூலை எடுத்து வேண்டியதை யெல்லாம் பண்ணினா நீ எஜமானன்னு தோணும். அவங்க எல்லாருக்கும். குறைந்த பட்சம் நீ அவளுக்கு ஒத்தாசையாவது பண்ணியிருந்தா, உரிமையைப் பத்தி பேசலாம்,'' என்றாள் தனம்.

''ஆமாம், அதுக்குத்தான் இதைச் சாக்கா வெச்சு இவளோட சேர்ந்து சுத்த ஒருத்தன் ஏற்பட்டு இருக் கானே!'' என்று நடராஜ் சொல்லுமுன்னே அவன் மேல் பாய்ந்தாள் தனம்.

''டேய், அவ உன் கூடப் பொறந்த பொறப்பு. இத்தனை சுலபமா அவளைப் பத்தி கொச்சைப் படுத்திப் பேச எப்படிடா மனசு வரது உனக்கு? அந்த ஸ்கூலைத் தக்க வெச்சுக்க அவ எவ்வளவு பாடுபடறாங்கறதைப் பார்த்துக்கிட்டுத்தானே இருக்கே நீ?''

சட்டென்று குறுக்கே புகுந்தாள் ஆஷா. ''சரி சரி. இப்ப அதெல்லாம் எதுக்கு? உங்க புருஷனைக் கூப்பிடுங்க, பேசணும்.''

''யாரை?''

''உங்க புருஷனைன்னு சொன்னேன்,'' என்றாள் அழுத்தம் திருத்தமாக ஆஷா.

இவளோடு இனிமே பேசினால் நமக்குத்தான் அசிங்கம் என்று நினைத்த தனம் உள்ளே போய்க் கணவனை அழைத்தாள். அவருக்கு வயசாகி இருந்ததே

தவிர காது நன்றாகக் கேட்டது. இத்தனை நாழி நடந்ததையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த அவர் எழுந்து வந்தார். அவர் வருவதைப் பார்த்தும் ஆஷா உட்கார்ந்த இடத்திலிருந்து எழுந்திருக்கவேயில்லை. அவள் எழுந்திருக்கப் போகிறாள் என்று அவர் எதிர்பார்க்கவும் இல்லை.

''உனக்கு இப்போ என்ன வேணும்?'' என்று ஆஷாவை நேரிடையாகவே கேட்டார்.

''அவர் சம்பாதிக்கணும். அவருக்கும் இந்தக் குடும்பச் சொத்தில் உரிமை வேணும்.''

''இதோ பார்! அவனைப் படிக்க வைக்கப் பார்த்தேன். அவனுக்கு அதில் நாட்டமில்லை. நல்ல உத்தியோகத்தில் சேர்த்துவிடப் பார்த்தேன். அவன் அதிலும் இன்ட்ரெஸ்ட் காண்பிக்கவில்லை. இப்போ ஸ்கூலையோ, ஜவுளிக்கடையையோ எடுத்து நடத்தமுடியுமான்னு அவனைக் கேட்டுச் சொல்லு,'' என்றார்.

''அவரால ஸ்கூலுக்கெல்லாம் போய் மன்னாட முடியாது... அதுவும் இந்த மேடம் வெச்சுருக்கிறத அப்படியே மேற்கொண்டு நடத்தணும்னா கஷ்டம். ஜவுளிக்கடையை வித்துப் பணம் குடுங்க.''

''இந்த விக்கிற பேச்சை எடுக்கவே எடுக்காதே. வந்து மூணு மாசம்கூட ஆகல்லே, இத்தனை தைரியமா உனக்கு? வேணுமானா ஜவுளிக்கடையை நிர்வகிக்கச் சொல்லு.''

''அப்ப அதில வர லாபம் அவருதுதான்.''

''எடுத்துக்கட்டும். அதுக்கு மேல எங்கிட்டே வந்து கேட்கக் கூடாது.''

''சரி. நாளைலேருந்து அவர் போயிப்பார் கடைக்கு. நீங்க...?''

'நான் போகறதும், போகாததும் என் இஷ்டம். போகக் கூடாதுன்னு சொல்ல யாருக்கும் உரிமை கிடையாது. நாளைக்கென்ன, இன்னிக்கே போய் ராத்திரி பூட்டிவிட்டு சாவியை எடுத்துக்கோங்க. நடராஜா, உனக்கொரு வார்த்தை. எல்லோருக்கும் அவரவர் பொண்டாட்டி ஒசத்திதான். ஆனா, வந்த மூணாம் நாளே இவ்வளவு இடம் கொடுத்தா, உனக்கே அது கஷ்டத்தைக் கொண்டுவரும்... ஜாக்கிரதையா பொழைச்சிக்கோ. இதோ பாரு மருமகளே! உனக்கும் ஒரு வார்த்தை. அவன் வேலையில் இல்லை, தனிச் சம்பாத்தியம் இல்லைங்கறதெல்லாம் தெரிஞ்சுதான் நீ பிடிவாதம் பிடிச்சு அவனைக் கல்யாணம் பண்ணிக்கிட்டே. அவன் எங்களுக்கு ஒத்தைப் பிள்ளை. அவன் சுகமா வாழணும் கறதுதான் எங்க பிரார்த்தனை. அது உன்... ''அவர் பேசிக்கொண்டே இருக்கையில் ஆஷா, ''வா, நடராஜ், போகலாம்,'' என்று நடக்க ஆரம்பிக்க, ''ஆஷா...'' என் றொரு சப்தம் போட்டாள் அதுவரை சும்மா இருந்த துர்கா. ''என்ன நினைச்சிண்டிருக்கே? உனக்கு மரி யாதை என்ற வார்த்தையே தெரியாதா? மாமனார் என்று கூட வேண்டாம். அவர் வயதுக்கு மரியாதை கொடுக்கிறதில்லையா? நீ படித்த ஸ்கூல்லேயும், காலேஜிலேயும் இதுதான் கத்துக் கொடுத்தாங்களா? அவர் பேசிக்கிட்டே இருக்கார். நீ பாட்டுக்கு வா நடராஜ்ன்னு கிளம்பறியே!'' என்று சற்று இரைந்து கோபமாகவே கேட்டாள்.

அதற்குள் நாராயணசாமி உள்ளே போய்விட்டார். அதற்கு முன்பே தனம் உள்ளே போய்விட்டாள். பாவம், அழுது கொண்டிருந்தாள்.

மாடிக்குப் போய்த் தன் துணிமணிகளைக் கொண்டு வந்தான் நடராஜ். அம்மாவிடம் போய், ''நான் வரேன்மா,'' என்றான். ''கிளம்பறியாப்பா, போய் நல்லா இருப்பா. எத்தனை நாள் அவங்க வீட்ல இருக்க முடியும்பா? உன்னை அவங்க நல்லாவே நடத்தினாலும் அது நல்லா இருக்குமாப்பா?'' என்றாள்.

''என்னம்மா, செய்யறது? பார்க்கலாம். இல்லைன்னா கொஞ்ச நாள் கழிச்சு ஒரு தனி வீடு பார்த்துக்கிட்டுப் போறேன்,'' என்றவன், ''உடம்பைப் பார்த்துக்கோம்மா!'' என்றான். அப்பாவிடம் போய், ''அப்பா! நாங்க போயிட்டு வரோம்பா!'' என்று அவர் முகத்தைப் பார்க்காமலேயே சொல்லிவிட்டு, ''துர்கா, வரேம்மா!'' என்று கிளம்பி விட்டான். துர்கா, ''ஆஷா, அம்மாகிட்டே சொல்லிட்டுப் போ, இல்லைன்னா ரொம்ப வருத்தப் படுவாங்க,'' என்றாள். செருப்பு மாட்டிக் கொள்ளக் கிளம்பின ஆஷா உள்ளே போய், ''போயிட்டு வரேன்,'' என்று சொல்லி விட்டுக் கிளம்பிவிட்டாள். ''நல்லா இரம்மா!'' என்றாள் தனம்.

30

தன் வீட்டு வாசலில் காரை நிறுத்திவிட்டு உள்ளே இரண்டு ஜிப் பேக்குடன் வந்து நின்ற ஆஷாவையும் நடராஜையும் வெறிக்க ஒரு பார்வை பார்த்தான் விக்ரம்.

உடனே தன்னைச் சுதாரித்துக் கொண்டு, ''வாங்க, வாங்க!'' என்று வரவேற்றான். உள்ளே போன ஆஷா அண்ணி எங்கே என்று பார்த்தாள். துவண்டு படுத்திருந்தாள் ரேவதி. பின்னே, எதையும் சாப்பிட முடியாமல் பொழுதெல்லாம் ஒரே வாந்தி, வாந்தி. அதோட சமையலுக்கு ஆளும் சரியாகக் கிடைக்கவில்லை. அம்மாவிற்கு நர்ஸ் என்று ஒருத்தி இருந்தாலும் சில பொழுதுகளிலாவது இவள் செய்ய வேண்டியிருந்தது.

''ராத்திரிக்கு ஏதாவது நான் பண்ணட்டுமா?'' என்று ஆஷா சும்மா இராமல் கேட்டுவைத்தாள். சொல்லி விட்டாளே தவிர அவளுக்கு ஒரே எரிச்சல். அத்தை இப்போதுதான் விழுவதற்கு நேரம் பார்த்தாளா என்று. அண்ணிதான் ஆகட்டும், கர்ப்பமானதற்காக இப்படிப் படுத்தே கிடக்கணும்னு டாக்டர் சொல்லியிருப்பாங்களா? இப்ப கத்துக்கிட்டு இவங்களுக்கெல்லாம் செய்து போட இவள்தான் மாட்டிக் கொண்டிருக்கிறாள். ஏனோ தனக்குக் கல்யாணம் ஆகிவந்த நாளாக அண்ணி செய்து கொண்டிருக்கிறாளே என்று அவளுக்கு உறைக்கவேயில்லை.

மறுநாள் அண்ணியைக் கேட்டுக் கேட்டு வேலைக்காரி துணையோடு இட்லி மாவு வாங்கியதைச் சுட்டுக் கொடுத்து, சாதம், கறி, சாம்பார் மூன்றும் செய்து வைத்தாள். எதுவுமே அவளுக்கே வாயில் வைக்க வழங்கவில்லை. அன்று காலை ஆரம்பித்து மத்தியானம் வரை தன்னுடைய ஒவ்வொரு சிநேகிதிக்கும் போன் செய்து நிறையச் சமையல் செய்பவர்களை வரவழைத்துவிட்டாள். சிலர் நடராஜ் வீட்டிலேயே

இவளைப் பார்த்திருந்தார்கள். இவள் ஹாலில் இருப் பதை வெளியிலிருந்தே பார்த்ததும் திரும்பிப் போய் விட்டார்கள். ஒருத்தி நீட்டாக இல்லை. ஒருத்தி ரொம்பவே ஸ்டைலாக இருந்தாள். ஒருத்தி வாயாடி. ஒருத்தி இவளைவிடவே அழகாக இருந்தாள். இப்படிக் கழித்தது போக ஒரு மாதிரி ஜயந்தி என்ற ஒருத்தியை வேலைக்கு வைத்தாள். பரவாயில்லை. அந்த ஜயந்தி நன்றாகச் சமைத்தாள்.

பழையபடி ஆஷாவின் வாழ்க்கை நல்லபடியாகவே போயிற்று பிறந்த வீட்டில். நடராஜ் காலையிலே டிபன் சாப்பிட்டுவிட்டுப் போய் இரண்டு மணி நேரம் துணிக்கடையிலே இருந்துவிட்டு வந்துவிடுவான். சில நாட்கள் இவள் சிநேகிதிகளோடு ஊர்சுற்றப் போனால், அவன் திரும்ப ஜவுளிக்கடைக்குப் போய்விடுவான். இந்த ஆரம்பமே விக்ரமிற்குப் பிடித்திருந்தது. அந்த நேரத்தில் நடராஜுடைய பழைய சிநேகிதர்கள் தீபக், சதீஷ் இருவரையும் ஒரு நாள் ஷாப்பிங் மாலில் ஆஷா வோடு போயிருக்கையில் பார்த்தான்.

''டேய், நம்ம நடராஜ்டா!'' என்று சதீஷ் சொல்ல, ''உங்க இரண்டு பேரையும் நான் கல்யாணத்திற்கப்புறம் பார்க்கவேயில்லையே?'' என்றான் நடராஜ்.

''இல்லைடா நட்டி! நீ கொஞ்ச நாள் உன் மனைவி யோட எஞ்ஜாய் பண்ண வேண்டாமா? நாங்க எதுக்கு நடுவிலன்னுதான் வரல்லே!'' என்றான் தீபக்.

''சரி, எங்க துணிக்கடை தெரியுமில்லையா? நாளைக் காலையில அங்கே வாங்கடா. சாவகாசமா பேசலாம்,''

என்ற நடராஜ் அவர்களிடமிருந்து விடை பெற்றுக் கொண்டான்.

சமையல்காரி ஜயம் வந்து ஒரு வாரம் இருக்கும். அத்தையைப் பார்த்துக் கொள்ளும் நர்ஸ் வரவில்லை. மத்தியானமாகப் போன் செய்தாள். தனக்கு ஆக்ஸி டெண்ட் ஆகி அடிபட்டுவிட்டதாயும், நாலு வாரங்கள் தானே பெட்ரெஸ்டில் இருக்க வேண்டும் என்றும் அதனால் வர மாட்டேன் என்றும் தெரிவித்தாள். அதனால் அத்தையை மறுநாள் ஆஸ்பத்திரியில் கொண்டு போய்ச் சேர்த்துவிடலாம் என்று முடிவு செய்தார்கள். மாமா இங்கே சாப்பிட மட்டும்தான் வருவார்.

அன்றைக்கு ஒரு நாள் பார்த்துக் கொண்டால், மறுநாள்தான் அவர்கள் சேர்ப்பதாக இருந்த நர்ஸிங் ஹோமில் படுக்கை காலியாகிறதென்று சொல்லிவிட் டார்கள். அவசரத்துக்கு யாருமே கிடைக்கவில்லை. ரேவதி ரொம்பவும் வீக்காக இருக்கிறாள் என்று அவளுக்கு சலைன் ஏத்திக் கொண்டிருந்தார்கள் வீட்டிலேயே.

அன்றைக்கு அத்தைக்கு பாத்ரூம் போக வேண்டும். யாரைக் கூப்பிடுவாள், பாவம்! ''ஆஷா! கொஞ்சம் என்னைப் பிடிச்சிக்கோம்மா!'' என்று இரண்டு தரம் கூப்பிட்டுப் பார்த்தாள். ஆஷா என்னவோ யாரோ ஒரு சிநேகிதியுடன் படு மும்முரமாகப் பேசிக் கொண்டிருந் தாள். ஆனால் அத்தை கூப்பிட்டது காதில் விழாமல் இல்லை. வேண்டுமென்றேதான் பேசாமல் இருந்தாள்

அத்தனை சுத்தமாக வைக்கப்பட்டிருந்த அந்த அறை நாறுகிறதென்று, அவளுடைய எண்ணம்.

''ஆஷா, அத்தை கூப்பிடறாங்க, காதில் விழல்லையா?'' என்று கேட்டான் விக்ரம்.

''பாத்ரூம் போகணும்னா வேலைக்காரியைக் கூப்பிடறதுதானே. நான் என்ன வேலைக்காரியா?'' என்றாள் ஆஷா.

''வேலைக்காரி, 'காலை வேலையெல்லாம் வெச்சு வையுங்கம்மா, நான் வந்து செய்யறேன்!'னு என்கிட்டே சொல்லிட்டு அவ சின்ன மாமியார் சாவுக்குப் போயிருக்கா, ஆஷா, பிளீஸ்! கொஞ்சம் அம்மாவைப் பாரேன். ஜயந்தி மார்கெட் போயிருக்கா,'' என்றாள் உள்ளே யிருந்தே ரேவதி.

வேண்டா வெறுப்பாகப்போய் அத்தையிடம், ''என்ன வேணும்?'' என்று கேட்டாள் ஆஷா.

''பாத்ரூம் போகணும்மா, கொஞ்சம் உதவி பண்ணும்மா, ஆஷா?'' என்று கெஞ்சுதலாகக் கேட்டாள் அத்தை.

''எனக்கு இப்படியெல்லாம் அசிங்கமான வேலையெல்லாம் செய்யப் பிடிக்காதுன்னு தெரியுமில்லே? உங்க பொண்ணுதானே வேலைக்காரிக்கு லீவு கொடுத்து அனுப்பியிருக்காங்க. அவங்களையே வந்து செய்யச் சொல்லுங்க,'' என்றாள் ஆஷா.

''ஏம்மா, காலையிலேயே நர்ஸ் வர மாட்டான்னு தெரியாதில்லையா?'' என்று ரேவதி சொல்லிக் கொண்

டிருக்கும் போதே அத்தை தான் போட்டிருந்த நைட் டியை நனைத்துவிட்டாள். எக்கசக்கமான மாத்திரைகள் சாப்பிடும் உடம்பா, ஒரே நாத்தம்.

''ஏங்க இந்த சலைனை கொஞ்சம் நிறுத்துங்க. நானே போய் எங்கம்மாவைப் பார்க்கிறேன்,'' என்றாள் ரேவதி.

''டோன்ட் பி ஸ்டுபிட், ரேவா! நீ இப்போ எழுந்து ஸ்ட்ரைன் பண்ணிக்கிட்டு, ஏடாகூடமா ஏதாவது ஆனா, நாம என்ன பண்ணுவோம்? அத்தைக்கு டிரெஸ் மாத்திவிடணும், அதுதானே? நான் போய் பண்ணி விடறேன். அவங்க எங்கம்மா போகவிட்டு எவ்வளவு செஞ்சிருப்பாங்க!'' என்றான் விக்ரம்.

''என்னங்க, நீங்க போய்...''

''சும்மா இரு ரேவா. எங்கம்மாவானா செய்ய மாட் டேனா?'' என்றபடி அடுத்த அறைக்குப் போனான். முதலிலிருந்தே அத்தையை வேறு ரூமில்தான் படுக்க வைத்திருந்தார்கள். ரேவதிக்கு எதுவும் இன்ஃபெக்ஷன் வந்துவிடக் கூடாதென்று.

விக்ரம் அந்த அறைக்குள் நுழைந்து விட்டான். அதன் பிறகு ஆஷா அவனைத் தள்ளிவிட்டுவிட்டு உள்ளே நுழைந்தாள். அலமாரியிலிருந்து ஒரு டவலை எடுத்து முகத்தை மூடிக் கட்டிக் கொண்டு, அத்தைக்கு நைட்டியை மாற்றிவிட்டு, பெட்ஷீட்டையும் மாற்றி, அவளைப் படுக்க வைத்தாள். அந்த ரூமின் பாத்ரூமி லிருந்தே ஒரு பக்கெட் எடுத்துவந்து அதில் போட்டுக் கொல்லையில் வைத்துவிட்டு அரை மணி கழித்துக் கீழே வந்துவிட்டாள். தலைக்குக் குளித்து வேறு டிரெஸ் போட்டிருந்தாள்.

விக்ரம் அத்தைக்குச் சாப்பாடு கொடுத்து விட்டு வெளியே வந்தான். அவனுக்கு ஆஷாவைப் பார்த்ததும் வந்ததே பார்க்கணும் ஒரு எரிச்சல்.

''ஆஷா, நீ என் தங்கைதானா? ரேவதியோடு இத்தனை வருஷம் இருந்திருக்கே. கொஞ்சம் கூட ஒரு இரக்க உணர்ச்சியோ, பொறுப்பு உணர்ச்சியோ இல்லையே, சே!'' என்றான்.

''ஏன், உன் மாமியாருக்குச் செய்யாட்டா நான் ரொம்ப கெட்டவளா?'' என்றாள் குத்தலாக.

''என்கிட்டேயே இப்படி பேசறியே, நீ நடராஜ் வீட்ல எப்படி நடந்திகிட்டுருப்பே? எனக்கு ரொம்ப அவ மானமா இருக்கு. உன்னை இப்படி வளர்த்து வெச்சுருக் கேன்னு.''

''ஏன், அங்கேயிருந்து அந்த அகங்காரி போட்டுக் கொடுத்தாளாக்கும்!''

''சீ! உனக்கு நல்லபடியா யோசிக்கவே வராதா? அந்த பொண்ணு துர்கா ரொம்ப நல்லவ. அந்தம்மாவும் சரி, நடராஜும் சரி, சாதுவானவங்கதான்.''

''ஏன், அந்தப் பெரியவர் என்னைப் பேசல்லங் கறியா?''

''பேசியிருப்பார் ஆஷா, நீ அடங்காப்பிடாரியா நடந்து கிட்டிருந்தா பேசியிருப்பார். இல்லைன்னா அவங்கள் லாம் பண்பாடு உள்ளவங்க. நாகரிகமாக நடந்துக்கற வங்க.''

''நான் உனக்குப் பாரமா இங்கே நிரந்தரமா வந்திட் டேன்னு நினைச்சு இப்படியெல்லாம் பேசறியா? ஒரு

நாள் டைம் கொடு. நான் தனியா வீடு பார்த்தோ, இல்லை; அவசரமானா, ஒரு ஹோட்டலுக்கோ போயிட றேன். நீ கவலைப் படாதே!''

''இத்தனை வருஷமா உன்னைத் தள்ளி நில்லுன்னு சொல்லாமே நானும் ரேவதியும் பார்த்து வளர்த்தோம், பாரு! ரொம்ப நன்றியோடதான் பேசறேம்மா.''

''வளர்த்தேன், வளர்த்தேன்னா உன்னை யாரு வளர்க்கச் சொன்னா? கொண்டு போய் ஏதாவது ஹாஸ்டல்ல விட்டிருந்தாலும் நான் வளர்ந்துதானிருப் பேன்!'' என்றாள் ஆஷா.

''சீ, இதுக்கு மேலே உன்னோடு பேசினா, எனக்குத் தான் அசிங்கம்!'' என்றவன் ரேவதியின் அருகில் போய் உட்கார்ந்தான்.

''ஏங்க, அவதான் சின்னப் பொண்ணு. இரண்டுங் கெட்டான். அவகிட்டே போய் எதுக்கு வாயைக் கொடுக்கறீங்க?''

''நானேதான் வாயைக் கொடுக்கறதா இருக்கட்டுமே! இப்படியா பேசுவாள், ஒரு சின்னப் பொண்ணு? கொஞ்சம் கூட மரியாதை, மட்டு, பயம் எதுவுமில் லாமே! ரொம்ப வருத்தமாயிருக்கு, ரேவா!'' என்றான்.

''சரி, விடுங்க. எங்கம்மாவுக்கு உடம்பு சரியில்லாமே போனதுதான் பிரச்னையாயிடிச்சி.''

''பேசாமே இரு! இன்னும் அவங்க காதுல வேறே விழுந்து வருத்தப்படணுமா? சாயந்திரத்துக்குள்ள அடுத்த நர்ஸைப் பார்க்கலாம். கிடைச்சுடுவாங்க, கவலைப் படாதே!'' என்றான்.

''பாவம், உங்க பிஸினஸ் தொந்தரவுகளுக்கு நடுவே, இதெல்லாம் வேறே.''

''அதனால் பரவாயில்லை ரேவா! பணத்திற்கொன்றும் பஞ்சமில்லை. சரி, சமையல் அம்மா வந்துட்டாங்க. நீ சாப்பிடு.''

''நீங்களும் தான் இங்கேயே சாப்பிடுங்க. ஆஷா வையும் கூப்பிடுங்க.''

''அந்தக் கழுதையை நான் கூப்பிடப் போறதில்லை. நீயும் சும்மா இரு. பசிச்சா தானே வரா.''

''பாவம்ங்க. போய் ஜயந்தியைக் கூப்பிடச் சொல் றேன்,'' என்று அனுப்பிய ரேவதிக்குக் கிடைத்த பதில்: ''இனி இந்த வீட்டில் கை நனைப்பதாக இல்லை!'' என்று ஒரு சீட்டில் எழுதப்பட்டு வந்தது.

ரேவதி வருத்தப்பட்டாள். விக்ரம் ஆத்திரப்பட்டான்.

ஆஷா நடராஜுக்குப் போன் பண்ணினாள். வரும் போது இருவருக்குமாக டிபன் வாங்கி வரச்சொன்னாள். நடந்ததை மொத்தமும் அவனிடம் சொல்லி அழுதாள். பெண்டாட்டி அழுதால் நியாயமாவது, அநியாய மாவது? அவனுள் கீழே உள்ளவர்களைத் திட்டித் தீர்த்தான்.

''சரி, பேசாமே நாம நம்ம வீட்டுக்குப் போயிட லாமா?'' என்றான் மெதுவாக.

''ஒரு நாளும் நான் அங்கே வர மாட்டேன். முதல்ல ஒரு வீடு பாருங்க. அதுக்கு முன்னாடி இன்னிக்கு ராத்திரியே நாம ஒரு லாட்ஜில போய்த் தங்கறோம்.''

"நல்லா இருக்குமா, ஆஷா?"

"ரொம்ப நல்லா இருக்கும். ராத்திரி நான் இங்கே தூங்கறதாயில்லை. அவ்வளவுதான்."

நடராஜுக்கு நாம் அன்னிக்கே துர்கா சொன்னதைக் கேட்டிருக்கலாமோ என்று திரும்பவும் தோன்றியது. "கொஞ்சம் இரு. என் பிரண்ட் ஒருவன் குடும்பத்தோட வெளியூர் போகிறான். அவனுடைய வீட்டில் போய் இருந்துகொண்டு, வேறே வீடு பார்க்கலாம்."

"அங்கே யார் சமைக்கறது?" ஆஷா.

"நீதான். நீதான் ஆஷா கத்துக்கணும். இரண்டு நாள் ஏதாவது வாங்கிச் சாப்பிடுவோம். அதற்குள் கொஞ்சம் கொஞ்சமாக நீ சமையல் கத்துக்கோ."

"அதெல்லாம் அப்புறமா யோசிக்கலாம். மொதல்ல போனைப் போடுங்க."

போன் பண்ணினான். வரச்சொல்லி அவன் சொல்லி விட்டதால் இருவரும் புறப்பட்டுவிட்டார்கள். விக்ரம் வீட்டில் இல்லை. ரேவதியிடம் மட்டும் நடராஜ் சொல்லிவிட்டுக் கிளம்பிவிட்டார்கள்.

31

ஆபீஸ் விஷயமாகச் சென்னை போயிருந்த ஆதித்யா, "நான் வந்து குளித்துத் தயாராக லேட்டாகிவிட்டால் கஷ்டம். நீயும் மாமாவும் எங்க வீட்டுக்கு வந்துடுங்க. அங்கேயிருந்துதான் எம்.எல்.ஏ. வீடு கிட்டே. நாம மூணு

பேருமாய்ப் போய் அழைப்பிதழ் கொடுத்துவிட்டு வந்துடலாம்,'' என்று துர்காவிற்குச் சென்னையிலிருந்தே போன் பண்ணிச் சொல்லிவிட்டான்.

''அழைப்பிதழ் பார்த்து என்ன சொல்லுவாரோ?''

''ஒண்ணும் சொல்லமாட்டார். நீ 9-30க்கு வந்துடு,'' என்றான் ஆதி.

அப்பாவும் இவளும் அங்கே போகவும் ஆதியின் அம்மா, ''டிபன் சாப்பிடும்மா!'' என்றாள்.

''எனக்கு இன்னிக்கு சாப்பிடணும்ன்னே தோணாத தனாலே வீட்லேயே நான் சாப்பிடல்லே.''

''நல்லதாப் போச்சு, இங்கே சாப்பிடு!'' என்றாள் பங்கஜம்.

''இல்லை, ஆன்ட்டி, அம்மா அந்த டிபனையே கையில் டப்பாவில் போட்டுக் கொடுத்துருவாங்க, ஹாட் கேஸ்ல,'' என்றாள். அவளுக்குத் தெரியும், காலை கேப்பைக் கஞ்சி தவிர நாராயணசாமி வேறெதுவும் சாப்பிட மாட்டார்.

''இதோ பார், பூரி மசாலா இரண்டே இரண்டு சாப்பிடுவியாம்!'' என்றாள் பங்கஜம்.

''வேண்டாம், அத்தை. ப்ளீஸ்!'' என்றாள் துர்கா.

''இதோ பார், துர்கா! நீ இப்படி பிடிவாதக்காரியா இருந்தா, உன்னை ஆன்ட்டி தன் மருமகளாகிக்க மாட்டா, பார்த்துக்கோ!'' என்றார் ரங்கதுரை.

''பாருங்க ஆன்ட்டி!'' என்று துர்கா முறையிட, ''என் னங்க, நீங்க, சின்னப்பொண்ணு. அவளைச் சீண்டறீங்க.''

''அவளா சின்னப் பொண்ணு? எத்தனை சாதிச்சுருக்கா, பாரு... இந்த ஸ்கூல் விஷயத்தில வேறே யாரானாலும், 'நம்மால ஆகாதுடா சாமி!'ன்னு விட்டிருப்பாங்க.''

''எல்லாம் உங்க உதவியாலேயும், உங்க மகனா லேயும் தானே மாமா முடிஞ்சுது!'' என்று துர்கா சொல்லிக் கொண்டிருக்கும்போதே, குளித்துவிட்டு ஜம்மென்று டிரெஸ் செய்துகொண்டு ஆதித்யா மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தான்.

இரண்டு நாட்களாகப் பார்க்கவில்லையா, துர்காவிற்கு அப்படியே அவன் அருகில் போய் அவன் மார்பில் தஞ்சம் அடைய வேண்டும் போல் இருந்தது. அவனுக்கும் அப்படித்தான் தோன்றியிருக்க வேண்டும், கண்களாலேயே அவளைச் சாப்பிட்டுக் கெண்டிருந் தான்.

அவனுடன் உட்கார்ந்து இவளும் இரண்டு பூரி சாப்பிட்டுவிட்டு மூவருமாய்க் கிளம்பினார்கள். எம்.எல்.ஏ. வீட்டிற்குப் போய் அவரைச் சந்தித்ததும் அவர் பத்திரிகையைப் பிரித்துப் பார்த்துவிட்டு அதிர்ந்து போனார். ''கலெக்டரம்மா வராங்களா? முன்னாடியே சொல்லியிருக்கலாமே நீங்க?'' என்றார்.

''உங்களுக்கு ஒரு இனிமையான அதிர்ச்சி!'' என்றான் ஆதி. ''நீங்க தலைமை தாங்கப் போறீங்க. அவங்க முக்கிய விருந்தாளி. அவசியம் வந்துடுங்க சார்!'' என்றான். ''நாங்க கார் அனுப்பலாமா?'' என்று பவ்ய மாகக் கேட்டார் நாராயணசாமி.

''தேவையில்லை, சார்! நானே வந்துடுவேன்.'' எழுந்து நின்று அவர் கை கூப்பவே இவர்களும் புறப்பட்டனர். நேராக கலெக்டர் ஆபீஸுக்குப் போனார்கள்.

''வாங்க சார், ஆனா, நீங்க எதுக்கு சிரமப்பட்டீங்க? இவங்க மட்டும் வந்திருந்தாலே போதுமே!'' என்றார்

கலெக்டர் மங்கையர்க்கரசி, இவர்கள் மூவரையும் பார்த்ததும். பின் ஆதியைப் பார்த்து, ''என்ன ஆதித்யா, எல்லாம் நான் சொன்னபடி தானே ஏற்பாடெல்லாம் பண்ணியிருக்கீங்க?'' என்றாள்.

''ஆமாம் மேடம்! நீங்க சொன்னபடியே தான் ஏற்பாடெல்லாம் பண்ணியிருக்கேன், மேடம்!'' என்றான்.

''சரி, எல்லாம் நல்லபடியா நடக்கும். நான் சரியான நேரத்தில வந்துடுவேன். நீங்க கவலைப் படாதீங்க. அப்பாவை முதல்ல வீட்டுக்குக் கூட்டிகிட்டுப் போயுடும்மா,'' என்றார்.

* * *

''நேராக ஸ்கூலுக்குப் போங்க. நானும் அங்கேயே வரேன். ஒரு தரம் எல்லாத்தையும் பார்க்கறேன்பா'' என்றார் நாராயணசாமி.

ஸ்கூல் வாசலில் காரை நிறுத்திய ஆதித்யாவிற்கும் மற்ற இருவருக்கும் மகா, மகா அதிர்ச்சி. அழுது கொண்டே வண்டியிலிருந்து இறங்க மறுத்துவிட்டாள் துர்கா. பெரியவருக்கா கண்ணெல்லாம் கோவைப் பழம்போல் சிவந்துவிட்டது. ஆதித்யா இருவரையும் சேர்த்து அணைத்து உள்ளே கூட்டிப் போனான். அந்தச் சுவர் முழுவதும் துர்காவையும் ஆதித்யாவையும் இணைத்து இனிமேலும் இல்லை என்ற அளவுக்கு அசிங்கமாக எழுதியிருந்தது. உள்ளே போய்த் துர்கா தனியா உட்கார்ந்து அழுது தீர்த்துவிட்டாள். தோட்டத்து உள் பக்கத்துச் சுவர்களிலும் தராதரமில்லாமல் பெரிது பெரிதாக, கலர் கலராக, இருவரையும் இணைத்து, ''காதல் களியாட்டம் போடும் காமப் பிசாசுகளே!'' என்று

ஆரம்பித்து, படிக்கும் பண்புள்ள எவரும் சொல்லக் கூசும் கேடுகெட்ட வார்த்தைகளால் வர்ணித்து எழுதியிருந்தது. அவர்களுக்குத் தெரிந்துவிட்டது யார் இதெல்லாம் எழுதியிருப்பார்கள் என்று. ஆதித்யா மட்டும் அமைதி யாக மலைபோல நின்றிருந்தான்.

கொஞ்ச நிமிடங்கள் போல் அமைதியாக இருந்த அவன், தோட்டக்காரனையும், வாட்ச்மேனையும் கூப்பிட்டனுப்பினான். நடுங்கிக் கொண்டே வந்தனர் அவர்கள் இருவரும்.

''இதோ பாருங்கப்பா, நாளையிலிருந்து நீங்க இரு வரும் வேலைக்கு வர வேண்டாம். உங்க இருவரையும் வேலையிலிருந்து நீக்கிவிட்டேன்,'' என்றான்.

தடாலென்று அவன் காலடியில் வீழ்ந்தனர் இரு வரும். ''ஐயா, அப்படிச் சொல்லாதீங்கய்யா. இங்கே வேலையில்லேன்னா நாங்க வேற எங்கேய்யா போவோம்?''

''நீங்க உங்களுக்கான கடமையைச் செய்யத் தவ றிட்டீங்க. எவனோ ஒரு பொறுக்கி ராஸ்கல் சுவத்திலே கன்னாபின்னான்னு எழுதி இருக்கான். நீங்க இரண்டு பேரும் என்ன பண்ணிகிட்டிருந்தீங்க?''

''ஐயா, நேத்திக்கு பெயிண்ட் பண்ற இரண்டு பேர் வரல்லீங்க. அதுனால எங்களைக் கொஞ்சம் உதவி பண்ணக் கூப்பிட்டாங்க. நாங்களும் உதவினோம். அந்த அசதில ராத்திரி கொஞ்சமா தண்ணி அடிச்சுட்டுப் படுத்தோம் ஐயா. நல்லா தூங்கிட்டோம். அப்பத்தான் யாரோ இதெல்லாம் எழுதியிருக்காங்க.''

''உங்களுக்கு இடமும் கொடுத்து வேலையைச் சரியாச் செய்யுங்கன்னா, தண்ணியடிச்சுட்டா இருக்கீங்க? நீங்க என்ன பண்ணுவீங்களோ, எனக்குத் தெரியாது. இந்தச் சுவரெல்லாம் பழையபடி பளிச்சுன்னு இருக்கணும். இதுக்கு என்ன செலவாகிறதோ, அதை நீங்கதான் ஏத்துக்கணும். இன்னிக்கு சாயந்திரத்திற்குள்ளே இந்த வேலை முடியணும். இல்லேன்னா உங்க சீட்டு கிழிஞ்சுடும். போங்க!'' என்று விரட்டிவிட்டான்.

துர்காவிடம் போய், ''முகத்தை அலம்பிக்கொண்டு வா,'' என்றான்... இரண்டு கூல்டிரிங்க் வாங்கி வரச் சொன்னான். மாமாவிற்கு ஒரு காப்பியும் வாங்கிக் கொடுத்து வீட்டிற்கு அழைத்துச் சென்றான்.

வீட்டிற்குப் போனதும் தனலட்சுமி இரண்டு தபால் கார்டுகளைக் கொண்டு வந்து கொடுத்தாள். அவளுக்கு அழுது அழுது முகமே வீங்கி இருந்தது. அந்த தபால் கார்டுகளிலும் சுவரில் எழுதப்பட்டிருந்த அதே வாக்கியங்கள்தான். ''மற்றவர்களுக்குப் புத்தி சொல்ல, தண்டிக்க உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது?'' என்று ஆரம்பித்து மகா விரசமாக எழுதப்பட்டிருந்தது.

நாராயணசாமி புறப்பட்டுக் கொண்டிருந்த ஆதித் யாவைக் கூப்பிட்டார். ''தனம், வீட்டில என்ன பழம் இருக்கு?'' என்று கேட்டார். ''காலண்டரைக் கொண்டா!'' என்றார். நாள் நன்றாகத்தான் இருக்கு என்று தனக்குள் சொல்லிக் கொண்டவர், ரங்கதுரைக்குப் போன் பண்ணினார். ஆனால் லைன் கிடைக்கவில்லை.

சட்டென்று திரும்பி, ''ஆதி, உனக்குத் துர்காவைத் திருமணம் பண்ணிக் கொள்ள மனப்பூர்வமாகச்

சம்மதம்தானே?'' என்று கேட்டார். ''அதில சந்தேகமே இல்லை, மாமா!'' என்றான். ''ஏம்மா உனக்கு?'' என்று துர்காவைக் கேட்டார். ''முழுச் சம்மதம்பா!'' என்றாள் அவள். ''ஆனால் அடுத்த துர்காஷ்டமி...'' என்று அவள் ஏதோ சொல்ல ஆரம்பிக்க, ''கல்யாணம் அப்புறம்தான். இப்போ நிச்சயம் பண்ணி எல்லோருக்கும் அறிவிச் சுடலாம். இந்த மாதிரி பேச்சுக்களையெல்லாம் கேட்க எனக்குத் தெம்பில்லை!'' என்றார்.

திரும்ப ரங்கதுரைக்குப் போன் பண்ணி அவர் வீட்டில் இருப்பதை உறுதி செய்து கொண்டார். போகும் வழியிலேயே பழங்கள், வெற்றிலை, பாக்கு எல்லாம் வாங்கிக் கொண்டார்கள்.

நேரே அங்கே போய் ரங்கதுரையின் கைகளைப் பிடித்துக் கொண்டார். ''ரங்கதுரை, அம்மா பங்கஜம், இரண்டு பேரும் சந்தோஷமா, நம்ம குழந்தைகள் சந்தோஷமான வாழ்க்கையைத் தொடங்க தட்டு மாத்திக்கலாம். ஒரு காரணமாகத்தான் சொல்றேன். ஏற்கெனவே சம்மதம்னு நீங்க இரண்டு பேரும் சொன்ன விஷயம்தானே! அதுல மாறுதல் எதுவும் இல்லை, இல்லையா? உங்களுக்காகவும் நானே வெற்றிலை பாக்கு பழம் எல்லாம் வாங்கி வந்துட்டேன். எனக்கு டோக்கனா 50/- குடுத்துடுங்கோ. நல்ல வேளை, போறதுக்குள்ளே தட்டை மாத்திக்கணும்!'' என்று நிறுத்தாமல் பேசினார்.

அவர் இப்படிப் பேசுகிறவரே கிடையாது. ஏதோ காரணமில்லாமல் சொல்ல மாட்டார் என்று அவர் சொன்னபடி உடனேயே தட்டுக்களை மாற்றிக்

கொண்டனர். துர்காவும், ஆதியும் ஜோடியாகப் பெற்றோர்கள் காலடியில் வீழ்ந்து ஆசிர்வாதம் வாங்கிக் கொண்டனர். அவசரமாகச் சமையல்காரன் ஒரு கேசரி கிளறிவிட்டான். எல்லோரும் துளித் துளி எடுத்துக் கொண்டனர்.

''இப்போ சொல்லுங்கண்ணா. அண்ணி, துர்கா இரண்டு பேர் கண்ணும் கலங்கியிருக்கு. ஆதியும் இறுகிப்போய் இருக்கான். நீங்களானா படபடக்கறீங்க. நடராஜைக் கூட கூப்பிடாமே தட்டு மாத்தியாச்சு. என்ன நடந்தது? சொல்ல முடிஞ்சா சொல்லுங்க. இல்லைனா பரவாயில்லை. நீங்க எது பண்ணினாலும் அது சரியாகத்தான் இருக்கும்.''

நடந்ததைச் சுருக்கமாகச் சொன்னார். ''ரங்கதுரையே அன்னிக்கு என் பிள்ளை, என் மருமகளேன்னுதான் பேசினாங்க. அதுக்குத்தான் இந்த நிச்சயதார்த்தம். பவுண்டர்ஸ் டே கொண்டாடப்போறோம், இல்லையா? அன்னிக்கு எல்லோருக்கும் இதை அறிவித்து, ஒரு பார்ட்டியையும் கொடுத்துடலாம். என்ன ரங்கதுரை?'' என்று கேட்டார் நாராயணசாமி.

''பேஷாகப் பண்ணிடலாம். ஏய், மருமகளே! ஸ்கூல் அநேகமா நல்ல நிலைக்கு வந்தாச்சு. ரொம்ப தாமதப் படுத்தாம எங்க வீட்டுக்கு வர வழியைப் பாரு!'' என்றார் ரங்கதுரை.

ஓரக்கண்ணால் ஆதித்யாவைப் பார்த்தாள் துர்கா... அவன் அவளை நன்றாகவே பார்த்துக் கை கொடுத்தான். இவள் கைகூப்ப எல்லோரும் சிரித்தார்கள்.

அதன் பிறகு அன்றைக்கு யாருக்குமே வேலை செய்யும் மூடில்லை ஆனாலும் துர்காவை அப்பா, அம்மாவோடு போகச் சொல்லிவிட்டு ஆதித்யா ஸ்கூலுக்கு விரைந்தான். அங்கு போய் அவன் பார்க்க, சுவருக்கெல்லாம் வெள்ளை பெயிண்ட் அடித்துக் கொண்டிருந்தார்கள்.

அதன் பிறகு அழைப்பிதழ் அனுப்பப்பட வேண்டியவர்களின் லிஸ்ட்டைத் தயாரித்தான். சிலரை நேரில் கூப்பிடவேண்டும். சிலரைத் துர்காவோடு மட்டும் போய்க் கூப்பிடவேண்டும். ஸ்கூலின் பாகஸ்தர்களை நாராயணசாமி போய்க் கூப்பிடவேண்டும்.

ரொம்ப நாட்களாகத் தெரிந்த விஷயமாகையினால் இவனுக்குப் பெரிய கிளர்ச்சியெல்லாம் ஏதுமில்லை. ஆனால் துர்கா முகத்தில் இன்று ஒரு புதிய களை தெரிந்தது. மாலை அவளை எங்காவது வெளியே கூட்டிப் போகணும் என்று நினைத்துக் கொண்டான். அதன்படியே இருவரும் கோவிலுக்குப் போய்விட்டு, ஐஸ்க்ரீம் பார்லருக்கும் சென்றனர். ஷ்யாம்தான் இந்த வேலையைச் செய்திருப்பான் என்பதில் அவர்களுக்குச் சிறிதும் சந்தேகம் இல்லை. அவனை என்ன செய்யலாம் என்ற யோசனை ஒரு பக்கம் மூளையைக் குடைந்து கொண்டிருந்தது. விழா முடியவிட்டுப் பார்த்துக் கொள்ளலாம் என்று தீர்மானித்தான்.

32

அது சினேகிதன் வீடானதால் அங்கு எல்லாப் பொருட்களும் இருந்தன. ஆனால் சமைக்கத்தெரியாது,

கற்றுக் கொள்ள மாட்டேன் எனும் பெண்ணும், அவள் கணவனும் என்ன சாப்பிடுவார்கள். நடராஜுக்கு ரொம்பவே கவலையாகிவிட்டது. அவனுக்கும் எதுவுமே தெரியாது. அவனைச் சமையல் அறையில் விட்டவர்களே கிடையாது அங்கே. இந்த அழகில் இருவருக்கும் நன்றாகச் சாப்பிடவேண்டும். தொடர்ந்து வெளியே சாப்பிட்டாலும் ஒத்துக் கொள்ளாது. ராத்திரிக்கு இருவரும் ஹோட்டலுக்குப் போய்ச் சாப்பிட்டுவிட்டு வந்தார்கள். காலையில் பாலைக் காய்ச்சித் திடீர் காப்பி கலந்து சாப்பிடவே திண்டாடிப் போனார்கள். டிபன் வாங்கிச் சாப்பிட்டாயிற்று.

நடராஜ் கடைக்குக் கிளம்பிப் போய்விட்டான். 'மத்தியானம் ஏதாவது வாங்கி வரணுமான்னு போன் பண்ணு!' என்று சொல்லிவிட்டுப் போனான்.

வேறே என்ன பண்ணப் போகிறாள்? முதலில் அவளுக்கும் சற்றுக் கலக்கமாய் இருந்தது. 'கலங்கினா நான் ஆஷா இல்லை!' என்று தன்னைத்தானே தைரியப் படுத்திக் கொண்டவள், தன் நெருங்கிய சிநேகிதி சௌமியாவை போனில் உடனே வா என்று கூப்பிட்டாள். அவளும் 10 நிமிடத்தில் வந்தாள். அவளிடம் தன் பிரச்னைகளைச் சொன்னாள்.

அதற்கு அவள் ''இது ஒண்ணும் பெரிய பிரச்னை இல்லை. உன் முதல் தேவை நீ சமையல் கத்துக் கறதுதான்!'' என்றாள்.

''அது என்னால் முடியாது... முதல்ல ஒரு சமையல் காரியைத் தேடு,'' என்றாள்.

''நீ பணத்துக்கு என்ன பண்ணப்போறே?''

''கடையிலிருந்து நடராஜ் கொண்டு வருவார்டி.''

''அது வீடு செட் பண்ணினா சாப்பாட்டுச் செலவு அப்புறம் மாதாந்திரச் செலவுக்குத்தான். இப்போ வீடு பார்த்து அட்வான்ஸ் கொடுத்து, பாத்திரம் பண்டம் வாங்கிப் போட்டு, இதுக்கெல்லாம் பணம் வேண் டாமா?''

''சரிதான், நீதான் மொதல்ல ஒரு பட்ஜெட் போடேன்!'' என்றாள் ஆஷா.

சௌமியாவிற்குக் கல்யாணம் ஆகிவிட்டது. தனிக் குடித்தனம் தான். இவளைவிட ஒரு வருஷம் சீனியர். ஆனாலும் இருவருக்கும் நன்றாக ஒத்துப் போகும்.

''சரி, இரு,'' என்று பேப்பர் பேனா தேடி எடுத்துவந்து மாதச் செலவு லிஸ்ட் போட்டாள். பால், மளிகை போன் றவை இல்லாமல், ''உனக்குச் சமையல்காரி, வேலைக் காரி இரண்டும் அவசியமா?''

''நிச்சயமா வேணும். எனக்கு அந்த மாதிரியெல்லாம் வேலை செய்ய முடியாது!'' என்றாள் ஆஷா.

''சரி, புது வீடுன்னா வாடகை, அட்வான்ஸ், பர்னிச்சர் எல்லாமே வேணுமில்லையா? இல்லை, சின்னதா ஒரு வீடு மட்டும் பாத்துக்கோ. பர்னிச்சர் எல்லாம் அப்புறமா வாங்கிக்கலாம்.''

''அதெல்லாம் வேணாம். இரண்டு பெட்ரூம் தனி வீடு. கடை பக்கத்திலேயே பர்னிச்சர் செட் எல்லாம் வேணும். சமையல் செட்கூட மாடர்னா ஹைகிளாஸ்ல வேணும்.''

சௌமியா ஒரு அரை மணி தனியாக உட்கார்ந்து லிஸ்ட் போட்டாள். அவளுக்கே தலை சுற்றியது.

''இந்தா, குறைந்த பட்சம் முதல்ல 3 லட்சம் வேணும் குடித்தனம் ஆரம்பிக்க. நீ என்னடி பண்ணுவே ஆஷா?'' என்று உண்மையான கவலையுடன் கேட்டாள்.

''ஏன்டி இந்தக் கேள்வி?''

''இரண்டு வீட்லேயும் சண்டைன்னா, உனக்கு யார் ஹெல்ப் பண்ணுவாங்க?''

''என்ன சௌமியா, எனக்கு இரண்டு வீட்டுகூடத் தானே சண்டை? என் பக்கம்தானே கடை. அவர் கையில். எனக்கென்ன பஞ்சம்?''

''நாம ஏதாவது ப்ரௌசிங் சென்டருக்குப் போய் சமையல்காரி, வேலைக்காரி எல்லாம் ஏஜென்ட்ஸ் மூலமா பிடிக்கலாம், வீடு பார்க்கலாம்,'' என்று சொல்லிக் கொண்டிருக்கையிலேயே வாசலில் கார் சப்தம் கேட்டது. நடராஜ் தான். சௌமியாவும், அவனும் ஹலோ சொல்லிக் கொண்டார்கள்.

''இதோ பாரு, ராஜ்! இவ பட்ஜெட் படி மூணு லட்ச ரூபாய் குடித்தனம் ஆரம்பிக்கவே ஆகும்கறா!'' என்றாள் ஆஷா.

சௌமியாவிற்கே எரிச்சலாக இருந்தது. என்ன பெண் இவள்? வெளியிலிருந்து வந்த ஆண்பிள்ளை ஒரு கிளாஸ் தண்ணீர் கூட குடிக்க விடாமல், இப்படியா உள்ளே நுழையும்போதே லிஸ்ட்டைக் கொடுப்பாள்?

ஆனால் நடராஜ் எதுவுமே பேசவில்லை. ஒரு பக்கமாக உட்கார்ந்தவன், ''இந்தா...'' என்று ஒரு செக்கை நீட்டினான். பிரித்துப் பார்த்தாள் ஆஷா. ஒரு

லட்சத்திற்கான செக் அது. நாராயணசாமி கையெழுத்திட்டிருந்தார். கேள்விக் குறியோடு நடராஜ் முகத்தைப் பார்த்தாள் ஆஷா.

''இன்னிக்கு துர்கா போன்ல பேசினா. 'நீ பாட்டுக்கு திடீர்னு போயிருக்கே. நான் உன் செல்லுக்குப் போன் பண்ணினேன் கிடைக்கல்ல. அப்புறமா ரேவதி அண்ணிகிட்டே பேசினேன். விவரம் தெரிஞ்சிது. சரி, நீ அவசரத்துக்கு எங்கே போயிருப்பேன்னு யோசிச்சதில கடைல சொன்னாங்க, நீ உன் சிநேகிதன் வாசு வீட்டிலிருந்து வந்ததாக. அதனால்தான் இந்த செக்கை அனுப்பியிருக்கார் அப்பா. அவசியமான சாமான் எல்லாம் வாங்கிக்கோங்க. ரேவதிக்கு அவங்க வீட்ல சீரா பாத்திரங்கள், இன்டக்ஷன் அடுப்புன்னும் என்னென்னவோ வெச்சுருந்தாங்க. அதெல்லாம் நீங்க புது வீட்டுக்குப் போனதும் வந்து எடுத்துக்கோங்க. உங்க இரண்டு பேருடைய நல்வாழ்க்கைக்கும் நாங்க எல்லோரும் வாழ்த்தறோம். அப்பாவோட அப்பப்ப பேசு!' அப்படீன்னு சொன்னா. இந்த செக்கை எங்க டிரைவர் மூலமா கடைக்கு அனுப்பியிருந்தாள்,'' என்று சொல்லி முடித்தான்.

சௌமியா, ''ஒரு லட்சங்கறது உன் தேவைக்குக் கொஞ்சம் பணம். தவிர பண்டம், பாத்திரங்கள் எல்லாம் வந்துடும்னா, அதில இல்லாததை வாங்கினாப் போதுமே!'' என்றாள்.

''இப்ப இவங்களை யார் அனுப்பச் சொன்னது இதையெல்லாம்? என்னவோ இவங்களுக்குத்தான் வசதி இருக்கிற மாதிரியும், மற்றவங்கள் எல்லாம்

பிச்சைக்காரங்கள் மாதிரியும் எண்ணம். அத்தனையும் அகங்காரம்!'' என்றாள் ஆஷா காட்டமாக.

நடராஜ் வாயையே திறக்கவில்லை. சௌமியா ஆஷாவைத் தனியாக உள்ளே கூப்பிட்டுப் போய், ''இப்போ நீ தவிச்சுக்கிட்டு இருக்கச்சே, உனக்கும் உரிமை இருக்குன்னு நீ கேக்காமயே அனுப்பியிருக்காங்க. அதைப் பாராட்டுவியா; அதை விட்டுட்டு அநாவசியமா ஏதேதோ பேசறியே! போய், வந்த மனுஷனுக்கு ஒரு கப் காப்பியாவது கொடு!'' என்றாள்.

''காப்பி சாப்பிடறீங்களா?'' என்று ஆஷா கேட்கவும், ''சாப்பாடு வாங்கிட்டு வரச் சொல்லியிருக்கேன், கடைப் பையன் கிட்டே. இப்ப வந்துடும்,'' என்றான்.

அதற்குள் வாசலில் யாரோ அம்மா என்று கூப்பிடும் சப்தம் கேட்கவும் ஆஷா போய்ப் பார்த்தாள். அவள் பிறந்த வீட்டு டிரைவர் வந்திருந்தான்.

''என்ன குமார்?'' என்று கேட்டாள்.

''அம்மா, இந்தாங்க!'' என்று அவளுடைய டூவீலரின் சாவியையும், ஒரு கவரையும் கொடுத்தான். ''பதில் இப்போ தரீங்களாம்மா?'' என்று கேட்டான். டூவீலரில் தான் வந்திருந்தான்.

''நான் படிச்சிட்டு எழுதித்தானே தரணும்? இதென்ன கேள்வி? நீ இப்ப போயிட்டு அப்புறமா வா,'' என்றாள் ஆஷா... இவள் குணம் எல்லோருக்கும் பழக்கம்தான் என்றாலும், 'வெயிலில் வந்திருக்கிறவனுக்கு ஒரு வாய் தண்ணீர்கூடவா கொடுக்க மாட்டாள்?' என்று எல்லோருக்கும் தோன்றியது. சௌமியா உள்ளே போய்

ஃப்ரிட்ஜிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள்.

தொப்பென்று ஒரு சேரில் உட்கார்ந்தாள் ஆஷா. ''லெட்டரைப் படி!'' என்றாள் சௌமியா. பிறகுதான் ஆஷா கவரைப் பிரித்தாள். அதில் ரூபாய் 2 லட்சத்திற்கு விக்ரம் கையெழுத்திட்ட செக் இருந்தது. அதன் கூடவே அண்ணி எழுதியிருந்த லெட்டர்.

''அன்புள்ள ஆஷா,

நீ திடீரென்று சொல்லிக் கொள்ளாமல் கூடப் புறப்பட்டுவிட்டாய். பரவாயில்லை. நீ குட்டிக் குழந்தையாக இருந்த நாளிலிருந்து உன்னை என் மாமா பெண்ணாகத் தெரியும். இப்பவும் உன்னை என் நாத்தனாராக நினைக்கவில்லை. என் உடன் பிறப்பாக நினைத்துத் தான் இதை எழுதுகிறேன்.

நான்தான் ஒரு மாமியார் வீட்டில் போய் நடந்து கொள்ள வேண்டிய முறைகளையோ, பெண்களுக்குக் குறைந்த பட்சம் தெரிய வேண்டிய வேலைகள் பற்றியோ சொல்லிக் கொடுக்காமல் உன்னை வளர்த்து விட்டேன். இப்போ நீ கஷ்டப்படுகிறாய். வருத்தமாக இருக்கிறது. ஆனால் உன் கல்யாணம் இத்தனை சீக்கிரமாக நடக்கும் என்று யாருக்குத் தெரியும்? இப்போதாவது சுதாரித்துக் கொண்டு உன் கணவன் மனம் கோணாமல் நடந்துகொள்.

துர்கா நாங்கள் உனக்குக் கொடுத்த பொருட்கள் எல்லாவற்றையும் உனக்கு அனுப்புவதாகச் சொன்னாள். ஆனாலும் உனக்குப் பணம் தேவைப்படும் என்று அனுப்பியிருக்கிறேன். வண்டி இல்லாமல் சிரமப்படுவாய் என்பதால் அதையும் அனுப்பியிருக்கிறேன்.

அத்தை உனக்கு ஆசிகள் என்று எழுதச் சொன்னார்கள். ஆல் த பெஸ்ட்.

இப்படிக்கு உன் அண்ணி,
ரேவதி

33

கடிதத்தை வாய்விட்டு அவள் படித்ததும் ஆஷா நெகிழ்ந்து போகப் போகிறாள் என்று நினைத்தனர் சௌமியாவும், நடராஜும். ஹும், அவளா! வழக்கம் போல, ''இந்த இரண்டு அகங்காரிகளுமா என்னை அவமானப் படுத்த வேளை பார்த்துக் கொண் டிருந்தார்கள். இப்போது செய்துட்டாங்க!'' என்றாள்.

''ஏன் ஆஷா, அவங்க இத்தனை அக்கறையா எழுதி யிருக்காங்க. நீ அதைக்கூட இப்படித் தப்பாத்தான் எடுத் துப்பியா?'' என்று கேட்டாள் சௌமியா, தாங்கமாட்டாமல்.

''ஆமா, எனக்கு ஒரு விஷயம் தெரியாதுன்னு உன்னைக் கூப்பிட்டதனாலேயே உனக்கும் நான் இளப்பமாப் போயிட்டேன், இல்லே?'' என்றாள் ஆஷா வெடுக்கென்று.

''சரி, விடு! நான் கிளம்பறேன்,'' என்றாள் சௌமியா.

''ரொம்ப தேங்க்ஸ்!'' என்று அவளை அனுப்பிவிட்டு கதவைத் தாழிட்டுக் கொண்டு உள்ளே வந்துவிட்டாள் ஆஷா.

''என்ன ஆஷா, நீ! இப்படி நீ எல்லாரையுமே தப்பா எடுத்துக்கிட்டே போனா, நமக்கு யார் இருக்காங்க, சொல்லு?'' என்றான் நடராஜ்.

அதுவே தாங்கவில்லை ஆஷாவிற்கு. உள்ளே போய்க் கட்டிலில் படுத்துக் கொண்டு ஒரே அழுகை. அவளைச் சமாதானப் படுத்துவதற்குள் ரொம்ப கஷ்டப்பட்டுப் போய்விட்டான் நடராஜ். ஆயிரம் மன்னிப்பு, ஆயிரம் ஸாரி, இரண்டு ஸாரிகள் (புடவைகள்) எல்லாவற்றிற்குப் பிறகுதான் அவள் சாதாரணமானாள்.

இரண்டே நாட்களில் வீடு பிடித்தார்கள். அங்கு வேலைக்காரி, சமையல்காரி எல்லாம் பிடித்தாயிற்று. ஏதோ தான் பெரிய சாம்ராஜ்யத்திற்கு அதிபதியாகி விட்டது போல் உணர்ந்தாள் ஆஷா. நடராஜுக்கு மட்டும் மிகவும் பயமாகத்தான் இருந்தது. இவள் சமையல்காரி, வேலைக்காரியை எல்லாம் நடத்தும் விதத்தைப் பார்த்து. திரும்ப ஹோட்டல் சாப்பாட்டிற்கே தயாராக இருக்க வேண்டியதுதான் என்று நினைத்துக் கொண்டான்.

அதுபோல் ஆஷா செலவு செய்யும் விதத்தைப் பார்த்தும் அவனுக்குப் பயமாகத்தான் இருந்தது. காதலிக்கும் போது இருந்த ஆஷாவை இப்போது காணோம் என்று தோன்றியது. ஆஷாவிற்கும் அதே நினைப்புத்தான். நடராஜைப் பற்றி. எது எப்படி யிருந்தால் என்ன, நாட்கள் பாட்டுக்கு ஓடிக் கொண் டிருந்தன.

காலை ஐந்து மணிக்கு ஆதித்யாவின் செல் ஒலித்தது. அழைத்தது யார் என்று அரைக் கண் கொண்டு பார்த்தால் துர்காதான். ஆதித்யா, ''குட் மார்னிங், டார்லிங்!'' என்றான்.

''வெரி குட்மார்னிங், ஆதி! ஒரு பெரிய குட் நியூஸ். இல்லாட்டா இத்தனை சீக்கிரம் எழுப்பியிருக்க மாட்டேன், ஸாரி!'' என்றாள்.

''நீ எழுப்பினதே குட் நியூஸ்தான். என்னாச்சு, நாளைக்கே, சீச்சீ, இன்னிக்கே நமக்குக் கல்யாணமா?'' என்றான் ஆதி.

''ஐயே, ஐயாவுக்கு எப்போதுமே இதே நினைவுதான் போலிருக்கிறது. இது வேறே. நாம இம்ப்ரூவ்மெண்ட் பரிட்சைக்கு அனுப்பின அவ்வளவு பேரும் பாஸாயிட்டாங்க. எல்லோருமே 90% மார்க், இரண்டு பேர் 100% வாங்கியிருக்காங்க. இதைவிட சந்தோஷமான விஷயம் என்ன இருக்க முடியும், சொல்லுங்க?''

''நிஜம்தான் துர்கா. ஆனால் இத்தனை விடியற் காலையில நீ எங்கேடா அதைப் பார்த்தே?''

''நான் ராத்திரி எங்கே தூங்கினேன்? ஒரு மணிக் கொரு தரம் லேப்டாப்பைத் திறந்து பார்த்துகிட்டேயே இருந்தேன்.''

''லூசு! நாம நல்லா உழைச்சிட்டோம், மத்ததை சாமி கிட்டே விட்டுட்டு நிம்மதியா இருக்கலாமில்லே. எனிவே, கன்கிராஜுலேஷன்ஸ் கரஸ்பாண்டென்ட், ஸார்!

''அங்கிள், ஆன்ட்டி, எல்லாரும் எழுந்ததும் சமாசாரத்தைச் சொல்லுங்க. அப்பா எழுந்திட்டாங்கன்னு நினைக்கிறேன். நானும் அவர்கிட்டே இந்த சந்தோஷ சமாசாரத்தைச் சொல்றேன்.''

''ஓகே! ஆனா, இந்த சந்தர்ப்பத்தில நான் ரொம்ப நாளா கேட்டுகிட்டிருக்கறதைக் கொடுக்க முடியுமா, என் வருங்கால மனைவியாரே?''

''அதுதான் சொல்லிட்டீங்களே வருங்கால மனைவின்னு. சீக்கிரமே கிளம்பி வாங்க. ஸ்கூலுக்குப் போகணும்... எல்லா பேரண்ட்ஸும் வந்துடுவாங்க!'' என்றாள்.

''சரி, துர்கா, நான் 8 மணிக்கெல்லாம் வந்துடுவேன்.''

குதித்துக் கொண்டு ஓடி வந்த மகளை அதிசயமாகப் பார்த்தார் நாராயணசாமி... ''என்னம்மா துர்கா?'' என்று அம்மாவும் கேட்க, அம்மாவைக் கட்டிக் கொண்டு ஒரு சுற்றுச் சுற்றி, அப்பாவுக்குக் கன்னத்தில் ஒரு முத்தம் கொடுத்தாள் துர்கா. ''அப்பா! இம்ப்ரூவ்மெண்ட் ரிசல்ட் வந்துடுச்சிப்பா!'' என்று எல்லா விவரங்களையும் சொன்னாள்.

''எனக்குத் தெரியும்மா, என் செல்ல மகள் சாதிச்சுடுவான்னு. பார்த்துக் கொண்டே இரு, தனம்! இவ இந்தப் பள்ளிக்கூடத்தைப் பல்கலைக்கழகமா ஆக்கிடுவா, பாரு! ஆதித்யாவும் செமெ உழைப்பல்ல போட்டுருக்காரு இதுலே!'' என்றார்.

''ஆமாங்க. அந்தத் தம்பி கிடைச்சது நம்ம அதிர்ஷ்டம் தான். ஆனா என் பிள்ளை என்ன செய்யுதோ, அதுக்கு நல்லா சாப்பிடணும், பாவம்!'' என்று சொல்லவும் மறக்கவில்லை.

அவர்கள் எல்லோருமாகக் காரில் ஸ்கூலுக்குச் சென்றார்கள். கீழே இறங்கியதும் பெரியவரை உள்ளே நடக்கவிட்டு அவன் காரைப் பூட்டினான். ''துர்கா, இந்த ஸ்வீட்ஸை எடுத்துக்கிட்டு வாயேன்,'' என்றான். அவள் அதை எடுத்துக் கொண்டு ஓயிலாக வர, ''இரு,

இனிப்பே இன்னுமொரு இனிப்பை எடுத்து வருகிறது. என் கண்ணே பட்டுடும் போல இருக்கேடி, என் செல்லம்!'' என்றான். துர்காவிற்கு ஒரு அரைமணி முன்னால் அம்மா இதையே சொன்னது நினைவுக்கு வந்தது. சிரித்துவிட்டாள்.

''என்ன சிரிப்பு இது? பச்சை கிளி மாதிரி இருக்கே!'' என்றான்.

''நீங்க கிளி ஜோசியர் மாதிரி இருக்கீங்க.''

''வாடி என் ரோஜாப்பூவே! இன்னும் கொஞ்ச நாள்ல உன்னைக் கட்டிக்கிட்டதும் உன்னைக் கவனிக்கிற விதத்தில கவனிக்கறேன்!'' என்றான்.

இவர்கள் உள்ளே நுழைந்ததுமே பேரண்ட்ஸ் எல்லோரும் வந்து இவர்களைச் சூழ்ந்து கொண்டனர். ''தேங்க்ஸ் மேடம்'', ''நன்றி சார்'' எனக் குரல்கள் திரும்பத்திரும்பக் கேட்டன. வசுந்தரா வந்து துர்காவை அப்படியே கட்டிக் கொண்டுவிட்டாள். ''சாதிச்சுட்டீங்க!'' என்றாள்.

''இன்னும் நிறைய இருக்கு வசுந்தரா, சாதிக்க!'' என்று சொல்லிக் கொண்டே எல்லா பேரண்ட்ஸும் கொண்டு வந்திருந்த இனிப்புகளையும், பழங்களையும் எல் லோருக்குமாக வழங்கினாள். ஓரிருவர் மாலைகளும் வாங்கி வந்திருந்தனர் நாராயணசாமிக்கு, துர்காவுக்கு, ஆதித்யாவுக்கு மேலும் வசுந்தராவிற்கு என்று போட்டு மகிழ்ந்தனர். வந்திருந்த மாணவர்கள் எல்லோருமே இனிப்புகள் வாங்கி வந்திருந்தனர். எல்லாவற்றையும் நாராயணசாமியின் கையில் கொடுத்து ஆசி பெற்றனர்.

அதன் பிறகு அனைவரிடமும், ''11th ம், 12th ம் வந்த மாதிரிதான். நீங்க எல்லோரும் இதே ஸ்கூல்லதானே படிக்கப் போறீங்க?'' என்று கேட்டார்.

''நிச்சயமாக, ஸார்! நிச்சயமாக!'' என்று எல்லோரும் குரல் கொடுத்தனர்.

ஒரு பையனின் அப்பா, ''மேடம், நீங்க இங்கேயே இருப்பீங்கன்னா ரொம்ப மகிழ்ச்சியா இங்கேயே தொடர வெச்சிடுவோம்,'' என்றார்.

சட்டென்று துர்கா, ''உறுதியாக எனக்குச் சொல்லத் தெரியவில்லை!'' என்றாள்.

அதற்குள் ஆதி, ''மேடம் மட்டுமில்லே, நானும் இதே ஊர்லதான் இருப்பேன். சந்தேகப்படாமல் தொடரலாம்!'' என்றான்.

''மகிழ்ச்சி'', ''நன்றி'' என்ற வண்ணம் எல்லோரும் மறு நாள் ஸ்தாபகர் விழாவிற்குக் கண்டிப்பாக வருவ தாகச் சொல்லி விடை பெற்றனர். அன்று இரவு தூக்கம் வரவில்லை என்று போன் செய்த துர்காவைப் பார்த்து ஆதி சிரித்தான்.

''எதுக்கு இத்தனை கவலைப் படறே! இப்படி இருந்தா நீ எப்படிதான் நம்ம பொண்ணுங்களுக்கெல்லாம் கல்யாணம், கார்த்தி பண்ணப்போறியோ!'' என்றான்.

''அது யார் நம்ம பொண்ணுங்க?''

''நமக்குப் பொறக்கபபோற மூணு பொண்களைத் தான் சொல்றேன்.''

''சமத்து வழியுது. அது சரி, பிள்ளைக் குழந்தை வேண்டாமா?''

''ஏன் வேண்டாம்? அதுவும் மூணு உண்டே. சமத்துவம் அம்மா, சமத்துவம்.''

''அப்படீன்னா, மனைவி மட்டும் ஒண்ணு போதுமா?''

''அநேகமா போதாதுதான். என்னவோ அட்ஜஸ்ட் பண்ணிக்க வேண்டியதுதான்!'' என்றான்.

''போன்தானே, ஒண்ணும் பண்ணமுடியாதுங்கற நினைப்பா? இருங்க, ஸார், நாளைக்கு வெச்சுக்கறேன் கச்சேரியை!'' என்று சொல்லிவிட்டு, ''குட்நைட்!'' என்று சொல்லி போனை வைத்தாள்.

மறுநாள் ஸ்தாபகர் தினம். வேலைகளையெல்லாம் முதலிலேயே குறித்து வைத்துக் கொண்டு, யார் யார் என்னென்ன செய்ய வேண்டும் என்று யோசித்துச் செய்ததனால், பெரிய குழப்பம் ஒன்றும் இல்லைதான். இவர்கள் மாவட்டக் கல்வி அதிகாரியைக் கூப்பிட்ட போதே அந்த அம்மாள் நிச்சயம் வருகிறேன் என்று சொன்னதுகூட ஆச்சரியம் இல்லை, முதல் நாள் ரிசல்ட்டைப் பார்த்துவிட்டுத் துர்காவையும், ஆதித்யாவையும் மனதாரப் பாராட்டினார்.

எத்தனை திட்டமிட்டுச் செய்திருந்த போதிலும் வேலைகள் வளர்ந்தன. முதல் நாள் மாலை வரைக்கும் துர்கா, வசுந்தரா, சந்தியா இன்னும் சில ஆசிரியர்களுக்கும் வேலை இருந்தது. அதற்குப் பின்னும் ஆதித்யா தான் இருந்து ஏதோ வேலை பார்ப்பதாகச் சொன்னான். துர்கா தான், ''வேண்டாம், எல்லோரும் வீட்டுக்குப் போய்விட்டுக் காலை 8 மணிக்கு முன்

வந்துவிடலாம்,'' என்று சொன்னாள். இல்லாவிட்டால் விழா சமயத்தில் தூங்கி வழிய வேண்டியிருக்கும் என்பது அவளுடைய வாதம். சரி என்று கிளம்பிய எல்லோரும் சரியாகக் காலை 8 மணிக்கு வந்துவிட்டனர்.

ஸ்கூலின் அலங்காரம் ரொம்பப் பிரமாதமாக இருந்தது. மொத்தமும் புது வர்ணம் அடித்து, ரிப்பேர் பண்ணக்கூடிய மரச் சாமான்களை ரிப்பேர் செய்து, வாசல் போர்டு பிரமாதமாக எழுதப்பட்டு, என்று கண்ணைக் கவர்ந்தது.

மைதானத்தின் நடுவே வண்ண வண்ணத் தோரணங்கள் கண்ணைப் பறிக்க வாசல் காம்பவுண்டு சுவரருகே பல வண்ணக் கொடிகள் பறந்தன. மைதானத்தில் நாற்காலிகள், நடுவே சிவப்பு நடைக் கம்பளம், மேடையில் 5, 6 நாற்காலிகள், பெரிய நீள மேஜை வெள்ளை விரிப்புடன், பின்னால் ஸ்தாபகர் படத்துடன் கூடிய மாலையுடன் 'அங்கையற்கண்ணி உயர்நிலைப் பள்ளி' என்ற பெரிய பேனர்.

தனியே ஸ்தாபகர் ரங்கசாமி படம், பிறந்த தேதி, மறைந்த தேதி போட்டு மாலை போடப்பட்டிருந்தது... மேஜையின் மேல் அழகான விரிப்பு, தண்ணீர் பாட்டில்கள், ஒன்றிரண்டு பூ ஜாடிகள்.

ஏற்பாடுகளைச் சுற்றிச் சுற்றிக் கவனித்தனர் எல்லாருமே. மைக் வைத்து நாதஸ்வரம் போட்டாகி விட்டது. எல்லாருமே நன்றாக டிரெஸ் செய்து கொண்டு வந்திருந்தனர். ஆனால், அவர்களுக்கு நடுவே துர்கா பூர்ண சந்திரன் போல் தனித்து விளங்கினாள். பிஸ்கெட்

கலரில் சிகப்பு பார்டர் போட்ட மைசூர் சில்க். முழுவதும் முத்தும் சிகப்பும் காதில், கையில் கழுத்தில், தலையில் லூஸாகக் கொண்டைபோட்டு, கனகாம்பரமும், ஜாதி மல்லியும் சற்று அதிகமாகவே வைத்திருந்தாள்.

அவளைப் பார்த்ததும் ஆதித்யா, ''நான் இன்றி லிருந்து 'கனிபாலா'கப் போகிறேன்!'' என்றான். துர்கா சரியாகக் காதில் விழாததனால், ''என்னது?'' என்று கேட்டாள்.

''நான் நரமாமிசப் பட்சிணியாகப் போகிறேன்!'' என்றான்.

''போயும் போயும் ஒரு அரக்கனுக்கா எங்கப்பா என்னை நிச்சயம் செய்திருக்கிறார்?'' என்று கண்ணைக் கசக்குவதுபோல் அவள் பாவனை செய்ய, ''அம்மாடி யோவ், முக அலங்காரமெல்லாம் கலைந்துவிடும். நீ ராணி மாதிரி இருக்கே. அப்படியே இரு, தாயே!'' என்றான்.

நடுநடுவே இந்த விளையாட்டுக்கள்தான் அவர்களை உற்சாகமாக வேலை செய்ய வைத்தன. ஒருவர் பின் ஒருவராக எல்லோரும் வர ஆரம்பித்துவிட்டார்கள். வாசலிலேயே கற்கண்டு, பூ, சந்தனம், குங்குமம் எல்லாம் வைத்துக் கொண்டு மாணவிகள் தயாராக இருந்தனர். நடராஜும் ஆஷாவும் கூட வந்துவிட்டனர். ஆஷா பான்ட்டும் ஷர்ட்டுமாக தலையெல்லாம் பறக்க வந்திருந்தாள். மாடர்னாம். தனலட்சுமியை ஆதியின் பெற்றோர்கள் வரும்போது கூட்டிவர, நரசிம்மமும், வேங்கடராஜுவும் தத்தம் மனைவிகளுடன் வந்திருந் தனர்.

முதலில் மாவட்டக் கல்வி அதிகாரி, பிறகு எம்.எல்.ஏ, அதன்பின் கலெக்டர் என்று அவர்களும் வந்துவிட விழாத் தொடங்கியது. மூன்று முக்கிய மனிதர்களும், பின் நரசிம்மம், வேங்கடராஜு இருவரின் மனைவியரும் குத்துவிளக்கு ஏற்றினர். வரவேற்புரையை தலைமை ஆசிரியை நிகழ்த்த, ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்தார் நாராயணசாமி. அவர் உடல்நலமின்மையால் இரண்டு வருடங்களாகச் சற்றே சரிந்திருந்த பள்ளி, இப்போது தன் பெண்ணாலும், நண்பரின் மகன் ஆதித்யாவினாலும் நிமிர்ந்து விட்டதாகக் கூறி, அவர்களுக்கு நன்றி தெரி வித்து, அன்று வந்த தேர்வின் முடிவுகளை அறி வித்தபோது நெகிழ்ந்து போய்விட்டார்.

அடுத்தது, மாவட்டக் கல்வி அதிகாரியின் உரை. இத்தனை சத விகிதத்தில் தேர்வும் ஆகி, தேவை யானவற்றில் அனைத்தையும் நிறைவேற்றிவிட்டதால், இனி இந்தப் பள்ளிக்கூடத்திற்கு 11th 12th வரத் தடையேதுமில்லை என்று சொன்னபோது கரகோஷம் விண்ணைப் பிளந்தது.

எம்.எல்.ஏ. திரு திருவென்று விழித்தார். 'மைதானம், மைதானம்' என்று அவர் கல்வி அதிகாரியின் காதருகே சன்னமாகச் சொல்ல, ''அதுதான் வாங்கிட்டாங்களே!'' என்றாள். எம்.எல்.ஏ.விற்கு ஒன்றுமே புரியவில்லை. மேடையின் பக்கவாட்டில் பின் வீட்டுக்காரர்கள் நால்வரும் அமர்ந்திருந்தனர்.

கலெக்டர் பேச எழுந்ததும் முழு அமைதி நிலவியது. 'இந்தப் பள்ளிக்கூடத்தைப் பொறுத்த வரையில் துர்கா, இன்னும் என் நெடுநாள் சிநேகிதரின் மகன் திரு

ஆதித்யா ஆகியோரின் உழைப்புத்தான் இந்த அதிவேக வளர்ச்சிக்குக் காரணம்... இதுபோன்ற துடிப்பான இளைஞர்களால்தான் நாடு முன்னேற வேண்டும்!'' என்று சொல்லி ஆதித்யாவையும், துர்காவையும் மேடைக்கு அழைத்தாள். அப்போது அருகே வந்த நாராயணசாமி ஏதோ சொல்ல, ''தாராளமாக!'' என்றாள். உடனே நாராயணசாமி அறிவித்தார். ''என் பிரிய நண்பர் திரு ரங்கதுரையின் மகன் ஆதித்யாவிற்கும் என் மகள் துர்காவிற்கும் திருமணம் நிச்சயமாகி, விரைவில் நடக்க இருக்கிறது. அதன் அடையாளமாக இருவரும் ஒருவருக்கொருவர் இந்த மோதிரத்தை அணிவிப் பார்கள்!'' என்றார். கரகோஷம் விண்ணைப் பிளந்தது.

பின் கலெக்டர் தொடர்ந்தார். ''இந்தப் பள்ளியில் 11th 12th வகுப்பிற்குக் கடைசிவரை தடையாக இருந்தது அவர்களுடைய விளையாட்டு மைதானம் சிறியதாக இருந்ததுதான். அன்புள்ளம் கொண்ட நான்கு நல்ல குடும்பத்தினர் அதை இவர்களுக்குக் கொடுத்து வாழ்த்தியுள்ளனர். அவர்களை இப்போது மேடைக்கு அழைத்துக் கௌரவிக்கிறேன்!'' என்று கூறித் தானே முதல் மாலையை ஒருவருக்கு அணிவிக்க, எம்.எல்.ஏ., கல்வி அதிகாரி மற்றவர்களுக்கு அணிவித்தனர்.

கலெக்டர் தொடர்ந்தார். ''இன்றைய சிறு குழந்தைகள்தான் நாளைய இந்தியக் குடிமகன்கள். இவர்களுக்கு இந்த உதவியைச் செய்யவிடாமல் தடுத்த சில விசித்திர மனிதர்களும் உண்டு. அவர்கள் சற்றே வன்முறை காட்டியதாகவும் அறிகிறேன். இன்றைய முதன் மந்திரி என்னுடைய நெடுநாளைய நண்பர்.

எனவே, இனி இந்தப் பள்ளியின் வளர்ச்சியில் தலையிடுபவர்களின் நிலை நன்றாக இருக்காது என்று தெரிவித்துக் கொள்கிறேன். பள்ளி மேன்மேலும் சிறந்து வளர என் உளம் கனிந்த வாழ்த்துக்கள்!'' என்று கூறி அமர்ந்தார்.

அடுத்துப் பேச எழுந்த எம்.எல்.ஏ. என்ன பேசுவது என்று தெரியாமல் ஒருவிதத் திகைப்புடன் ஆரம்பித்தார். ''பள்ளியின் தாளாளர், நிர்வாக அதிகாரி, ஆசிரியர்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக்கள். இந்த மாதிரி உண்மை உழைப்பைத் தரும் அனைவரும்தான் இன்றைக்கு நாட்டுக்குத் தேவை. ஒரு பள்ளிக்கூடத்தின் வளர்ச்சியில் தலையிட்டு, அதைக் கெடுக்க நினைப்பவர்கள் எங்கிருந்தாலும் தண்டிக்கப் பட வேண்டியவர்களே. இந்தப் பள்ளியைச் சேர்ந்தவர்களுக்கு ஒன்று சொல்லிக் கொள்கிறேன். இனி உங்களுக்கு எந்தவிதமான இடஞ்சலை யார் செய்தாலும் எங்கள் கட்சியின் கைகள், இந்த கருணானந்தத்தின் கைகள், சும்மா இருக்காது என்று கடுமையாக எச்சரிக்கிறேன்!'' என்று பெரிய குரலில் சொல்லிவிட்டு அமர்ந்தார். மூவருக்கும் மாலை போட்டு நினைவுச்சின்னங்கள் வழங்கப்பட்டன. அதன் பிறகு ஆதித்யா, ''இனி இந்தப் பள்ளியில் படிக்கும் மாணவர்களின் பெற்றோர்கள் எப்போது வேண்டுமானாலும் தங்கள் குறைகளை இன்டர்நெட்டில் தெரிவிக்கலாம். வாரம் ஒருமுறை வந்து கண்டிப்பாக ஆசிரியர்களைச் சந்தித்து, தங்கள் குழந்தைகளின் படிப்பு பற்றியும், முன்னேற்றத்தைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும். இது கட்டாயம்!'' என்றான். ஒரே கைதட்டல்.

கடைசியாகத் துர்கா பேச எழுந்ததுமே அனைவரும் குதூகலமாகத் கைதட்டினர்... அழகாக அனைவருக்கும் நன்றி சொன்னாள். இந்த மனைகளை நமக்குக் கொடுத்தவர்களின் பெயர்கள் பொன் எழுத்தில் பொறிக்கப்படவேண்டியவை என்றாள். திரு. ஆதித்யாவிற்கும் அவருடைய பெற்றோர்களுக்கும் நன்றி தெரிவிக்கத் தன்னிடம் போதுமான வார்த்தைகள் இல்லை என்றாள். தன்னுடன் வேலை செய்த ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றி கூறி முடித்தாள்.

அதன் பிறகு இரண்டு மாணவிகள் பாரதியார் பாடல்கள் இரண்டைப் பாடினர். அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன. தேசிய கீத முழக்கத்துடன் விழா இனிதே முடிந்தது.

34

எல்லோரையும் மரியாதையாக வழியனுப்பிவிட்டுத் திரும்ப வந்தவர்கள் அனைவரும் விடை பெற்றனர். நடராஜிடம் தனலட்சுமி, "எப்படிப்பா இருக்கே? மெலிஞ்சுட்டியே!" என்று கேட்டாள். "அதெல்லாம் ஒண்ணுமில்லைம்மா!" என்றான். "ஏம்பா, தினமும் கடைக்குப் போறது கஷ்டமாக இருக்கா?" என்று கேட்டாள்.

"ஆமா, கஷ்டமாகத்தான் இருக்கு. நீங்க திரும்ப வீட்டுக்குள்ளேயே வெச்சுக்குங்க!" என்றாள் ஆஷா, வெடுக்கென்று.

ஆதித்யா துர்காவிடம் வந்து, ''இப்ப என்ன நிச்சய தார்த்த அறிவிப்பு?'' என்றான்.

''ஏன் அப்படிச் சொல்றீங்க?'' என்று கேட்டாள் துர்கா.

''பின்னே அழகா கல்யாணத்தை இன்னிக்கே பண்ணியிருக்கலாம், இல்லே! அதான் மாலை இருந்தது, மோதிரமாச்சு, தெரிஞ்சவங்க எல்லோரும் வந்தாச்சு. இனிப்பும் கொடுக்கறோம். ஆனாலும் உங்கப்பா ரொம்ப மோசம்!'' என்றான்.

''போங்க நீங்க, ரொம்ப பேட் பாய்.''

''அப்ப நீ வேறே குட் பாயைப் பாரும்மா, நான் போறேன்.''

''ஆதி, இன்னைக்கு உங்களை புல்சூட்டில் பார்த்த திலிருந்து எனக்கு எப்படி இருக்கு, தெரியுமா? சரி சரி வாங்க. நாமெல்லாமும் ஸ்வீட் எடுத்துக்கலாம்,'' என்று எல்லோரையும் உள்ளே கூப்பிட்டாள்.

''அந்த எம்.எல்.ஏ. முகம் போன போக்கைப் பார்த்தியா ஆதி?'' என்று கேட்டார் நாராயணசாமி. ''எத்தனை அழகா திட்டம் போட்டுட்டேப்பா நீ!''

''கலெக்டரம்மா சொன்ன திட்டமாக்கும் அது!'' என்றான் ஆதி.

''என்னம்மா, நம்ம பொண்ணு ஸ்கூலை எடுத்துக் கிட்ட வேளை நல்ல வேளைதான். இனிமே சீக்கிரமா கல்யாண வேலைகளை ஆரம்பிக்க வேண்டியது தானே!'' என்று கேட்டாள் தனம்.

''என்னவோ துர்க்கையம்மன் தான் கண் திறக்கணும்!'' என்றான், போலிப் பெருமூச்சுடன் ஆதித்யா.

''டேய், எங்க முன்னாடியேவா?'' என்று விளையாட் டாகக் கை ஓங்கினார் ரங்கதுரை.

நடராஜுடன் ஸ்கூலை ஒருமிக்க சுற்றிப் பார்த்த ஆஷா, இவர்கள் எல்லோரும் இருக்கும் இடத்திற்கு வந்தாள். அவளுக்குத் துர்காவின் அழகும் அலங்காரமும், ஆதித்யாவின் கம்பீரமும், இருவரின் ஆளுமையும், அத்தனை பேரும் அவர்கள் இருவரையும் கொண்டாடின விதத்தையும் பார்க்கப் பார்க்க வயிற்றெரிச்சலாக இருந்தது. அவர்களுக்குத் தன்னையும் எல்லோரும் கொண்டாடும்படி ஏதாவது செய்ய வேண்டும் என்ற வெறி ஏற்பட்டது. யோசிக்கணும் என்று நினைத்துக் கொண்டாள்.

தன் குழந்தைகளை வேறு பள்ளிக்கூடத்தில் சேர்க்கச் சான்றிதழ் கேட்ட பெற்றோர்கள் தங்கள் முடிவுகளை மாற்றிக் கொண்டார்கள்.

நடராஜுக்கு இப்படி தினம் கடைக்குப் போவது சற்றும் சுவையாக இல்லை. அவனுக்குப் பழக்கம் இல்லை. அவனுடைய சிநேகிதர்கள் தீபக், சதீஷ் வந்தால், அரட்டை அடித்துக் கொஞ்ச நேரம் பொழுது போகும். அதன்பிறகு அங்கிருந்தவர்களைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு, அவர்களோடு ஊர் சுற்றக் கிளம்பி விடுவான். டோனிக்கு மட்டும் அதில் உடன்பாடு கிடையாது. ''கல்யாணமாயிடிச்சி அவனுக்கு. இனிமே அவன் நாலு காசு சம்பாதிக்கணும், இனிமே அவனோட ஒட்டாதீங்கடா!'' என்று நேரிடையாகவே சொல்லிப் பார்த்தான். அவர்கள் கேட்கிற மாதிரி இல்லை.

அந்த வீட்டிலிருந்து எப்போது போனால் துர்கா இருக்க மாட்டாளோ அப்போது போய்த் தன் பண்டம்,

பாத்திரங்களை டிரைவரை விட்டு எடுக்க வைத்து ஒரு டெம்போவில் போட்டு எடுத்துக் கொண்டு வந்து விட்டாள் ஆஷா. ஆக வீடு செட்டாகி விட்டது. இப்போது துர்கா மாதிரி ஏதாவது செய்து மற்றவர்கள் பாராட்டைப் பெறவேண்டும். அன்றைக்கே தன்னையும் எல்லோருக்கும் அறிமுகம் செய்து வைக்கவில்லை என்று ஆஷாவிற்குக் கோபம். நடராஜிடம் அங்கிருந்து வரும்போது பொருமினாள். ''அங்கே எல்லோரும் எப்படி டிரெஸ் பண்ணியிருந்தாங்க, பாத்தியா? உன் பேன்ட்டும் டீஷர்ட்டும் அவர்களுக்கு நடுவில் எங் காவது பொருந்தியிருக்குமா? அதுதான் கூப்பிட்டுருக்க மாட்டா, துர்கா'' என்றான் நடராஜ்.

''நீ உன் தங்கையை விட்டுக் கொடுக்கவே மாட்டியே! என்னவோ அவளுக்குத்தான் எல்லாம் தெரியும்னு ரொம்ப கர்வம். நான் இப்போ இந்த மதுரைல இருக்கிற பெரிய லேடீஸ் கிளப்பிலெல்லாம் மெம்பராகப் போறேன். எனக்கும் அவளை மாதிரி ஒரு நல்ல ஸாரி கலெக்ஷன் வேணும். நான் நல்லதா 10 புடவை வாங்கிக்கப் போறேன்,'' என்றாள்.

''ஏன். உங்க அண்ணிதான் கல்யாணத்துக்கு எக்க சக்கமா வாங்கியிருந்தாங்களே. எங்க துர்கா வேறே உனக்கு நிறைய வாங்கியிருந்தா, இல்லையா?''

''எனக்கு இப்போ அவங்களைப் பிடிக்கல்லே. அதனால அவங்க வாங்கிக் கொடுத்த புடவைகளும் பிடிக்கல்லே. நான் என் இஷ்டப்படி வாங்கிக்கப் போறேன்.''

சலித்துப் போன நடராஜ், ''என்னவோ செய்!'' என்று சொல்லிவிட்டான்.

''எனக்கு இப்ப ஒரு கார் வேணும்!'' என்றாள் ஆஷா, பத்து நாட்கள் கழித்து.

''இப்போ பணத்துக்கு எங்கே போறது?'' என்றான் அவன்.

''கடைல அடுத்த மாசம் சரக்கு வாங்கணும்னு கொஞ்சம் ஒதுக்கியிருக்கேன்னியே, அதிலேருந்து கொடு.''

''இப்ப நம்மகிட்டே இருக்கிற காரை நீ உபயோகப் படுத்திக்கோ. நான் உன் டூ வீலர்ல கொஞ்ச நாள் போயிக்கறேன்,'' என்றான் நடராஜ். ''இல்லாட்டா, உங்க அண்ணன் கிட்டே கேளு. வேறே அத்தனை பணம் புரட்ட வழி கிடையாது.''

''எனக்கு அந்த ஐடியாவே கொஞ்சம் கூடப் பிடிக்கல்லே. எனக்கு ஓட்டவும் பயம்தான். நான் வேணும்போதெல்லாம் கால் டாக்சியில போயிக்கறேன். கிளப்புக்கெல்லாம் யாருமே டூ வீலர்ல வரதில்லே. நான் இப்போ சேரப்போற இரண்டு கிளப்புமே மொத்தம் பணக்காரங்க இருக்கிற இடம்.''

''எதுக்கு ஆஷா இதெல்லாம்?''

''நாளைக்கு பேப்பர்ல உங்க தங்கை போட்டோ வந்துடும். நானும் கிளப்பில அவங்களோடு போய் சேவை எல்லாம் பண்ணினா என் போட்டோவும் பேப்பர்ல வரும். வேறே எப்படி நான் வி.ஐ.பி ஆறது?''

''கிளப்ல போய்த் தினம் என்ன பண்ணப் போறீங்க?''

''அதுவா, சீட்டு விளையாடுவோம். அப்புறம் ஒவ்வொருத்தர் வீட்லயா பார்ட்டி பண்ணுவோம். அடுத்த மாதம் நம்ம வீட்ல பார்ட்டி. நான் ரொம்ப கிராண்டா ஏற்பாடு பண்ணப்போறேன். யார் வீட்டு பார்ட்டி பெஸ்டோ அவங்களுக்கு வருஷக் கடைசிலே அவார்ட் உண்டு... அது எனக்குத்தான் வரணும். நான் இப்பவே தீர்மானம் பண்ணிட்டேன்.

''பார்ட்டின்னா ரொம்ப செலவாகுமே, ஆஷா?''

''ஆகும்தான். ஆனா நம்ம அந்தஸ்துக்குத் தகுந்தபடி நாம வாழவேண்டாமா? செலவானா என்ன?'' என்று அவள் கேட்க, இவனுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. ஆனால் அவளைக் கன்ட்ரோல் செய்யும் சக்தி சுத்தமாக அவனிடம் இல்லை.

கடைக்குப் போனாலும் நடராஜுக்கு இருப்பே கொள்ளவில்லை. தன் மனவேதனையெல்லாம் டோனியிடம் சொன்னால், அவன் கிழவன் மாதிரி புத்தி சொல்லுவான். ''கொஞ்சம் ஆஷாவைக் கன்ட்ரோல் பண்ணு. பெரியவங்க கூடவே போய் இருந்துடு. இந்த தீபக், சதீஷ் இரண்டு பேரையும் கட் பண்ணு.'' இதையெல்லாம் அவன் சொல்லிச்சொல்லி அதற்குள்ளேயே புளித்துப் போய்விட்டது நடராஜுக்கு.

கடைக்கு நாள் தவறினாலும் தீபக் சதீஷ் வருவது தவறுவதில்லை. நடராஜுக்குத் தன் குறைகளையெல்லாம் கொட்டி அழ ஆள் தேவையாக இருந்தது. அவர்கள் இருவரும், ''ஆஷா ஆசைப்படறதுல என்னடா தப்பு?

சமூகத்தில தானும், நீயும் பெரிய மனுஷங்களாத் தெரியணும்னு ஆசைப்படறா. இத்தனை நாளா உங்க வீட்ல அந்த அக்கறை எடுத்துக்காமே தான் உன்னை அப்படியே விட்டுட்டாங்க. அவ உன்னை நல்வழிப் படுத்தறாடா. நீ கொஞ்சம் ஒத்துழைச்சிட்டுப் போயேன்டா!'' என்பார்கள்.

நடராஜுக்கு எந்தப் பிரச்னையையும் சந்தித்தே பழக்கமில்லை. ஏதோ பணம் வேணுமானால் அப்பா விடம் கேட்பான். அப்பா, அம்மா, துர்கா யாராவது அவனுக்குத் தேவையான பணத்தைக் கொடுத்துவிடு வார்கள். மூவருக்கும் அவன் என்றால் உயிர். அவன், 'நான் கொஞ்ச நாள் சுதந்திரமா இருந்துட்டு அப்புறமா கடையைப் பார்த்துக்கறேன்!'' என்று சொன்னபோது அவனைச் சும்மா விட்டது அதனால்தான். அவன் அதிகம் பழகினதெல்லாம் டோனியுடனும், இன்னும் அவனைத் தேடிவரும் இரண்டு, மூன்று நண்பர்களோடும்தான். எப்பவாவது சீட்டு விளையாடுவான். எவனுக்காவது பிறந்த நாள் என்றால் தண்ணி பார்ட்டியும் உண்டு. ஆனால் எல்லாமே என்றோ ஒருநாள்தான்.

தீபக்கும், சதீஷும் வந்து நடராஜுடன் முதலாளிக் கென்று இருந்த அறையில் உட்காருவார்கள். கடையில் ரொம்ப நாட்களாக வேலை பார்த்துவரும் வைத்தீஸ் வரன், ராமச்சந்திரன் இருவருக்கும் அவர்கள் அங்கு உட்காருவது பிடிக்கவில்லை. அங்கே இரண்டு தலை முறைகளாக நாராயணசாமி குடும்பத்தினர் பூஜை செய்யும் தெய்வத் திருவுருவப்படங்கள் இருந்தன. அங்குதான் கணக்குப் புத்தகங்களும், இரும்பு பீரோ

எல்லாம் இருந்தன. அங்கு நாராயணசாமி, இந்த இரு குமாஸ்தாக்களைத் தவிர யாருமே போவதில்லை. அப்படி இருக்கும்போது யரோ இரண்டு பையன்கள், சிட்டே வந்தாலே சிகரெட் வாடை, பரட்டைத் தலையும், ஜீன்ஸுமாய் இவர்களுக்குச் சற்றும் பிடிக்காத தோற்றத்தில் வந்து அங்கு உட்காருவதா?

மெதுவாக ஒருநாள் வைத்தீஸ்வரன், நடராஜ் மட்டும் தனியாக இருக்கும் நேரம் பார்த்துச் சொன்னார். ''எனக்குத் தெரியும். உங்க வேலையைப் பாருங்க!'' என்று சொல்லி விட்டான்.

அதன் பிறகு ஒருநாள் அவர்கள் இருவரும் அந்த ரூமிலே சிகரெட் பத்தவைத்தபோது வைத்தீஸ்வரனால் தாங்க முடியவில்லை. தான் போய்ச் சொல்லாமல், ராமச்சந்திரனை அனுப்பினார். ''நீங்க வாங்கிக் கட்டிகிட்டாச்சு. இப்ப நான் வாங்கிக் கட்டிக்கறேன்!'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே போன அவருக்கு நன்றாகவே அர்ச்சனை நடந்தது. அவருக்கு சீ என்றாகி, ''இவர்கள் எப்படியோ போகட்டும் ஐயா, இனிமே நாம தலையிட வேண்டாம்!'' என்று வைத்தியிடம் சொல்லி வருத்தப்பட்டார்.

ஆனாலும் இருவருக்கும் மனது கேட்கவில்லை. வெள்ளி, செவ்வாய், சனி ஆகிய மூன்று நாட்களிலும் நாராயணசாமி கடைக்கு வந்துகொண்டுதான் இருந்தார். காலையில் ஊதுபத்தி, கற்பூரம் ஏற்றி, சாம்பிராணி காண்பித்துப் பூப்போட்டுவிட்டு, சற்றே உட்கார்ந்து விட்டுத்தான் போவார். அநேகமாக அந்த நாட்களில்

மத்தியானம் வரை கடைப்பக்கம் நடராஜ் தலை காட்ட மாட்டான். ஆனாலும் மற்ற நாட்களில் அவன் நண்பர்கள் வருவதும், சேர்ந்து புகை பிடிப்பதும் நடந்து கொண்டுதான் இருந்தது.

பொறுக்கமாட்டாமல், ஒரு நாள் துர்காவிடம் போய் விஷயத்தைச் சொன்னார். முதலில் நாராயணசாமியிடம் சொல்லலாம் என்றிருந்தவர், இதைக் கேட்டு அவருக்கு உடம்புக்கு வந்துவிடப் போகிறதே என்ற பயத்தினால் துர்காவிடம் சொன்னார்.

துர்கா பொறுமையாக எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டாள். ''இது ரொம்ப நாள், இதே மாதிரி தொடர்ந்து நடக்காது. நடக்க முடியாது. போகிறவரை போகட்டும், விட்டுப் பிடிப்போம் நிச்சயமாகத் தன்னால முடியாமல் வருவான் பாருங்க. எனக்கு அப்பா, அம்மாவோட ஆரோக்கியம் தான் முக்கியம். அவங்கவரை இதெல்லாம் போக வேண்டாம். உங்க இரண்டுபேரையும் மரியாதைக் குறைவா அண்ணன் நடத்தினா, அது பெரிய தப்புதான். அவருக்காக நான் உங்ககிட்டே மன்னிப்புக் கேட்டுக்கறேன்!'' என்றாள்.

''ஐயோ, தாயி! என்னம்மா நீ? பெரிய வார்த்தைகள் எல்லாம் சொல்றியேம்மா!'' என்று பதறிப் போனார்கள் இருவரும். பிறகு சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுக் கிளம்பினார்கள்.

''எங்கண்ணன் ஒண்ணும் தெரியாதவன். அவன் எடுப்பார் கைப்பிள்ளை. கொஞ்சம் பார்த்துக்கோங்கோ!'' என்றாள் துர்கா, கண்கலங்க. ஆதியிடமும் சொல்லி

வருத்தப்பட்டாள். இவள் அந்தப் பெரியவர்களுக்குச் சொன்ன சமாதானத்தையே ஆதி இவளுக்குச் சொன்னான்.

35

பள்ளிக்கூடத்தில் இந்த முறை எக்கசக்கப் புதிய மாணவ, மாணவிகள் சேர்ந்தனர். இன்னும் நான்கு டீச்சர்களை வேலைக்குச் சேர்க்க வேண்டியிருந்தது. சந்தியாவிற்கு வேலை நெட்டி வாங்கியது.

ஒருநாள் ஆசிரியர்கள் அறையில் ஒரே சிரிப்பு. துர்கா எட்டிப் பார்த்தாள். அங்கு ஒரு பேப்பரைக் கையில் வைத்துக் கொண்டு சிரித்துக் கொண்டிருந்தார்கள். 10 ஆவது படிக்கும் சியாமளாவிற்கு, 11ஆவது படிக்கும் ராஹுல் காதல் கடிதம் கொடுத்துவிட்டானாம். அதைக் கையில் வைத்துக் கொண்டு ஆசிரியர்கள் படித்துச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். அதே அறையில் ஒரு மூலையில் அந்தப் பையனும், இன்னொரு மூலையில் அந்தப் பெண்ணும் சுவரைப் பார்த்துக் கைகட்டி நிற்க வைக்கப்பட்டிருந்தார்கள்.

துர்காவைப் பார்த்ததும் அவர்கள் சிரிப்பு நின்றது. எழுந்து நின்றனர். கடிதத்தை வாங்கி மேலோட்டமாகப் படித்த துர்காவிற்கு ஆத்திரத்தில் முகம் சிவந்தது. ''அந்தப் பையனையும், அந்தப் பெண்ணையும் முதல்ல வகுப்புக்குப் போகச் சொல்லுங்க!'' என்றாள். அவர்கள் இருவரும் குனிந்த தலை நிமிராமல் வகுப்புக்கு ஓடிவிட்டனர்.

அங்கிருந்த அத்தனை ஆசிரியர்களையும் பார்த்து, ''உங்களுக்கெல்லாம் இது நல்லாவா இருக்கு? அவன் எழுதினது ஒரு பக்கம் இருக்கட்டும். நீங்கள் எல்லாம் இதை இப்படியா டீல் பண்ணுவீங்க? அந்தக் கடிதாசியைப் பார்த்து நீங்கள் எல்லாம் இப்படியா சிரிப்பீங்க? நீங்க செய்தது கொஞ்சம் கூட சரியில்லை. எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. கேலிக்கிட மானதில்லை அந்தப் பையன் செஞ்சது. கண்டித்திருக்க வேண்டும் அந்த இரண்டு பேரையும்.''

''அடிச்சிருக்கணும்ங்கறீங்களா?'' என்று ஒரு டீச்சர் துணிந்து கேட்டார்.

''அப்படிச் செய்திருந்தா அது மிகப் பெரிய தப்பு. புரிய வெச்சுருக்கணும். இது வயசுக் கோளாறுதான், இது இப்போ தேவையில்லைன்னு. இதில் அவங்களும் சரி, அவங் களைக் கையாளும் நாமும் சரி, ரொம்பவே ஜாக்கிரதை யாக இருக்க வேண்டிய நேரம். அதை நீங்க உணர்ந்துக் கோங்க. குழந்தைகளையும் உணர வையுங்க!'' என்று சொல்லிவிட்டு அந்த இடத்தைவிட்டுப் போய்விட்டாள்.

''நாங்கள் சிரித்தது தப்புதான் மேடம், சாரி!'' என்றனர் இரண்டு மூன்று பேர்.

'பரவாயில்லைம்மா. நீங்க சிரிக்கப் போய் அந்தப் பையனோ, இல்லை அந்தப் பெண்ணோ எதாவது தப்பான முடிவு எடுத்துட்டாங்கன்னா என்ன ஆகும்? யோசிச்சுப் பாருங்க. அது எல்லாவற்றையும் உத்தேசித் துத்தான் சொன்னேன். போகட்டும். வேலையைப் பாருங்க!'' என்றவள் திரும்ப, ''உங்கள்ல யார் அந்தப் பையனையோ, பெண்ணையோ பார்த்தீங்கன்னா

சாதாரணமாக இருங்க. இதைப் பத்தின பேச்சையே எடுக்காதீங்க!'' என்று கண்டிஷனாகச் சொல்லிவிட்டுப் போனாள்.

தன் அறைக்குப் போன அவள் அங்கு ஆதித்யாவைப் பார்த்ததும் சகலத்தையும் சொன்னாள். ''சரி, நீ அந்தப் பையனையும், பெண்ணையும் தனித்தனியே கூப்பிட்டு கொஞ்சம் புத்தி சொல்லிவிட்டு விட்டுவிடு!'' என்றான்.

அதன்படி துர்கா அந்தப் பையனை முதலில் கூப் பிட்டனுப்பினாள். பயந்துகொண்டே வந்த அவனை, ''வா ராகுல், வந்து இப்படி உட்கார்!'' என்று ஒரு நாற்காலியைக் காட்டினாள். அவன் தயங்க, ''சும்மா உட்காருப்பா!'' என்றவள் சற்று நேரம் பேசாமலிருக்க, அவன் அழ ஆரம்பித்து விட்டான்.

''அழாதே, ராகுல். நீ ரொம்ப நாள் யோசிச்சு இப்படிப் பண்ணினியா, இல்லை திடீர்னா?'' என்று கேட்டாள் துர்கா.

''இல்லை மேடம், திடீர்னு என்னவோ இரண்டு, மூன்று நாள் தோணிச்சி. அதான் அப்படிப்பண்ணிட் டேன். ரொம்ப சாரி, மேடம்!'' என்றான் ராகுல்.

''எந்தக் காரியத்தையும் உணர்ச்சி வசப்பட்டிருக்கும் போது பண்ணக் கூடாதுப்பா. வீட்ல யாரெல்லாம் இருக்காங்க உனக்கு?''

''நாங்க இரண்டு பையனுங்க. அப்பா இல்லை. அம்மா தையல் வேலை செய்யறாங்க.''

''பார்த்தியா, கஷ்டப்பட்டுத்தானே உன்னைப் படிக்க வைக்கிறாங்க உன் அம்மா. நீ நல்லா படிச்சு சீக்கிரம்

முன்னுக்கு வந்து அவங்களைக் காப்பாத்தணும்ப்பா. இந்த வயசில இப்படிப்பட்ட எண்ணங்கள் எல்லாம் வரும்தான். ஆனா, எண்ணங்கள் நம்மை ஆள நாம விடக்கூடாது. நாமதான் மனசை அடக்கி ஆளணும். ஆமா, நீ என்ன மார்க் எடுத்தே போன வருஷம்?''

''90% மேடம்.''

''இத்தனை நல்லா படிக்கற பையன், கவனமாய்ப் படித்து, பெரிய உத்தியோகத்துக்குப் போய் அம்மாவை நல்லபடியா வெச்சு காப்பாத்தணும். உங்களுக்காகத்தான் அந்தக் காலி வீட்டை லைப்ரரி ஆக்கியிருக்கோம். மைதானத்தோட நடுச்சுவரை இடிச்சு ஓரத்துல சுவர் கட்டி மைதானத்தைப் பெருசாக்கியிருக்கோம். நிறைய விளையாடு, புத்தகங்கள் படி. நல்ல பையன்னு பேர் வாங்கணும். உன் டீச்சர்ஸ், ஸ்கூல் எல்லாத்துக்கும் நல்ல பேர் வாங்கிக் கொடுக்கணும். என்ன, புரிஞ்சிதா?''

''சரி மேடம்! இனிமே யெல்லாம் நான் இந்த மாதிரி யெல்லாம் பண்ண மாட்டேன்.''

''உனக்கு உங்கம்மா மேலே பிரியம்தானே?''

''ரொம்ப பிரியம், மேடம்.''

''அவங்க உன்னை நல்லா வளர்க்கல்லேன்னு நாலுபேர் சொல்லிடக் கூடாதுப்பா. பார்த்துக்கோ.''

''இனிமே எப்பவும் இதெல்லாம் நினைவு வெச்சுப் பேன்!'' என்று கண்களில் நீர்வழியக் கை கூப்பிவிட்டுப் போனான் ராகுல்.

அடுத்தது அந்தப் பெண்ணைக் கூப்பிட்டு அனுப்பி னாள் துர்கா.

''இதோ பாரும்மா, ஒரு பையனின் கவனத்தை நீ கவர்ந்தால்தான் அவன் உன்னைப் பார்ப்பான். இதோ பார்! இந்த மாதிரி டிரெஸ்ஸை டைட்டாப் போடாதே. இன்னும் அடுத்த சைஸ் ஸ்கர்ட் போட்டுக்கணும். சரியா?''

''நான் ஒண்ணுமே பண்ணல்லே, மேடம். எதுனா லேயோ அவன் அப்படிப் பண்ணிட்டான்!'' என்றாள் அவள்.

''அதனாலதாம்மா இரைஞ்சு பேசறது, ஒஹோன்னு சிரிக்கிறது எல்லாம்கூடத் தப்புன்னு பெரியவங்க சொல்றாங்க. காய் முத்தி பழுத்தா அது பழம். சின்னதுல பழுக்கப் பார்த்தா அது வெம்பல்மா. எப்போதும் நம்ப பேர் கெட்டுவிடக்கூடாதுங்கற ஜாக்கிரதை உணர்ச்சி யோடு நடந்துக்கோ. சரியா?''

''சரி, மேடம்! இனிமே அடக்கமா நடந்துக்கறேன்.''

''சமத்து, ஓடு கிளாசுக்கு!'' என்றாள் துர்கா.

ஒருநாள் விளக்கேற்றும் வேளைக்குப் பிறகு சதீஷ் வந்தான். வந்து நேராக வைத்தீஸ்வரனிடம் போய், ''எனக்கு 5000/- பணம் வேணும்!'' என்றான்.

''அது, சின்னவரக் கேக்காமே எப்படிக் கொடுக்கறது? அவர் எதுனா சீட்டுக் கொடுத்துருக்காரா?''

''நான் அவருக்கு எத்தனை நெருக்கமான சிநேகிதன்னு உங்களுக்குத் தெரியாதா?''

''தெரியுங்க. அதான் தினம் தினம் பார்க்கறோமே. ஆனா, எங்களுக்குக் கணக்குக் காண்பிக்கற நிர்பந்தம் இருக்கே.''

''எனக்குக் கொடுத்திட்டு நட்ராஜ் பேர்ல எழுதிக் கோங்க.''

வைத்தி ராமச்சந்திரனைக் கூப்பிட்டார். 'போச்சுடா, இந்தப் பெரிசு, அந்தப் பெரிசைக் கூப்பிடுது!' என்று தனக்குள் முணுமுணுத்தான்.

அவர் காதில் அரைகுறையாக விழுந்திருக்க வேண்டும். அவர் இவனை நிமிர்ந்து பார்த்தார். அவர் பார்த்ததும் உள்ளூரப் பயம் வந்தாலும், ''என்ன?'' என்று அதட்டினாற் போல் கேட்டான்.

அதற்குள் அங்கு வந்து விஷயத்தைக் கேட்ட ராமச்சந்திரன், ''நடராஜ் தம்பி கையெழுத்தோட ஒரு சீட்டு வாங்கிக் கொடுத்துட்டு, நீங்க வாங்கிக்குங்க. அதுவும் நாளை காலைல வாங்கிக்குங்க. விளக்கு வைக்க விட்டு இந்தக் கடையிலிருந்து பணம் வெளியே கொடுக்கறது என்னிக்கும் வழக்கமில்லை!'' என்றார்.

விருட்டென்று போய்விட்டான் சதீஷ். மறுநாள் காலை நடராஜ் இவர்கள் இருவரிடமும் விசாரணை நடத்தினான்.

''தம்பி, உங்களுக்குத் தெரிந்துதான் வாங்கறாருன்னு நாங்க எப்படி நினைக்கறது? தவிர, ராத்திரி பணம் வெளியே போகக்கூடாதுங்கறது ஒரு காரணம்,'' என்றார் ராமச்சந்திரன்.

''இதோ பாருங்க, அவங்க இரண்டுபேரும் என்னோட நெருக்கமான சிநேகிதர்கள். இனிமே அவங்க எப்போ கேட்டாலும் கொடுங்க. இந்த சாயங்காலம், ராத்திரிங்கற பத்தாம் பசலித்தனமெல்லாம் இங்கே தேவையில்லை.

தெரிஞ்சுதா? நீங்க இங்கே வேலைதான் செய்யறீங்க, கடைக்குச் சொந்தக்காரங்க மாதிரி நடந்துக்க வேண்டாம்.''

தலையாட்டிவிட்டு நகர்ந்துவிட்டனர் இருவரும்.

அதன் பிறகு இதையே வசதியாக எடுத்துக் கொண்டு, வாரம் ஒரு முறை அல்லது இரண்டு முறை மாற்றி, மாற்றிப் பணம் எடுத்துப் போக ஆரம்பித்தனர், சதீஷும், தீபக்கும். அவர்களிடம் கையெழுத்துக் கேட்டாலும் முறைத்தனர். இதையும் நடராஜ் காதில் போட்டனர். ஆனாலும் அதை அவன் ஒன்றும் சீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை. ''அவங்க கேட்டா கொடுக்கறதுதான் உங்க வேலை!'' என்று சொல்லி விட்டான்.

இவர்கள் அதையும் துர்கா காதில் போட்டுவிட்டனர். ''போகிறவரை போகட்டும். அவன் உணரும் நாள் சீக்கிரமே வரும்!'' என்றாள் அவள்.

அன்று ஆதித்யாவைச் சந்தித்தபோது, அவனிடம் சொல்லி ரொம்ப வருத்தப்பட்டாள். அவனும் இவள் மாதிரியேதான் அபிப்ராயப்பட்டான். ''இப்போது சொன்னால் ஏறாது அவன் மண்டையில். பட்டுத்தான் தெரிஞ்சுக்கப் போறான், பாவம்!'' என்றான்.

நடராஜ், தாங்கள் என்ன பண்ணினாலும் துணை யிருப்பான் என்ற தைரியம் சதீஷ், தீபக் இருவருக் கும் நிறைய வந்துவிடவே, ரொம்பவே ஆட்டம் போட்டனர்.

நடராஜிடம் ஆஷா எப்போது பார்த்தாலும், ''நான் இதைவிட வசதியா வாழ்ந்தவள். என்னவோ எனக்குப்

பணமே போதல்லே!'' என்று பிடுங்கிக் கொண்டே இருந்தாள்.

ஒரு நாள் வீட்டுக்குப் போன நடராஜ் அதிர்ந்து போனான். ஆஷா புசுபுசுவென்று ஒரு நாய்க்குட்டியை வைத்துக் கொண்டு கொஞ்சிக் கொண்டிருந்தாள். அது அவனைப் பார்த்ததும் இவள் கையிலிருந்து குதித்து இவனிடம் வந்து வள் வள் என்று குரைத்தது. இவன் சோபாவில் காலை மேலே வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டான்.

''என்ன நீ, ஆசையா ராம்போ உங்கிட்டே ஓடி வரான், நீ ஏன் இப்படி உட்கார்ந்துட்டே?'' என்று கேட்டாள் ஆஷா.

''என்ன ஆஷா நீ, எங்கிட்டே ஒரு வார்த்தை 'நாய் வாங்கப்போறேன்!'னு சொல்லியிருக்க மாட்டியா? எனக்கு நாய்ன்னா கொஞ்சம் கூடப் பிடிக்காது. பயங்கர அலர்ஜி!'' என்றான்.

''இது நல்லா இருக்கே. எனக்குச் சின்ன வயசிலேருந்து ரொம்ப ஆசை நாய்னா. ஆனா, எங்க அண்ணிக்கு ரொம்ப பயம். அதுனால வாங்க முடியல்லே. என் ஆசையை அப்புறம் எப்ப நான் நிறைவேத்திக்கறது? அதனாலதான் வாங்கினேன். இது ரொம்ப காஸ்ட்லி நாய். வெள்ளை வெளேர்னு எத்தனை அழகா இருக்கு, பாரு. இரண்டு நாள் பழகினா உனக்கும் பிடிச்சுடும்!'' என்றாள் ஆஷா.

''இல்லை, ஆஷா! இதை வாங்கினவங்ககிட்டே திருப்பிக் கொடுத்துடு. என்னால இதோட இருக்க முடியாது.''

''என்னோட இரண்டு கிளப்பிலேயும் எல்லா மெம்பர்ஸும் நாய் வளர்க்கறாங்க.''

இப்போது நடராஜுக்குக் கோபம் வந்து விட்டது. ''எனக்கு பயங்கர அலர்ஜிங்கறேன், நீ என்னவோ சாதாரணமா சொல்றியே? எங்கிட்டே முதலிலேயே கேட்டிருக்கலாம், இல்லையா?''

''ஏன் இந்த வீட்ல எனக்கு உரிமை இல்லையா?'' என்று அவள் ஆரம்பித்ததும், இவனுக்குப் பயமாகி விட்டது. அதோடு தன் ரூமிலே போய்ப் படுத்துக் கொண்டுவிட்டான். முதல் ரூமில் ஒரு அலமாரி பூராவும் நாய்க்கு பிரஷ், அதன் சோப், அதன் பிஸ்கெட், அதன் சாப்பிடும் தட்டு என்று அதன் சாமான்கள்.

''ஆஷா, இதுக்கெல்லாம் ரொம்ப செலவாயிருக் குமே!'' என்றான் நடராஜ்.

''அதுக்கென்ன பண்றது? நாளைக்கு அதை டாக்டர் கிட்டே கூட்டிப் போணும். இதெல்லாம் பெரிய மனு ஷங்க பண்ற வேலைதான். அதனாலதான் வாங்கியிருக் கேன்.

நடராஜுக்குத் தலை சுற்றியது. தீபக்கிற்கு போன் செய்து அழமாட்டாக் குறையாக எல்லாவற்றையும் சொன்னான். ''நாங்கள் கடையிலதான் இருக்கோம், நீ வா!'' என்று சொன்னான் தீபக். இவன் கடைக்கு வரும்போது தீபக், சதீஷ் இருவரும் வைத்தீஸ்வரன், ராமச்சந்திரன் இருவருடனும் பயங்கரமான வாக்கு வாதத்தில் ஈடுபட்டிருந்தார்கள். இவனைக் கண்டதும் தீபக், ''ஏன்டா நடராஜ், இந்தக் கடைக்கு நீ

மொதலாளியா, இல்லை இந்தப் பெரிசுங்களா? நாங்க உன் குளோஸ் பிரண்ட்ஸ்னு தெரிஞ்சும் இப்படி தகராறு பண்ணறாங்களே!'' என்றான்.

''என்னாச்சு?'' என்று நடராஜ் கேட்கும் முன்பே, ராமச்சந்திரன், ''தம்பி, அவங்க என்ன வாங்கிட்டு வந்திருக்காங்க பார்த்தீங்களா? இதை எப்படி உள்ளே விடறது?''

''இதோ பாருங்க, உங்க வேலை என்னவோ அதை மட்டும் பாருங்க, மத்ததிலெல்லாம் வீணா தலையிடா தீங்க!'' என்றான் நடராஜ்.

''தம்பி, அது சாராயப் பாட்டில் தம்பி. நீங்க நாராயண ஐயாவோட பிள்ளை. நீங்க இதையெல்லாம் தொட லாமா? அதுவும் கடைக்குள்ளேயா? வேண்டாம் தம்பி!'' என்றார் வைத்தீஸ்வரன்.

''தம்பி, அதுமட்டுமில்லே. அவங்க ஏதோ நான் வெஜ் சமாசாரங்களையெல்லாம் கொண்டு வந்திருக்காங்க. அதை யெல்லாம் எப்படி நீங்க அந்த ரூம்ல வெச்சு சாப்பிடுவீங்க?''

''ஏன், எங்க வீட்ல நாங்க என்ன நான்வெஜ் சாப் பிடாதவங்களா?'' என்று கேட்டான் நடராஜ்.

''சாப்பிடறதுதான். ஆனா அதில ஒரு நியதி உண்டு, தம்பி! இன்னிக்கு சனிக்கிழமை உங்க வீட்ல எல்லோரும் ஒரு போது இருந்து சாமி கும்பிடற நாள். நீங்களானா...''

''அதையெல்லாம் பத்தி நீங்க கவலைப் பட வேண்டாம்.''

''தம்பி, வேண்டாம், தம்பி! உள்ளே மூணு தலை முறையா உங்க வீட்ல பூஜை பண்ற சாமி படமெல்லாம் இருக்கு, வேணாம்ப்பா!'' என்று அவர் தடுக்க,

''டேய், நட்ராஜ், அவரு உங்கிட்டே கை நீட்டிச் சம்பளம் வாங்கறவரு. அவருக்கென்ன இத்தனை உரிமை? இளுத்து ஒரு அறை விட்டு இரண்டு பேரையும் களுத்தைப் பிடிச்சி வெளியே தள்ளுவியா, அத விட்டுட்டு என்னவோ பேசிக்கிட்டு இருக்கியேடா!'' என்று சதீஷ் ஏத்திவிட, நிஜமாகவே ராமச்சந்திரன் எதிர்பார்க்கவில்லை, அவர் கன்னத்தில் பளீரென்று ஒரு அறை விழுந்தது. நிலை தடுமாறிப் போன அவர், அப்படியே கன்னத்தைப் பிடித்துக் கொண்டு நின்றார். அவருக்கு உச்சந் தலையிலிருந்து வலி தெறித்தது.

வைத்தீஸ்வரன், ''தம்பி நீங்க செஞ்சது கொஞ்சம் கூட நல்லாயில்லை!'' என்று இன்னும் ஏதோ சொல்லும் முன்பு அவரைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினான் நட்ராஜ். இருவரும் தலை குனிந்து வாசல் நோக்கிப் போனார்கள். போகும்முன், ''இதோ பாருங்க, தம்பி! இவங்க இரண்டு பேரும் உங்களைப் பாதாளத் துக்குக் கொண்டு போகன்னே வந்திருக்காங்க. ஜாக் கிரதையாக இருந்துக்குங்க!'' என்றார் வைத்தி.

''டேய் நடராஜ், உங்க அப்பாருகிட்டே போய் வத்தி வைக்கப் போறதுடா, பெரிசுங்க!'' என்றான் சதீஷ்.

''அந்தக் கிழம் என்னை என்ன பண்ணிடும்?'' என்றான் நடராஜ். மூவருமாகக் கச்சேரியை ஆரம்பித் தனர்.

வைத்தியும், ராமச்சந்திரனும் புலம்பிக்கொண்டே தங்கள் வீடுகளை நோக்கி நடந்தனர். போகும் வழியிலேயே, 'இப்போது போன் செய்தால் பெரியவருக்குத் தெரிந்து விடும். காலையிலே துர்காவுக்குப் போன் பண்ணலாம்,' என்று நினைத்துக் கொண்டனர். காலையில் துர்கா விற்குப் போன் செய்து ஒரு கோடி காட்டும்போதே, ''பத்து மணிக்கு ஸ்கூலுக்கு வாங்க,'' என்றாள் அவள்.

36

சரியாக 10 மணிக்கு ஸ்கூலுக்குப் போனார்கள் இரு வரும். அங்கு ஆதியும் இருந்தான். நடந்ததைக் கேட்டு, ''எங்கண்ணனுக்குக் 'கேடு வரும் பின்னே, மதி கெட்டு வரும் முன்னே!' என்பதுபோல் இருக்கு இப்ப நேரம். நீங்க இனிமே கடைக்கு...'' என்று துர்கா இழுக்கும்போது, ''நாங்க போறதாயில்லைம்மா. நாங்க இரண்டு பேரும் உண்மையா உழைக்கிறவங்கன்னு எல்லாக் கடைக் காரர்களுக்கும் தெரியும். வேறே வேலை கிடைக்காமலா போயிடப் போவுது!'' என்றார் ராமச்சந்திரன்.

ஆதி, ''ஒரு நிமிஷம்...'' என்று துர்காவை வெளியே அழைத்துப் போனான். ''துர்கா, பேசாமே இரண்டு பேரையும் இங்கேயே சந்தியாவோட சேர்ந்து ஆபீஸில வேலை பாக்கறதுக்கு வெச்சுக்கலாம். எப்படியும் ஒரு ஆள் வைக்க வேண்டியதுதான். இன்னொருத்தரும் இருந்துட்டுப் போகட்டும். எப்படியும் கடைக்குக் கொஞ்ச நாள் கழித்து இவங்க தேவைப் படுவாங்க அதுவரை

இங்கேயே இருக்கட்டும். நீ என்னம்மா சொல்றே?'' என்று கேட்டான்.

''எனக்கும் சந்தோஷம்தான், ஆதி! அழகா பிரச்னையைத் தீர்த்துட்டீங்க!'' என்றாள் துர்கா. போய் அவர்களிடம் விஷயத்தைச் சொன்னதும் அவர்கள் இருவருக்கும் கண்களில் நீர் நிறைந்துவிட்டது. நன்றி சொல்லி மாளவில்லை, பெரியவர்கள் இருவருக்கும்.

''துர்காம்மா, தம்பி என்னை அடிச்சது பெரிய விஷயமில்லேம்மா. அவரு குழந்தையா இருக்கச்சே அவர் காலால நான் வாங்காத உதையா? பெரிசா அந்தப் பையன்களாலே எதிலயாவது மாட்டிக்கப் போறாரேன்னு தான் கவலையா இருக்கும்மா!'' என்று சொல்லி வருத்தப்பட்டார் ராமச்சந்திரன்.

அன்று இரவு அப்பா சற்று ஓய்வாக உட்கார்ந்திருந்த போது, மெதுவாக விஷயமுழுதையும் சொன்னாள் துர்கா. அதிர்ந்து போனார் நாராயணசாமி. ''ஆரம்பத்திலிருந்தே அவனுக்கு சகவாசம் சரியில்லை. அதனால்தான் அவன் நல்லா படிச்சே முன்னுக்கு வரல்லே. வந்த பொண்ணும் சரியில்லை. பார்க்கலாம், இது எத்தனை தூரம் போகுதுன்னு,'' என்றார்.

கடையில் அந்த இருவரைத் தவிர இன்னும் இருவர் தாம் இருந்தனர். இப்போதே புதுச் சரக்குகள் ஏதும் வரவழைப்பதில்லை. மற்றக் கடைகளுடன் சரக்கு இருப்பில் போட்டி போடமுடியவில்லை. வாடிக்கையாளர்கள் வருவதும் குறைவாகத்தான் இருந்தது. நடராஜுடம் பெரிதாகப் பணமும் சேரவில்லை. ஆஷாவுடைய லேடீஸ் கிளப்பில் எல்லோருமாக குலு, மனாலி எல்லாம் டூர் போகிறோம் என்று ஆளுக்கு

20,000/- என்று முடிவாகி இருக்கிறதென்றும் சொல்லி வாங்கிக் கொண்டு, கைச் செலவிற்கு என்று 20,000/- எடுத்துக் கொண்டு போனாள். தீபக், சதீஷ் அவ்வப் போது 1000/- மும் 2000/- மும்மாகக் கடையிலிருந்து எடுத்துப் போவது வேறு.

ஆக, புதுச் சரக்கு வாங்கும் அளவு பணமெல்லாம் நடராஜிடம் இல்லவே இல்லை. இந்த நிலையில் தீபக்தான் அந்த யோசனையை ஆரம்பித்தான். ''கடைல ஒரு கவர்ச்சியே இல்லை நடராஜ்!'' என்றான்.

''என்ன பண்ணலாம், சொல்லு?'' என்று நடராஜ் கேட்க, ''இரண்டு பெண் விற்பனையாளர்களை நியமிச்சுப் பாரேன், விற்பனை பிச்சுக்கும்!'' என்றான் தீபக்.

''ஆமாம், எனக்கும் இந்த யோசனை முன்னாடியே தோணிச்சு. சொன்னா நீ என்ன நினைக்கிறியோன்னு சொல்லல்லே,'' என்றான் சதீஷ்.

''என்னடா இது? எங்கிட்டே உங்களுக்கு இல்லாத உரிமையா? ஆனா, தகுந்ததா பொண்ணு கிடைக் கணுமே?'' என்றான்.

''கிடைக்கறதென்னா, என் உறவிலேயே இரண்டு பெண்கள் இருக்காங்க. நீ சொன்னியானா கூட்டிகிட்டு வரேன்,'' என்றான் தீபக்.

''இதுக்கு என்னைக் கேக்கணுமாடா? நாளைக்கே கூட்டிவா,'' என்றான் நடராஜ். '' இரு, போன் பண்ண றேன்,'' என்று தீபக் போன் பண்ண, மாடர்னாக லோஹிப்பும், லிப்ஸ்டிக்குமாக இரண்டு பாப் தலைப் பெண்கள் அடுத்த அரை மணியில் அங்கு ஆஜ

ரானார்கள். ஒருத்தி பெயர் ரத்னா, இன்னொருத்தி பெயர் ஷீலா. இருவரும் நடராஜ் கேட்ட கேள்விகளுக்கு ஸ்மார்ட்டாகப் பதில் சொல்லி, அவனை நன்றாகக் குழையடித்து, அன்றைக்கே வேலையில் சேர்ந்து விட்டனர்.

அதிலிருந்து அங்கு தீபக், சதீஷ் இருப்பு அதிகமானது. கடையிலிருந்த இன்னும் இரண்டு விற்பனையாளர் களுக்கும் கூட அறவே அவர்களைப் பார்த்ததும் பிடிக்க வில்லை... அவர்களும் நடுத்தர வயதினர், குடும்பத் தினர். எப்போது பார்த்தாலும் தீபக், சதீஷ் இருவரும் உள்ளே வருவதும், இந்த இருவரும் அவர்களைப் பார்த்து இரு பொருளாகப் பேசுவதும், கோணல் சிரிப்பு சிரிப் பதும் அதிகமாகவே இருந்தது.

சில நாட்களில் ஏதாவது ஒரு புடவையை வாடிக்கை யாளர்களுக்குக் காட்டிவிட்டு, ''எனக்கு இந்தப் புடவை வேணும்னு இருக்கு. ஆனா நான் இதை வாங்கற அளவுக்குப் பணம் படைச்சவளா?'' என்பாள் ஒருத்தி. உடனே அந்த அருமை நண்பர்களில் ஒருவன, ''நீ எடுத்துக்கோ, நான் நடராஜிடம் சொல்லிக் கொள் கிறேன், நம்ம கடைதானே!'' என்பான்.

ஒரு நான்கு நாட்கள் கழித்து இன்னொருத்தி, ''எனக்கு பர்த்டே, புதுப் புடவை வாங்கிக்க முடியல்லே!'' என்பாள். உடனே அவளுக்கும் இதே உபசாரம் நடக்கும்.

வீட்டில் மாதச் செலவு, நாய்ச் செலவு, நண்பர்களின் கை நீளம், எத்தனைக்குத்தான் தாக்குப் பிடிக்கும் இவர்கள் கடை. கிட்டத்தட்ட வாடிக்கையாளர்கள்

வருவதும் நின்றுபோய் விட்டது. ஆஷாவும் பத்து நாட்கள் ஊருக்குப் போய்விட்ட நிலையில், வீட்டிலேயே தண்ணி, சீட்டாட்டம் என்று ஆனந்தமாகப் பொழுதுபோயிற்று. காலையோடு வேலைக்காரி, சமையல்காரி இருவரையும் வீட்டுக்கு அனுப்பிவிடுவான் நடராஜ். நல்ல வேளையாக நாயைத் தன் சிநேகிதி வீட்டில் விட்டுவிட்டாள் ஆஷா. நடராஜ் வீட்டிலேயே படுத்துக் கிடப்பான். நடுவிலேயே ஒருவன் கடைக்குப் போய் அந்த ரூமிலேயே அந்தப் பெண்கள் ஒருத்தியுடன் சல்லாபமாக இருப்பான். ஆஷா மறுநாள் திரும்பப் போகிறாள் என்ற நிலையில், இந்தத் திருவிளையாடல்கள் அலுத்துப் போன நிலையில், சதீஷ் அந்த யோசனையைச் சொன்னான்.

ஸ்கூலுக்கு ஒரு நாள், பின் வீட்டை இவர்களுக்கு நன்கொடையாக அளித்த சாரதி வந்தார்... "வாங்க ஸார்!" என்று துர்கா கை கூப்பி மரியாதையுடன் வரவேற்று நாற்காலியில் அமர வைத்தாள்.

"என்ன ஸார் விசேஷம்? சொல்லி அனுப்பியிருந்தா நானே வந்திருப்பேனே!" என்றாள்.

"ஏம்மா, நான் வரக் கூடாதா உங்க ஸ்கூலுக்கு?"

"என்ன ஸார், நீங்க? நான் அப்படிச் சொல்வேனா? இந்த ஸ்கூல் இன்னிக்கு நல்லபடியா நடக்கவே நீங்கதானே காரணம்!" என்றாள்.

"அதென்னமா பெரிய காரியம்? அந்த முதியோர் ஸ்கூலைப் பார்த்துக்கிட்டேதான் மாடி பால்கனியில் உட்கார்ந்திருப்பேன். அதனாலே, இந்தக் குழந்தைகளைப் பார்க்காமதான் கஷ்டமா இருக்கு."

''ஸார், நான் ஒண்ணு சொன்னா தப்பா இருந்தா கோவிச்சுக்க மாட்டீங்களே?''

''இதென்னமா தயக்கம்? நீ என்ன தப்பா சொல்லிடப்போறே? சொல்லு, பிடிச்சா கேட்டுக்கப்போறேன். அவ்வளவுதானே!'' என்றார்.

''ஸார், நீங்க காலேஜ் ப்ரொபஸராக இருந்து ரிடையர் ஆனவங்க. அறிவாளி. உங்ககிட்டேயிருந்து கொண்டு வந்த புஸ்தகங்களையெல்லாம் லைப்ரரியில் பிரதானமா வெச்சுருக்கோம். நீங்க அந்தப் புஸ்தகங்களை நிறைய வாட்டி படிச்சிருப்பீங்க. எங்க ஸ்கூல் குழந்தைகளுக்கு வாரம் ஒரு பிரியட் நீதி போதனை வகுப்பு வைக்கலாம்னு பார்க்கிறோம். நீங்க ஏன் அந்த வகுப்பை எடுக்கக்கூடாது? இப்ப நீங்க தங்கியிருக்கிற பசுமலையிலிருந்து வந்துட்டுப் போனாலும் சரி, இல்லை சத்யபாமா பிளாக், அதுதான் நீங்க கொடுத்திருக்கிற வீட்டோட பெயர், அங்கேயே தங்கினாலும் சரி,'' என்றாள்.

''எனக்கு ரொம்ப மகிழ்ச்சிதாம்மா. ஆனா, ரொம்ப தொடர்ச்சியா வகுப்பு எடுக்க முடியுமான்னு தெரியல்லையேம்மா!'' என்றார்.

''இல்லையில்ல. இங்கே 12 வகுப்புகள் இருக்கு, இல்லையா? இதிலே சில கிளாசுக்குத்தான் 4 செக்ஷன் இருக்கு. 6ஆம் கிளாசுக்கு அப்புறம் இரண்டு இரண்டு செக்ஷன்தான். அதனால உங்களுக்கு ஒரு நாளைக்கு ஒண்ணு அல்லது இரண்டு கிளாசுக்கு மேல் வராது. இரண்டு, மூணு கிளாஸை சேர்த்துக்கூட ஒண்ணா எடுக்கலாம்... உங்களுக்கு விருப்பமானா, செய்யுங்க.

குழந்தைகளோட இருக்கப் பிடிக்கும்னு சொன்னீங்களே!'' என்றாள்.

''கண்டிப்பா எனக்கு இந்த ஆலோசனை பிடிச்சிருக்கம்மா!'' என்று பெரியவர் சொல்ல, ''உங்க படுக்கை அறை, மாடியிலே அப்படியே இருக்கு. அதை ஏ.சி. வேறே பண்ணியிருக்கீங்க. உங்க மனைவியோட படத்தைப் பெரிசா மாட்டியிருக்கீங்க. அதனால அதை மட்டும் அப்படியே பூட்டி வெச்சுருக்கேன். இப்போ நீங்க அதிலே ஓய்வு எடுத்துக்கலாம். வந்துடுங்க ஸார். குழந்தைகளுக்கென, எங்களுக்கே உங்க நீதி போதனை வகுப்புக்கள் தேவைதான்!'' என்றாள்.

''சரிம்மா, நான் நாளையிலிருந்து வந்துடறேன். நீ நல்லா இருப்பேம்மா. ஸ்கூலும் உன்னாலே நல்லா வரும்!'' என்று வாழ்த்தி விடை பெற்றார். ஆதித்யா, நாராயணசாமி முதலியவர்களின் சந்தோஷம் அளவு கடந்திருந்தது. விஷயம் கேள்விப்பட்ட ஆதித்யாவின் பெற்றோரும் மிகவும் பாராட்டினார்கள்.

சதீஷ் சொன்ன யோசனையைக் கேட்டு முதலில் அதிர்ந்துபோனான் நடராஜ். ஆம், அவன் நடராஜுக்கு முற்றிலும் பழக்கமில்லாத ஒரு விஷயத்தைப் பற்றிச் சொன்னான். ''இந்த பழைய ஜவுளிக் கடையைக் கட்டிக்கிட்டு இன்னும் எத்தனை நாளைக்குடா அழப்போறே? நான் வேறெ ஒரு யோசனை வெச்சுருக்கேன்டா, முயற்சி பண்ணிப் பார்க்கலாமே!'' என்றான் சதீஷ்.

''சொல்லுடா.''

''பேசாமே இந்தத் துணிக்கடையை வித்துட்டு பணத்தை எடுத்துகிட்டு சென்னைக்குப் போயிடலாம்.''

''போயி?''

''போயி சினிமா எடுக்கலாம்.''

''அடப்பாவி, இதுதான் உன் ஐடியாவா? நமக்கெல்லாம் சினிமா எடுக்கறதப் பத்தி என்ன தெரியும்?''

''நாம் போய் ஒரு நல்ல டைரக்டராகப் பார்த்து படம் எடுக்கச் சொல்லிட்டு நிச்சிந்தையா இருக்க வேண்டியது தான். அந்த டைரக்டர் கையில தான் இருக்கு எல்லா விஷயமும்.''

''ஆனா, இந்தக் கடையை விக்கறதெல்லாம் நான் பண்ண முடியாது. இது தலைமுறை தலைமுறையாய் வர சொத்து.''

''அப்ப, உங்கப்பாவைப் போய் பணம் கேளு. நேரடியாக் கேளு. பிஸினஸ் பண்ணணும்னு.''

''டேய், அதெல்லாம் தர மாட்டார். அப்படியே தந்தாலும் எவ்வளவுடா கொடுத்துடுவார்?''

''டேய் ஒரு 5, 6 லட்சம் கொடுத்தாக்கூட அதை வெச்சு முதல்ல வேலையை ஆரம்பிக்கலாம். அதுக் கப்புறம் எடுத்தவரை டிஸ்ட்ரிப்யூட்டிர்ஸுக்குப் போட்டுக் காண்பிச்சு மேல் கொண்டு பணம் வாங்கிக்கலாம்,'' என்றான் தீபக்.

''பரவாயில்லையே. உனக்குக் கொஞ்சம் விவரம் தெரிஞ்சிருக்கே! ஆனா, பணம் எப்படிப் புரட்டற துன்னுதான் தெரியல்லே.''

''ஓசைப்படாமே இந்தக் கடையை வித்துடு. உங் கப்பாவுக்குத் தெரியும்போது தெரியட்டும்.''

''அதுவும் சரிதான். எப்படி விக்கலாம்னு யோசிப் போம்டா. நீங்க இரண்டுபேரும்கூட யோசிங்கடா!'' என்றான் நடராஜ்.

37

அன்றைய மஹாசபை அதோடு கலைந்தது. ஆனால் அங்கு நடந்த பேச்சுக்கள் அனைத்தும் துர்காவின் செவிகளுக்கு எட்டிவிட்டது. நடராஜும் நண்பர்களும் பேசியது ராத்திரி. அந்த நேரம் ரத்னா, ஷோபா இருவரும் புறப்பட்டுப் போய்விட்டார்கள். இவர்கள் தண்ணி பார்ட்டிக்கு சைட் டிஷ் வாங்கப் போயிருந்த ஆள் திரும்பி வந்தான். இவர்கள் பேசிக் கொண் டிருக்கும்போது நடுவில் உள்ளே நுழையக்கூடாது என்று வெளியே நின்றான். பேசிக் கொண்டிருக்கும் போது நுழைந்தால் திட்டுவிழுமே என்ற பயம்தான். அவர்கள் பேசிக் கொண்டிருந்ததெல்லாம் தெளிவாக அவன் காதுகளில் விழுந்தது... இப்போதுதான் வேலை ஒன்று கிடைத்திருக்கிறது என்று நிம்மதியாக இருந்த அவனுக்குப் பயம் பிடித்துக் கொண்டது. வெளியே வந்தவன் கடையின் இன்னொரு விற்பனையாளரிடம் சொன்னான். ''இந்தச் செய்தி சரியில்லே, நீ கண்டுக் காதே!'' என்ற அவன் சரியாகத் துர்காவிற்கு போன் செய்து முழு விஷயத்தையும் சொல்லிவிட்டான்.

மறுநாள் ஆதி வந்தபோது, அப்பா அம்மாவையும் உட்கார வைத்து இங்கும் ஒரு மகாநாடு நடந்தது...

ஆதித்யா, ''இதை எங்கிட்டே விட்டுடுங்க. நான் கொஞ்சம் யோசிக்கணும். நாளைக்குச் சொல்றேன் நல்ல முடிவா, எங்க அப்பாவையும் கலந்துகிட்டு,'' என்றான்.

''ஆதி, நீங்க சொல்லிட்டீங்கன்னா கவலை இல்லை தான்... ஆனாலும் அப்பா புலம்பிக்கிட்டே இருப்பாரே!'' என்றாள் துர்கா.

''இல்லை துர்கா, எந்தப் பிரச்னைக்கும் தீர்வு உண்டு. யோசிச்சா கிடைக்கும். மாமா, நீங்க கவலைப்படாமே இருங்க!'' என்றான் ஆதி.

பள்ளிக் கூடத்தில் வழக்கம் போலத்தான் நாள் கழிந்தது... ஆனாலும் துர்காவிற்கு எதிலும் கவனம் ஒட்டவில்லை. சீக்கிரமே ஆதியிடம் வந்து, ''போக லாமா, ஆதி! எனக்குத் தலையை வலிக்கிறது!'' என்றாள்.

''நீ ரொம்ப கவலைப் படறே. நான்தான் தீர்வு கண்டுபிடிச்சிட்டேனில்லே. நிம்மதியா இரு.''

''தீர்வு கண்டுபிடிச்சிட்டீங்களா? என்னங்க அது?''

அவன் சொன்னதும், ''சபாஷ், ஆதி! ஆனா நீங்க எத்தனை உதவி எப்படியெல்லாம் செய்வீங்க. எனக்கு அதுதான் சங்கடமா இருக்கு!'' என்றாள்.

''அது சரி. உழைக்காமே உன்னை மாதிரி ஒரு தேவதையை எப்படிக் கல்யாணம் பண்ணிக்கறது?''

மறுநாளைக்கு மறு நாள் காலை பேப்பரைப் பிரித்த தீபக்கிற்கு ஒரு இனிய ஆச்சரியம். ''டேய், டேய் சதீஷ்! நாம எதிர்பார்க்காத ஒரு அதிர்ஷ்டம் அடிக்கப் போவுதுடா!'' என்று பெரிதாகக் குரல் கொடுத்தான்.

''என்னடா, ஏதாவது ஜாக்பாட்டா?''

''இங்கே பாருடா'' என்று அந்த விளம்பரத்தைக் காண்பித்தான் தீபக்.

அந்த விளம்பரம் : ''மதுரையில் நல்ல இடத்தில் நடந்து கொண்டிருக்கும் ஒரு ஜவுளிக் கடை தேவை. விற்பனைக்கோ அல்லது லீஸுக்கோ வாங்கிக் கொள்ளப்படும். மற்ற விவரங்களுக்கு இந்த செல் நெம்பரைத் தொடர்பு கொள்ளவும்!'' என்று ஒரு செல் போன் நம்பர் கொடுக்கப்பட்டிருந்தது.

''டேய், இத நடராஜிடம் சொல்லணும்டா. விக்க முடியாதுன்னான், ஆனா லீஸுக்கு விடலாம், இல்லையா?'' என்று பேசிக்கொண்டவர்கள், உடனேயே நடராஜோடு தொடர்பு கொண்டனர். விவரம் தெரிந்து கொண்ட நடராஜ் உடனேயே போன் பண்ணினான் அந்த செல் நம்பருக்கு. ஆதித்யா தன் சிநேகிதர் ஒருவரின் நம்பரைக் கொடுத்து அவரையே பேசச்சொல்லியிருந்தான். இருவரும் கடையிலேயே உட்கார்ந்து பேசலாம் என்று நடராஜ் சொல்ல அதை அந்த நண்பரும் ஒத்துக் கொண்டு கடைக்குப் போய்ப் பார்த்தார். நடராஜுடன், தீபக், சதீஷ் இருவரும் உடன் இருந்தனர்.

அந்த நண்பரின் பெயர் சந்திரசேகர். அவர் பேசிய ஒவ்வொரு வாக்கியத்திற்கும் தீபக்கோ, சதீஷோ பதில் சொல்லும்போதெல்லாம் அவருக்கு எரிச்சலாக இருந்தது. ஆனால் ஆதித்யா, 'கடை யார் கைக்கும் போய்விடக் கூடாது, நீங்கள் ஆத்திரப்படாமல் காரியத்தை முடித்துக் கொண்டுதான் வர வேண்டும்!'' என்று கேட்டுக் கொண்டிருந்ததால், அவர் கஷ்டப்பட்டுப் பொறுமை காத்தார்.

''நான் நான்கு லட்சம்தான் தருவேன். கடைன்னு பேர்தான் இருக்கு. சரக்குகளையே ரொம்பக் காணோம்!'' என்றார் சந்திரசேகர்.

''அப்படியில்லை சார், கடை எத்தனை சென்டரான இடத்தில் இருக்கு பார்த்தீங்களா? அந்த மாதிரி இடத்துக்கு நீங்க தரதாச் சொல்ற பணம் கால் பங்கு கூட இல்லை!'' என்று இவர்கள் பிடிவாதம் பிடிக்க, கடைசியில் ரூபாய் 12 லட்சத்தில் வந்து நின்றது. போன் செய்து ஆதியிடம் கேட்டுத்தான் அதையும் சொன்னார் சந்திர சேகர்.

மறுநாள் பேப்பர்ஸை கையெழுத்துச் செய்துவிடலாம் என்று பேசிக்கொண்டு பிரிந்தார்கள்.

ஆஷாவிடம் போய் நடராஜ் சொன்னபோது, அவள் ரொம்பவே சந்தோஷப்பட்டாள். ''முதல்ல ஜவுளிக்கடை ஓனர்ன்னு என் வீட்டுக்காரரை என் சிநேகிதிகள் கிட்டே சொல்ல வேண்டாம்... அடுத்து, எனக்குச் செலவுக்கு ஒரு பெரிய தொகை கிடைச்சிருக்கு. வேறென்ன வேணும்?'' என்றாள்.

நடராஜுவிற்குத்தான் ஒரு மாதிரி வருத்தமாக இருந்தது. சின்ன வயசிலிருந்து அவனை அப்பா அங்கே கூட்டிப் போவார். முதலாளியின் பிள்ளை என்று எல்லோரும் கொஞ்சுவார்கள். அங்கு வைத்துத்தான் அப்பா அவனுக்கு நிறைய காமிக்ஸ், தின்பண்டங்கள் எல்லாம் வாங்கிக் கொடுத்திருக்கிறார். ரூம்குள்ளேயே சாப்பிட்டுவிட்டுக் கையை ஈரத்துணியில் துடைத்துக் கொள்ளச் சொல்லுவார். ஆனால் அவனுக்கு அந்தக் கடையை நடத்துவதில் ஆர்வம் இருந்ததே இல்லை.

சரி, இப்போது ஆஷாவைச் சமாளிக்கணும் என்று நினைத்தவன் அவளிடம், ''ஆஷா, நான் சென்னை போய் ஒரு பிஸினஸ் செட்டப் பண்ணலாம்னு இருக்கேன்,'' என்றான்.

''ஐயோ, நான் இப்பத்தான் என் ஆக்டிவிட்டீஸ் எல்லாத்திலேயும் பிரபலமாகிகிட்டு வரேன். இப்போ வேறே ஊருக்குப் போறது கஷ்டம், ராஜ்!'' என்றாள் மடியிலிருந்த நாய்க்குட்டியைத் தடவிக் கொடுத்த படியே.

உள்ளூர எழுந்த ஆனந்ததத்தை மறைத்தபடி, ''இல்லை, நீ வரலேன்னா நானும் போகல்லே!'' என்றான்.

''கொஞ்ச நாள் நீ போய் நல்லா செட்டில் ஆயிட்டு என்னைக் கூப்பிடு. ஒரு நல்ல லட்சியத்துக்காக கொஞ்ச நாள் பிரிஞ்சிருந்தா தப்பில்லை. அது சரி, உனக்கு என்ன பிஸினஸ் பண்ணி அனுபவம் இருக்கு? என்ன பண்ணப் போறே?''

''பணம் நிறைய கொட்டற தொழில்தான். சினிமா எடுக்கப் போறேன்.''

''ஆனா, உனக்கு அதைப் பத்தி ஒண்ணுமே தெரி யாதே, ராஜ்.''

''அதுக்காகத்தான் அனுபவம் உள்ள நண்பர்களை யெல்லாம் கூட வெச்சுப்பேன். ஆனா, நீ இங்கே தனியா இருப்பியா, ஆஷாக் கண்ணு?''

''கொஞ்ச நாள் நம்ம முன்னேற்றத்துக்காக இதை யெல்லாம் சகிச்சுக்கணும். நாம திரும்பச் சேர்ந்தப்புறம்

தான் சின்ன ஆஷாவோ, இல்லை சின்ன ராஜோ, இல்லையா?''

''நான் உன்பேர்ல இரண்டு லட்சம் போட்டுட்டுப் போறேன். பார்த்துப் பத்திரமா இருந்துக்கோ.''

''எங்கே தங்குவே, ராஜ்?''

''முதலில் கொஞ்ச நாள் யாராவது சிநேகிதன் வீட்டிலேயோ, இல்லை ஏதாவது லாட்ஜிலேயோதான் தங்கிக்கணும்.''

''நான் கிளப்பில செக்ரடரி ஆனதிலேர்ந்து உன்னை சரியா கவனிக்கல்லியா, ராஜ்? கோபமா?''

''நீ இந்த சிட்டிலே முக்கியமான பெண்ணானா எனக்குப் பெருமைதான், டார்லிங்.''

இருவருக்குமே பிரிய வேண்டும் என்றதும், மேகம் மறைத்திருந்த வெண்ணிலவு வெளியே வந்ததுபோல, சற்று மங்கியிருந்த அன்பு திரும்ப வெள்ளமாகப் பாய்ந்தது.

தீபக்கும் சதீஷும், ''நாங்க போய்ச் சென்னையில் நம்ப தங்கறதுக்கு, இன்னும் மற்ற ஏற்பாடுகளையெல்லாம பார்க்கறோம்,'' என்று இவனிடம் கணிசமாகப் பணம் வாங்கிக் கொண்டு சென்னை போய்விட்டனர்.

''டேய் சதீஷ், இப்போ அந்த அசடு கொடுத்த பணத்தை எடுத்துகிட்டு மும்பை, கோவான்னு எங்கே யாவது போயிடலாமா?'' என்றான் தீபக்.

''டேய், இதுதான் பைத்தியக்காரத்தனம் என்கிறது. இதைப் போலவே இன்னும் 10 பங்கு எடுத்துகிட்டு

இந்தியாவை விட்டுப் போயிடறதுக்கே நல்ல சந்தர்ப்பம் வரப்போகுது. நீ லூசாட்டம் பேசாதே! இன்னும் கொஞ்ச நாள் அந்த மடையனோட ஜால்ராவாக இருந்துதான் ஆகணும்!'' என்றான்.

38

ஊருக்குக் கிளம்புமுன் டோனியைப் பார்க்கப் போயிருந்தான் நடராஜ். இப்போதெல்லாம் டோனியைச் சந்திப்பது எப்பவோ ஒரு முறைதான். அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. நடுவில் ஒன்றிரண்டு முறை டோனி இவனைச் சந்தித்தபோது, ''நீ செஞ்சது தப்புடா, நட்ராஜ். வீட்டைவிட்டு நீ வந்திருக்கக்கூடாது. அது மட்டுமில்லை. இந்த தீபக், சதீஷ் இரண்டுபேரும் சரியில்லைடா. அவங்களுக்கு இவ்வளவு இடம் கொடுக்காதே!'' என்று சொன்னான். அழஅழச்சொல்லும் தன் மனிதர்களைப் பிடிக்காமல்தானே போகும். டோனியிடம், ''நீ இதில் எல்லாம் தலையிடாதே!'' என்று சுற்றிவளைத்த தினுசில் சொல்லிவிட்டு, தான் அவன் கடைக்குப் போவதையும் நிறுத்திவிட்டான். ஆஷா விடமும் ஒரு சிநேகிதனாகப் பழகியவன்தானே டோனி. அவளிடமும், ''இப்படியெல்லாம் செலவுசெய் யாதே, ரொம்ப நாள் நீடிக்காது!'' என்று சொல்லப் போக, அவளும் டோனியைத் தவிர்க்க ஆரம்பித்தாள். ஆனாலும் ஊருக்குப் போகும் முன் ஒரு முறை அவனைப் பார்க்கணும் என்று நடராஜ் அவன் கடைக்குப் போயிருந்தான்... விவரமெல்லாம் அரைகுறையாகத்

தான் சொன்னான். ஆனாலும் அதற்கே அதிர்ந்து போன டோனி, '' என்னடா, நீ! தப்புக்கு மேலே தப்பா செய்து கிட்டுப் போறே!'' என்றான்.

இவன் எரிச்சல் பட்டுக் கொண்டு திரும்பிவிட்டான். அதன்பிறகு அவன் ஆஷாவிற்குப் போன் செய்தான். அவள்தான் தன் புருஷன் ஒரு பெரிய சினிமா தயாரிப் பாளராகப் போகிறார் என்ற களிப்பில் இருந்தாளே, அவள் நடராஜை ஆதரித்துத்தான் பேசினாள். நடராஜ் துர்காவிடமும் பேசினான். அவள் அவனை வீட்டுக்கு வா என்று கூப்பிட்டாள்.

''இல்லை துர்கா, துணிக்கடையை யார் கையிலோ கொடுத்துவிட்டு, அப்பாவைப் பார்க்க எனக்குத் தைரியமில்லை!'' என்றவன், ''நீ அம்மாவைக் கூட்டிட்டு என் வீட்டிற்கு வாயேன்,'' என்றான்.

சரி என்று அவன் வீட்டிற்குப் போனாள். வீட்டையும் வேலைக்காரர்களையும், ஆடம்பரத்தையும் பார்த்த அவள், இதெல்லாம் எத்தனை நாட்கள் தாக்குப்பிடிக்கும் என்று நினைத்துக் கொண்டாள்.

ஆஷாவிற்கு அவளுடைய பெரிய மனித வாழ்க் கையை, நன்றாக வாழத்தெரியாத (!) நாத்தனாரிடமும், மாமியாரிடமும் காண்பித்துக் கொள்ள ரொம்ப பெருமை யாகவும், சந்தோஷமாகவும் இருந்தது.

ஆனால் வெளியே போயிருந்த நடராஜ் வந்து துர்கா அவனுக்கு, 'நீ பண்ணப் போறது சரியா வர வாய்ப்பு ரொம்ப குறைச்சல்!' என்று புத்தி சொல்லும் வரைதான் நீடித்தது. அதன் பிறகு அவர்கள் இருவரிடமும் முகமே கொடுக்கவில்லை, நடராஜ். ''இல்லை துர்கா! என்

நண்பர்களுக்கு எல்லாம் தெரிந்திருக்கிறது. அதனால் கண்டிப்பாக நான் ஜெயிப்பேன்!'' என்றான்.

''ஜவுளிக் கடை நஷ்டமடைந்த போது கூட இருந்த அதே நண்பர்கள்தானே?'' என்று அவள் கேட்டபோது, ''அதற்கென்ன செய்ய முடியும்? எல்லாம் என் அதிர்ஷ்டம்!'' என்றான் நடராஜ்.

''அதிர்ஷ்டத்தைவிட சகவாசம் சரியாக இல்லாமே போனாத்தான் நஷ்டம் வரும்!'' என்று துர்கா சொல்ல, ஆஷாவிற்கு ரொம்பக் கோபம் வந்துவிட்டது. ''என்ன, அபசகுனமாப் பேசறதுக்குன்னே அங்கேயிருந்து வந்தீங்களா? கூடப்பொறந்தவர் உருப்படக்கூடாதுங்கறது தானே உங்க எண்ணம்? அவரு அப்படி இருந்தாத்தானே உங்க கொடி பறக்கும். அதுக்குத்தானே இந்தப் பேச்சு?'' என்றாள் ஆவேசமாக.

கிளம்பிவிட்டார்கள் தனமும், துர்காவும். வாசல் வரை வந்த நடராஜிடம், ''பார்த்து ஜாக்கிரதையாக இருந்துக் கோப்பா. உலகம் ரொம்ப பொல்லாதது. மதுரையாவது கொஞ்சம் சின்ன ஊர். சென்னையைப் பத்தி என்னென்னவோ கேள்விப்பட்டிருக்கேன். பத்திரம்பா. அவளையும் பத்திரமாக இருக்கச் சொல்லிவிட்டுப் போ!'' என்று கண்களில் நீர் அருவியாகக் கொட்டச் சொல்லி விட்டுத்தான் காரில் ஏறினாள் தனம்.

ஆயிற்று. நடராஜ் ஊருக்குப் போக வேண்டிய நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. ஆஷாவும் அவனும் பழையபடி காதல் பறவைகளாகச் சிறகடித்துப் பறந்தார்கள். வரப்போகும் பிரிவு அன்பை வளர்க்க, ''சீக்கிரமே

சென்னையில செட்டில் ஆகிட்டு என்னைச் சட்டுன்னு கூட்டிக்கோ ராஜ்!'' என்றாள் ஆஷா.

''ஆமாம், ஆஷா! என்னாலேயும் உன்னை விட்டுப் பிரிந்து ரொம்ப நாள் இருக்க முடியாது!'' என்றான்.

''பேசாமே நானும் உன் கூடவே வந்துடட்டுமா?''

''வேண்டாம் கண்ணம்மா! நீ சௌகரியமா பழகின இடத்திலேயே இரு. நீ சொல்றமாதிரி சீக்கிரமே நான் செட்டிலாயிட்டு உன்னைக் கூட்டிக்கறேன்,'' என்றான். அவன் என்னதான் தீபக்கையும் சதீஷையும் விட்டுக் கொடுக்காமல் மற்றவர்களிடம் பேசினாலும் ஆஷாவை அவர்களிடமெல்லாம் பழகவிடும் அளவுக்கு அவர்கள் மேல் நல்ல அபிப்ராயம் இல்லை...

சென்னை புறப்பட்டான் நடராஜ்.

''துர்கா, நான் நாளைக்குப் போய் ஜவுளிக்கடையை ஒரு விசிட் பார்த்துட்டு வரலாம்னு இருக்கேன். காலைல செய்ய வேண்டிய வேலைகளை எல்லாம், முக்கியமா ஏதாவது இருந்தா, வசுந்தரா மேடம் கிட்டே சொல்லிடு,'' என்றான் ஆதி.

''ஒரு விசிட் என்ன, இனிமே அங்கேயும் தினம் போகத்தான் வேணும். சரி, நாளை கடையைப் பார்க்க அப்பா அம்மாவையும் கூட்டிகிட்டுப் போகலாமா?'' என்றாள் துர்கா.

''வேண்டாம் துர்கா. நம்ம இரண்டு பேரோட அப்பா, அம்மாவுமே வேண்டாம். கடை எந்த நிலைல இருக்கோ என்னவோ. உங்கப்பாவும் கடைக்குப் போய்க் கொஞ்ச நாளாச்சே. அதனால்தான் சொல்றேன்,'' என்றான்.

இவர்கள் இருவரும் கடைக்குப் போய் நுழைந்ததுமே அதிர்ச்சி. ஓரளவு நிலைமை எப்படியிருக்கும் என்று ஊகித்திருந்த இவர்களுக்கே தாங்கவில்லை. எல்லாக் கண்ணாடி கேஸ்களும் அநேகமாகக் காலி. பல்பு போனவை போனபடி. வேலைக்கிருந்த அந்த இரண்டு பெண்களையும் சதீஷும், தீபக்கும். ''நீங்க வேலையை விட்டுப் போயிடுங்க. நாங்க சினிமா எடுக்கச் சென்னை போறோம். எப்பவாவது தேவைப்பட்டால் கூப்பிட றோம். இனிமே இங்கே புது முதலாளி வருவார். வம் பாயிடும். நீங்க போயிடுங்க!'' என்று சொல்லவும் அவர்கள் இருவரும் கிளம்பி விட்டனர்.

ஆதித்யா, துர்கா இருவருக்கும் கடையின் நிலைமை வயிற்றெரிச்சலாக இருந்தது என்றால், ஆபீஸ் ரூமைத் திறந்து பார்த்தால், ஆத்திரமும், கோபமுமாய்ப் பொங்கிப் பொங்கி வந்தது இருவருக்குமாய்.

ரூம் முழுவதும் ஒரே ஒட்டடை. சாமி படங்கள் துடைக் காமல் முழம் புழுதியும், வாடிப்போன பூவுமாய், சிகரெட் பிட்டுகளுமாய் கன்ராவியாக இருந்தது... எல்லாவற் றையும் விட மோசம் அங்கு வந்த கெட்ட வாடை. ஒரு மாதிரி சிகரெட், நான்-வெஜ், விஸ்கி எல்லாம் கலந்த வாடை... உடைந்த கண்ணாடி வளைத் துண்டுகள், புடவையிலிருந்து உதிர்ந்த ஜிகினாத் தூள்கள். ''சீச்சீ! என்ன அநியாயம்!'' என்று துர்கா வெறுத்துப் போனாள்.

''இதெல்லாம் உருப்படாத சகவாசத்தால் வந்த விளைவுகள். சின்ன வயசிலிருந்தே அவன் நல்ல சக வாசத்தில் இருந்திருந்தால் இப்படி ஆகியிருக்க மாட்டான்!'' என்றான் ஆதித்யா.

''சரி, இப்ப நாம ஒரு ப்ரோக்ராம் போட்டுப்போம்,'' என்று சொல்லி இருவரும் வெளியே வந்து உட்கார்ந் தனர்... கடைப் பையனைக் கூப்பிட்டுக் கடை மொத் தத்தையும் துளி தூசு இல்லாமல் துடைத்து, ஆபீஸ் ரூமையும் கண்ணாடி மாதிரிச் சுத்தப்படுத்தணும் நீ!'' என்றனர்... அவன் அந்த அறையைச் சுத்தப்படுத்த ஒரு மணிநேரம் பிடித்தது... அதன் பிறகு அங்கு ஊதுபத்தி, கற்பூரம் கொளுத்தி, பூமாலை போட்டு, தேங்காய் பழம் நைவேத்தியம் செய்து விட்டுத்தான் கிளம்பினர்.

வண்டியில் போகும்போது, ''இப்போ இந்தக் கடையை எப்படிச் சரி செய்யப் போகிறோம், ஆதி?'' என்று அழமாட்டாக் குறையுடன் கேட்டாள் துர்கா.

''துர்கா, என்னம்மா நீ! எத்தனை விவரமானவள்... முதல் முதலில் நாம ஸ்கூலுக்குப் போன போதும் நீ இப்படித்தான் கவலைப் பட்டே, நினைவிருக்கா?'' என்றான் ஆதி. ''அது இன்னிக்கு நல்ல நிலைமைக்கு வரலியா? அதுபோல் இதுவும் என் துர்காவோட சாமர்த்தியத்தினால் முன்னுக்கு வந்துடும், சரியா?''

''திரும்பப் பணம் வேணும், ஆதி.''

''இதோ பார்! ஸ்கூலுக்குப் பணம் நாம எதிர்பாராத இடங்களிலிருந்தெல்லாம் வந்து நம்மை சந்தோஷப் படுத்தலியா? அதனால எங்கப்பா தரேன்னு சொன்ன பணத்தை நான் வாங்கிக்கல்லே. இப்போ லீசுக்குக் கொடுத்த பணத்தோட, இன்னும் கொஞ்சப் பணமும் அவர் எடுத்து வெச்சுருக்கார்... அதை வெச்சு, நாம இரண்டு பேருமா இந்தக் கடையை முன்னுக்குக் கொண்டு வந்துடுவோம்!'' என்றான் ஆதி.

''எனக்குக் கல்யாணத்துக்குன்னு அப்பா வெச்சுருக்கிற பணத்தைத் தரச் சொல்றேன். ப்ளீஸ், ஆதி! அதை மறுக்காமே எடுத்துக்குங்க!'' என்று கைகூப்பிக் கெஞ்சினாள் துர்கா. அப்போது அவர்கள் காரில் போய்க் கொண்டிருந்தார்கள். அவ்வளவாக நடமாட்டமில்லாத ரோட். ஆதி காரை ஒரு ஓரமாக நிறுத்தினான். அவளுடைய கூப்பிய கரங்கள் இரண்டையும் எடுத்துத் தன் மார்பில் வைத்துக் கொண்டான்.

''என்ன கண்ணம்மா பேச்சு இது? நீ என் ராணி இல்லையா? இதென்ன கைகூப்பல்? உன் ஆதியில்லையா நான்? உனக்காக நான் எது வேணுமானாலும் செய்வேன்டா!'' என்றான்.

துர்கா அவன் நெஞ்சில் தன் கைகள் பட்டபோது, இதுவரை அவள் அனுபவத்திராத ஆனந்தபரவசத்தை உணர்ந்தாள். எத்தனை பேரோடு பழகுகிறோம், எத்தனை பேரோடு கண்டிப்பாக இருக்கிறோம். இவன் ஒரு கண்ணம்மா சொன்னதும் நமக்குள் ஒரு சூடு பரவி என்னென்னவோ ஆகிறதே! எதனால் இது? இது காதல் கொண்ட நெஞ்சத்தினால் ஏற்படும் மாயமா? அவளுக்கே இது அதிசயம்தான்.

அவள் தலையைக் குனிந்து யோசித்துக் கொண்டிருக்க, அவள் முகவாயைப் பிடித்து நிமிர்த்தினான் ஆதி.

''என்னால்தானே உங்களுக்கு இத்தனை பிரச்னைகள்?'' அவள் முகத்தைப் பிடித்து நிமிர்த்திச் சிரித்தவன் அவள் நெற்றியில் முத்தமிட்டான். ''அந்தக் காலத்தில காளையை அடக்கி, இல்லை, மல்யுத்தத்தில

ஜெயிச்சின்னு எல்லாம் பிடிச்ச பொண்ணுங்களைக் கல்யாணம் பண்ணிக்க கஷ்டப்படல்லியா? இப்போ நான் உருப்படியா ஒரு காரியம் பண்ணிட்டு கல்யாணம் பண்ணிக்கப்போறேன்!'' என்றான்.

''அப்படி என்ன நான் ஸ்பெஷல்?''

''அது என் நெஞ்சுக்குத்தானே தெரியும்? சமயம் வரும்போது விவரமா எடுத்துரைக்கிறேன், அம்மையாரே! இப்போது ரதத்தைச் செலுத்தலாமா?'' என்றான். அவள் அவன் புஜத்தில் ஒரு கிள்ளுக் கிள்ளினாள்.

''நான் உனக்கு ஒரு முத்தம் கொடுத்தாக்க, நீ என்னைக் கிள்ளுவியா, ராட்சசி, ராட்சசி!'' என்றபடி வண்டியைச் செலுத்தினான்.

தினம் காலையில் அப்பா கடைக்குப் போவதென்றும், துர்காவை ஸ்கூலில் விட்டுவிட்டு ஒரு மணி நேரம் இருந்துவிட்டுக் கடைக்குப் போய் மாமாவை வீட்டுக்கு அனுப்புவதென்றும் முடிவு செய்துகொண்டார்கள்.

''புதுப் புடவைகள், மற்ற ஜவுளிகள் தருவிக்கணுமே, ஆதி!''

''திரும்பப் பணம் பற்றிப் பேச வேண்டாம், துர்கா. ப்ளீஸ்! எங்கப்பாவும் நான் பிஸினஸ் துவங்க நினைத்தால் அதற்கு வேண்டுமென்று பணம் வெச்சுருக்கார். அதை இப்போ வாங்கிக்கறேன். இதுதான் இப்போ என் பிஸினஸ்.''

''எப்படியோ பரம்பரைச் சொத்து கை விட்டுப் போகாமல் காத்துட்டீங்க. நன்றி, ஆதி! மிக்க நன்றி!'' என்று அவன் கையைத் தன் கையில் எடுத்து உதட்டால் உரசினாள் துர்கா.

"ரொம்ப நன்றி, துர்கா! இந்தக் கால் முத்தத்திற்கு!" என்றான் ஆதி குறும்புச் சிரிப்புடன்.

"சரி. சொல்லுங்க, என்ன பண்ணலாம்?"

"என்ன வேணுமானாலும் பண்ணலாம்."

"ஐயே! ஆதி, சொல்லுங்களேன்."

"இப்போ ஸ்கூல்ல போய் கொஞ்ச நேரம் இருந்துட்டு வீட்டுக்குப் போகலாம். சாயந்திரம் நான் வீட்டுக்கு வரேன். என்னென்ன வாங்கணும், செய்யணும்ங்கற தெல்லாம் லிஸ்ட் போடுவோம், சரியா?" என்றான்.

39

சொன்னது போலவே அன்று மாலை அவன் துர்காவின் வீட்டிற்கு வந்தான்... "அங்கிள் கிட்டே நாம சில விஷயங்கள் பண்ணி மேன்மைப் படுத்தறதுக்குப் பர்மிஷன் வாங்கிக்கலாம்," என்றான்.

"ஏம்பா, என் பிள்ளை என்னைக் கேட்காமே கடையை நாசம் பண்ணிட்டுப் போயிட்டான். நீ நல்லது பண்ண என் பர்மிஷன் கேக்கறியேப்பா. பண்ணுப்பா. ஸ்கூலை நல்லாக் கொண்டுவந்தே, அடுத்து இந்த வேலையா? 'எங்கிருந்தோ வந்தான்' பாடணும்போல் இருக்குப்பா!" என்றார் நாராயணசாமி.

அதன் பிறகு லேப்டாப்பை வைத்துக் கொண்டு துர்காவும் ஆதியும் உட்கார்ந்தார்கள். கடையில் பெயிண்ட், எலெக்ட்ரிக் வயரிங் எல்லாம் இரண்டு

வருடங்களுக்கு முன்புதான் செய்திருந்தார்கள். ஒரு பெரிய சாண்டிலியர் அவசியம். அது காஸ்ட்லி ஆனாலும் அதை முதல் லிஸ்டிலேயே போட்டான் ஆதி. நிறையக் கண்ணாடிகள் வைக்கணும் என்றும் எங்கே, எங்கே என்றும் யோசித்துக் குறித்துக் கொண்டார்கள். ஆபீஸ் ரூமை மட்டும் அங்கு என்ன நடந்ததோ, என்னவோ என்று பட்டதால் பெயிண்ட் அடிக்கலாம் என்று நிச்சயித்தார்கள். வாசலில் பெயர்ப் பலகை நியான் சைனுடன் தேவை என்றும் துர்கா சொன்னாள்.

கடையில் புடவை வாங்குபவர்களுடன் வரும் குழந்தைகளுக்குப் பரிசாக கோல ஸ்டிக்கர், ஸ்டிக்கர் பொட்டு, மருதாணி கோன் போன்றவை கொடுக்கலாம் என்று நிச்சயித்தார்கள். பெரிய துணிப் பைகளில் ஒரு பக்கம் கடையின் பெயர், விலாசத்துடனும், இன்னோரு பக்கம் மஹாலக்ஷ்மி படமும் போட்டுக் கொடுக்கலாம் என்று ஆதி சொன்னதும், ''நம்ம கடை நியாயமான, கறாரான ஒரே விலைக்கடை. அதனாலே கிஃப்டெல்லாம் கிடையாது என்று ஒரு கொள்கை வைத்திருந்தேன்!'' என்றார் நாராயணசாமி. ''இல்லை மாமா! நாமும் காலத்தை அனுசரித்துத்தான் போகணும்!'' என்றான் ஆதி. ''ஆமாங்க, கிஃப்ட்டுக்காகவே சாமான் வாங்குறவங்க இப்ப நிறைய. யாருக்கு நீங்க சொல்ற நியாயம் புரியும்?'' என்றாள், மௌனமாய் இவர்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த தனம்.

''சரி, எந்த எந்த ஊர்ப் புடவை யெல்லாம் வாங்கலாம், சொல்லு,'' என்றான் ஆதி.

''ஆந்திரா போச்சம்பள்ளி, கர்நாடக மைசூர் சில்க், கேரளா கசவு முண்டு எல்லாமே வரவழைக்கணும். தவிர, இன்னொரு ஐடியாகூட, ஆதி!'' என்றாள் துர்கா.

''சொல்லு.''

''மேட்சிங் பிளவுஸ் பீஸ் இப்போ நாம வித்தாலும் இன்னும் கொஞ்சம் அதில் கவனம் செலுத்தணும். தவிர பெட்டி கோட்டும் வெச்சா நல்லா போகும்.''

''ஆமாம், ஒரே இடமா வாங்க முடிஞ்சா நல்லதுன்னே ஜனங்க நினைப்பாங்க!'' என்றான் ஆதி.

''சரி, இதெல்லாம் எங்கிருந்தெல்லாம் வரவழைக் கணும்...'' என்று லேப்டாப்பில் தயாராகும் இடங்களைப் பார்த்து மெயில் அனுப்பினான். ''பதில் நாளைக்கோ, நாளன்னிக்கோ வந்துவிடும். அதுவரை கடையில் செய்ய வேண்டிய வேலைகளைக் கவனிக்கணும்!'' என்றான் ஆதி.

''லேடீஸ் டாய்லெட் கூட ஒன்று இருந்தா தேவலை. நாம் வேறே ஸ்டேட் புடவையெல்லாம் வரவழைச்சாலும், மெயின் என்னவோ நம்ம ஊர் காஞ்சிபுரம், திருபுவனம் பட்டுப் புடவைதான். கல்யாணத்துக்குப் புடவை எடுக்க வரவங்க ரொம்ப நேரம் இங்கேயே இருக்க வேண்டி யிருக்கும். அதனால டாய்லெட் வசதி இருக்கிறது ரொம்ப அவசியம்ப்பா,'' என்றாள் அப்பாவிடம். இதை ஆதியிடம் சொல்ல வெட்கப்பட்டுக் கொண்டு.

''திரும்ப ராமச்சந்திரனையோ, வைத்தீஸ்வரனையோ அங்கே அனுப்பிடும்மா!'' என்றார் நாராயணசாமி.

''டன்!'' என்றான் ஆதி, அதையும் லிஸ்டில் குறித்துக் கொண்டு. அதன்பிறகு சூடாகத் தோசை போட்டுச் சாப்பிட வைத்துத்தான் வருங்கால மாப்பிள்ளையை வீட்டிற்கு அனுப்பினாள் தனம்.

சென்னையில் போய் இறங்கிய நடராஜைப் பூங்கொத்தெல்லாம் கொடுத்து அமர்க்களமாக வரவேற்றனர் சதீஷும், தீபக்கும். ''என்னடா எனக்குப் போய் இதெல்லாம்...'' என்று அவன் சொல்ல, ''நீ வரும் காலத்தில ஒரு ஏ.வி.எம். ஆகிட மாட்டியா? அதுக்குத்தான்!'' என்றனர்.

உச்சி குளிர்ந்துபோனது நடராஜுக்கு. ஸ்டேஷன் வாசலில் காத்திருந்தது ஒரு இண்டிகா கார். ''ஏதுடா இது?'' என்று கேட்ட நடராஜிடம், ''எல்லாம் வீட்டுக்குப் போய்ச் சொல்றேன்,'' என்றான் சதீஷ். சீருடை அணிந்த டிரைவர் சல்யூட் அடித்துக் கதவைத் திறந்துவிட, கிளம்பினார்கள். நேராக வீட்டிற்குப் போனான். வீடா அது? திருவான்மியூரில் ஒரு பெரிய பங்களா. சாமான்களை உள்ளே கொண்டு வந்து வைத்துவிட்டு டிரைவர் வெளியே போய்விட்டான். சமையல்காரன் வெளியே வந்து மூன்று பேருக்கும் காப்பியா என்றான். ''ஆனா, முதல்ல இந்த ஐயாவைத் தெரிஞ்சிக்கோ. இவர்தான் இங்கே மெயின். நாங்கள் எல்லாம் சைடுதான்!'' என்றான் சதீஷ். ஒரு கும்பிடு போட்டுவிட்டு அவன் உள்ளே போய்விட்டான். ''முதல்ல காப்பி சாப்பிடு நடராஜ். அப்புறமா வீட்டைச் சுற்றிப் பார்க்கலாம்,'' என்று சொல்லி அவன் காப்பி சாப்பிட்டதும் அவனை வீட்டைச் சுற்றிப் பார்க்கக் கூட்டிப் போனார்கள்.

''இதோபார்! கீழே இரண்டு பெட் ரூம் வித் அட்டாச்டு பாத், டிரெஸ்ஸிங் ரூம், டிராயிங், டைனிங் ஹால், டிராயிங்கின் ஓரமாக ஒரு குட்டி பார் நிறைய மது வகைகள் அடுக்கப்பட்டிருந்தன. சீலிங் எங்கோ

உயரத்தில் இருந்தது. அழகழகான ஃபேன்கள். வீடு சென்ட்ரல் ஏ.சியோடுதான் இருந்தது. ஹாலில் பெரிய சான்டலியர் விளக்கு. மாடியில் இரண்டு பெட் ரூம்கள், ஹோம் தியேட்டர். பால்கனி ஒன்று பெரிதாக. அதில் வெவ்வேறு வண்ண ரோஜாக்களுடன் பூந்தொட்டிகள்.

பிரமிப்பின் உச்சியில் இருந்த நடராஜுக்குப் பேச்சே வரவில்லை. ''டேய், நம்ம லக்குடா. இந்த வீட்டை நமக்கு மொத்த பர்னிச்சர், கார், வேலைக்காரர்கள் எல்லாத்தோடையும் ஒருத்தர் வாடகைக்கு விட்டுட்டு வெளிநாட்டுக்குப் போயிருக்கார். இப்போதைக்கு ஒரு வருஷத்துக்குக் கொடுத்திருக்கார். அப்புறம் அநேகமாய் வித்துடுவார். யார் கண்டா, நீயே வாங்குவியோ என்னவோ!'' என்றான் சதீஷ்.

''வாடகை?''

''50,000/- டா. ஸாரிடா உன்னைக் கேட்காமல் எடுத்துட்டோம். இது ரொம்ப மலிவு வாடகை. நாம எடுக்கல்லேன்னா கைநழுவிவிடப்போறதேன்னு தான் எடுத்துட்டோம். கோபமாடா?'' என்றான் தீபக்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லே. ஆனா, நாம மூணு பேருக்கு இத்தனை பெரிய வீடு வேணுமா?''

''இதென்ன மதுரை ஜவுளிக்கடையா? சென்னை திரைப்பட உலகமப்பா, திரைப்பட உலகம். இங்கே ஷோவுக்குத்தான் மதிப்பு. நாளைக்கே ஸ்டோரி டிஸ்கஷன், அது இதுன்னு நடத்த வேண்டிவரும். ஒவ்வொருதரமும் வேறே வேறே இடம் தேட வேண் டாமே. அதுக்குத்தான். நீ யோசிச்சுக்கோ. உனக்குத்

தேவலையானா இங்கேயே இருப்போம் இல்லைன்னா வேறே பார்ப்போம்,'' என்றான் சதீஷ்.

''இல்லையில்ல. நீங்க இரண்டுபேரும் எனக்காக எத்தனை யோசிச்சு, எவ்வளவு வேலை பண்ணியிருக் கீங்க? நான் இதுக்கெல்லாம் எப்படி நன்றி செலுத்து வேன்?'' என்றான் நடராஜ்.

''அடப் போடா! நீ எங்களுக்குப் போய் நன்றி சொல்லிகிட்டு! நாங்களே உனக்குப் பணம், காசு உதவி செய்யமுடியல்லியேன்னு வருத்தப்பட்டுக்கிட்டுருக் கோம். தெரியுமா?'' என்றான் தீபக்.

''சரி, இப்போ டிபன் சாப்பிடு. அதுக்கப்புறம் டைரெக்டர்ஸ் லிஸ்ட் வெச்சுருக்கேன். யாரை வரச் சொல்றதுன்னு யோசிப்போம்,'' என்றான் சதீஷ்.

அன்றிலிருந்து அவர்களின் தொழில் (!) துவங்கியது. நல்ல வேளையாக கம்ப்யூட்டர் அறிவில்லாததாலும், மூவருமே எதையுமே கற்றுக் கொள்ளும் பொறுமையும் இல்லாததாலும் அதை வாங்கவில்லை.

முதலில் ஏஜென்ட் போல் ஒருவனைக் கூப்பிட் டார்கள். அவர் வந்து பண்ணிய பந்தா தாங்க முடிய வில்லை ''என் அபிப்ராயப்படி தனுஷ், அல்லது சந் தானத்தை வைத்து எடுத்தால் நல்லா ஓர்க்கவுட் ஆகும். இண்டு பாடல் காட்சிகள் ஸ்விட்சர்லான்டில் எடுங்க. ஒரு ஹெலிகாப்டர் சண்டை அவசியம். ஹீரோயினைப் பொறுத்தவரை புது முகத்தைப் போட்டுக்கலாம்,'' என்றெல்லாம் சொல்லிக் கொண்டே போனார். நடராஜுக்குத் தலை சுற்றியது.

தீபக்கும், சதீஷும் அந்த மனிதரை, ''ஸார், நாங்க மொதமொதல்ல படம் எடுக்கப் போறோம். ஆசையி னாலே செய்யறோமே தவிர, பெரிய வசதி ஒண்ணும் கிடையாது அதனால, நீங்க லோ பட்ஜெட் படம்னா என்ன செலவாகும், என்ன செய்யணும், அதைச் சொல்லுங்க,'' என்றனர்.

''அப்படியா? அப்ப அதுக்குத் தகுந்தாற்போல் நடிகரை புக் பண்ணிக்கலாம். இந்த வீட்ல மாடியிலே எத்தனை ரூம்?'' என்று கேட்டார் அவர்.

''இரண்டு பெட்ரூம்,'' என்றதும், 'நல்ல வேலை பண்ணியிருக்கீங்க. நான் சொல்ற டைரக்டரை வரச் சொல்லி காரனுப்புங்க. அநேக வேளைல அவரே கதை வசனமெல்லாம் பாத்துப்பார். ம்யூசிக் டைரெக்டர், பிண்ணணிப் பாடகர்கள், டப்பிங் ஆர்டிஸ்ட்ஸ், அதை ரிகார்ட் பண்ற ஸ்டூடியோ அதெல்லாம் கமிஷன் அடிப்படைல நான் ஏற்பாடு பண்றேன். அவுட்டோர் ஷூட்டிங்க்கும் நானே ஏற்பாடு பண்றேன்.''

''ஆமா, ஹீரோயின்?''

அது... தமிழ் ஹீரோயின்னா ரொம்ப கேக்கறாங்க. புது முகம்னா மலையாளப் பொண்ணுங்க யாரையாவது பிடிக்கலாம். அவங்க தங்கறதுக்கு நீங்க பணம் கொடுக்கறதுன்னு வந்தா நிறையவே கேப்பாங்க. அதனால...''

''அதனாலே?''

''அதனாலே உங்களுக்கு ஆட்சேபணை இல்லைன்னா மாடி ரூம் ஒண்ணுல தங்க வெச்சுக்குங்க. புது முகமாக

இருக்கறவரைக்கும் எல்லார் சொன்னதையும் கேக்குங்க. சாதாரணமாக அவங்க அம்மாக்கள் தான் கூட வருவாங்க. நல்லா யோசிச்சி சொல்லுங்க. ஸ்டோரி டிஸ்கஷனைக்கூட உங்க வீட்ல வெச்சுக்கக்கூடிய வங்களா செலக்ட் பண்றேன். இதெல்லாம் உங்களுக்கு ரொம்ப செலவாயிடக்கூடாதேன்னுதான்!'' என்றார்.

''சரி, ஹீரோவுக்கு என்ன செய்யறது?''

''அதுல ஒண்ணும் கஷ்டமில்லை. நாம பெரிய ஹீரோன்னு போனோம்னா அவங்களுக்குச் சம்பளம் கொடுத்துக் கட்டுப்படியாகாது. அதனால இப்போ வளர்ந்து வர ஹீரோ யாரையாவது போட்டுக்கலாம். அனுப் குமார்னு ஒருத்தர் இருக்காரு. இப்பத்தான் இரண்டு படங்கள்ல நடிச்சுருக்காரு. நல்லவரு. நாம கொடுத்ததை வாங்கிப்பாரு. அவரையே ஏற்பாடு பண்ணிடறேன்,'' என்றார்.

''சரி, சீக்கிரமே டைரக்டரைக் கூட்டிகிட்டு வாங்க!'' என்றான் சதீஷ்.

''ஆமா, இனிமே ஒவ்வொருத்தரா கூட்டிகிட்டு வர வேலைதான். அதுக்கு முன்னாடி ஒண்ணு சொல்றேன். நீங்க இந்தக் கீழே இருக்கற ரூமை, அதுதான் பெரிய ரூம்கறதுனாலே வரவங்க உட்கார்ந்து பேசறதுக்குன்னு வெச்சுகிடணும். இப்பவே சொல்லிடறேன். ஸ்காட்ச் விஸ்கி, முந்திரிபருப்பு வறுவல், ஃபாரின் சிகரெட் இதெல்லாம் நீங்க முன்னாடியே ஏற்பாடு பண்ணிடுங்க. நாளைக்கு டைரெக்டரோட வரேன். அவரு இன்டிகா சின்ன காரோச்சேன்னு முணுமுணுப்பாங்க. கொஞ்சம்

பணம் பார்த்துத்தான் செலவழிக்க வேண்டியிருக்குன்னு சொல்லுங்க. நல்ல வேளையா ஏ.சி. இருக்கு. இந்த வசதிகள்ல அவங்க வந்து வேலை செய்யறது கஷ்டம் தான். என்ன செய்யமுடியும். அட்ஜஸ்ட் பண்ணிக்கலாம். கூடுமானவரை வெளிநாடு படப்பிடிப்பு வேண்டாம். கோவளம், வேடந்தாங்கல்னு முடிச்சுடலாம்னு சொல் லுங்க,'' என்று வாயில் வந்ததைச் சொல்லிவிட்டு 2000/- பணத்தையும் வாங்கிக் கொண்டு போய்ச் சேர்ந்தார்.

டைரக்டர், அந்த ஏஜெண்ட் சொன்ன அன்றைக்கு மறுநாளே வந்து தன்னிடம் நல்ல கதை இருப்பதாகவும், திரைக்கதை, வசனம் எல்லாம் தன் பொறுப்பு என்றும், மற்ற எல்லாரையும் கூட தான் அனுப்பிவைப்பவர் களையே ஃபிக்ஸ் செய்யும்படியும் சொன்னார். கேமரா மேனும், ஸ்டண்ட் மாஸ்டரும்கூட வந்து போனார்கள்.

40

அடுத்த வாரமே, ஆனந்தி, அதுதான் அந்தப் புதுமுக நடிகையின் பெயர், அவளும் அவள் அம்மா சுபத்ராவும் வந்துவிட்டனர். இந்த ஒரு வாரத்தில் இசை அமைப் பாளர், பின்னணிப் பாடகர்கள், துணை நடிகர்கள் சப்ளையர்கள் என்று ஆளாளுக்கு வந்து அட்வான்ஸ் வாங்கிப் போவதுதான் நடந்தது.

இன்னும் படப்பிடிப்பு தொடங்காத நிலையில், இப்போது எதற்கு இவள் வந்தாள் என்று இவர்களுக்குப் புரியவில்லை. பெண்ணும் சரி, அம்மாவும் சரி, தள

தளவென்று கேரளத்து மினுமினுப்பாக இருந்தார்கள். தீபக், சதீஷ், சமையல்காரர், டிரைவர் என்று எல்லோரும் இவர்களைச் சுற்றிச் சுற்றி வந்தார்கள். அம்மாக்காரி சிரித்துச் சிரித்து எல்லோருக்குமே ஈடு கொடுத்தாள். ஆனால், பெண் என்னவோ அநாவசியமாக ஒரு வார்த்தை ஒருவருடனும் பேசவில்லை.

''டேய், நம்மால இப்படி செலவு பண்ணிப் படம் எடுக்க வெல்லாம் முடியும் போல தோணல்லைடா. பேசாமே ஊருக்கே திரும்பிவிடலாம்டா,'' என்றான் நடராஜ்.

''அட, இப்படியா பயப்படுவே? நம்மால முடியும்னு மொதல்ல நினைடா. இப்ப நீ திரும்பிப் போனா உன்னைப் பார்த்து எல்லோருமே சிரிக்க மாட்டாங்களா? முன் வெச்ச காலைப் பின் வைக்கக் கூடாது!'' என்று இவர்கள் இருவரும் மாறி மாறி உபதேசித்தனர். பிரமாத மாக ஒரு கணக்கு நோட்டுப் போட்டு எல்லாச் செலவு களையும் எழுதி வைத்தனர்.

''டேய், இந்த மடையன்கூட யோசிக்கறான். கொஞ்சம் அப்பப்ப ஊத்திக் கொடுத்து அவனைச் சரி பண்ணி வெச்சுக்கணும். இல்லைன்னா உள்ள விஷயத்தை ஊகிச் சுட்டான்னா டேஞ்சர்டா!'' என்றான் சதீஷ் தீபக்கிடம்.

''ஆமாண்டா, அவனைக் கூடுமானவரை மப்புலேயே வைக்கணும்டா!'' என்றான் தீபக்.

உள்ள விஷயம் என்னவென்றால் இவர்கள் முன்னாடியே வந்ததால் கோடம்பாக்கத்தில் தேடி ஒரு அல்டாப்ஸ் ஏஜெண்டைப் பிடித்தனர். எவருக்கு என்ன பணம் கொடுத்தாலும் பாதி அதை ஏற்றிச் சொல்லி

அந்த ஆள் பாதியும் இவர்கள் பாதியுமாக அதை எடுத்துக் கொள்வதாக ஒரு ஒப்பந்தம்.

டைரக்டர் வந்தார். காமா சோமா வென்று ஒரு கதையை எடுக்க ஆரம்பித்தனர். கையிலே இருப்புப் பணம் குறைகிறதே என்று நடராஜ் கவலைப்பட, கொஞ்சம் கொஞ்சமாகத்தானே பணம் சேருகிறது என்று சதீஷும் தீபக்கும் கவலைப்பட்டனர். கீழே இருந்த இன்னொரு பெட்ரூமில் நடராஜும், மாடியில் இருந்த இன்னொரு பெட் ரூமில் சதீஷும், தீபக்கும் தங்கி யிருந்ததால், அந்த ரூமில் இவர்கள் ராஜ்ஜியமாக இருந்தது. இவர்கள் பணம் வைத்துப் பூட்டிக் கொள்ள சௌகரியமாக இருந்தது. படம் வளர்ந்ததோ இல் லையோ, பணம் தேய்ந்தது.

41

ஆஷாவோடு அவ்வப்போது பேசுவான் நடராஜ். இந்தப் பிரிவு அவர்களிடையே நேசத்தை வளர்த்தது. படப்பிடிப்பு நடக்கும் இடத்துக்குப் போனால், இவனுக்கு போரடித்தது. எனவே, இவனுடைய அருமை நண்பர்களில் ஒருவன் அங்கு போனால் ஒருவன் இங்கிருப்பான்.

திரும்ப ராமச்சந்திரனும், வைத்தீஸ்வரனும் கடைக்குப் போய்விட்டதால், சந்தியாவுக்கு வேலை நெட்டி வாங்கியது. ஆனால், மாதத்தின் முதல் வாரத்தில் இருவரில் ஒருவர் வந்து அவளுக்கு உதவி செய்வதை வழக்கமாக்கிக் கொண்டனர்.

அன்று வேலை முடிந்து வெளியே வந்த சந்தியா பஸ்ஸுக்காகக் காத்துக் கொண்டிருந்தபோது, ஷியாம் எதிர்சாரியிலிருந்து வந்தான். அவனைக் கண்ட சந்தியா வேறு புறம் திரும்பி நின்று கொண்டாள்.

''ஏன், பேச மாட்டியா?'' என்றான்.

மவுனமாக நின்றாள் அவள்.

''சந்தியா, ப்ளீஸ்! எனக்கு உன்கூட கொஞ்சம் பேசணும். எதிர்பார்க்குக்கு வாயேன். நான் பேச்சில் கூட அத்து மீற மாட்டேன், ப்ளீஸ்!'' என்று கெஞ்சினான்.

''இப்போ எனக்குக் கல்யாணத்துக்குப் பார்த்துகிட் டுருக்காங்க. இந்த சமயத்தில நான் உங்கூட எங்கேயும் வரதெல்லாம் சரியில்லை!'' என்றாள் சந்தியா.

''அப்ப உன் கல்யாணம் நிச்சயமாயிடுச்சா?''

''இல்லை இல்லை, பார்த்துக்கிட்டுத்தானிருக்காங்க.''

சுற்றும் முற்றும் பார்த்தான். பஸ் ஸ்டாண்டில் யாரும் இல்லை. ''சரி, எனக்கு ரொம்ப கஷ்ட நிலைமை. அங்கேயிருந்து வந்துவிட்ட எனக்கு வேறே எங்கேயும் வேலை கிடைக்கல்ல. அன்னாடம் நாளைத் தள்ள தெரிஞ்சவங்ககிட்டேயெல்லாம் 50ம் 100மா கைமாத்து வாங்கிட்டுத் திரியறேன்,'' என்றான்.

அப்போதுதான் சந்தியா அவனை நன்றாகக் கவனித் தாள். எண்ணெய் காணாத, வாராத பரட்டைத்தலை. அழுக்கு ஷர்ட், கால்களில் பழைய ஹவாய் சப்பல். டிப்டாப்பாக ஆபீஸர் மாதிரி ஸ்கூலுக்கு வருவானே, அந்த ஷியாமா இவன்?

''ஷியாம், நீ பேசாமே ஸ்கூல்ல அன்னிக்கு ஒரு சாரி சொல்லியிருந்தா, வேலை ஆயிருக்கும்,'' என்றாள்.

''தப்பு பண்ணிட்டேன் சந்தியா! தப்புத்தான் பண்ணிட்டேன். அந்த எம் எல் ஏ வும் தன் காரியங்கள் பலதுக்கு என்னைப் பயன் படுத்திக்கிட்டு என்னைத் தூக்கி எறிஞ்சுட்டான். தலைவிதி. அப்ப அப்படி புத்தி போச்சு. ஆனா, எனக்கு உன் மேல நிஜமான அன்புதான், சந்தியா!'' என்றான்.

''நீங்க ஒண்ணு பண்ணுங்களேன், ஷ்யாம்! நீங்க ஒருதடவை ஸ்கூலுக்கு வந்து துர்கா மேடத்தையும், ஆதி ஸாரையும் பார்த்து, மன்னிப்புக் கேட்டுட்டு, திரும்ப வேலை கேளுங்களேன். மன்னிச்சு வேலையும் கொடுத் துடுவாங்கன்னு நினைக்கிறேன்,'' என்றாள்.

''ஆனா, இப்ப இருக்கிற பி.டி. மாஸ்டர்?''

''ஒரு லேடிதான் இருக்காங்க. ஆனா, அவங்க கேர்ல்ஸுக்கு தையல் சொல்லிக் கொடுக்க வந்தவங்க. இப்ப ஸ்கூல பர்மெனன்ட் பி.டி. மாஸ்டர்னு யாரும் இல்லை. அதனால நீங்க வந்து கேட்டா குடுப்பாங் கன்னு தோணுது,'' என்று சொன்னவள், தன் பஸ் வரவும் அதில் ஏறிப் போய்விட்டாள்.

மறு நாளே ஷ்யாம் முடிந்தவரை நன்றாக டிரெஸ் செய்து கொண்டு ஸ்கூலுக்கு வந்தான்... துர்கா வரும்வரை காத்திருந்தவன், அவளும் ஆதியும் வந்ததும் வணக்கம் தெரிவித்தான் பதில் வணக்கம் தெரிவித்து விட்டு அவனை உள்ளே வரப் பணித்தாள்... வந்தவன் கைகூப்பி, ''என்னை மன்னிச்சுடுங்க, மேடம்!'' என்றான்.

''நீங்க எதுக்கு வந்திருக்கீங்கன்னு தெரிஞ்சுக்கத்தான் கூப்பிட்டேன். என்ன விஷயம்? என்னவோ மன்னிச் சுடுங்கங்கறீங்க?'' என்றாள் துர்கா.

''நான் தப்புக்கு மேலே தப்பு பண்ணிட்டேன் மேடம். என்ன முயற்சித்தாலும் வேறே எந்த ஸ்கூல்லேயும் வேலை கிடைக்கல்லை. ரொம்ப திண்டாடுகிறேன், மேடம்.''

''அதுக்கு?'' என்று புருவத்தைத் துர்கா உயர்த்த, ''மேடம்! எனக்கு இப்படிக் கேட்கத் தகுதியில்லைதான். நான் பண்ணின தப்புக்கள் அந்த அளவு. ஆனாலும் பெரிய மனசு பண்ணி என்னை இங்கே திரும்ப வேலைல சேர்த்துக்குங்க, மேடம், ப்ளீஸ்!'' என்று சொல்லி, அவள் கால்களில் விழப்போனான்.

''வேண்டாம், ஷ்யாம். இதெல்லாம் என்ன? ஆனால், சாரி, என்னால இப்ப உங்களுக்கு வேலை தர முடியா துங்கற ஒரு நிலைல இருக்கேன்,'' என்றாள் துர்கா.

''மேடம், ப்ளீஸ், மேடம்! கொஞ்சம் இரக்கம் காட்டுங்க, மேடம். உங்க அண்ணா, தம்பியா நினைச்சு இதைச் செய்யுங்க, மேடம். நான் பண்ணின தப்புக்கு நல்ல தண்டனை அனுபவிச்சுட்டேன். இனி ஒரு நாளும் எந்த தப்பு வழிக்கும் போகமாட்டேன்!'' என்றான். ஒரு நிமிடம் துர்காவுக்கு நடராஜின் நினைவு வந்து போயிற்று.

''அதுக்காக இல்லே. சந்தியாவுக்குக் கல்யாணத் துக்குப் பார்த்துகிட்டுருக்காங்க. ஏற்கெனவே அவங் களோட தப்பா பழகினதுனாலதான் வம்பு வந்தது,'' என்றாள் துர்கா.

''நிஜம்தான் மேடம். ஆனா சந்தியாவை நான் நிஜமாவே அப்போதும் காதலித்தேன், இப்போதும் என்

மனசில அவங்கதான் இருக்காங்க. வேலை கிடைச்சா அவங்க வீட்ல போய்ப் பொண்ணு கேட்டுருவேன்,'' என்றான்.

''கொஞ்ச நாழி வெளியிலே வெயிட் பண்ணுங்க, நான் மறுபடியும் உங்களைக் கூப்பிடறேன்,'' என்றாள். பிறகு ஆதியிடம் போனாள். சந்தியாவையும் கூப் பிட்டாள். ஷியாம் பேசினது மொத்தத்தையும் சொன் னாள்.

''நீங்க என்ன நினைக்கறீங்க, ஆதி?''

''திருந்திருக்கார்னு உனக்கு நிச்சயமா தோணினா, மறுபடியும் வேலை கொடுக்கலாம், துர்கா,'' என்றான் ஆதி.

''திருந்தித்தான் இருக்கான். அவன் கண்ணில நிஜம் தெரியுது. பாவம்! ரொம்ப கஷ்டப்பட்டுட்டான் போல. தவிர சந்தியா மேல அவனுக்கு அன்பு இருக்கிறதும் நிஜம்தான்!'' என்றாள் துர்கா.

திடீரென்று ஒரு விம்மல் சப்தம். தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்ள நினைத்த சந்தியாவிடமிருந்துதான் அது வெடித்துவிட்டது. கைகளில் முகத்தைக் கவிழ்த்துக் கொண்டிருந்த அவளிடம் போய், அவள் முகத்தை நிமிர்த்தினாள் துர்கா. ''அவரைக் கல்யாணம் பண்ணிக்க உனக்கு இஷ்டமா, சந்தியா?'' என்று கேட்டாள்.

''இஷ்டம்!'' என்று முனகினாள் சந்தியா.

''பின்னே வேறே என்ன பிரச்னை? பேசாமே வேலையைக் கொடு. இரண்டு பேரும் கல்யாணம்

பண்ணிக்கிட்டு நல்லபடியா இருக்கட்டும். ஆல் த பெஸ்ட், சந்தியா!'' என்றான் ஆதி.

சந்தியாவுக்குப் பேச நா எழவில்லை. கண்ணீருடன் கை கூப்பினாள்.

42

மாடியில் லட்டு மாதிரி ஒரு பெண்ணை வைத்துக் கொண்டு சும்மா இருப்பது எவருக்குமே சற்றுக் கடினம் தான். அதிலும் தீபக், சதீஷ் மாதிரியான ஆட்களுக்குக் கேட்கவா வேண்டும்? முடிந்த போதெல்லாம் மாடி ரூமிற்குப்போய் ஆனந்தியுடன் பேச்சுக் கொடுத்துப் பார்ப்பார்கள். இவர்கள் அறைக்குள் வந்தாலே, அவள் வெளியே பால்கனிக்குப் போய்விடுவாள். அவளுடைய அம்மா சுபத்ரா தான் இவர்களோடு அரட்டை அடிப்பாள். ஆனால் கண்கள் அவளுக்காக நாலாபக்கமும் துழாவ, இவர்கள் சுபத்ராவுடன் ஏதோ பேசிக் கொண்டிருப்பார்கள்.

''டேய், என்னடா இவ. இந்த ஃபீல்டுக்கு வந்துட்டு என்னவோ ரொம்பப் பத்தினி வேஷம் போடறாளே!'' என்று இவர்கள் தங்களுக்குள் பேசிக் கொள்வார்கள். எந்தக் கெட்ட சூழ்நிலையிலும் நல்லொழுக்கத்துடன் உள்ளவர்களும், எந்த நல்ல சூழ்நிலையிலும் தறி கெட்டுப் போகிறவர்களும் உண்டு என்பதை அவர்கள் உணர்ந்திருக்கவில்லை.

படம் ஓரளவு வளர்ந்திருந்தது... எடுத்தவரை பார்த்தால் இவர்களுக்குப் பிடித்துத்தான் இருந்தது.

டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ்களிடம் போட்டுக் காட்டி மேற்கொண்டு பணத்துக்கு ஏற்பாடு செய்யணும் என்று நினைத்துக் கொண்டிருக்கையில்தான் அந்த சம்பவம் நடந்தது.

நடராஜுடன் அன்று சதீஷ் தங்கியிருந்தான். ஆனந்திக்குப் படப்பிடிப்பில் வேலை ஏதும் இல்லாத தால் அவள் மாடியில் அவள் ரூமில் இருந்தாள். நடராஜ் கீழே நல்ல போதையில் தூங்க, சுபத்திரா பக்கத்திலுள்ள கோவில் ஒன்றிற்குச் சென்றிருந்தாள். சதீஷும் நல்ல போதையில் இருந்தான். ஆனால் அவனுக்கு இந்தப் போதை எல்லாம் எந்த மூலைக்கு? அன்று ஆனந்தியை எப்படியும் அடைந்துவிடுவது என்று மனதில் கங்கணம் கட்டிக் கொண்டிருந்தான். சமையல்காரர் தன் வேலையை முடித்துவிட்டதால், இவனிடம் சொல்லி விட்டு வெளியே போய்விட்டார்... சதீஷ் மெல்ல மாடிக்குப் போனான். ஆனந்தியின் அறைக் கதவைத் தட்ட, அவள் அம்மா அதற்குள் வந்துவிட்டாளா என்ன என்று வியந்து கொண்டே கதவைத் திறந்தாள். நறுக் கென்று உள்ளே நுழைந்தான் சதீஷ்... ''என்ன வேணும்?'' என்று அதட்டலாகக் கேட்ட ஆனந்தியிடம், ''நீதான் வேணும்!'' என்று சொல்லிவிட்டு, அவள் எதிர்பாராத விதமாய்க் கதவைத் தாழிட்டான்.

வெகுண்டாள் ஆனந்தி. ''ஏய், நீ இப்போ எதுக்குக் கதவை அடைச்சே? வெளியே போ!'' என்றாள்.

''ஏய், என்னடி, பெரிசா பத்தினி வேஷம் போடறே? அப்படி இருக்கறவ சினிமாவிலே எதுக்கு நடிக்க வந்தே? இன்னிக்கு என்னோட நீ சரியா நடந்துக்கல்லைன்னா படத்தை விட்டே உன்னைத் தூக்கிட வைப்பேன், தெரி யுமா? நடராஜ் என் பேச்சை மறுக்க மாட்டான்,'' என்றான்.

''இங்கே மொதல்ல உட்காரு. என்னை அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டா என்னிக்கும் இப்படி ராத்திரி பகல் பார்க்காமே ஷூட்டிங் போக வேண்டாம். உழைக்க வேண்டாம். நான் நிறையப் பணம் வெச்சுருக்கேன். காரும், பங்களாவும் நகைகளுமா இருக்கலாம்!'' என்று இன்னும் என்னென்னவோ உளறிக் கொட்டிக் கொண்டிருந்தான். ஆனந்தி அன்று புடவை கட்டியிருந்தாள். அதன் முந்தானையை அவன் கைகளில் இறுகப் பற்றிப் பிடித்திருந்ததால், அவளால் கதவுப் பக்கம் நகர முடிய வில்லை.

ஏற்கெனவே போதை. அவள் இளமையின் அழகும், மதர்ப்பும் ஊட்டிய போதை வேறு. இன்று எப்படியும் அவளை அடைந்துவிடுவோம் என்ற எண்ணம் வேறு. எல்லாமாக அவன் புத்தியை ரொம்பவே மழுங்கடித் திருந்தது... எழுந்து அவளைத் தாவிப் பிடிக்கப்போன அவன் மீது அங்கிருந்த குட்டி டீப்பாயை எடுத்து வீசினாளே, பார்க்கவேண்டும். அதன் ஒரு முனை அவன் நெற்றிப் பொட்டருகே பட்டுவிட, இரத்தம் கொட்ட ஆரம்பித்துவிட்டது. நிறைய இரத்தம் கொட்டி உயிர், கியிர் போய்விட்டால் வம்பு என்று ஒரு கைக்குட் டையை நீரில் நனைத்து அந்தக் காயத்தில் வைத்து அமுக்கினாள். அதற்குள் அவள் அம்மா வந்துவிட, ''விஷயம் அப்புறமா சொல்றேன். முதல்ல இந்த ஆளை இழுத்து வெளியே போடுவோம்,'' என்று இவள் சொல்ல, இருவருமாக அவனை இழுக்க மாட்டாமல் இழுத்து வெளியே போட்டனர்.

''அம்மா, பேசாமே நாம இங்கிருந்து போயிடலாம்மா. இவங்க ஒண்ணும் படத்தை எடுத்து முடிப்பாங்கன்னு எனக்குத் தோணல்லே!'' என்றாள் ஆனந்தி.

''அவசரப்படாதே, பார்க்கலாம். படத்தை எடுக்கற நடராஜ் என்னவோ நல்லவர்தான். இதுங்க ஆட்டத் துக்குக் கவலைப் படவேண்டாம். இனிமே நான் உன்னை விட்டுட்டு எங்கேயும் போகல்லேம்மா. சரியா?'' என்றாள் சுபத்ரா.

வெளியே போய்ப் பார்த்தால் சதீஷைக் காணோம். சரிதான். தானே எழுந்து கீழே போயிருக்கிறான் என்றால் ஆள் நார்மலாகத்தான் இருக்கான் என்று இவர்கள் வேலையைப் பார்த்தார்கள்.

43

கடைக்குத் தேவையான புடவைகளை எல்லா ஊர்களிலிருந்தும் நிறையவே செலவழித்து வாங்கிப் போட்டான் ஆதி. தானும் ரொம்ப அலையாமல் அவன் செய்த அழகைப் பார்த்து வியந்து போயினர் துர்காவும் மற்றவர்களும். இவனுடைய எல்லா வியாபாரமும் இன்டெர்நெட் மூலமாகத்தான் நடந்தது... அதுவும் கூட்டுறவுச் சங்கங்கள், அரசு அங்கீகாரம் பெற்ற இடங்கள் என்பவற்றின் மூலம் போனதால் பிரச்னை எதுவும் இல்லை. மற்ற இடங்களில் புடவையைக் கண்ணால் பார்த்த பிறகுதான் பணம் கொடுப்பதென்று ஒரு கொள்கை வைத்திருந்தான். மதுரை, அதைச் சுற்றியுள்ள

நெசவாளர்களுக்கு இவனும், ஒரு பெண்ணின் அபிப்ராயம் முக்கியமென்பதால் துர்காவையும் வைத்துக் கொண்டு, கம்ப்யூட்டரில் டிசைன் செய்து அனுப்புவான். அதுபோலச் சரியாக வந்தால்தான் ஒத்துக் கொள்வான்.

கடையிலும் மாற்றி மாற்றி இவர்கள் இருந்ததால், வியாபாரம் கன ஜோராக நடந்தது. விற்பனை செய்பவர்கள் துடிப்பாக எடுத்துக்காட்ட, வாடிக்கையாளர்கள் நிறைய ஆனார்கள். ஆதித்யா சொன்ன புதிய யோசனைகளும் நிறையப் பலனை அளித்தன. இப்போது துர்கா சந்தோஷமாக உணர்ந்தாலும், ஒரு பக்கம் நடராஜ் என்ன செய்கிறானோ என்ற கவலை அவளையும் அவள் பெற்றோரையும் பிடுங்கித் தின்றது.

ஆஷாவிற்குச் செலவுக்குப் பணம் போதவில்லை. ஓசைப்படாமல் ஒவ்வொன்றாக நகைகளை விற்க ஆரம்பித்தாள். நடராஜ் மற்றதெல்லாம் நன்றாகப் பேசுவான். ஆனால் பணம் கேட்டால் மழுப்பிவிடுவான். இந்த மாதிரி அவள் நகைகளை விற்பது துர்காவின் காதுகளுக்கு எட்டியது. ஆஷாவிற்குப் போன் செய்து கேட்டாள். ''ஏன் இப்படி நகைகளை விற்கிறாய்? அவன் பிஸினஸ் சென்னையில் எப்படி இருக்கிறது?'' என்று.

ஆஷாவா சரியாகப் பதில் சொல்லுவாள்? ''எல்லாம் நன்றாகத்தான் நடக்கிறது. காத்துக்கிட்டுருந்தீங்களாக்கும் துக்கம் விசாரிப்பதற்கு? எனக்கு டிசைன் பிடிக்கல்லை. அழித்துப் பண்ணச் சொன்னேன். அவ்வளவு தான்...'' என்று காட்டமாகச் சொல்லிவிட்டாள்.

அன்றைக்கும் பிரமாதமாக டிரெஸ் செய்துகொண்டு லேடீஷ் கிளப்புக்குப் புறப்பட்டாள் ஆஷா. கிளப் கட்டடத்தில் இறங்கவும், முதல் அறையில் பேசிக்

கொண்டிருந்த சிலர் தன்னைப் பார்த்ததும் பேச்சை நிறுத்திக் கொண்டமாதிரித் தோன்றியது அவளுக்கு... அடுத்த ரூம் கேரம், செஸ் போன்ற விளையாட்டு களுக்காக. அங்கிருந்தவர்கள் கூட இவளைக் கண்டும் காணாமலும் இருந்த மாதிரித் தோன்றிற்று.

உள்ளே அனைவரும் சென்று அமர்ந்தனர். இவள் காரியதரிசி ஆயிற்றே. மேடையில் நாற்காலியில் போய் உட்கார்ந்தாள். தலைவி பேச ஆரம்பித்தாள். ''இந்த முறை நம்ம ஆண்டு விழாவை அரசின் உள்ளாட்சித் துறை மந்திரியை அழைத்துக் கொண்டாடலாம் என்ற எண்ணம். இல்லையானால் இன்று சினிமாவில் கொடி கட்டிப் பறக்கும் குணச்சித்திர நடிகை பிரமீளாவைக் கூப்பிட்டுச் செய்யவேண்டும். ஏனெனில் இது நமது 20 ஆவது வருட விழா. ஆனால் இதற்கு நிறையச் செல வாகப் போகிறது. அந்த நடிகை வந்தால் ஐந்து பவுனில் சங்கிலி தர வேண்டுமாம். அமைச்சர் என்றால் வருவதே கஷ்டம். அப்போதும் செலவு நிறைய ஆகும். தவிர நாமெல்லாம் ஒவ்வொரு முறையும் ஒரு புடவையைச் சீருடையாக வாங்கிக்கொள்வோம். இந்த தடவை அதற்கு ரூ 15,000/- மும், செலவிற்காக 15,000/- மும்மாக மொத்தம் 30,000/- ஒவ்வோருவரும் கொடுக்க வேண்டியிருக்கும். இதற்கு நான் இங்கு வந்திருக்கும் அனைவரையும் கேட்டுவிட்டேன். எல்லோருக்கும் இதில் சம்மதம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தாமதமாக வந்த ஆஷா, இன்னும் ஓரிரண்டுபேரும் சம்மதிப்பார்கள் என்று நம்புகிறேன்,'' என்று தலைவி திருமதி அமிர்தவல்லி சொல்லியதும் அனைவரும் கைதட்டினர். கூட்டம் முடிந்த பிறகு ஆஷா தலைவியை ஒரு பிடிபிடித்தாள். ''நான் காரியதரிசி.

என்னை முன்னாடியே கேட்பதில்லையா?'' என்று கேட்டுக் கத்தி ஓய்ந்தபோது அவளுக்குச் சுய பச்சாதாபத்தில் கண்ணீரே வந்துவிட்டது.

''இதோ பார் ஆஷா! நீ வாய்விட்டுச் சொல்லாவிட்டாலும் இப்போது உன் நிலை கொஞ்சம் சரியில்லை என்று எங்களுக்குத் தெரியும். நீ காரியதரிசி வேண்டாம்னு சொல்லிட்டியானா, கஷ்டம். அதை மனசில வெச்சுக்கிட்டுத்தான் உன்னை முதல்ல கேட்கல்ல,'' என்றாள் தலைவி.

''நான் யார் என்று உங்களுக்கெல்லாம் இரண்டு நாட்கள்ல நிரூபிக்கிறேன்!'' என்று சொல்லிவிட்டு விருட்டென்று அங்கிருந்து வந்துவிட்டாள்.

சவால் விட்டுவிட்டு வந்தாயிற்று. எப்படி நிறைவேற்றப்போகிறாள்? அவளுக்கே புரியவில்லை. நடராஜுக்குப் போன் செய்து கேட்டால் ஒரே பதில்தான். 'இப்போதெல்லாம் இங்கே நிலைமை சரியாக இல்லை. இருப்பதை வைத்துப் பார்த்துக் கொள்!' என்பதுதான் அது. திடீரென்று ஏதோ தோன்றி, சமையல்காரி அம்மிணியைக் கூப்பிட்டாள். ''போன வாரம் நீ பணம் வாங்கியிருந்த யாரோ வசூலுக்கு வந்து கத்தினாரே பணம் முழுசா கொடுக்கல்லேன்னு, அவன் ஒரே சமயத்திலே எவ்வளவு கடனாகக் கொடுப்பான்?'' என்று கேட்டாள்.

''நிறையக் கொடுப்பாரும்மா. நாங்க ஏழைங்க 3000/-. 4000/-ன்னு வாங்குவோம். ஆனா லட்ச ரூபாய் கூட கொடுப்பாரும்மா. அந்த ஆளுக்கு வேண்டியது வட்டி. அம்புட்டுதான்,'' என்றாள் அவள்.

''அப்படியா! எனக்கு ஒரு 50,000/- வேணும். கொடுப்பானா?''

''கொடுப்பான்மா. ஆனா மகா கறார் பேர்வழியாச் சேம்மா. சொன்ன டயத்துக்கு வட்டியும் முதலும் வரல்லேன்னா, வீடு புகுந்துடுவான்மா. வட்டியும் அதிகம்,'' என்றாள்.

''அதெல்லாம் நான் பாத்துக்கறேன். நீ அந்த ஆளைக் கூட்டிகிட்டு வாயேன்,'' என்றாள் ஆஷா.

அந்தப் பட்டாணிக்காரனும் வந்தான். இவள் கேட்ட பணத்தைக் கொடுத்தான். அந்தப் பணத்தை இவள் கெத்தாக தன் டிரைவரிடம் கொடுத்தனுப்பினாள், அதை லேடீஸ் கிளப் தலைவி அமிர்தவல்லியிடம் கொடுக்கச் சொல்லி.

அந்த நேரத்தில் கேள்விப்பட்ட ஒரு செய்தி வேறு அவளுக்கு மிகுந்த வேதனையளித்தது. அவள் அண்ணி ரேவதிக்கு வளைகாப்பு நடந்ததாம். தன்னை அழைக்க வில்லையே என்று வருத்தமாக இருந்தது. தான் எப்படி அவர்களை நோகடித்துவிட்டு வந்தோம் என்று அவளுக்கு உறைக்கவேயில்லை.

எடுத்தவரை படத்தை விநியோகஸ்தர்களுக்குப் போட்டுக் காண்பிக்க ஏற்பாடு செய்தான் தீபக். ஒரு மணிநேரப்படம் தான் எடுத்திருந்தார்கள். அதற்கென்று உள்ள குட்டி தியேட்டரில் போட்டுக் காண்பித்தபிறகு, விளக்கைப் போட்டதும், விநியோகஸ்தர்களின் முகத்தைப் பார்த்தான் நடராஜ். உதட்டைப் பிதுக்கினார் ஒருவர். தலையை இடம் வலமாக அசைத்தார் இன்னொருவர்.

''சரி, இவங்களையெல்லாம் அனுப்பிவிட்டு நீங்க நாலு பேரும் வாங்க, பேசலாம்,'' என்றார் ஒருவர்.

மற்றவர்கள் போனபிறகு, ''ஏன்யா, இதெல்லாம் படம்னு எடுத்துட்டு அப்புறம் எங்களைக் குத்தம் சொல்றீங்களே, நல்லாவா இருக்கு?'' என்று அவர் கேட்க, டைரக்டர், ''ஐயா, ஒண்ணாம் தரமான கலைப் படம் ஐயா, கலைப்படம்!'' என்றார்.

''கலையையும் கண்டாங்க, கத்தரிக்காயையும் கண்டாங்க! படம் பார்க்க வரவன் எவனும் கலையைப் பார்க்க வரல்லையா. கண்ணுக்குக் குளிர்ச்சியா இரண்டு பொண்ணுங்களைப் பார்க்க வரான். நீங்க செலெக்ட் பண்ணியிருக்கிற பொண்ணு நல்லாத்தான் இருக்கு, தளதளவென்று புது முள்ளங்கியாட்டம். ஆனா, இப்படி இளுத்துப் போத்தின டிரெஸ்சோட பார்க்கணும்னா அவனவன் வீட்டுப் பொம்பளைங்களையே பார்த்துட்டுப் போறான். பணம் கொடுத்து வந்து இத்தைப் பார்க்கணுமா?'' என்றவர், தன்னுடன் வந்திருந்த மற்றவரைப் பார்த்து, ''என்னையா நான் சொல்றது?'' என்று கேட்டார்.

''முக்காலும் சத்தியம். அது மட்டுமில்லே. ஒரு வெளிநாட்டுக் காட்சியில்லே, ஒரு ரேப் சீன் இல்லே, லிப்லாக் சீன் இல்லே, ஹெலிகாப்டர் பைட்னு எதுவுமே இல்லாமே, என்னையா படம் எடுத்திருக்கீங்க.''

''ஸார், இது ஒரு லோ பட்ஜெட் படம்னு சொன்னேனே.''

''லோ பட்ஜெட் படம் எடுத்தா இப்படி லோ, லோன்னு அலைய வேண்டியதுதான். இத்தை நம்பிப் பணம் கொடுக்கற அளவுக்கு நாங்க முட்டாளில்லை. ஒரு இரண்டு சீனாவது நாங்க சொல்ற மாதிரி எடுக்க

முடியுமான்னு பாருங்க. அப்புறமா கொண்டாங்க. அட்லீஸ்ட் ஒரு குளியல் சீனாவது சேருங்கய்யா.''

''ஆமா, டூ பீஸ் ஸ்விமிங் ஸூட்ல!'' என்று சொல்லி விட்டு அவர் எழுந்துவிட்டார்.

நடராஜுக்கு ரொம்ப கவலையாகிவிட்டது. டைரக்டர், ''அந்தப் பொண்ணுகிட்டே நான் சொல்றேன்,'' என்றார்.

போய்ச் சொன்னதுதான் தாமதம், ''அம்மே, நமக்கு நாட்டுக்குப் பூவாம்!'' என்றாள் ஆனந்தி.

''என்னங்க இப்படிச் சொல்றீங்க? நீங்க இப்ப போயிட்டா இதுவரை எடுத்த படம் என்னவாகிறது?'' என்று நயமாகக் கேட்டார் டைரக்டர்.

''அதுக்காக நான் ஸ்விம் ஸூட்லேயும், லிப்லாக் ஸீன்லேயும் நடிக்க முடியாது!'' என்றாள் ஆனந்தி.

அவள் அம்மாவும், ''என்டே குருவாயூரப்பன் சத்திய மாயிட்டு என்டே மோள் அப்படி டிரெஸ் எல்லாம் போட்டுக்காது. இந்தப் படமே எங்களுக்கு வேண்டாம்!'' என்றாள்.

''சரி, உங்க மக மாதிரியே ஒரு பொண்ணை டூப்பா போட்டு இந்த சீனுக்கெல்லாம் யூஸ் பண்ணிக்கறோம்!'' என்றார் டைரக்டர்.

''நல்லாயிருக்கே, அந்தப் பெண்ணை என் பேர்ல தானே காண்பிப்பீங்க? என் பேர்தான் கெட்டுப் போகும். அந்தக் கதையெல்லாம் வேண்டாம். நைட் ட்ரையினுக்கு நாங்க புறப்படறோம்,'' என்றாள் ஆனந்தி.

''அதெப்படிம்மா, அட்வான்ஸ் வாங்கியிருகீங் களேம்மா?''

''இத்தனை நாள் வேலைக்கு அது சரியாப்போச்சு.''

''அம்மா, நீ புதுப் பொண்ணு. நடந்துக்கக் கத்துக் கோம்மா. இல்லைன்னா உன் தொழில்ல நீ முன்னேற முடியாது,'' என்றார் டைரக்டர்.

''நான் முன்னேறுவேனா, மாட்டேனாங்கறது என் கவலை... நீங்க உங்க வேலையைப் பாருங்க.''

''சரி, முடிவாக் கேக்கறேன். நாங்க சொல்றபடி நடிக்கப் போறியா இல்லையா?''

''முடியாதுங்க. நீங்க மொதல்ல இந்த மாதிரி ஸீன் இருக்குன்னு சொல்லல்லே. நான்தான் ஆரம்பத்திலேயே கன்னாபின்னான்னு நடிக்க மாட்டேன்னு சொல்லியிருந் தேனே. அதனாலே நியாயம் என் பக்கத்திலதான் இருக்கு. நீங்க என்ன பண்ணணுமோ பண்ணிக்குங்க!'' என்று திடமாகச் சொன்னாள் ஆனந்தி. அதற்கு ஒத்துப் பாடினாள் அவள் அம்மா.

விஷயம் சீரியஸாக ஆகித் தயாரிப்பாளர் சங்கத்துக்குப் போனது. தனித்தனியே இருவரையும் விசாரித்தனர். சதீஷும் தீபக்கும் எதிர்பார்க்கவேயில்லை, தன்னிடம் சதீஷ் தவறாக நடந்து கொண்டதை வெளியே சொல்லும் அளவுக்கு அவளுக்குத் துணிச்சல் இருக்கும் என்று. அவள் விவரமாகவே எல்லாவற்றையும் சொல்லி விட்டாள்.

அனைத்தையும் கேட்ட அவர்கள் தீர்ப்பை மறுநாள் சொல்வதாகச் சொல்லிவிட்டார்கள். நடராஜ் என்ன வரப்போகிறதோ என்று பயத்துடன் காத்திருந்தான். ஆனால் தீபக்கும் சதீஷும் நடராஜிடம், ''ஏய், இவளாலே என்னடா பண்ணிட முடியும்? நம்மளை வேண்டாம்னா

அவளுக்குத்தான் நஷ்டம். மிஞ்சிப் போனால் கோர்ட்ல கேஸ் போடுவோம். நீ கவலைப் படாதே!'' என்றனர்.

ஆனந்தியும் அவள் அம்மாவும் தங்கள் பக்கம் நியாயம் இருக்கிறது, என்ன பயம் என்று திடமாக இருந்தார்கள்.

44

ஒரு மாதம் ஆகிவிட்டது ஆஷா அந்தப் பட்டாணிக் காரனுக்கு வட்டியும், முதலும் தவணை முறையில் கொடுக்க வேண்டிய நாள். ஆனால் அந்தப் பணத்தை அவளால் புரட்ட முடியாமல் போனது. ஆனால் பணம் தந்தவன் சரியாக வந்துவிட்டான். இரவல் தந்தவன் கேட்கின்றான், அதை இல்லை என்றால் விடுவானா? வாசலிலிருந்தே இரைந்து கூப்பிட்டான். அம்மிணி வந்து, ''அவங்க வெளியே போயிருக்காங்களே!'' என்று பொய் சொன்னதும் அவன் வாசல் கேட்கிட்டேயே உட்கார்ந்துகொண்டான். ''அவங்க வர எந்நேரமானாலும் சரி, இருந்து வாங்கிக்கிட்டே போறேன்,'' என்றான்.

மாலை வேளை தெருவில் போவோரும், வருவோருமாக இருக்கும் நேரம். ஆஷா யார் பார்க்கிறார்களோ என்று சங்கடப்பட்டாள். ஒரு மணி நேரமாகியும் அந்தப் பட்டாணி நகரவேயில்லை. அவன் இதைப்போல் எத்தனை பார்த் திருப்பான்? எத்தனை நேரம் உள்ளே சத்தம் போடாமல் இருக்க முடியும்? கடைசியில் ஆஷா வெளியே வந்தாள். ''ஒரு வாரம் டைம் கொடுய்யா,'' என்று கேட்டாள்.

''இதோ பாருங்கம்மா. நான் மொதல்லயே சொன்னது தான். என் கிட்டே ஒரே வார்த்தைதான், இரண்டாம்

பேச்சே கிடையாது. இன்னிக்கு பணம் வந்தால்தான் நான் இந்த இடத்தைவிட்டுக் கிளம்புவேன்,'' என்றான்.

''இன்னிக்கு எங்கிட்டே பணம் இல்லையே!'' என்றாள்.

''அப்ப ஒண்ணு செய்யி, பொண்ணு! உன் புருஷனோ ஊர்ல இல்லை. எனக்குச் சாப்பாடு போட்டு உன் னோடயே படுக்க வெச்சுக்க. நீ தர வேண்டிய பணத் துக்கு 3 நாள், 3 ஆள் ஓவர். என்ன சொல்றே?'' என்றான் இரக்கமில்லாமல்.

''இதோ பார்! நான் கத்தி ஊரைக் கூட்டிடுவேன், இல்லே, போலீசுக்குப் போன் பண்ணுவேன்!'' என்றாள் ஆஷா.

''இதோ பார்! எனக்கு யார்கிட்டேயும் பயம் இல்லை. அப்படி யார் வந்தாலும் சொல்ல எனக்கு வேறே, வேறே கதைகள் இருக்கு. இந்தப் பூச்சாண்டிக்கெல்லாம் நான் பயப்படமாட்டேன். ஒண்ணு, பணத்தைக் கொடு. இல்லே, நான் சொன்னதை செய்,'' என்றான் துளிக்கூட அசையாமல்.

ஆஷாவிற்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அழுகை பொங்கிப் பொங்கி வந்தது. தன் கையில் இருந்த இரண்டு ஜோடி தங்க வளையல்களைக் கழற்றி அவன்மேல் எறிந்தாள். ''இந்தா, இதை எடுத்துகிட்டுப் போ, இனிமே, இந்தப் பக்கம் வராதே!'' என்றாள் கோபத்தோடு.

''இந்தாம்மா, நான் என் வேலைக்கா வந்தேன்? உன் வேலைக்குத்தான் வந்தேன்,'' என்று சொல்லிவிட்டு அந்த வளையல்களோடு கிளம்பிவிட்டான்.

இந்த இடத்தில், புக்ககத்து மனிதர்களோ, பிறந்தகத்து மனிதர்களோ உறவாக இருந்தால் இப்படியெல்லாம்

நடக்குமா என்று அழுகையாய் வந்தது... வயிறு வேறு காலி. இரைந்தது. உள்ளே பாதி டப்பாக்கள் காலி. இரவு இரண்டு சப்பாத்திக்குத்தான் மாவு இருந்தது. அதைச் செய்து வைத்துவிட்டுச் சமையல்காரி எப்போதோ போய்விட்டாள். இரண்டு மாதங்களாக மளிகைக் கடை பாக்கி நின்றதால் அவனும் இப்போது சாமான்கள் தருவதில்லை. அந்த இரண்டு சப்பாத்தியை ஊறுகாய் பாட்டிலைச் சுத்தமாக வழித்துத் தேறிய ஒரு ஸ்பூன் ஊறுகாயோடு சாப்பிட்டாள். பேசாமல் மாமியார், மாமனாரோடு இருந்திருக்கலாம். இல்லை, குறைந்த பட்சம் அண்ணன் வீட்டிலாவது இருந்திருக்கலாம். அப்படி என்ன அங்கு தப்பு நடந்துவிட்டது என்று இப்போதுதான் தோன்றியது. துர்காவிற்கு ஒரு போன் செய்யலாமா என்று போனைக் கையில் எடுத்தவள், தன்மானம் இடம் கொடுக்காததால் அதைச் செய்ய வில்லை. அழுதுகொண்டே தூங்கிவிட்டாள். பேசாமல் தற்கொலை செய்து கொள்ளலாமா என்றுகூடத் தோன்றியது.

காலையில் எழுந்து கண்ணாடியில் தன்னையே பார்த்துக் கொண்டவள் சுய பச்சாதாபத்தால் இன்னொரு முறை அழுது தீர்த்தாள். கன்னம் குழி விழுந்து, கண்களைச் சுற்றிக் கருவளையங்கள். ஃபேஷியல் ஏதும் செய்து கொள்ளாமல் முகமே பாழாகிவிட்டது போல் இருந்தது. இதன் நடுவில் அமிர்தவல்லியிடமிருந்து போன் வேறு வந்தது. ''நீயே வரவேற்புக் கமிட்டி தலைவியாக இருக்கியா?'' என்று. வெறுப்பாக இருந்தது ஆஷாவுக்கு.

அம்மிணி நாலு நாட்களாக வரவில்லை. அவளுக்கும் இரண்டு மாதம் சம்பளம் பாக்கி. பேசாமல் எல்லா

வற்றையும் ஏறக்கட்டிவிட்டு மாமியார் வீட்டோடு போய்விடலாமா என்று தோன்றியது. நடராஜைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது. போனாவது செய்து பேசலாம் என்றால் போனில் காசு இல்லை. சீ என்று வந்தது அவளுக்கு.

யோசித்துப் பார்த்தால் முதலிலிருந்தே நிறையத் தவறுகள் செய்திருக்கிறோம் என்று அவளுக்குத் தோன்றியது. தன்னைவிட வசதி குறைந்த குடும்பத்து நடராஜைக் காதலித்தது கூடத் தவறில்லை. ஆனா, அதன் பிறகு இரண்டு குடும்பத்தோடும் ஒத்துப் போகாமல், பணம், பணம் என்று நடராஜைப் பிடுங்கி, புகழுக்கு ஆசைப்பட்டு, அவனைத் தனியாகச் சென்னைக்கு அனுப்பிவிட்டு... இதில் எது சரி, இதில் எதை எப்படிச் சரி செய்யப்போகிறாள்?

தீர்ப்பு சொல்லும் நாள். நடராஜுக்குத் தயாரிப்பாளர் சங்கக் கட்டடத்துக்குப் போகவே பிடிக்கவில்லை. வலுக்கட்டாயமாகத்தான் அவனைத் தீபக்கும், சதீஷும் அழைத்துச் சென்றனர். ஆனந்தியும் அவள் அம்மாவும் விஷயம் பிலிம் சேம்பர்ஸுக்குப் போனதுமே நடராஜ் வீட்டைக் காலி செய்து, ஒரு லாட்ஜில் ரூம் எடுத்துத் தங்கிவிட்டனர்.

இவர்கள் எதிர்பார்த்த அந்தத் தீர்ப்பு முழுக்க முழுக்க ஆனந்திக்குச் சாதகமாகத்தான் வந்தது... அவளை நீச்சல் உடையிலோ, முத்தக்காட்சியிலோ நடிக்க வற்புறுத்தியிருக்கக்கூடாது. சதீஷ் அவளைப் பலவந்தப் படுத்திய தப்பு வேறு இருப்பதால் அவள் இனி அவர்கள் இஷ்டமில்லாத பட்சத்தில் இந்தப் படத்தில் மேற்கொண்டு நடிக்க மாட்டாள். தயாரிப்பாளர்கள் ஒப்பந்

தப்படி நடந்து கொள்ளாததால், அட்வான்ஸைத் திருப்பித் தர வேண்டிய அவசியல்லை.''

தீர்ப்பைக் கேட்ட அடுத்த வினாடி ஆனந்தியும் அவள் அம்மாவும் காத்திருந்த டாக்ஸியில் பறந்துவிட்டனர்.

நடராஜுக்கு இதைக்கேட்டதும் கண்ணை இருட்டிக் கொண்டு வந்தது... இனி எப்படித் தலை தூக்கப் போகிறோம் என்று திகிலாக இருந்தது. அருகே பார்த்தால் சதீஷும் தீபக்கும் காணப்படவில்லை. வாசலில் எங்காவது போயிருப்பார்கள், வந்துவிடுவார்கள் என்று காத்திருந்து பார்த்தான். ஜுரம் வந்திருப்பது போல உணரவும் வாசலுக்குப் போனான். டிரைவர் காருடன் காத்திருந்தான். ''சதீஷும், தீபக்கும் எங்கேப்பா?'' என்று கேட்டான்.

''அவங்க இரண்டுபேரும் அப்போதே போயிட்டாங்க சார். நீங்க வருவீங்க, இருந்து கூட்டிகிட்டு வான்னு சொல்லிட்டுப் போனாங்க, சார்,'' என்றான் டிரைவர்.

அப்படி என்ன அவசர வேலை, என்னைவிட்டு விட்டுப் போகும் அளவுக்கு என்று நினைத்துக் கொண் டான் நடராஜ். வண்டியில் ஏறி உட்கார்ந்து, ''வீட்டுக்குப் போப்பா,'' என்றான்.

வீட்டில் நுழையும்போதே, ''தீபக், சதீஷ்! எங்கேடா போயிட்டீங்க?'' என்று கேட்டுக் கொண்டேதான் நுழைந் தான். அங்கே இருந்தது சமையல்காரரும், தோட்டக் காரரும் தான்.

''சதிஷும், தீபக்கும் எங்கேப்பா?''

''அவங்க இரண்டுபேரும் பெட்டிகளோட அவங்க வந்த ஆட்டோவிலேயே புறப்பட்டுப் போயிட்டாங்க,'' என்றான் சமையல்காரன்.

"பெட்டிகளோடேயா, எங்கே?"

"ஆமாங்க, நீங்க வந்தா எங்க இரண்டுபேரையும் சம்பளப் பாக்கியை வாங்கிக்கச் சொன்னாங்க. இந்த வீட்டை இன்னும் ஒரு வாரத்தில் ஓனர் வந்து எடுத்துக் கிடப் போறார்னு சொன்னாங்க."

45

அப்படியே உறைந்து நின்றான் நடராஜ். ஜுரம் அதிகமாக உள்ளே போய்ப் படுத்தான். "சார், சார்..." என்று தொட்டுப் பார்த்த சமையல்காரர் ஒரு மாத்திரையும், வெந் நீரும் கொண்டு வந்து தந்தார். ராத்திரி ஜுரம் குறைந் திருக்க வேண்டும். கண்ணைத் திறந்து பார்த்தான்.

"சார், உங்களைப் பார்க்க ஒருத்தர் வந்து ரொம்ப நேரமா காத்துக்கிட்டுருக்காரு," என்றார் சமையல்காரர்.

"யாரு, பேர் என்னன்னு கேளு."

"டோனியாம்!" என்று அவர் சொல்ல, "அவரை உள்ளே கூப்பிடு," என்றான்.

டோனி வந்து நுழைந்ததும், "டோனி, டோனி! பாருடா என் நிலைமையை..." என்று அவன் மடியில் குப்புறப் படுத்துக் கொண்டு அழுது தீர்த்துவிட்டான் நடராஜ். அவன் முதுகையும் தலையையும் சற்று நேரம் தடவிக் கொடுத்துக்கொண்டு, சற்று நேரம் அழட்டும் என்று விட்டுவிட்டான் டோனி. என்ன நடந்தது என்று தெரியாவிட்டாலும், ஏதோ பெரிய விபரீதம், இல்லா

விட்டால் ஒரு வயசு ஆண்பிள்ளை இப்படிக்கூட அழுவானா? பாவம்! நடராஜ் அப்பாவியா, இல்லை முட்டாளா? என்ன நினைப்பது அவனைப்பற்றி என்று டோனிக்குப் புரியவில்லை. சொன்னாலும் புரியாத, சுயமாவும் தெரியாத எடுப்பார் கைப்பிள்ளை என்றுதான் சொல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

கொஞ்ச நேரம் கழித்து எழுந்த நடராஜ் முகத்தைக் கழுவித் துடைத்துக் கொண்டான். ''என்னடா நடந்தது?'' என்று கேட்டான் டோனி.

''உன் பேச்சைக் கேட்டிருக்கணும் நான்,'' என்று மட்டும் சொல்லி மௌனமாகிப் போனான் நடராஜ்.

''என்ன பணம் மொத்தமும் காலி, தீபக்கும் சதீஷும் எங்கோ தலைமறைவாகிவிட்டாங்க, அதானே?'' என்று கேட்டான் டோனி.

''எப்படிடா இத்தனை கரெக்டா சொல்றே?''

''இதைச்சொல்ல இத்தனை நாட்கள் தேவையில்லைடா. ஜவுளிக்கடையைத் துடைச்சவங்க தானே அவங்க. அதனால்தான் சொன்னேன். விடு, என்ன நடந்தது, சொல்லு.''

முடிந்தவரை விவரமாக நடந்ததைச் சொன்னான் நடராஜ்.

''இப்போ அவங்களை எங்கேன்னு தேடிப்பிடிக்கறது?'' என்று நடராஜ் கேட்க, டோனி. ''பிடிக்க முடியாது, அவங்க ஏதாவது மும்பய், டெல்லின்னு போயிருப்பாங்க,'' என்றான். திரும்பவும் கண்ணை இருட்டிக் கொண்டு வந்தது நடராஜுக்கு.

''நடராஜ், நடராஜ்! என்னடா என்னாச்சு உனக்கு?'' என்று அவனை உலுக்கினான் டோனி. திரும்ப ஜுரம் வந்து அனல்போல் கொதித்தது. குரல் கேட்டு வேலை செய்பவர்கள் மூவரும் வந்துவிட்டனர். ''கிட்டே டாக்டர்

எங்கேப்பா இருக்காரு?'' என்று டோனி கேட்க, ''அடுத்த தெருவிலேயே ஒரு டாக்டர் இருக்காருங்க.''

''யாராவது போய்க் கூட்டிக்கிட்டு வரீங்களா?'' என்று கேட்டான் டோனி.

''அவரு வீட்டுக்கு வர மாட்டாருங்களே.''

''சரி, நான் போய்க் கூப்பிட்டுப் பார்க்கிறேன்,'' என்று டோனி சொல்லி, சமையல்காரரிடம், ''இவரு என்ன சாப்பிட்டார்?'' என்று கேட்டான்.

''காலைல டிபன் ஒண்ணும் சரியா சாப்பிடல்லீங்க. வந்ததும் ஜுரம்ன்னாரேன்னு ஒரு மாத்திரையையும், வெந்நீரையும் கொடுத்தேன்,'' என்றார் அவர்.

''அதான் வெறும் வயிறு. நான் இந்த டாக்டர், இல்லாட்டா வேறு யாரையாவது கூட்டிகிட்டு வரேன். இவருக்குக் கொஞ்சம் பால் இருந்தா சர்க்கரை போட்டுக் கொடுங்க,'' என்று சொல்லி டிரைவருடன் காரில் புறப் பட்டான் டோனி.

''நான் விசிட்டெல்லாம் வருவதில்லையே'' என்றார் அந்த டாக்டர்.

''சார், ரொம்ப ஜுரம் சார். அவரு தூங்கறாரா, இல்லை மயக்கமாயிருக்காரான்னே தெரியல்லே. கொஞ்சம் தயவு செய்யுங்க டாக்டர்!'' என்று கெஞ்சி அவரை ஒருவாறு சம்மதிக்க வைத்துக் கூட்டி வந்தான் டோனி. நடராஜுக்கு ஜுரம் இன்னும் ஏறியிருந்தது. பாலும் கொடுக்க முடியல்லே என்று சொன்னார் சமையல்காரர்.

டாக்டர் பார்த்ததுமே அவசரமாக ஒரு ஊசி போட்டார். ''ஜுரம் ரொம்பவே அதிகமாய்த்தான் இருக்கு. இன்னும் ஒரு மணிநேரத்தில இறங்கணும் இந்த இஞ்செக்ஷனுக்கு.

இல்லேன்னா ஏதாவது ஹாஸ்பிடல்ல சேர்த்தீங்கன்னாத் தான் தேவலை. ஒரு மணி நேரம் கழிச்சுக் கண் விழிச் சார்னா இந்த மாத்திரைகளைக் கொடுங்க,'' என்று சொல்லி எழுதிக்கொடுத்தார். டாக்டர் போனதும், அவர் சொன்னபடி ஈரத்துணியை நனைத்து நெற்றியில் போட்டு, கால் கையெல்லாம் துடைத்து ஜுரத்தைத் தணிக்க முயற்சி செய்து கொண்டிருந்தான் டோனி.

ஒரு மணி நேரத்திற்கருகில் வந்தும் கூட ஜுரம் தணிகிற மாதிரி இல்லை. பயமாக இருந்தது டோனிக்கு. சோர்ந்துபோய் விட்டான்.

திடீரென்று சமையல்காரர், ''சார், சார்! வேர்த்துக் கொட்டுது சார். ஜுரம் இறங்க மாதிரி இருக்கு சார்!'' என்றார். தொட்டுப் பார்த்தால் ஜுரம் குறைந்துதான் இருந்தது. டாக்டர் சொன்ன மாத்திரைகளைப் பணம் கொடுத்து வாங்கிவரச் சொல்லிக் கொடுத்தான் டோனி. நடராஜைக் கொஞ்சம் பாலும் பிஸ்கெட்டும் சாப்பிட வைத்தான். ஈரமான துணிமணிகளை மாற்ற உதவினான். டாக்டருக்கு சமாசாரம் சொல்லியனுப்பினான். அந்த நேரம் தான் வராமல் இருந்திருந்தால் என்ன ஆகியிருக்கும் என்று நினைத்தாலே அவனுக்குப் பயமாக இருந்தது. அதையேதான் சொன்னார்கள் அங்கிருந்த வேலையாட்கள்.

''சார், உங்களுக்குத் தோசையும் சட்னியும் பரவாயில் லையா ராத்திரிக்கு?'' என்று கேட்டார் சமையல்காரர்.

''ஏதானாலும் சரி,'' என்றவன் சாப்பிட்டுவிட்டு அந்த ரூமிலேயே இருந்த ஒரு திவானில் படுத்துவிட்டான். இரவு ஒரு தரம் ஜுரம் ஏறியதே தவிர, அந்த அளவு அதிகமில்லை. மருந்து மாத்திரை கொடுத்தவனுக்கு அப்போதுதான் தோன்றியது. நடராஜ் வீட்டுக்குப் போன்

பண்ணிச் சொல்லவேயில்லையே என்று. மணியைப் பார்த்தான். காலை மணி மூன்றாகியிருந்தது. இந்த அகாலத்தில் அவர்களை எழுப்பிச் சொல்லுவதா என்று யோசித்தான். ஆனால் இப்போது சொன்னால்தான் இரவுக்குள் அவர்கள் வந்த பொறுப்பேற்றுக் கொள் வார்கள்.

டோனி மறுநாள் தன்னுடைய கடைக்குச் சில கேமரா வகையறாக்கள் வாங்க மும்பய் புறப்பட வேண்டி யிருந்தது. இங்கு சில சாமான்கள் வாங்கி லாட்ஜில் தான் தங்கியிருந்த அறையில் வைத்துவிட்டுத்தான் நட ராஜைப் பார்க்க வந்திருந்தான்... அதனால் துணிந்து போன் செய்தான்.

ஆஷாவிற்கு போன் செய்து விஷயத்தைச் சொல்ல லாமா என்று யோசித்தவன், வேண்டாம், தனியே இருக்கும் பெண் என்று துர்காவிற்கு போன் செய்தான். தீபக், சதீஷ் நடராஜை ஏமாற்றிவிட்டார்கள் என்பதை அவள் ஒருவிதமாகச் சுலபமாக எடுத்துக் கொண்டு விட்டாள். அவர்கள் எதிர்பார்த்ததுதானே அது. ஆனால் நடராஜுக்கு ஜுரம் என்று சொன்னதைத்தான் அவளால் தாங்க முடியவில்லை.

''தாங்க்ஸ், டோனி! தெய்வம் போல நீ அங்கே போயிருக்கே. அவனைக் கொஞ்சம் பார்த்துக்கோப்பா. நாங்க நாளை சாயந்தரத்துக்குள்ளே வந்துடறோம்,'' என்று திரும்பத் திரும்பச் சொன்னாள். ''கவலைப்படா தீங்கக்கா!'' என்று டோனி அவளுக்கு உறுதி அளித்தான். ''அக்கா, ஆஷாவுக்குச் சொல்லி அவங்களையும் கூட்டிட்டு வந்துடுங்க,'' என்றவன் தான் ஏன் அவளுக்குப் போன் பண்ணவில்லை என்றும் சொன்னான்.

போனை வைத்தவுடனேயே ஆதிக்குப் போன் செய்தாள். விஷயத்தைச் சொன்னதுமே, ''நீ அப்செட் ஆகாதே துர்கா! இப்போ ஜுரம் இறங்கிடுச்சின்னு சொன்னான் இல்லையா?'' என்று கேட்டான்.

''நான் திரும்பத் திரும்பக் கேட்டேன். ஜுரம் குறைஞ்சுடுத்துன்னுதான் சொன்னான்,'' என்றாள்.

''தைரியமா இரு. நான் இதோ புறப்படறேன். என் கார் போதுமா?'' என்றான்.

''இல்லை, அம்மா, அப்பாவும்தான் வரணும்பாங்க. இங்கிருந்து காரை எடுத்துக்கலாம். டிரைவருக்குப் போன் பண்ணறேன்,'' என்றாள்.

''ஆஷாவுக்குப் போன் பண்ணித் தயாராக இருக்கச் சொல்லு. நான் இதோ வரேன்,'' என்றான். அவசரமாகத் தனக்கு இரண்டு செட் துணிமணிகளை எடுத்துக் கொண்டான். அவன் அப்பா, அம்மா திருச்செந்தூர் போயிருந்ததால் காலையில் போன் பண்ணி விஷயத்தைச் சொல்லிக் கொள்ளலாம் என்று சமையல் காரரை எழுப்பி வீட்டைப் பூட்டிக் கொள்ளச் சொல்லி விட்டுக் கிளம்பினான்.

ஆதியுடன் போன் செய்து பேசி முடித்த துர்கா மெதுவாக அம்மா, அப்பாவை எழுப்பி விஷயத்தைச் சொன்னாள். அப்பா மௌனமாக இருந்தார். எந்த ரியாக்ஷனும் காண்பிக்கவில்லை. அம்மா அழுது புலம்ப, ''அம்மா, இப்ப நான் தைரியமா கிளம்ப எனக்கு ஒத்தாசை பண்ணுங்க. எல்லாம் சரியாயிடும்மா. அம்மன் நமக்கு ஒரு குறையும் வைக்க மாட்டாள்,'' என்றாள். டிரைவருக்குப் போன் பண்ணி விஷயத்தைச் சொல்லி ஆஷாவையும் கூட்டிக்கிட்டு வரச் சொன்னாள்.

ஆஷாவுக்குப் போன் பண்ணியதும் அவள் பெரிதாக அழ ஆரம்பித்துவிட்டாள் ''இதோபார்! டோனிதான் நடராஜைப் பார்த்துக்கறான். அவனுக்கு இன்னிக்கு ராத்திரி மும்பை போகணுமாம். ஆகையினாலே அவன் கிளம்புமுன் நாம போய்ச் சேரணும். அழாதே. நேரத்தை வேஸ்ட் பண்ணாமே கிளம்பு. இப்போ கார் வரும், வந்துடு,'' என்றாள்.

ஆக துர்கா, நாராயணசாமி, தனம், ஆஷா, ஆதித்யா எல்லோருமாய்ச் சென்னைக்கு அவர்களின் இன்னோவா காரில் புறப்பட்டார்கள். எல்லோரும் கடவுளை வேண்டிக்கொண்டு, மௌனமாக இருந்தனரே தவிர, எவரும் எவரோடும் பேசவில்லை.

விடியற்காலையில் சமையர்காரர் வந்து, ''சார், நான் ராத்திரி கொஞ்சம் தூங்கிட்டேன். நீங்க மாடிக்குப் போய் கொஞ்ச நாழி தூங்கிட்டு வாங்க,'' என்றார்.

மாடியில் ஆனந்தி இருந்த அறை சுத்தமாக இருந்தது. படுத்து நன்றாகத் தூங்கிவிட்டு 9 மணிக்குத்தான் எழுந்து வந்தான். அப்போதுதான் நடராஜும் எழுந்திருந்தான். காப்பி சாப்பிட்டானே ஒழிய, நடராஜுக்குப் பேசும் அளவு தெம்பெல்லாம் இல்லை. திரும்பப் படுத்துத் தூங்கிவிட்டான்.

அதன் பிறகு டாக்டரைத் திரும்ப வந்து நடராஜைப் பார்க்க வைத்தான் டோனி... ஜுரம் அத்தனை அதிக மாகா விட்டாலும், அவ்வப்போது வருவதும், போவது மாக இருந்தது.

மதுரையில் காலை 4 மணிக்கெல்லாம் புறப்பட்டு விட்டனர் நடராஜ் வீட்டினர். அவ்வப்போது டோனிக்குப்

போன் செய்து கொண்டுதான் இருந்தனர். ''பயப்படாமே வாங்க, அவனுக்கு ஜுரம் அத்தனை அதிகமில்லை. இப்போது டாக்டர் வந்து பார்த்துட்டுத்தான் போனார்,'' என்று தைரியம் சொல்லிக் கொண்டிருந்தான்.

மத்தியானத்துக்கப்புறம்தான் நடராஜ் டோனியிடம், ''போனில் யாரோடு பேசிக்கிட்டுருந்தே?'' என்று கேட்டான்.

''துர்காவுக்கும், ஆஷாவுக்கும்தான் போன் பண்ணினேன். அவங்கள்லாம் வந்துகிட்டுருக்காங்க. 6 மணிக்குள்ள வந்துடுவாங்க,'' என்றான்.

''ஏன் டோனி அப்படிப் பண்ணினே? அவங்க எல்லோர் முன்னாடியும் நான் அவமானப் படணும்னா?'' என்று அரற்றினான் நடராஜ்.

''இதென்ன பேச்சு, நடராஜ்! இனிமே இங்கே உட்கார்ந்து என்ன பண்ணப்போறே? நீ எவ்வளவு மெலிஞ்சிருக்கேன்னு உனக்குத் தெரியுமா? உடம்பும் நல்லாயில்லை. கையிலே காசும் இல்லை. நான் இன்னிக்கு ராத்திரி மும்பைக்குப் போயே ஆகணும். உன்னை இப்படியே விட்டுட்டு நான் எப்படிடா போவேன்? உங்க அப்பா, அம்மாவோட நீ உருப்படியா ஊருக்குப் போய்ச் சேரு,'' என்றான்.

''என்னால் அவங்க யாரையும் பார்க்க முடியாதுடா. ரொம்ப அவமானமா இருக்கும். நான் பாட்டுக்கு ஏதாவது கண்காணாத இடத்துக்குப் போயிடுவேன்டா. நீ எதுக்குடா போன் பண்ணினே? யாருக்கும் எதுக்கும் உதவாதவனாக நாளைக் கழிச்சாச்சு. போடா. நீ போன் பண்ணியிருக்க வேண்டாம்,'' என்று புலம்பிக் கண்ணால் ஜலம் விட்டான்.

''டேய், டேய்! அழாதேடா. இப்போ அழுது மறுபடி ஜுரம் ஜாஸ்தியா போயிடப்போறதுடா!'' என்று பதறினான் டோனி.

''போடா. நீ என்னைக் கேட்டுட்டு போன் பண்ணியிருக்கலாம்டா. அவங்க இப்ப என்னைக் கூட்டிகிட்டுப் போறோம்பாங்க. தெரிஞ்சவங்க மத்தியில தலையைக் காண்பிக்கவே எனக்கு யோக்கியதை கிடையாதுடா!'' என்றான் நடராஜ்.

''ஏன்டா. இரண்டு அட்ரஸ் இல்லாத பசங்களை நம்பி அத்தனை பணத்தையும் எடுத்துகிட்டு வந்து கோட்டை விட்டுருக்கே. இப்போ உன்னைப் பெத்தவங்களையும், கட்டினவளையும் நம்பிப் போக வெட்கமாயிருக்கா? உன்னைக் குத்திக் காண்பிப்பதற்காக நான் இதைச் சொல்லல்லே. நீ பேசறதுல ஏதாவது நியாயம் இருக்கா? பேசாமே படுத்துக்கிட. நான் கொஞ்சம் வெளியே போய் சாயந்திரம் மும்பய் போற விஷயமா ஒருத்தரைப் பார்க்கணும். பார்த்துட்டு வரேன்,'' என்றான் டோனி.

''ஏன்டா டோனி! நீ கூடவா என்னை விட்டுட்டுப் போகப்போறே? சமுத்திரத்தில முழுகப் போறவனுக்கு மரக்கட்டை கிடைச்ச மாதிரி நீ வந்தே. நீயும் போறேங் கறியேடா! ஆனா, நான் உன்னைக் கடைசியா பேசினதுக்கும், நடத்தினதுக்கும் நீ இத்தனை தூரம் வந்ததே அதிகம்தான்.''

''போடா, ஏதேதோ பேசிக்கிட்டு! தீராத வேலைடா. நேத்து ராத்திரிக்கே போயிருக்கணும். உன்னை அத்தனை ஜுரத்திலே தனியா விட்டுட்டுப் போகப் பிடிக்காமே தான் போகாமே இருந்தேன்... நான் உனக்கு மாத்திரை

கொடுக்கறேன். அதுக்கு முன்னே கொஞ்சம் கஞ்சி, ரசம்விட்டுச் சாப்பிடு. நான் போயிட்டு சீக்கிரமா வந்துட றேன்,'' என்றான் டோனி.

அதேபோல் அவன் நடராஜுக்கு வேண்டியதை யெல்லாம் செய்துவிட்டு புறப்பட்டுப் போனான்.

இரவு சரியாகத் தூக்கமில்லாத அலுப்பு சமையல்காரர் தூங்கிவிட்டார். டிரைவர் காலையிலிருந்தே கண்ணில் படவில்லை. சந்தடி சாக்கில் ரொம்ப நாட்களாக அங்கிருந்த வெளிநாட்டு மது வகைகள் மேலே ஒரு கண் வைத்திருந்த தோட்டக்காரன் ஒரு பெரிய பாட்டிலை எடுத்து நன்றாக ஏத்திக் கொண்டு தன் போர்ஷனில் கிடந்தான்.

நடராஜுக்கு மன உளைச்சல் தாங்கவில்லை. தூக்கமும் வரவில்லை. ஒரு வேகத்தில் எழுந்தான். சுற்றும் முற்றும் பார்த்தான். அங்கிருந்த ஒரு லுங்கியை எடுத்து ஓரங்கள் சேர்த்துத் தைத்திருந்ததைக் கிழித்தான்.

46

ஒன்றுமே சாப்பிடாமல் மதுரையிலிருந்து புறப்பட்ட வர்கள், ரொம்ப நேரம் எங்கும் நிற்கவில்லை. திருச்சி அருகே வரும்போது ஒரு சின்ன ஹோட்டலில் எல் லோருக்கும் வலுக்கட்டாயமாக காப்பி வாங்கிக்கொடுத்து விட்டு, கையில் எல்லோருக்குமாக இட்லி வாங்கிக் கொண்டான் ஆதித்யா. இரண்டு பிரெட் பாக்கெட்டும் வாங்கிக்கொண்டான். டிரைவர் உட்பட யாருக்கும்

எதுவும் சாப்பிடவேண்டும் என்று தோன்றவில்லை. ஆனால் பெரியவர்கள் இருவரும் மாத்திரை சாப்பிடு பவர்கள் ஆயிற்றே! என்ன அவசரம் ஆனாலும் மாத் திரை, மருந்து, ஏ.டி.எம். கார்டு, செல், சார்ஜர், மாத்துத் துணிகள் எல்லோருக்கும் எடுத்துக் கொண்டுதான் வந்திருந்தாள் துர்கா. ரொம்பக் கட்டாயப்படுத்தி எல் லோருக்கும் கடையில் வாங்கிய டிபனைக் கொடுத்து, அப்பா, அம்மாவுக்கு மாத்திரைகளைக் கொடுத்தாள்.

எல்லோரும் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாலும், துர்காவிற்கும், ஆதித்யாவிற்கும் மற்றவர்களைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு இருந்ததால், தங்களை ரொம்பக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

நடுநடுவே தனலட்சுமி, "அவனை வெளியூர் போகவே விட்டிருக்கக்கூடாது. அவன் உலகம் தெரியாத பிள்ளை. தனியே விட்டது நம்ம தப்புதான்!" என்று புலம்பினாள்.

தானும் நடராஜுமாக இவர்களுக்குச் செய்த மரியாதைக் குறைவான செயல்கள் எல்லாம் ஆஷாவின் மனத் திரையில் ஓடியது... என்னதான் இவர்களை அவமதித்திருந்தாலும் இவர்கள் அதையெல்லாம் மன்னித்து அவனைப் பார்க்க இப்படி ஓடுகிறார்களே என்ற நினைப்பே அவளை ரொம்பவும் கூனிக் குறுகச் செய்துவிட்டது.

"அக்கா, நான் பண்ணினது எல்லாமே தப்புக்கா. மன்னிச்சுடுங்கக்கா. ஆரம்பத்திலிருந்தே நான் சரியாக நடந்துக்கல்லே. அத்தை, மாமா, என்னை மன்னிச்சுடுங்க. நான் யாரையும் மதிக்காம நடந்துக்கிட்டேன். என்னை வெறுத்துடாதீங்க!" என்று அழுகையினூடே சொல்லிக் கொண்டே வந்தாள்.

''அந்தப் பிள்ளையை நான்தான் அவன் போக்கு லேயே விட்டுக் கெடுத்துவிட்டே,''னென்று சொல்லி வருத்தப்பட்டார் நாராயணசாமி.

அப்போதுதான் ஒரு முறை டோனியோடு பேசிய துர்கா, ''இதோ பாருங்க, யாரும் வருத்தப் படாதீங்க. நடராஜுக்கு ஜுரம் நார்மலாகிவிட்டதாம். பேசிக்கிட்டு தான் இருக்கானாம்,'' என்றாள்.

''இல்லைக்கா, அவர் முதலிலேயே என்னையும் கூப்பிட்டார். நான் கூடப் போயிருந்தா இத்தனை தூரம் ஆகியிருக்காது. நடுவிலே ஒருதரம் டிக்கெட் வாங் கிட்டு, எங்க லேடீஸ் கிளப்பில ஏதோ பெரிய நிகழ்ச்சி, பிரஸ்காரங்கள்லாம் வருவாங்க, என் போட்டோவெல் லாம் பேப்பர்ல வரும்னு பைத்தியக்காரத்தனமாக ஆசைப் பட்டுப் போகாமே இருந்துட்டேன். நான் பண்ணினது எவ் வளவு பெரிய தப்புன்னு இப்ப தெரியுது. உங்க போட்டோ பேப்பர்ல வந்துதேன்னு பொறாமை. புலியைப் பார்த்துப் பூனை சூடு போட்டுகிட்ட மாதிரி பண்ணியிருக்கேன். அவர் நல்லபடியா இருந்தா அதுவே போதும். நான் முழுசா திருந்திட்டேன், மாறிட்டேன்!'' என்று அழுதாள் ஆஷா.

ஆதரவாக அவள் கையை எடுத்துத் தன் கைகளோடு சேர்த்துக் கொண்ட துர்கா, ''அழாதேம்மா, அவன் நல்ல படியா ஆயிடுவான்!'' என்று ஆறுதலாகக் கூறினாள்.

ஒரு மாதிரி பாதிதூரம் வந்தபோது இவர்களுக்குப் பொறுமையே இல்லை. ''இன்னும் கொஞ்சம் வேகமாகப் போப்பா,'' என்றாள் தனம்.

''எங்கேம்மா, சின்ன ஐயாவுக்கு என்ன ஆச்சோன்னு கவலையாக இருக்கு. வழக்கம் போல ஓட்ட முடியல் லேம்மா,'' என்றான் டிரைவர்.

''ஒரு ஓரமா வண்டியை நிறுத்து,'' என்றான் ஆதி. ''நீ இந்தப் பக்கம் வா. நான் கொஞ்ச நேரம் ஓட்டறேன்,'' என்று சொல்லித் தான் ட்ரைவ் பண்ண ஆரம்பித்தான்... திரும்பச் சென்னைக்குச் சற்று தூரத்தில்தான் டிரைவரிடம் விட்டான்... சென்னையில் நுழைந்தாயிற்று. என்ன ட்ராபிக். சாயந்தரம் நெருங்க நெருங்க ஊர்ந்துதான் போகவேண்டியிருந்தது... டோனி தெளிவாக விலாசம் சொல்லியிருந்தான். போனில் வழிகாட்டும் கருவியைப் பயன்படுத்தி அதிக சிரமப்படாமல் டோனி சொன்ன இடத்துக்குப் பக்கத்தில் வந்து கொண்டிருந்தார்கள்.

அந்த லுங்கியில் சேர்த்துத் தைத்திருந்ததைக் கிழித் தவன் வாசற் கதவைப் போட்டான். அதைச் செய்வதற் குள்ளேயே கட்டிலில் மல்லாந்துவிட்டான். திரும்ப ஜுரம் வருகிற மாதிரி இருந்தது. அவனுக்குச் சிரிப்பு வந்து விட்டது. அவன் செய்ய நினைத்திருக்கும் காரியத்திற்கு ஜுரம் வந்தால் என்ன என்று நினைத்துக் கொண்டான். ஃபேனைப் பார்த்துப் படுத்துக் கொண்டிருந்தபோது எல்லாமும் எல்லாரும் மனதில் வந்து போனார்கள்.

அப்பா, அம்மா பரவாயில்லை. தான் போனாலும் நல்லதாக ஒரு குழந்தை, துர்கா மீதமிருப்பாள். ஆதியைக் கல்யாணம் செய்து கொண்டு பேரன், பேத்தியைப் பெற்றுக் கொடுப்பாள். ஆஷாவைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது. அவள் ஓரிரு முறை வருகிறேன் என்றபோது, இவனும் அத்தனை தீவிரமாக வா என்று சொல்லவில்லை. தீபக், சதீஷை நம்பித் தான் வந்திருந்தாலும் அவர்கள் இருக்கும் இந்த இடத்தில் ஆஷா வந்து இருப்பது அவனுக்கு ஏதோ அத்தனை சம்மதமாக இல்லை. ஆஷா, 'நீங்க எப்ப வருவீங்க?'

என்று எப்போதும் கேட்பாள். இவனும் ஊரிலிருந்து வந்த திலிருந்து போகவேயில்லை. இங்கே அந்த மலையாளப் பொண்ணுடன் தீபக், சதீஷை விட்டுவிட்டுப் போக இஷ்டமில்லாததுதான் காரணம். ஆடு, புலி, புல்லுக் கட்டு கதை போல் ஆகிவிட்டது.

ஆனாலும் இவை எல்லாம் தவிர முக்கிய காரணம் படம் எடுப்பதில் தனக்குத் தோல்விதான் கிடைக்கப் போகிறது என்று எடுக்க ஆரம்பித்த கொஞ்ச நாளிலேயே தெரிந்துவிட்டதுதான்.

செல்லில் ஆஷாவின் போட்டோவைப் பார்த்தான். ''ஸாரி, ஆஷா! உன் வாழ்க்கையிலிருந்து நான் இப்ப பாதியில் போகிறேன். என்னை மன்னித்துவிடு!'' என்று மானசீகமாக அவளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண் டான். ''நல்ல வேளை குழந்தை எதுவும் பிறக்கவில்லை. நீ உன் அண்ணன் ஆசைப்படி ஒரு கலெக்டரையோ, இல்லை ஒரு டாக்டரையோ திருமணம் செய்துகிட்டு நிம்மதியாக இரு!'' என்று நினைத்துக் கொண்டான்.

திடீரென்று நேரமாகிவிட்டதே என்று தோன்ற அந்த லுங்கியை எடுத்துக் கட்டில் மேல் ஏறி நின்று சுருக்கு ஒன்று போட்டான். அதுகூட அத்தனை சுலபமாக இல்லை. ரொம்ப களைத்துவிட்டான். சரி சரி. எல்லாக் களைப்பும்தான் இப்போது தீர்ந்துவிடுமே என்று எண்ணிக்கொண்டு கழுத்தில் அதை மாட்டிக் கொண்டு கட்டிலைக் காலால் தள்ளப் பார்த்தான். அந்த நேரம் கதவைத் தட்டும் ஓசையும், 'சார், சார், கதவைத்திறங்க!'' என்று சமையல்காரர் கூப்பிடுவதும் கேட்டது. சீக்கிரம் உதைக்க வேண்டும் என்றால் கட்டிலை உதைக்க வந்தால்தானே. அவனுடைய ரூம் ஹாலில் பின் பக்கத்து ரூம். எனவே சமையல்காரர் தோட்டக்காரரை

பெயர் சொல்லிக் கூப்பிடுவதும் கேட்டது. இறங்கிக் கட்டிலை நகர்த்திவிட்டுச் சுருக்கில் கழுத்தை நுழைக்க லாமா என்று நினைத்தால் எசகுபிசகாகக் கழுத்தில் துணி மாட்டிக் கொண்டிருந்தது. மிகச் சரியாக அந்த நேரம் வாசலில் கார் வந்து நிற்கும் சப்தமும், தடதடவென்று காலடி ஓசைகளும் கேட்டன.

முதலில் ஆதியும், டிரைவரும் வீட்டிற்குள் நுழைய, சமையல்காரரும், தோட்டக்காரரும், 'சார், நடராஜ் ஸார்,' என்று சொல்லிக் கதவைத்தட்டும் சப்தமும் கேட்க, ஓடிவந்தார்கள். மற்ற அனைவரும் வர, சமையல்காரர், ''நடராஜ் ஸார் கதவைத் திறக்க மாட்டேன் என்கிறார்மா!'' என்று பதறினார்.

எல்லோருமாக, ''நடராஜ், நடராஜ்...'' என்று கத்திக் கதவைத் தள்ளப்பார்க்க, அதைத் திறக்க முடியவில்லை. பிறகு பின்பக்கம் நகர்ந்து அங்கிருந்து ஓடிவந்து எல்லோரும் முழுமூச்சோடு கதவில் மோத, கதவு திறந்து கீழே விழுந்தது. இவர்கள் சுதாரித்துக் கொண்டு கீழே விழமால் பார்த்தால், நடராஜ் கிட்டத்தட்ட சுருக்கை இறுக்கிவிட்டான். ஆதி கட்டிலின் மேல் ஏறிச் சுருக்கை அவிழ்க்க முயல, டிரைவர் நடராஜின் கால்களைத் தூக்கிப் பிடித்துக் கொண்டான், சுருக்கு இருக்காமல் இருக்க. ஆனால் நடராஜ் ஆதிக்கு ஒத்துழைக்கவில்லை. அவன் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை கொடுத்து ''மடையா! சற்று நேரம் சும்மா இரு,'' என்று அதட்டிக் கொண்டே சுருக்கை அவிழ்த்துவிட்டு, அவனைக் கட்டிலின் மேல் படுக்கவிட்டான். அதற்குள், தனம், ஆஷா, துர்கா எல்லோரும் கதறிவிட்டனர்.

''இதுக்குக்கூட, இந்தச் சுருக்கைச் சரியாகப் போட்டுக் கக்கூட, எனக்குத் துப்பில்லை, பார்த்தாயா ஆதி?'' என்று சொல்லி அழுதான் நடராஜ்.

டோனி அப்போதுதான் உள்ளே வந்தவன் நடந்ததை உடனே ஊகித்துவிட்டான். ''உங்களைத்தானே பார்த்துக் கோங்க, ஒரு மணி நேரத்தில வந்துடறேன்னு சொல் லிட்டுப் போனேன். இதுதான் நீங்க பாத்துக்கற லட்சணமா?'' என்றவன், ''ஏன்டா நடராஜ், நீ என்ன முட்டாளாடா!'' என்றான். ''ஆமாண்டா, பாரு! எதையுமே சரியாச் செய்யத்தெரியாத முட்டாள்தான் நான்!'' என்று கண்ணீர் பெருக்கினான்.

''என்ன காரியம் பண்ணப் பார்த்தே?'' என்று எல்லோரும் ஒருவர் பின் ஒருவராக வந்து அவனைக் கட்டிக் கொண்டனர்.

''நான் வாழ்க்கையிலே தோத்துட்டேன். பணமெல் லாம் போச்சு. இனிமே நான் இருந்து என்ன பிரயோ ஜனம்?'' என்று முகத்தைக் கைகளில் புதைத்துக் கொண்டான் நடராஜ்.

துர்கா அவன் அருகில் வந்தாள். ''இதோ பார், நடராஜ். எது வேணுமானாலும் போகட்டும். நீ இன்னிக்குப் புதுப் பிறவி எடுத்திருக்கே. அது நாங்க செய்த புண்ணியம். ஒரு ஐந்து நிமிஷம் லேட்டாக வந்திருந்தால் என்னா ஆயிருக்கும்? உன்னை நம்பி இதோ இருக்காளே, ஆஷா, அவளுக்கு நீ தரும் பரிசா இது?'' என்றாள். அதன் பிறகு அவனுக்குக் குடிக்கத் தண்ணீர் கொடுத்து, அவனை ஆசுவாசப்படுத்திக் கொஞ்ச நேரம் கழித்து பிரெட் கொடுக்க, சற்று சீரானது அவன் நிலைமை.

அதன் பிறகு ஆஷாவை அவனோடு விட்டுவிட்டு எல்லோரும் வெளியே வந்து உட்கார்ந்தனர்.

உள்ளே பலவீனமாகப் படுத்துக் கிடந்த நடராஜைப் பார்த்ததும், அடிவயிற்றிலிருந்து பொங்கிக் கொண்டு வந்தது ஆஷாவிற்கு... அவளை நோக்கி நடராஜ் கைகளை நீட்ட, ஓடி வந்து அவனைக் கட்டித் தழுவிக் கொண்டு கண்ணீர் வடித்தாள். ''என்னை மன்னிச் சுடுங்க. எல்லாத்தப்பும் என்னோடதுதான். நான் உணர்ந் துட்டேன். இனிமே நான் நல்லா நடந்துப்பேன்!'' என்று விம்மலுக்கிடையே புலம்பினாள்.

அவள் தலையைக் கோதி, ''அழாத ஆஷா! நானும் தானே ஏமாந்துட்டேன். வெரி சாரிம்மா. நீ வசதியா இருக்க வேண்டியவ!'' என்றான்.

அதன் பிறகு மௌனம் மட்டும்தான். 'பிரிந்தவர் மீண் டும் சேரும்போது, அழுதால் கொஞ்சம் நிம்மதி, அதுதான் தெய்வத்தின் சந்நிதி!' என்ற வார்த்தைகளின் உண்மை அர்த்தம் அங்கே அரங்கேறிக் கொண்டிருந்தது.

டோனி தன்னிடம் நடராஜ் சொன்னதெல்லாம் மற்றவர்களுக்குச் சொன்னான்... சமையல்காரரும், தோட்டக்காரரும்கூடத் தங்களுக்குத் தெரிந்ததை எல்லாம் சொல்லி வருத்தப்பட்டுக் கொண்டனர்.

டோனிக்கு இவர்கள் நன்றி சொல்ல, அவன் எல் லோரிடமும் விடைபெற்றுக் கொண்டு, நடராஜ் ரூமில கதவைத் தட்டி அனுமதி பெற்றுக் கொண்டு உள்ளே நுழைந்தான். கூடவே வந்த ஆதி, ''ஸாரி நடராஜ். பலமா அடிச்சுட்டேன், இல்லே? வெரி ஸாரி!'' என்றான்.

''எனக்கும் அது தேவைதான்!'' என்று நடராஜ் சொல்ல. டோனி அவனிடம் சொல்லிக் கொண்டு புறப்பட்டான்.

''ரொம்ப தேங்க்ஸ்டா டோனி. 'உயிர் காப்பான் தோழன்'கறதை நீ நிரூபிச்சுட்டே. என்னோட மடத் தனத்தினாலே உன்னை எத்தனையோ தடவை

புண்படுத்தியிருக்கேன். அதையெல்லாம் மனசிலே வெச்சுக்காதேடா!'' என்று சொல்லி அவனுக்கு விடை கொடுத்தான்.

அதன் பிறகு ஒரே ஒரு நாள். நடராஜ் வீட்டுக்கார ருடைய போன் நம்பர் தர, அவருக்குப் போன் செய்து மெயில் ஐ.டியையும் வாங்கிக்கொண்ட ஆதி, லேப் டாப்பின் மூலம் கணக்கையெல்லாம் சரி செய்தான். அந்த வீட்டில் நடராஜுடைய துணிமணிகளைத் தவிர இவர்களுக்குச் சொந்தமானது வேறொன்றும் இல்லை. எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு வீட்டுச் சாவியை அதன் சொந்தக்காரருடைய உறவினர் வீட்டில் கொடுத்துவிட்டு எல்லோரும் கிளம்பினார்கள்.

47

வரும்போது இருந்த மாதிரி இல்லாமல், திரும்பிப் போகும் போது சந்தோஷமாகச் சிரித்துக் கொண்டும் பேசிக்கொண்டும், திரும்பினர்.

டிரைவருடன் அப்பா, பின்னால் அம்மா, நடுவில் துர்கா, பக்கத்தில் ஆதி அதற்குப் பின் சீட்டில் சற்றுப் படுத்து எழுந்திருக்க வசதியாய் நடராஜும் ஆஷாவும் உட்கார்ந்து பயணித்தனர்.

இவர்கள் புறப்படும்போது சமையல்காரர் ரொம்பவே நெகிழ்ந்துவிட்டார். ஆஷாவிடம், ''புருஷனை எங்கேயும் தனியாக அனுப்பாதீங்க, தாயி! நல்லா பாத்துக்குங்க. அவரு ரொம்ப நல்லவர்தான். ஆனா அந்தப் பாழாப் போன இரண்டு சிநேகிதர்களும் தான் அவரைத் தினம்

குடிக்க வற்புறுத்தினாங்க!'' என்று சொன்னவர், நடராஜிடம், ''தம்பி, திரும்ப அந்த நண்பர்களோ, அவங்க மாதிரி ஆட்களோ வந்தா, கிட்டே சேர்க்காதீங்க!'' என்று சொன்னார். ''நல்லா இருங்க, நீங்க இரண்டு பேரும்!'' என்று வாயார வாழ்த்தியவர், இவர்களுக்கு வழியில் தேவையான டிபன், சாப்பாடு எல்லாம் கட்டிக் கொடுத்தார். ''நடராஜ் சாருக்கு உடம்பு சரியில்ல. வெளியே சாப்பிட வேண்டாம்,'' என்று சொல்லி.

முதலில் கொஞ்ச நேரம் மௌனத்தில் கழிந்தது. பிறகு நடராஜ் கேட்டான் ''என்னை இப்ப மதுரைக்குக் கூட்டிப் போய் என்ன பண்ணப்போறீங்க? திரும்ப தண்டமாகத்தானே இருப்பேன்?''

''மாட்டே நடராஜ். ஒரு ஜவுளிக்கடை, ஒரு ரெடிமேட் ஸ்டோர் இரண்டையும் நீயும் ஆஷாவுமாகத்தான் பார்த்துக்கணும்,'' என்றான் ஆதி.

''ரெடிமேட் கடையா?'' என அனைவரும் வாயைப் பிளக்க, ''நம்ம கடைக்கு அடுத்த கடை வீடோட ஒத்திக்கு வருது. சொல்லி வெச்சுருக்கேன். அதை வாங்கி நம்ம தேவைக்கு ஏத்தபடி மாத்தி ரெடிமேட் கடையாக்கிடலாம்.''

''திரும்ப எங்கிட்டே கொடுக்கறேங்கறியே! என் மேல அத்தனை நம்பிக்கையா?'' என்று கேட்டான் நடராஜ்.

''நீ பட்டுத் திருந்திட்டேப்பா. இனிமே தப்பு பண்ண மாட்டே.''

''அத்தையும், மாமாவும் ஒண்ணுமே சொல்லலியே. நான் திரும்ப உங்ககிட்டேயே வந்துடறேன், அத்தை. என்னை மன்னிச்சு ஏத்துக்குவீங்களா?'' என்று ஏக்கத்துடன் கேட்டாள் ஆஷா.

''ஏம்மா, அது உன் வீடுதானேம்மா. எனக்கு நீயும் துர்காவும் வேறு வேறில்லை!'' என்றாள் தனம்.

''ஆமாம், ஆஷா வந்துடும்மா வீட்டோட!'' என்றார் நாராயணசாமி. ''அதுக்கு முன்னாடி...'' என்று அவர் ஆரம்பிக்கும்போதே, ''அண்ணன், அண்ணியிடம் மன்னிப்புக் கேட்டு, அண்ணி பிரசவத்துக்கு ஒத்தாசையா இருக்கேன்,'' என்றாள் ஆஷா.

எல்லோருக்கும் மனம் நிறைந்திருந்தது. வண்டியை ஒரு நிழலான இடத்தில் நிறுத்தி, கொண்டு வந்ததைச் சாப்பிட்டார்கள். டிரைவர் தான் சாப்பிட மாட்டேன், சாப்பிட்டால் கண்ணை இழுத்துடும் என்றார்.

இரவு தூங்காதது, டிரைவர் சொன்னதுபோல் உண்ட மயக்கம் வேறு. எல்லோருமே அவரவர் இருந்த இடத்திலேயே சற்றுக் கண்ணயர்ந்துவிட்டனர்.

ஆஷா, ''ஆமாம், உங்க வருங்காலப் பிளான் என்ன?'' என்று ஆதித்யாவைக் கேட்டாள்.

''மொதல்ல என் தங்கையைக் கல்யாணம் பண்ணிக்கப் போறார். அதற்கப்புறம்தான் வேலை எங்கேன்னு பார்ப்பார்!'' என்றான் நடராஜ்.

ஆதித்யாவின் வாயிலிருந்து வரப்போகும் வார்த்தைக்காக எல்லோரும் காத்திருந்தனர், துர்கா உட்பட...

அதற்குள் பொறுமை இழந்த நாராயணசாமி, ''ஏம்மா துர்கா, இப்பத்தான் ஸ்கூல் கடை இரண்டும் நல்லாயிடுச்சே? இன்னமும் கல்யாணத்தை ஏன் தள்ளிப் போடணும்?'' என்று கேட்டார்.

''அப்பா, அடுத்த துர்காஷ்டமிக்குள்ள சரிசெய்யணும்னு மனசுக்குள்ள பிரதிக்ஞை பண்ணிக்கிட்டேன்.''

''ஆமா, பண்ணிக்கிட்டே, ஆனா முன்னாடியேதான் நம்ம நல்லகாலம் எல்லாம் சரியாயிடுச்சி. சீக்கிரமே நாளைப் பார்க்கலாம். உங்க அப்பா அம்மாவைக் கேட்டுக்கிட்டு என்னப்பா சொல்றே, ஆதி?'' என்றார் நாராயணசாமி.

''பாருங்க மாமா, ஆனா அதுக்கப்புறம் என்னோட மும்பை வரணும் உங்க மக. சரியா?''

''ஆதி! என்ன சொல்றீங்க? ஸ்கூலை விட்டுட்டா?'' கேட்கும்போதே துர்காவின் முகம் வாடிவிட்டது.

''நீ இவ்வளவு சென்சிட்டிவாவா இருப்பே? சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன். இனிமே என் வாழ்க்கை மதுரையிலதான்... அதுவும் அங்கயற்கண்ணி ஸ்கூலோடதான். நாளைய இந்தியாவுக்கு நல்ல குடிமகன்களை உருவாக்குவதென்பது எத்தனை சந்தோஷமான விஷயம்னு இப்போ புரிஞ்சிக்கிட்டேன். இந்த ஸ்கூல் அங்கயற்கண்ணி பல்கலைக் கழகமாக விரியணும் கறதுதான் என்னுடைய கனவு!'' என்றான், அந்தக் கனவு கண்களில் விரிய. ''துர்கா, நீ ஒரு பி.எட், பண்ணிடு. அதுபோல ஆஷா, நீயும் நடராஜுமாக எம்.பி.ஏ. மார்கெட்டிங்கும் பைனான்ஸும் படிச்சுருங்க. நம்ம கடையை வளர்க்க அது பிரமாதமா உதவும்,'' என்றான்.

''என்ன நான் சொல்றதெல்லாம் சரியா?'' என்று அவன் கேட்க, எல்லோரும் ரொம்ப சரி, கரெக்ட் என்றெல்லாம் சொல்ல, துர்கா மனம் கொள்ளா சந்தோஷத்துடன் ஆதியின் கைகளை மென்மையாக அழுத்தினாள்.

வெண்ணிலா வெளிச்சத்தில், மீனாட்சி கோபுரம் தூரத்தில் ஒரு அழகு ஓவியமாகத் தெரிந்தது.

''இன்னிக்குப் பௌர்ணமியா?'' என்று கேட்ட ஆதித்யா. ''சீக்கிரமே வெண்ணிலா கைகளிலே வந்துடுமா?'' என்று துர்காவின் காதுகளில் மென்மையாகக் கிசுகிசுத்தான்.

''நிச்சயமாக!'' என்று புன்னகையுடன் தலை குனிந்தாள் துர்கா.